661/1934

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

உமாபதி சிவாசாரியார்

திரட்டியருளிய

தேவார அருள்முறைத்திரட்டு

மூலமும்

சைவ சித்தாந்த மகா சமாஜத் தலைவரும்,
உபகாரச் சம்பளம் பெற்றுள்ள தாசில்தாரும், சைவ போதகாசிரியருமாகிய
மா. வே. நெல்லையப்பப் பிள்ளை, பி. ஏ. அவர்கள்

இயற்றிய

பதவுரையும் விளக்கமும்

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
சென்னை.

1933

தனிப் பிரதி விலை அணா 8.
பதினைந்து பிரதிகள் விலை ரூபா 5.

உரிமை
பதிவுசெய்யப்பட்டது.

சிவமயம்

பதிப்புரை

எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளே, "அடியார்க் கெளியன் சிற்றம் பலவன் கொற்றங் குடியார்க் கெழுதிய கைச்சீட்டு" எனத் தொடங்கும் திருமுகத்தை எழுதி யனுப்பப்பெற்றவரும், சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள் எட்டு நூல்களுக்கு ஆசிரியரெனக் கருதப்படுபவரும், கோயிற்புராணம், சேக்கிழார் புராணம், பௌஷ்கர விருத்தி முதலிய பல நூல்களியற்றியவரும், சந்தானாசாரியர் நால்வருள் ஒருவருமாகிய உமாபதி சிவாசாரியார், மூவர் தேவாரத்திலிருந்து 99 பாடல்களைத் திரட்டி, திருவருட் பயன் அதிகாரப்பகுப்பை யொட்டிப் பத்து அதிகாரங்களாக வகுத்து அருள் புரிந்தனரென்பது பழைய வரலாறுகளால் அறியக் கிடக்கின்றது. இதன் விவரமெல்லாம் "சித்தாந்தம்" மூன்றாவது மலரில் ௭௪-௭௮-ம் பக்கங்களி லுள்ள ஒரு கட்டுரையில் விளக்கப்பட்டிருக்கின்றது. இவர் திருமுறைத் திரட்டு வகுத்த செய்தி "சித்தாந்தம்" நான்காவது மலரில் ௫௪-வது பக்கத்தில் அச்சிடப்பெற்றுள்ள "ஞான தீக்ஷாவிதி" யென்ற நூலின் எட்டாவது பாட்டினாலும் வேறு பல சான்றுகளாலும் இனிது விளங்கும். இத்திரட்டு, அகத்தியர் தேவாரத் திரட்டைப்போல் சில பதிகங்கள் முழுமையும் திரட்டப்படாமல், பொருட் செறிவும் அருள் விளக்கமும் நிறைந்துள்ள ௯௯ தனிப் பாடல்கள் பதிமுதுநிலை, உயிரவை நிலை முதலிய பத்து தலைப்புக்களின்கீழ் வகுக்கப் பெற்றுள்ள திரட்டாகத் திகழ்கின்றது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த தேவாரத் திரட்டுக்கு விரிவான உரையெழுதி அச்சிலைக்கு வெளியிட வேண்டுமென்று கருதி, சைவ சித்தாந்த மகா சமாஜத்தினர், இவ்வாண்டில் சமாஜத் தலைவராயிருந்து தொண்டாற்றிய பெரியார் சைவத் திருவாளர் - மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்களை இப்பணியாற்றுமாறு வேண்டிக்கொண்டனர். வயதில் முதுமையும் ஊக்கத்தில் இளமையும் உடைய அப்பெரியார் மனமுவந்து இப்பணியை மிகச் செவ்வையாகச் செய்துமுடித்தனர். அவர்கள் எழுதிய பத உரையும், சித்தாந்தக் கருத்துக்கள் பொதுள வரைந்த விளக்க உரையும் படிப்பவர்க்குப் பெருமகிழ்வளிப்பனவாகும். கற்றல், கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல் என்னும் ஐந்தொழில் புரியும் அப்பெரியார்க்கு சமாஜத்தினர் செய்யும் கைம்மாறு யாதுளது? அவர்கள் நீடூழி வாழ்ந்து மேன்மேலும் இத்தகைய சிவப்பணி பல புரிய இறைவன் இன்னருள் பாலிப்பானாக.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
150, கோவிந்தப்பநாய்க்கன் தெரு,
சென்னை.

இங்ஙனம்:
ம. பாலசுப்பிரமணியன், பி. ஏ., பி. எல்.
காரியதரிசி.

உ

உள்ளுறை

	பக்கம்		பக்கம்		பக்கம்
1. பதிமுதுநிலை	க	5. அருளுருநிலை	௫௩	9. அஞ்செழுத்தருணிலை	க௦க
2. உயிரவைநிலை	கஎ	6. அறியுநெறி	௬௫	10. அணைந்தோர் தன்மை	க௦௫
3. இருண்மலநிலை	உஅ	7. உயிர் விளக்கம்	அக		
4. அருளதுநிலை	௩௬	8. இன்புறுநிலை	௯௫		

பாட்டு முதற்குறிப்பகராதி

பாட்டு	பக்கம்	பாட்டு	பக்கம்	பாட்டு	பக்கம்
அகணமர்ந்த	எ௩	கருவினை	கஉ௪	பழியுடை	உ௩
அடையலார்	க௦எ	கருவாகி	கஎ	பழுதில	௯
அண்டமாரிரு	௪	கருவாய்க்கிடந்	க௦உ	பாதம்தனி	எ
அருந்துணையை	௯௪	கருவுற்றநாள்	உ௫	புலன்களை	௬௫
அலைவாயிலர	௯௫	கழித்திலேன்	உக	புவம்வளி	க௦
அறிவிலாத	க௦௦	கள்ளனேன்	எஎ	புள்ளுவர்	௬௬
ஆக்குமழிவு	௯௩	கார்க்குன்ற	௯௩	பொக்கமாய்	கக௯
ஆட்டுவித்தாள்	௫௯	கால்கொடுத்	கஅ	பொறிப்புலன்	௯எ
ஆட்பாலவர்	௯	குலங்கெடுத்து	௫௫	மலைபலவளர்	க௪
இங்ஙனம்	கஉ௫	குலம்பொல்லேன்	உ௪	மறிசேர்	கஉஎ
இருநிலனாய்	கக	கூசநீக்கி	உஎ	மாட்டினேன்	உஉ
இருளாய	௫க	கொன்னைக்குழை	௪௦	மாயமாய	க௫
ஈசன் ஈசன்	அஅ	சரணமாம்	௪௬	மாவையுரித்த	௯௯
உடம்பெனும்	௩க	சின்மலியாறு	க௦௯	மின்னுருவை	கஉ
உயிராவணை	௬௩	சுருதிகள்	௯க௦	முற்றொருவர்	௪உ
உருகுமனத்	௯௯	சுழித்துணை	எ௪	முன்னம்அவ	அக
உருவமும்	௩	செஞ்சுடர்	௬அ	மெய்ம்மையாம்	உஅ
உறுகயிறூசல்	௯எ	தாங்கருங்	௯	மேனியிற்றீ	எ௬
உன்மத்தக	௬௯	துஞ்சவரு	அ௦	யாதேசெய்து	௯௦
உன்னுருவி	கக௪	துஞ்சும்போது	௬உ	வரைகிலேன்	உ௦
ஊனாகி	௩௩	துன்னகைத்	அ௪	வன்னக	அ௪
ஊனினுள்ளுயிரை	அ௯	தெள்ளத்தெறி	ககஉ	வானமிது	௩உ
எடுத்தவெல்	கஉ௦	தோடுடைய	க	விடையான்	கஉக
எம்பிரான்	அஎ	நஞ்சடைத்த	௩அ	விண்ணினார்	க௦க
எல்லியும் பகலும்	௬க	நறைமலிதரு	க௦அ	விரிகதிர்	க௪
எவரேனும்	கஉஉ	நாமார்க்கும்	ககஎ	விள்ளத்தான்	௩௪
என்னவெழிலும்	அ௬	நிலவெனடு	௯க	வெந்தசாம்பல்	௯
ஏதக்களாலும்	௫	நிலைபெறுமா	க௦௫	வெம்பவரு	ககக௯
ஏஅமொன்று	க௦௪	நிலையாய	எஅ	வெள்ளநீர்	௪௪
ஏவியிடர்	௫௩	நில்லாத	௫அ	வெள்ளமெல்லாம்	௩௫
ஐவகை	உ௦	நெறிநீர்மை	௩௬	வெறியார்	௫௪
ஒப்பாயிவ்	௯உ	பத்திப்பேர்	எ௦	வேறுயிர்	௪௯
கடவினஞ்ச	கஉஎ	பத்தித்த	உ௫	வைச்சபொருள்	க௦௩

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

உமாபதிசிவாசாரியார் திரட்டியருளிய

தேவார அருள்முறைத் திரட்டு

மூலமும் உரையும்

க. பதிமுது நிலை

தோடுடைய செவியன் விடையேறி யோர்தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசி என்னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமா புரமேவிய பெம்மா னிவனன்றே.

(பதவுரை) தோடுடைய செவியன் - தோட்டினை அணிந்த காதை உடையவனும்; விடையேறி - எருதின்மேல் (ஊர்தியாக) ஏறியிருந்து; ஓர் தூவெண்மதிசூடி - தூய்மையையும் வெண்மையையும் உடைய ஒரு திங்களை (தலையின்மேல்) அணிந்து; சுடலைக்காடுடைய பொடிபூசி - சுடுகாட்டில் உள்ள திருநீற்றை (திருமேனியில) அணிந்து; என் உள்ளம் கவர்கள்வன் - (இதுவரையும்) எனக்குத் தெரியாமல் என் உள்ளத்தில் இருந்துகொண்டு என்னைத் தன் வயப்படுத்த முயன்றுகொண்டிருந்தவனாகிய சிவபெருமான்; ஏடுடைய மலரான் - இதழ்களை உடைய பூக்களால்; முனைநாள் பணிந்து ஏத்த - (நான் அவனை) பண்டைப் பிறவிகள்தோறும் தாழ்ந்து வணங்கிய காரணத்தால்; அருள் செய்த-(இன்று உயர் சிவஞானப்பால் கொடுத்து) அடிமையாகக் கொண்டருளின; பீடு உடைய பிரமாபுரம் - சிறப்பினை உடைய சீகாழியில்; மேவிய பெம்மான் இவன் - எழுந்தருளி யிருக்கிற ஆண்டவன் (இதோ என் கண்முன்) தோன்றுகிற இவனே.

(விளக்க வுரை) திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்க்குச் சீகாழிக்கோயில் பிரம தீர்த்தக் கரையில் தோணியப்பர் உமாதேவியாரோடும் எழுந்தருளிச் சிவஞானங் குழைத்த திருமுலைப்பாலை உண்பிக்க, அவர் வாயிலிருந்து வடிந்த பாலை அவர் பிதா வாகிய சிவபாத இருதயர் அத்தீர்த்தத்தில் முழுகி நியமமுடித்து வந்தபொழுது கண்டு "எச்சில் மயங்க இப்பாலை ஊட்டினவர் யாவர்"? எனக்கேட்டார். அவ்வாறு கேட்ட காலத்தில், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் "எனக்குப் பாலை ஊட்டியவர் இதோ வான் வெளியில் எருதின்மேல் உமாதேவியாரோடும் எழுந்தருளியிருக்கிற சிவபெருமானே" என்று தமது சிறு விரலாற் சுட்டிக்காட்டியபொழுது பாடிய தேவாரப் பதிகத்தில் முதலாவது பாட்டு இது.

தோடு பெண்கள் அணிந்துகொள்கிற காதணி. இங்கே இது சிவபெருமானுடைய இடது காதணியைக் குறிக்கின்றது. சிவஞானம் குழைத்த திருமுலைப்பாலைத் தாம் உண்ணும்படி யருளிய உமாதேவியாரது திரு உருவத்தை நாயனார் குறிக்கின்றார். (சிவன் கூட்டிவந்து ஏவிய முறையே நாயனார்க்கு உமாதேவியார் சிவஞானப் பாலை

ஊட்டினார்) நாயனார், தமது தந்தையாருக்குத் தம்மைப் பால் உண்பித்தவர் சிவபெருமானே என்று சுட்டிக் காட்டுகிறார். இது உண்மை நிகழ்ச்சியா யிருத்தலோடு சிவபெருமானுக்குத் துதியாயு மிருத்தலினாலே அத்துதியைச் சிவபெருமான் திருச்செவியேற்று அருளுமாறு "தோடுடைய செவியன்" என நாயனார் சிறப்பித்தார். அருள் வடிவினராகிய உமாதேவியாரே, உயிர்கள் கூறும் குறைகளைக் கேட்டு, அவைகளைப் பிறவித் துன்பத்தினின்றும் நீக்கிச் சிவத்தோடு சேர்த்துப் பேரின்பம் அடையச் செய்தலால், நாயனார் சிவபெருமான் திருமேனியில் இடப்பாதியாகிய உமாதேவியார் பாகத்திலுள்ள இடது காதினைச் சிறப்பித்தார்.

இத்தேவாரம் தமிழ்மறையின் முதலாவது பாட்டு. ஆதலின், நாயனார், வேதாகமங்கள் முதலிய எல்லாக் கலைகளின் பொருள்களும் அடங்கியுள்ள பிரணவத்தைத் 'தோடு' என்னும் முதல்மொழியிலுள்ள "ஓ"காரமாக முதலில் அமைத்துக் கூறினார். இப்பிரணவ நாதம் தகராகாசம் எனப்படும். அது அறிவுவெளியிற் றோன்றும் சுத்த நாதம் ஆதலின், 'த்'கர ஒற்றுடன் 'ஓ'காரத்தைக் கூட்டித் "தோ" என்று உரைக்கப்பட்டது. பிரணவ முதலெழுத்தாகிய இந்த 'ஓ'காரமானது பன்னிரண்டாவது திருமுறையாகிய பெரியபுராணத்தின் ஈற்றுச் செய்யுள் ஈற்றடியின் ஈற்றுமொழியின் ஈற்றெழுத்தாகிய மகர ஒற்றோடு புணர்ந்து "ஓம்" என முடிந்து நிற்கின்றது. இதனால் தமிழ்மறைகளெல்லாமும் பிரணவமாகிய அஞ்செழுத்து மந்திரத்திலே தோன்றி அடங்கிநிற்கும் தன்மை உணர்த்தப்பட்டது.

விடையேறி - ஊழிக்காலத்தில் அறக்கடவுள் இறைவனைத் தொழுது பிறப்பு இறப்பு இல்லாது என்றும் நிலவும் தன்மையை வேண்டியபொழுது இறைவன் அறக்கடவுளை வெள் விடையாக்கி அதன்மேல் ஊர்ந்தருளுகிறார். இதுவே விடையேறிய நிகழ்வு. இது சிவபெருமானது படைப்புத் தொழிலை உணர்த்தும். இவ்வரலாறு, இறைவன் அறவடிவினன் அறவாழி என்னும் உண்மையையும்; அறவழி நின்று அறம் புரிகிற இயல்பினை உடையவர்களே இறைவனை அடைவர் என்னும் உண்மையையும் உணர்த்துகிறது.

தூவெண் மதிசூடி - தக்கனாலடைந்த சுடு மொழிக்கு (சாபத்துக்கு) ஆற்றாத திங்கள் வானவன்; இறைவனைச் சரண்புகுந்து தனக்குரிய துன்பம் துடைத்தாள வேண்டினான். இறைவன், திங்களின் துன்பந் துடைத்துத் தன் திருமுடியில் அவனை ஏற்றினான். இதுவே திங்கள் சூடிய வரலாறு. துன்பத்தினின்றும் காத்த தன்மையால், இது இறைவனது 'காத்தல்' என்னும் தொழிலைக் காட்டுவதாகும்.

காடுடைய சுடலைப் பொடிபூசி - மகா சங்கார காலத்தில் நிவர்த்தி கலை முதலிய ஐந்து கலைகளினுள்ளும் அடங்கியுள்ள எல்லாப் புவனங்களை (உலகுகளை)யும் அழித்து நடனஞ் செய்யும் இடமே இங்கு 'காடுடைய சுடலை' எனப்பட்டது : அவ்விடத்துக் கிடந்த சாம்பரே "பொடி" எனப்பட்டது. இத்தப் பொடியே, தன்னைத் தொழுது எழுவார் வினைவளம் நீறு எழ, இறைவன் தனது திருமேனியில் அணியும் திருநீறாகும். சைவர்கள் தம்மைச் சார்ந்து பிணிக்கிற மலத்தை நீறாக்கும் கருத்துக் குறியாக அணிந்து கொள்கிறது இந்தத் திருநீற்றையே. சுடலைப்பொடி இறைவனது "அழித்தல்" தொழிலைக் குறிக்கின்றது. 'காடுடைய சுடலைப் பொடி' என்பதை 'சுடலைக்காடு உடைய பொடி' என மாற்றுக. சுடு + அல் + ஐ = சுடலை - சுடு பகுதி, அல்லும் ஐயும் தொழிற்பெயர் விகுதிகள். காடு - இடம். சுடு - காடு - சுடுகின்ற இடம் - பிணஞ் சுடுகின்ற இடம் சுடலை.

என் உள்ளம் கவர்கள்வன் - உள்ளம் என்பது மனம் ; 'சிந்தை என்பதும் அது' உயிர் என்னும் பொருளும் கொள்ளும். ஆனால் "அந்தமும் ஆதியும் இல்லா அரும் பொருள் சிந்தையில் மேவித்தியக்கு அறுத்தல்வேண்டும்" (திருமந்திரம் 2963) என்பது கூறப்படுதலின் கட்டு நிலையிலுள்ள உயிர்கட்கு அப்பொருள் பொருந்தாது. உயிர்கள்

தன்னை அடைந்துபேரின்பம் நுகரும்பொருட்டுப்பக்குவப்படுத்தவேண்டித் திரோதான மலத்தின் வழிநின்று மறைத்து இறைவன் அவைகள் வேண்டிய போகங்களை ஊட்டி உண்பிக்கிறான். உயிர்களது இந்தக் கட்டுநிலைக் காலத்தில் இறைவன் உயிர்களுடைய உள்ளத்தில் அவைகள் அறியாதவாறு நிறைந்து கலந்திருப்பதால் "கள்வன்" என்று கூறப்பட்டான். "நினைத்தவர்கள் நெஞ்சுளாய் வஞ்சக் கள்வர்" என்று திருநாவுக்கரசு சுவாமிகள் திருவானைக்காத் திருத்தாண்டகப் பாட்டொன்றிற் கூறியிருத்தல் காண்க. ஆதலின் "என் உள்ளங்கவர் கள்வன்" என்பது இறைவனுடைய "மறைப்புத் தொழிலைக்" குறிக்கிறது.

கவர்தல்=வயப்படுத்தல்: உயிர்களுடைய பக்குவத்துக்கு ஏற்ப அவைகளின் வினைப் பயனாக, உலக இன்பத்தையும் துன்பத்தையும் நுகர்வித்துப் பக்குவப்படுத்தித் தன் வயப்படும்படி இறைவன் செய்கிறான். இவ்வாறு உயிர்கள் அறியாதபடி அவைகளைத் தன் வயப்படுத்துதல் இங்கே 'கவர்தல்' எனப்பட்டது.

'கவர்கள்வன்' என்ற சொற்களினால் அகப்பொருட்டுறை கூறப்பட்டதெனினும் பொருந்தும். அகப்பொருட்டுறையில் உயிர் தலைவியாகவும் இறைவன் தலைவனாகவும் உருவகம் செய்யப்படுகிறார்கள்.

"முனைநாட் பணிந்தேத்த [illegible] றதனால், வினைப் பயனாலன்றி, சிவபாத இருதயர் கோரியபடி, அருட்பணி செய் [illegible] திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் அவதரித்தார் என்பது குறிப்பிடப்பட்டது. பிரம தேவன் பூசித்த செய்தியைக் கொள்வாருமுளர்.

"அருள் செய்த" என்பது இறைவனது "அருளல்" என்னும் தொழிலைக் குறிக்கிறது. இறைவன் உயிர்களுக்கு முடிவில் இந்த "அருளல்" ஆகிய தொழில் செய்யும் பொருட்டே மறைப்புத் தொழிலையும் அதனுள் அடங்கிய படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் தொழில்களையும் அவைகளுக்குப் பக்குவம் வருவிக்கும் பொருட்டே செய்கிறான். "அருள், செய்த பெம்மான்" என முடிக்க. 'பெம்மான்' என்பது பெருமான் என்ற சொல்லின் மரூஉ. பெருமான் - தலைவன் - ஆண்டான் - கடவுள். "அன்று, ஏ" அசை நிலைகள். இப்பாட்டில் 'விடையேறி', 'மதிசூடி', 'சுடலைப் பொடிபூசி,' 'என் உள்ளங் கவர் கள்வன்', 'அருள்செய்த பெம்மான்' என்ற ஐந்துசொற்றொடர்களாலும் முறையே இறைவனுடைய ஐம்பெருந் தொழில்களும் குறிக்கப்பட்டன. இத்தொழில்கள், திருவருட்பயன் 'பதிமுது நிலை' என்னும் அதிகாரத்தில் "ஆக்கி எவையும் அளித்து, ஆசுடன் அடங்கப், போக்கும் அவன் போகாப்புகல்" என்ற நான்காவது திருக்குறளால் கூறப்பட்டன.

உருவமு முயிரு மாகி யோதிய வுலகுக் கெல்லாம்
பெருவினை பிறப்பு வீடாய் நின்றவெம் பெருமான் மிக்க
அருவிபொன் சொரியு மண்ணா மலையுளா யண்டர் கோவே
மருவிநின் பாத மல்லால் மற்றொரு மாடி லேனே. ௨

(உரை) ஓதிய உலகுக்கு எல்லாம்- (பெரியோர்கள் - நூல்களில்) கூறிய (உயிரில் உலகம் உயிருலகம் என்ற) எல்லா உலகங்களிலும்; உருவமும் (ஆகி) - (உயிரில்லாத உலகிற்கு) உருவமாகியும்; உயிரும் ஆகி - (உயிர் உலகிற்கு) உயிர் ஆகியும்; பெருவினைப் பிறப்பு (ஆய்) - வல்வினையினால் உண்டாகும் கட்டு (பந்தம்) ஆகியும்; வீடு ஆய் - (மல நீக்கம் பெற்றவர்களுக்கு) வீடாகியும்; நின்ற பெம்மான் - நிற்கிற தலைவனே; மிக்க அருவி - (மலையிலிருந்து) மிகுதியாக வீழும் அருவி நீரானது; பொன் சொரியும் அண்ணாமலை உளாய் - பொன்னைச் சொரிகின்ற திரு அண்ணாமலையில் எழுந்தருளியிருக்கிறவனே; அண்டர் கோவே - தேவர்கள் தலைவனே; நின்பாதம் மருவி அல்லால்-

உன் திருவடிகளைச் சேர்ந்தால் அல்லாமல்; மற்றொரு மாடிலேன் - நான் சேர்வதற்கு வேறு இடம் காணேன்; ஏ - ஈற்றசை.

(விளக்கம்) உயிர் இல்லாத உலகங்கள் - ஐம்பெரும் பூதங்களும் கதிரவனும் திங்களும் ஆவன. ஐம்பெரும் பூதங்களும் வேறு வேறு உருவம் அடைந்து இயங்குதலும், கதிரவனும் திங்களும் உருவத்துடன் அமைந்து இயங்குதலும், இறைவனுடைய ஆற்றலினாலே உண்டாகின்றன. உயிர் உலகிற்கு இறைவன் உயிராய் நின்று இயக்குகிறான். பெருவினை பிறப்பு=பெருவினையினாலுண்டாகும் பிறப்பு, இனம்பற்றி இறப்பும் உடன் கொள்ளப்படும். கட்டினால் உயிர்களுக்குப் பிறப்பு இறப்பு உண்டாதலின், பிறப்பு என்பதற்குக் கட்டு என்று பொருள் உரைக்கப்பட்டது. அது ஆகுபெயர்.

'பெருவினைப் பிறப்பு வீடு' என்பதனை மாணிக்கவாசக சுவாமிகள் "பந்தமுமாய் வீடும் ஆயினார்க்கு" என்று திருப்பொற் சுண்ணத்தில் கூறி அருளினார். 'நின்ற' என்பது எப்பொழுதும் நிற்கிற என்று பொருள்பட்டுத், தெளிவினால் நிகழ்காலம் இறந்த காலம் ஆயிற்று (நன்னூல் பொது இயல் [illegible]-ம் சூத்திரம்) கோ - தலைவன். ஆண்பால் விகுதியாகிய னகர ஒற்றுப் பெற்றுக் கோன் என வருதலும் உண்டு. மாடு - இடம்.

அண்ட மாரிரு ளூடு கடந்தும்பர்
உண்டு போலுமோ ரொண்சுட ரச்சுடர்
கண்டிங் காரறி வாரறி வாரெல்லாம்
வெண்டிங்கள் கண்ணி வேதிய னென்பரே. ௩

(உரை) அண்டம் ஆர் இருள் ஊடு (உம்) உலகங்களில் நிறைந்துள்ள அக இருளாகிய ஆணவத்தோடும், ஊனக்கண்ணை மறைக்கும் புற இருளினோடும் கலந்திருந்தும் கடந்தும்பர் - அவைகள் தன்னைச் சாராதபடி தாண்டி மேற் சென்றும்; ஓர் ஒண் சுடர் - ஒரு ஒப்பற்ற பேரொளிப் பொருள்; உண்டு - (உயிர்கள் அறியாது மறைந்து) இருக்கிறது; அச்சுடர் - அப்பேர் ஒளிப் பொருளை; இங்கு - இவ் உலகத்தில்; கண்டு - (அவன் வேறு தாம்வேறு என இருபொருள்களாக) பார்த்து; யார் அறிவார் - எவரும் அறிவது இயலாதாகும்; அறிவார் எல்லாம் - அப்பொருள் தம்முடன் இரண்டறக் கலந்து பிரிப்பின்றி நிற்கும் (அத்துவித) தன்மையை உள்ளத்துத் தோன்றும் மெய் உணர்வினாலே உணர்ந்து அறிகிற பெரியோர் எல்லாரும் வெண்திங்கள் கண்ணி-வெண்மையான இளம்பிறைத் திங்களை அணிந்த; வேதியன் என்பர்-வேதங்களை உயிர்களுக்கு அருளினவன் என்று சொல்வார்கள். ஏ - அசை.

(விளக்கம்) அண்டம் என்னும் சொல் அண்டப்படுவது என்று முதலிற் பொருள் தந்து, பின் அண்டப்படுவதாகிய முட்டைக்குப் பெயராய்ப், பின் முட்டை வடிவாயிருக்கிற உலகுக்குப் பெயராய் வந்தது. ஆர் இருள் - நிறைந்த இருள்; அதாவது ஆணவமலம். ஊடு - உள்ளும் புறமும் எங்கும். 'உம்' தொக்கி நிற்கிறது. ஆணவமலம் உயிரிலும் மாயையிலும் கலந்திருக்கும் தன்மையைக் குறிக்கிறது- ஆணவமலம் கலந்திருப்பதினாலேதான் விளக்குப்போல் உயிர்களுக்கு அறிவை விளக்கும் மாயை அவற்றின் அறிவை மயக்கவும் செய்கிறது.

கடந்து, உம் தொக்கி நிற்கிறது. கடல் வெளி நீர் உப்பு முறையே கடவுள் உயிர் மலம் போல்வன. கடல் வெளியைச்சேர்ந்து நிற்கும்உப்பு, நீரினுடன் மாத்திரம் கலந்து கடல்வெளியைச் சேராதிருத்தல்போல, மாயையிற் கலந்துள்ள ஆணவமலம் மாயையில் நிறைந்து விளங்குகின்ற கடவுளைச் சேராது. ஓர் ஒண் சுடர் - மிக்க ஒளியுள்ள சுடர். 'ஓர் ஒண்சுடர்' என்றதனால் நாம் கண்ணாற்காணும் திங்கள். கதிரவன் உடுக்கள்முதலிய பொருள்களின் ஒளிகள் எல்லாமும் இறைவனது ஒளிக்குச் சிறிதும் இணையாகா என்பது குறிக்கப் பட்டது. இவ் ஒளிப்பொருள்கள் எல்லாமும் அவனது ஒளியால் விளக்க

முழுகின்றன. இரண்டாவது முண்டக உபநிடம் பத்தாவது காண்டம் பத்தாவது மந்திரமும் பார்க்க. "சோதியே சுடரே" என்ற திருவாசக அருட்பாவும் இதனையேகுறிப்பிடும்.

'கண்ணி' என்பது கொழுந்து. திங்கட்கண்ணி மூன்றாம்பிறைச் சந்திரனைக் குறிக்கின்றது. வேதியன் - வேதம் - அறிவு - வேதியன் - முற்றுணர் வுடையவன் - எல்லாம் அறிந்தவன். வெண் திங்கள் கண்ணி வேதியன் என்றதனால் தன்னையடைந்தார் வினை தீர்ப்பவனாகிய பேரறிவுடைய தலைவன் என்பது குறிப்பிடப் பட்டது. ஏ - அசை.

ஏதுக்களாலு மெடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டுள னெங்கள்சோதி
மாதுக்க நீங்கலுறுவீர் மனம்பற்றி வாழ்மின்
சாதுக்கள் மிக்கீர்இறையே வந்து சார்மின்களே. ௪

(உரை) எங்கள் சோதி - (அடியாராகிய) நாங்கள் வழிபடும் பேர் ஒளிப்பொருள் ; சுடர்விட்டு உளன் - (நம்மைத் தன் வழிப்படுத்த எப்பொழுதும் தனது ஒளியை நம்மிடத்தில் பரப்பிக் கொண்டே இருக்கிறான்; (ஆதலால்) ஏதுக்களாலும் - (அளவைநூற் படியுள்ள) காரணங்களாலும் ; எடுத்த மொழியாலும் - எடுத்துக்கொண்ட நூல் உரைகளாலும் ; மிக்குச் சோதிக்க வேண்டா-அளவுக்குமிஞ்சி ஆராய்ச்சி செய்யவேண்டாம் ; சாதுக்கள் மிக்கீர் - நற்பண்புகளாற் பெரியீர்களே ; மாதுக்கம் நீங்கல் உறுவீர் - (பிறவியாலுண்டாகும்) பெருந் துன்பத்தை நீக்கத் தொடங்கி யிருக்கிற நீங்கள் ; மனம்பற்றி வாழ்மின் - உங்களுடைய உள்ளத்தில் அந்தப் பேர் ஒளிப்பொருளை நினைத்து வாழ்வீர்களாக ; இறையே வந்து சார்மின்கள் - (உலகப் பொருளையும் உயிர்பொருளையும் பற்றாது அந்த ஒளிப்பொருளாகிய) தலைவனையே பற்றுவீர்களாக.

(விளக்கம்) எங்கள் என்பது எங்களுக்கு ஆண்டவனாயிருந்து நாங்கள் வழிபடும் என்பதைக் குறிக்கிறது. சுடர் விட்டுளன் "உலகிலுள்ள ஒளி எல்லாமும் இறைவனால் விடப்படும் ஒளியன்றி வேறில்லை. அவன் எப்பொருளிலும் தனது ஒளியை வீசிக் கொண்டேயிருக்கிறான்" என்னும் கருத்தை விளக்குகிறது. இதனை "ஈறிலாத நீ எளியையாகி வந்து ஒளி செய் மானுடமாக நோக்கியும்" என்றும், "இன்றெனக்கருளி இருள் கடிந்து, உள்ளத்தெழுகின்ற ஞாயிறே போன்று நின்ற நின் தன்மை" என்றும் மாணிக்கவாசகப் பெருமான் கூறி அருளினர்.

ஏதுக்கள் கருதல் அளவையையும், எடுத்த மொழி (மேற்கோள்) உரை அளவையையும் குறிக்கின்றன. பதிஞானத்தினால் பதியுடன் இரண்டறக் கலந்து நின்று உணரலாமேயன்றிப் பாச பசுஞானங்களால் இறைவனுடைய உண்மை இயலை (சொரூப இலக்கணத்தை) யறிதல் கூடாமைப்பற்றி, இங்கே காண்டல் கூறப்படவில்லை.

மிக்குச் சோதிக்க வேண்டாம் என்பது, ஓர் அளவைக்குள் இறைவனுடைய பொது இயலை (தடத்த இலக்கணத்தை) ஆராய்ச்சி செய்யலாம் என்று பொருள்படுகிறது. கருதல் அளவை வழி செய்யப்படும் ஆராய்ச்சி அறிவினால், இறைவன் உளன் என்பதும் அவனுடைய பொது இயலும் கருதி யறியப்படுமேயன்றி, அவனுடைய உண்மை இயல் அறியப்படாதென்பது கருத்து.

இறையே என்பதிலுள்ள ஏகாரம் பிரிநிலைப் பொருளில் வந்தது. "அறிவில்லாத உலகத்தைச்சாரின் அறிவின்மை மிகும். உயிர்களைச்சாரின், அவை நம்மைப்போன்றன. இவற்றினின்றும் விலக்கியான், இவற்றின் மேம்பட்டவன் வேண்டும். அவனே தலைவன், இறைவன் எனத்தக்கவன்." என உலகத்தினின்றும் உயிரினின்றும் பிரித்துக் காட்டுகிறது. சார்மின் என்பது "ஆன்மாக்கள் சார்ந்ததன் வண்ணம் ஆவனவாகலின், இறையைச் சார்ந்து அவன் பண்பை அடையின்" எனக் குறிக்கின்றது.

சாதுக்கள் மிக்கீர், சாது (வடமொழி) - நற்பண்பு உடையவர். சாதுக்கள் மிக்கீர் நற்பண்பு மிகுதியாக உடையவராகிய பெரியீர், குற்றம் நனிமிகக் குறைந்தும், பண்பு நனிமிகப் பெருகியும் உள்ள பெரியீர். சாதுக்கள் மிக்கீர் என்பதற்கு சாதுக்களாகிய பெரியீர் என்றலும் பொருந்தும்.

வெந்த சாம்பல் விரையெனப் பூசியே
தந்தை யாரொடு தாயிலர் தம்மையே
சிந்தியா வெழுவார் வினைதீர்ப்பரால்
எந்தையாரவ ரெவ்வகையார் கொலோ. ௫

(உரை) தந்தையாரொடு தாயிலார் தம்மையே - தாய்தந்தையில்லாராகிய இறைவனையே; வெந்தசாம்பல்-தீயினால் சுடப்பட்ட திருவெண்ணீற்றை; விரைஎனப்பூசியே-நறுமணப் பொருள்களைப் போல விரும்பி உடம்பிலே அணிந்து; சிந்தியா எழுவார் - இடைவிடாது நினைத்துக்கொண்டிருந்து அந்நிலையிலேயே முயல்கின்றவர்களுடைய; வினைதீர்ப்பர் - வினையை ஒழிப்பார்; எந்தையார் அவர் - (அடியாராகிய எங்கட்கு இவ்வாறு வினைப்பகையை ஒழித்து அருள்செய்து தாயும்) தந்தையுமாயிருக்கிற இறைவன் எவ்வகையார் கொல் - எப்படிப்பட்ட பெருமையை உடையவரோ? (அவர் பெருமையை யாரால் அறிய முடியும் என்றபடி).

(விளக்கம்) தந்தையாரொடு தாயிலர் - பிறப்பும் இறப்பும் இல்லாதவர். பிறப்பு இறப்புஇன்மை, இறைவனுக்கு முதன்மையான இலக்கணம். வெந்தசாம்பல் - பசுவின் மலம் தீயினால் சுடப்பட்டுக் களங்கம் நீங்கித் தூய்மை அடைதல்போல் உயிர்களுடைய மலம் ஞானத்தீயால் நீக்கப்படுதலால் அவைகள் தூய்மை அடைந்து, அருள் ஒளியைப் பெறுகின்றன என்பது கருத்து.

விரை எனப் பூசுதல் - மக்கள் எவ்வாறு தம் உடல் மணம் கமழும்படி, மகிழ்ச்சியுடன் சந்தனம் முதலிய நறுமணப்பொருள்களை உடலில் அணிந்து கொள்கிறார்களோ, அவ்வாறு உயிரிடத்தில் சிவமணம் விளங்கும் பொருட்டு, உயிர் விளங்குகிற உடலில் மகிழ்வுடன், அருட்குறியாகிய வெண்ணீற்றை நினைந்து அணிதல் ஆகும். என - போல உவமைச் சொல்.

சிந்தியா எழுதல் - சிந்தித்தலாகிய முயற்சியில் ஈடுபட்டு நிற்றல், எழுதல் - முயல்தல், 'எவ்வகை கொல்' இவை வியப்பினைக் காட்டுவன. ஓ - அசை.

ஆட்பாலவர்க் கருளும் வண்ணமு மாதிமாண்பும்
கேட்பான்புகி லளவில்லை கிளக்க வேண்டா
கோட்பாலனவும் வினையுங் குறுகாமை யெந்தை
தாட்பால் வணங்கித் தலைநின் றிவை கேட்கத்தக்கார். ௬

(உரை) ஆதிமாண்பும் - இறைவனுடைய (எட்டுப்) பண்புகளும்; ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும் - அவன்தான் ஆட்கொள்ளத் தகுதியுடையவரை ஆட்கொள்ளும் வகையும்; கேட்பான்புகில் - ஆராயத் தொடங்கினால்; அளவில்லை - அவை ஆராய்ச்சி அளவைக்குள் அடங்குவன வல்ல; தக்கார் - (ஆதலால் அவைகளைப்பற்றி) நடுவு நிலைமையுடைய அறிஞர்; கிளக்க வேண்டா - (இன்ன என எடுத்துப்) பேசவேண்டாம்; கோட்பாலனவும் வினையும் குறுகாமை - ஒன்பது கோள்கள் (நவக்கிரகங்கள்) வாயிலாக உலக வாழ்வில் நுகரப்படும் இன்ப துன்பங்களும்; (அவற்றிற்குக் காரணங்களாகிய) நல்வினை தீவினைகளும் தம்மைச் சேராதபடி; எந்தை தாட்பால், எமது தந்தையாகிய இறைவனது திருவடிகளிடத்து; தலை நின்று தமது தலையை நிலைபெறவைத்து, வணங்கி - அவனுடைய வியாபகமான அறிவு செயல்களுக்குள் தமது அறிவு செயல்களை

அடங்கச்செய்து அவனுடன் வேறற ஒன்றி நின்று; இவை - ஆதி மாண்பும் ஆட்பால வர்க்கருளும் வண்ணமும் ஆகிய இவைகளை; கேட்க - உணர்க.

(விளக்கம்) ஆதி - எல்லாத் தோன்றுதற்கு முன்னே உள்ளவன், முன்னவன் எல்லாப் பொருள்களுக்கும் காரணமாயுள்ளவன், மாண்பு - முற்றறிவுடைமை முதலிய எண் பண்புகள், ஆட்பாலவர் - ஆளத்தகுந்த பருவம் அடைந்தவர்கள்; உலகப்பற்றுவிட்டு இறைவனைப் பற்றும் பருவம் வந்து சத்தி நிபாதம் (அருள் வீழ்ச்சி) அடையப் பெற்றவர்கள்; ஏனையோர்க்கு அருளுதலால் பயனுண்டாகாது. அருளும் வண்ணம் - நான்கு சமயாசாரியர்களையும் நான்கு வகையாய் இறைவன் ஆட்கொண்டமையை நோக்குக. கேட்பான், கேட்டல் இங்கே ஆராய்ச்சியைக் குறிக்கின்றது. கேட்டலும் சிந்தித்தலும் ஆராய்ச்சிக்குச் சேர்ந்தவைகள், குறுகாமை. 'மை' வரும் காலவினை எச்சவிகுதி. எத்தை தாட்பால் தலை நின்று வணங்கி இறைவன் ஆண்டவன் எனவும் உயிர் அடிமை எனவும் தாடலைபோல அடங்கிநிற்றல் - தாடலைபோல நிற்றலாவது, தாள் - தலை என்னும் இரண்டு சொற்கள் தாடலை என்னும் ஒருசொல்லாய் அடங்கி ஒன்றுபட்டு நிற்றல்போல இறைவனுடைய வியாபக ஞான சத்தி (அறிவு) கிரியாசத்தி (செயல்)களில் உயிர் தன்னுடைய வியாப்பியமான ஞான சத்தி கிரியா சத்திகளை அடங்கச் செய்து தன் முனைப்புக் கெட்டு அவனுடன் வேறற ஒன்றி அவனது அருள்வழிநிற்றல் ஆகும். இவை - சுட்டுப் பன்மைப் பெயராய் பாட்டின் முதலாவது அடியிற்குறிப்பிட்ட ஆதி மாண்பு ஆட்பாலவர்க்கருளும் வண்ணம் ஆகிய இரண்டையும் குறிக்கின்றது. கேட்க - இங்கே கேட்டல் என்பது உயிரின்கண் விளங்கித் தோன்றும் மெய்புணர்வின் முதற் பகுதியாகிய கேட்டல் ஞானத்தைக் குறிக்கின்றது. ஆராய்ச்சி ஞானத்தை அன்று, இது சிவஞானசித்தியார் அ-ம் சூத்திரம் உஅ-வது பாட்டில் "ஆசாரியன் வந்தருளாற் றோன்ற அடி ஞானம் ஆன்மாவின் விளங்கித் தோன்றும்" எனக் கூறப்பட்டிருக்கிறது. ஆதலின் கேட்க என்பதற்கு உணர்க என்று பொருள் உரைக்கப்பட்டது. கேட்டலின் பின் நிகழ்வன சிந்தித்தல் தெளிதல் நிட்டை ஞானங்கள். 'ஆதி மாண்பும்' 'ஆட்பால வர்க்கருளும் வண்ணமும்' ஆராய்ச்சி அறிவால் அறியப்படுவன அல்ல; இறைவனோடு வேறற (அத்துவிதமாய்) ஒற்றித்து நின்று உயிரால் உணரப்படுவன என்ற உண்மையை இத்தேவாரப்பாட்டு கூறுகின்றது.

பாதம் தனிப்பார் மேல் வைத்த பாதர்
பாதாள மேழுருவப் பாய்ந்த பாதர்
ஏதம் படாவண்ணம் நின்ற பாதர்
ஏழுலகுமாய் நின்ற வேக பாதர்
ஓதத் தொலிமடங்கி யூருண்டேறி
ஒத்துலக மெல்லா மொடுங்கியபின்
வேதத் தொலி கொண்டு வீணை கேட்பார்
வெண்காடு மேவிய விகிர்த னாரே. எ

(உரை) வெண்காடு மேவிய விகிர்தனார் - திருவெண்காட்டில் எழுந்தருளியிருக்கிற பலகோலங் கொள்கிற இறைவர்; பாதம் தனிப்பார்மேல் வைத்த பாதர் - (அடியார்களை ஆட்கொள்ளும் பொருட்டு மானுட வடிவம்கொண்டு) தம்முடைய திருவடிகளை ஒப்பற்ற உலகின்மேல் வைத்த அருளுடையவர்; பாதாளம் ஏழு உருவப் பாய்ந்த பாதர் - ஏழு பாதல உலகங்களிலும் உள்ளும் புறம்பும் நிறைந்துள்ள அருளுடையவர்; ஏதம் படாவண்ணம் நின்ற பாதர் - (தமது அருளால் உலகம்) பழுதுபடாது (வெற்றி கொள்

ளும்படி) நிலைபெற்று நின்றவர் ; ஏழுலகுமாய் நின்ற ஏகபாதர்-மேல் ஏழுலகின் உள்ளும் புறம்பும் நிறைந்து நின்ற தனி அருளுடையவர் ; ஓதத்து ஒலி மடங்கி - (அழிப்புக் காலத்தில்) கடல்களின் ஒலி அடங்கி நிற்க; உலகம் எல்லாம் ஊர் உண்டு ஏறி - எல்லா உலகங்களும் பரவுதலைத் தமக்குள் அடக்கி அதற்கு மேலாய் நின்று ; ஒத்து ஒடுங்கியபின் - அவை யெல்லாம் ஒருசேரத் தம்முள் ஒடுங்கியபின்; வேதத்து ஒலிகொண்டு வீணை கேட்பர் - (ஒடுங்கிய உலகங்களை மீளப்படைத்தற்கு) வேதமாகிய பிரணவ ஓசையை வீணையில் எழுப்பி, அவ் ஓசையைக் கேட்டுக்கொண்டிருப்பர்.

(விளக்கம்) இப்பாட்டின் முதல் இரண்டு அடிகளும், உயிர்களின் பொருட்டு இறைவன் செய்கிற படைத்தல் காத்தல் தொழில்களையும் ; மூன்றும் அடி மீளப் படைக்கும் தொழிலையும் கூறுகின்றன.

விகிர்தனர் - இது, 'மாறு' என்று பொருள்படும் வடமொழியாகிய 'விகிர்தம்' என்பதன் வழி வந்தது. படைப்பு முதலிய தொழில்களைப் பிரமன் திருமால் முதலிய பல வேடங்களைக்கொண்டு செய்கிறவர் விகிர்தர். "பல பல வேடம் ஆகும் பரன் நாரிபாகன்" என்று கோளறு பதிகம் கூறுதல் காண்க.

பாதம் தனிப்பார்மேல் வைத்த பாதர் - மாணிக்கவாசக சுவாமிகளை இறைவன் மானுடவடிவம் கொண்டு உலகிற்கு வந்து ஆண்டது போன்று அடியார்களை ஆட்கொள்ளும் இறைவனது முறைமையைக் குறிக்கின்றது. பாதம் என்பது மானுடவடிவத் திருவடிகளையும், 'பாதர்' என்ற சொல்லிலுள்ள 'பாதம்' என்பது அருளையும் குறிக்குன்றது.

'ஏழுலகுமாய் நின்ற ஏகபாதர்' முன்னர் 'பாதாளம் ஏழு' என்று குறிப்பிட்டதால், இவ் ஏழுலகு மேல் ஏழு உலகங்களைக் குறிப்பிட்டன. இறைவனை ஏகபாதர் என்றது, மகேசுரவடிவங்கள் இருபத்தைந்தில் ஏக பாத வடிவமும் ஒன்று. இது அவனை விட்டு நீங்காதசிவசத்தி. ஆதி இச்சை, ஞானம், கிரியை எனப் பலவகையாகப் பிரியாது பராசத்தி என ஒன்றாய்நின்ற தன்மைபற்றி, ஏகபாதப் பெயர் வடிவத்துடன் இறைவன் தோன்றி யருளுகிற முறை என்பர்; இறைவன் பராசத்தியுடன் கூடி உயிர்களுடைய ஆணவ மலத்தை நீக்கவேண்டுமென்ற பேரிரக்கத்துடன் நின்றமுறை. 'வேதத்து ஒலிகொண்டு வீணை கேட்பார்' என்பது மீளஉலகங்களை ஆக்கலைக் குறிக்கிறது. நாதத்தை எழுப்பிப் படைத்தல் தொழில் செய்யவேண்டியிருப்பதால் 'ஒலி கொண்டு' என்பது கூறப்பட்டது. அந்த நாதத் தொனியிலிருந்து வேதம் முதலிய பல அறிவுக்கலைகள் பிறத்தலால் அது "வேதத்து ஒலி" என்று கூறப்பட்டது. வன்மையானது அழித்தலுக்கும், மென்மையானது ஆக்கலுக்கும் உரியனவாகலின், மெல்லிய இசையொலி எழுப்பும் "வீணை கேட்பார்" என ஆக்கற்றொழில் குறிப்பிடப்பட்டது. மீளப் படைப்புக்காக இறைவன் வீணைவாசித்து நாதத்தை எழுப்புகின்றான் என்ற உண்மையைத் திருநாவுக்கரசு சுவாமிகள்,

> "பெருங்கடல் மூடிப் பிரளயங் கொண்டு பிரமனும்போய்
> இருங்கடல் மூடி யிறக்கும் இறந்தான் களேபரமும்
> கருங்கடல் வண்ணன் களேபரமுங் கொண்டு கங்காளராய்
> வருங்கடல் மீளநின் றெம்மிறை நல்வீணை வாசிக்குமே"

என்று கூறி யருளினமை காண்க.

வேதத்து ஒலிமடக்கி - மடங்க எனற்பாலது மடங்கிஎன நின்றது. ஊர் உண்டு ஏறி-ஊர் - முதனிலைத் தொழிற்பெயர். ஊர்தல் - அதாவது பாவுதல். உண்டு - தமக்குள் அடக்கி. ஏறி - அதற்கு மேலாக நின்று. உலகம் பரவுதலைத் தம்முள் அடக்கி அதற்கு மேலாக நின்று.

பழுதில கடல்புடை தழுவிய படிமுத லியவுல குகண்மலி
குழுவிய சுரர்பிறர் மனிதர்கள் குலமலி தருமுயி ரவையவை
முழுவது மழிவகை நினைவொடு முதலுரு வியல்பர னுறைபதி
செழுமணி யணிசிவ புரநகர் தொழுமவர் புகழ்மிகு முலகிலே. ௮

(உரை) பழுதில கடல்புடை தழுவிய - குற்றமில்லாத் ஏழு கடல்களும் பக்கத்திற் சூழ்ந்திருக்கிற; படிமுதலிய மலி உலகுகள் - நில உலகம் முதலிய நிறைந்த உலகங்களில்; குழுவிய சுரர் பிறர் மனிதர்கள் குலம்மலி தரும் உயிரவை அவை முழுவதும் - கூட்டமாயுள்ள தேவர்கள் வகையிலும் அவர்களுக்கு வேறாயுள்ள மனிதர்கள் வகையிலும் கூட்டமாய் நிறைந்துள்ள உயிர்த் தொகுதிகள் அனைத்தும்; அழிவகை நினைவொடு - அழிதல் வேண்டும் என்ற எண்ணத்துடன்; முதல் உரு இயல்பரன் உறைபதி - முதல்வனது வடிவம் கொள்கின்ற உருத்திரன் எழுந்தருளியிருக்கின்ற தலமாகிய; செழுமணி அணி சிவபுரம் நகர் - ஒளி நிறைந்துள்ள மணிகளால் அழகு செய்யப்பட்டிருக்கிற சிவபுரம் என்ற நகரை; தொழுமவர் புகழ் - தொழுகின்றவர்களுடைய புகழ்; உலகில் மிகும் - உலகில், மேலும் மேலும் வளர்ந்தோங்கும்.

(விளக்கம்) பழுதில கடல் - கடல் - சாதி யொருமையாய்ப் பல கடல்களைக் குறிக்கின்றது. அதனால் இல என்ற பன்மைச் சொல் அதனைக் கொண்டு முடிந்தது. பழுதில கடல் என்றதனால் நாம் கண்ணால் காணும் பழுதுள்ள உப்புக் கடல் விலக்கப்பட்டது. நாம் ஊனக் கண்ணால் பார்க்க முடியாத பாற்கடல் முதலிய ஏழு கடல்களும் குறிக்கப் பட்டன. அழிவகை நினைவொடு - இறைவன் நினைப்பினாலே மாத்திரம் அழித்தற் றொழிலைச் செய்கின்றான் என்பது கூறப்பட்டது. நம் போன்று அவன் கருவி கரணங்களால் ஒன்றனையுஞ் செய்வதில்லை. உயிர் அவை அவை முதல் உரு இயல் பரன் - முதலாவது அவை - உயிரொடு சேர்ந்த பகுதிப் பொருள் விகுதி. இரண்டாவது அவை - தொகுதி என்னும் பொருளில் வந்தது. உருவம் ஒன்றுமில்லாத சுத்த சிவம், முதலாவது உருக்கொள்கிற உருத்திர மூர்த்தி. பரன் - மேலானவன். உருவங் கொள்கிற மூர்த்திகளில் மகா உருத்திரன் மேலானவன் ஆதலில் பரன் என்றார். அவனே மகா சங்கார காலத்தில் எல்லா உலகங்களையும் அழிக்கிறவன். செழுமணி - மணிக்குச் செழுமை ஒளி ஆதலின் ஒளி நிறைந்துள்ள மணி எனப் பொருள் உரைக்கப் பட்டது.

தாங்கருங் காலங் தவிரவந் திருவர் தம்மொடுங் கூடினாரங்கம்
பாங்கினால் தரித்துப் பண்டுபோ லெல்லாம் பண்ணிய கண்ணுதற் பரமர்
தேங்கொள்பூங் கமுகு தெங்கிளங் கொடிமாச்செண்பகம்வண்பலாவிலுப்பை
வேங்கைபூ மகிழால் வெயிற்புகா வீழி மிழலையா னெனவினை கெடுமே. ௯

(உரை) தம்மொடும் கூடினார் இருவர் அங்கம் - தம்மொடு சேர்ந்திருக்கிறவர்களாகிய அயன்மால் என்ற இரண்டு தேவர்களுடைய உடல்களை; தாங்கருங் காலம் தவிர்ந்தபின் - அவர்கள் தாங்க முடியாத காலம் கழிந்த பின்; பாங்கினால் தரித்து - (உயிர்களுக்கு நலம் உண்டாகும்படி தாம் தரித்துக்கொண்டு; பண்டுபோல - அழிப்புக் காலத்துக்குமுன் இருந்தபடி; எல்லா உலகங்களையும் பண்ணிய கண்ணுதற் பரமர் - எல்லா உலகங்களையும் படைத்த நெற்றிக்கண் உடைய சிவபெருமானை; தேங்கொள்பூங் கமுகு (ஆல) - மதுரமான பூக்களை உடைய கமுக மரங்களாலும்; தெங்கு இளம் கொடிகள் (ஆல) - தென்னமரங்களாலும் (படர்கின்ற) இளங் கொடிகளாலும்; மா செண்பகம் வண்பலா இலுப்பை வேங்கை பூ மகிழால் - மா மரங்கள் செண்பகமரங்கள் செழிப்பான பலாமரங்கள் இலுப்பை மரங்கள் வேங்கை மரங்கள் பூக்கள் உடைய மகிழமரங்கள் ஆகிய இவைகளா

னும்; வெயில் புகா வீழிமிழலையான் என - பகலோன் வெயில் உள்ளே புகாமலிருக்கின்ற திருவீழி மிழலையில் எழுந்தருளி யிருக்கின்றவன் என்று ஒருவன் சொல்ல; வினை கெடும் - அவன் செய்த இருவினைகளின் பலன் அவனை அடையாமற் போகும்.

(விளக்கம்) தம்மொடுங் கூடினார் இருவர் - படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் மூன்று தொழில்களில் அயன் படைத்தலையும் மால் காத்தலையும் செய்கிற கடவுளர் ஆதலின் அவர்களை அழித்தலைச் செய்கிற "கண்ணுதற் பரமரொடுங் கூடினார்" என்றார்; தாங்கரும் காலம் தவிர - என்றதனால் அயன்மால் கடவுளர்கள் பிரகிருதி மாயையில் அன்றி சுத்த மாயையிலாவது அசுத்த மாயையிலாவது உடல் தாங்கக் கூடியவர் அல்லர் என்பது பெறப்படுகின்றது. வைணவ சமயமும் பிரகிருதி மாயைக்கு மேலுள்ள தத்துவங்களைக் கூறவில்லை. இருவர் அங்கம் பாங்கினால் தரித்து - கண்ணவனாய் உலகெலாம் காக்கின்றானே என்றும் வேதனாய் வேதம் விரித்திட்டானே என்றும் திருநாவுக்கரசு சுவாமிகள் திருச்சோற்றுத் துறைத் திருத்தாண்டகத்தில் கூறியருளினர். கண்ணுதற்பரமர் திருவீழிமிழலையான எனக் கூற என்று முடிக்க. பரமர் - மேலானவர்; தனிமுதற் கடவுள் நுதற்கண் - அருளைக் குறிக்கின்றது. ஏ - ஈற்றசை.

புவம்வளி கனல்புனல் புவிகலை யுரைமறை திரிகுண மமர்நெறி
திவமலி தருசுரர் முதலியர் திகழ்தரு முயிரவை யவைதம
பவமலி தொழிலது நினைவொடு பதுமநன் மலரது மருவிய
சிவனது சிவபுரம் நினைபவர் செழுநில னினில்நிலை பெறுவரே. ௪௦

(உரை) புவம்வளி கனல்புனல் புவி - வான், காற்று, தீ, நீர், நிலம் ஆகிய ஐம்பெரும் பூதங்களில்; கலை உரை மறை - (அறுபத்து நான்கு) கலைப் பொருள்களையும் உரைக்கின்ற மறை நூல்கள் கூறுகிறபடி; திரிகுணம் அமர்நெறி - தாமதம் இராசதம் சாத்துவிகம் என்னும் மூன்று குணங்களும் தங்கித் தொழிற்படுகின்ற முறைமையில்; திவமலி தருசுரர் முதலியர் திகழ்தரும் உயிரவை அவை - தேவலோகத்தில் நெருங்கி வாழ்கின்ற தேவர்கள் (நில உலகத்தில் வாழ்கின்ற மனிதர்கள்) முதலிய உயிர்த் தொகுதிகள்; தமபவமலி தொழிலது நினைவொடு - தங்களுடைய பிறவிகளில் (வாழ் நாள்களில்) நிறைந்திருக்கும் உலக நுகர்வுப் பொருள்களை விரும்பும் செயலை மனதில் நினைந்து கொண்டு; பதுமம் நன்மலரது மருவிய - தாமரை நற்பூவில் வீற்றிருக்கின்ற (அயனாகிய); சிவனது சிவபுரம் நினைபவர் - சிவபெருமான் (தன்னை மக்கள் வணங்கி உய்யும்படி திருமேனி கொண்டிருக்கின்ற) திருச்சிவபுரத்தைத் (உள்ளத்தில்) நினைத்துக் கொண்டிருக்கும் மக்கள்; செழும் நிலனினில் நிலைபெறுவர் - வளம் பொருந்திய நில உலகத்தில் (உலக நுகர்வுப் பொருள்களுடையவர்களாய்) சிறப்புடன் நிலைபெற்று வாழ்வார்கள்.

(விளக்கம்) இந்தத் தேவாரப் பாட்டுச் சிவபெருமான் அயனை அதிட்டித்து (நிலைக்களமாகக்கொண்டு செலுத்தி) நின்று செய்யும் படைத்தற் றொழிலைக் குறிக்கின்றது. "சிவனாகித் திசை முகனாய்த் திருமாலாகி" என்று திருநாவுக்கரசு சுவாமிகள் திருத்தலையாலங்காடுத் திருத்தாண்டகம் ௬-வது பாட்டிற் கூறியிருத்தல் காண்க. புவம்வளி கனல் புனல்புவி திரிகுணம் அமர்நெறி - மூலப்பகுதியிலிருந்து உண்டான பிரகிருதி மாயா தத்துவங்கள் முழுவதும் முக்குண உருவங்களாயினும் அத்தத்துவங்களில் ஐம்பெரும் பூதங்கள் மிகத் தடித்த தத்துவங்கள் ஆதலின் புவம்வளி கனல்புனல் புவி திரிகுணமமர்நெறி என்றார். தாமதம் இராசதம் சாத்துவிகம் என்னும் முக்குணங்களில், பருவுடலையே தாம் என்று உணரும் மக்கள் பெரும்பான்மை தாமத இராசத குணங்களின் வயப்பட்டுத் துன்பத்தையும் மோகத்தையும் சிறுபான்மை சாத்துவிகம் வயப்பட்டு உலக இன்பத்தையும் அடைந்து உழல்வர். உயிர் அவை அவை - முதலில் வரும் அவை பகுதிப் பொருள் விகுதி; உயிர் சாதி யொருமை. இரண்டாவது அவை தொகுதி

என்று பொருள்படும். தமபலம் - தம - தம்முடைய. அ - ஆறும் வேற்றுமைப் பன்மை உருபு. பவம் - சாதி யொருமை. பவம்-பிறப்பு. பவ மலிதொழிலது நினைவொடு-உயிர்கள் உலக நுகர்வுகளை விரும்பும்படி இறைவன் மனதால் நினைக்காவிட்டால் உயிர்களுக்கு நுகர்வுகளில் விருப்பம் உண்டாகாது. அது ஆறும் வேற்றுமை உருபு. பதும நன் மலர் அது - தாமரை உலகினைக் குறிக்கின்றது; தத்துவங்களாலாகிய உலகம் நாளம் இதழ் மகரந்தம் பொருட்டு வீசம் முதலிய பகுதிகளை உடைய தாமரை மலர் போன்றிருத்த லின் அயனைத் 'தாமரைப் பூமேலவன்' எனப் புராணங்கள் கூறுகின்றன. உலகினைப் படைத்தற்கு அயன் உலகில் நிறைந்திருக்க வேண்டியது, இன்றி அமையாது ஆதலின் 'பதும நன்மலரது மருவிய' என்றார். அது பகுதிப் பொருள் விகுதி. சிவன் - என் பது இங்கே அயனை அதிட்டித்து நின்று படைத்தற் றொழிலைச் செய்கின்ற சிவன். சிவபுரம் நினைபவர் - நினைத்தலாவது: சிவன் பவம் மலி தொழிலை நினைக்கும் நினைப்புக்கு இணங்க அவனை அற வழியில் நின்று வழிபடுதல். நிலனினில் நிலை பெறுவர் - நிலனி னினில் நிலை = நிலன் + இன் + இல் + நிலை. இன் - சாரியை. இல் - ஏழாம் வேற்றுமை உருபு. ஏ - ஈற்றசை.

இருநிலனாய்த் தீயாகி நீருமாகி யியமானனா யெறியுங் காற்றுமாகி
அருநிலைய திங்களாய் ஞாயிறாகி யாகாசமா யட்ட மூர்த்தியாகி [யாகி
பெருநலமுங் குற்றமும் பெண்ணுமாணும் பிறருருவுந் தம்முருவுந் தாமே
நெருநலையா யின்றாகி நாளையாகி நிமிர்புன் சடையடிக ணின்றவாறே. ௧௧

(உரை) நிமிர் புன் சடை அடிகள் - நிமிர்ந்திருக்கின்ற சிறிய சடைகளையுடைய சிவபெருமான்; இருநிலனாய்த் தீயாகி நீரும் ஆகி (உம) - பெரிய மண், தீ, நீர் ஆகியும்; இயமானனாய் எறியும் காற்றும் ஆகி (உம்) - உயிர், வீசுகின்ற காற்று ஆகியும், அரு நிலைய திங்களாய் ஞாயிறு ஆகி (உம்) - (மக்களால்) காணுதற்கு முடியாத நிலைகளை யுடைய திங்கள், ஞாயிறு ஆகியும்; ஆகாசமாய் அட்டமூர்த்தி ஆகி (உம்) - வான் ஆகி யும் (இவ்வாறு) எட்டு உருவங்களை உடையவனாகியும்; பெருநலமும் குற்றமும் (ஆகி யும்) - பெரிய நன்மையாகிய வீட்டின்பமும் (அருள் ஆணவ மலத்துடன் பொருந்தி நின்று அதனை இயக்கி திரோத மலமாய் நின்று உயிர்களைக் கட்டுறுத்தும்) கட்டு ஆகிய குற்றமும் ஆகியும்; பெண்ணும் ஆணும் (ஆகியும்) - பெண் உருவம் ஆண் உருவம் ஆகியும்; பிறர் உருவும் தம் உருவும் தாமே ஆகி (உம்) - பிற உயிர்களுடைய உருவங் களும் தாம் கொள்ளுகிற உருவங்களும் தம்மை அன்றி நிலைபெறுவன அல்லவாகியும்; நெருநலையாகி இன்றாகி நாளை ஆகி (உம்) - சென்றகாலம் நிகழ்காலம் வருங்காலம் ஆகிய மூன்று காலங்களாகியும்; நின்ற ஆறு (உடையர்) - (உயிர்களின் பொருட்டு ஐந்தொழில் செய்ய) நிற்கின்ற தன்மையை உடையர். அவருடைய பேரிரக்கம் தான் என்னே! என்பது குறிப்பெச்சம்.

(விளக்கம்) இந்தத் தேவாரப் பாட்டின் முன் இரண்டு அடிகளும் சிவபெருமான் எட்டு உருவங்களுடையன (அட்டமூர்த்தி) என்று கூறுகின்றன. மண் புனல் கனல் வளி வெளி ஞாயிறு திங்கள் உயிர் என்ற முறைமையிற் கூறப்பட வேண்டிய எட்டு உருவங்களும், செய்யுள் ஆதலின் முறை பிறழ்ந்து கூறப்பட்டன. பெருநலமும் குற்றமும் - நன்மைகள் எல்லாவற்றினுள்ளும் சிறந்த நன்மை வீட்டின்பம் ஆதலின் வீட்டின்பம் எனப் பொருள் உரைக்கப் பட்டது. இந்த இன்பம் நிலையாயுள்ளது. ஆதலின் பெருநலம் என்றார். குற்றம் என்பது இங்கே கட்டு (பந்தம்) ஆகிய குற்றத் தைக் குறிக்கின்றது. இக்குற்றம் உயிர்களை விட்டு முடிவில் நீங்கக்கூடியது. மாணிக்க வாசக சுவாமிகள் திருப்பொற்சுண்ணம் இறுதிப் பாட்டில் சிவபெருமானை, "பாதமும் வீடுமாயினார்" எனக் கூறியருளினமை காண்க. பெண்ணும் ஆணும் - உலகில் எல்லா

உயிர்ப் பொருள்களும் ஆண் பெண் உருவங்களாய் நிற்றலுக்கு ஏற்ப சிவபெருமானுடைய ஆற்றல் (சத்தி) அவனிடமிருந்து வெளிப்பட்டு உலகிற் பலவாறாய்த் தொழிற்படும் பொழுது பெண்ணாகக் கூறப்பட்டுள்ளது. உயிரில் பொருள்களும் ஒரு பகுதி ஆண் குணங்களை உடையனவாயும், மற்றொரு பகுதி பெண் குணங்களை உடையனவாயும் உள்ளன. "சத்தியுஞ் சிவமுமாய்த் தன்மை யிவ்வுலக மெல்லாம் - ஒத்தொவ்வா வாணும் பெண்ணு முயர்குண குணியுமாகி - வைத்தனன்" என்று சிவஞான சித்தியாரிற் கூறப்பட்டிருத்தல் காண்க. நெருநலை = நெருநல் + ஐ. ஐ சாரியை. நெருநல் - நேற்று, முன்னை நாள். நெருநலையாய் இன்றாகி நாளையாகி - இறப்பு, நிகழ்வு, எதிர்வு என மூன்று காலங்களில் கூறப்படும் நிகழ்ச்சிகள் கால தத்துவத்தைச் சார்ந்துள்ளன. உலக நிகழ்ச்சிகளெல்லாம் கால தத்துவத்தைப் பற்றியே நிகழ்கின்றன. அக்கால தத்துவத்தை இயக்குகிறவன் சிவபெருமான். ஆதலின் அவன் மூன்று காலங்களுமாயினான் எனக் கூறப்பட்டனன். நின்ற ஆறு - சிவபெருமான் இவ்வாறு நிற்றல் இயல்பு ஆதலின் நிற்கிற ஆறு, என முக்காலத்து மொத்தியல் நிகழ்காலத்துக் கூறற்பாலது. நின்ற ஆறு என இறந்தகாலத்தாற் கூறப்பட்டது. (நன்னூல் பொதுஇயல் ௩௩௨-வது சூத்திரம்.) ஆறு - தன்மை. அடிகள் நின்ற ஆறு உடையர் என முடிக்க. உடையர் - சொல்லெச்சம். ஏ - ஈற்றசை.

மின்னுருவை விண்ணகத்தி லொன்றாய் மிக்கு
வீசுங்கால் தன்னகத்தி லிரண்டாய்ச் செந்தீத்
தன்னுருவின் மூன்றாய்த் தாழ்புனலி னான்காய்த்
தரணிதலத் தஞ்சாகி யெஞ்சாத் தஞ்சம்
மன்னுருவை வான்பவளக் கொழுந்தை முத்தை
வளரொளியை வயிரத்தை மாசொன் றில்லாப்
பொன்னுருவைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே. ௧௨

(உரை) மின்னுருவை - மின்னல்போல் மிளிர்கின்ற விந்து உருவமாகியும்; விண் அகத்தில் ஒன்றாய் - விண்ணில் (ஆகாயத்தில்) ஓசை குணம் ஒன்று மாத்திரம் ஆகியும்; மிக்கு வீசுங்கால் தன் அகத்தில் இரண்டாய் - காற்று மிகுதியாய் அடிக்கும் பொழுது அதனிடத்தில் ஓசை, ஊறு என்ற இரண்டு குணங்கள் ஆகியும்; செந்தீத் தன்னில் மூன்றாய் - செந்நிறமுள்ள தீயில் ஓசை, ஊறு, உருவம் என்ற மூன்று குணங்களாகியும்; தாழ் புனலில் நான்காய் - (நிலத்தில்) படிந்து ஓடுகின்ற நீரில் ஓசை, ஊறு, உருவம், சுவை என்ற நான்கு குணங்களாகியும்; தரணி தலத்து அஞ்சாகி - மண்ணில் ஓசை, ஊறு, உருவம், சுவை, நாற்றம் என்ற ஐந்து குணங்களாகியும்; வான் பவளக் கொழுந்தை முத்தை வயிரத்தை - மேலான பவளத்தைப் போலவும் முத்தைப் போலவும் வயிரத்தைப் போலவும் ஒளிர்கின்ற உருவம் ஆகியும்; மாசொன்று இல்லாப் பொன் உருவை - குற்றமில்லாத பொன்போல் மிளிர்கின்ற உருவம் ஆகியும்; எஞ்சாத் தஞ்சம் மன் உருவை - (இவ்வாறு உலகிலே ஒளிரும் உருவப் பொருள்களுக் கெல்லாம்) என்றென்றும் நீங்காத புகலிடமாயுள்ள நிலையான நாத ஒளி உருவமாகியும்; வளர் ஒளியை - (மேலே கூறிய உயிரில் பொருளில்களில் அன்றி உயிர்ப் பொருள்களில்) மேலும் மேலும் மிகுந்து ஒளிர்கின்ற ஒளியாகியும்; புள்ளிருக்கு வேளூரானை - திருப்புள்ளிருக்கு வேளூர் என்ற வைத்தீஸ்வரன் கோயிலில் எழுந்தருளி யிருப்பவனும் ஆகிய சிவபெருமானை; போற்றாதே - (நான்) வணங்காமல்; ஆற்ற நாள் போக்கினேன் - நீண்ட காலம் வீணாகக் கழித்தேன்.

(விளக்கம்) மின் உருவை - மின் என்பது இங்கே விந்து ஒளியைக் குறிக்கின்றது. திருமந்திரம் ஏழாந் தந்திரம் சமாதிக்கிரியை ௩௦-வது பாட்டில் “மின்னோத்த விந்து நாதாந்தத்து விட்டிட” என்ற தொடர்மொழி, மின்னல் உருவம் விந்து என்பதை உணர்த்துகிறது. நுண்ணிய விண்ணில் ஒளியாய் விளங்குவது தடித்த காற்று முதலிய பூதங்களில் ஒலியாயும் விளங்குகின்றது. விண்ணகத்தில் ஒன்றாய்......தரணி தலத்து அஞ்சாகி - சிவபெருமான் விண் முதல் நிலம் வரை உள்ள ஐம்பெரும் பூதங்களிலும் முறையே ஓசை, ஊறு, உருவம், சுவை, நாற்றம் ஆகிய ஒன்றுக்கொன்று ஏறி வரும் குணங்களை உடையன். இதனை மாணிக்கவாசக சுவாமிகள்,

“பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் திகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி”

என்று போற்றித் திருவகவலிற் கூறியருளினமை காண்க. ஐம்பூதங்களிலும் விளங்கும் ஒளியைத் திருமந்திரம், ௯-ம் தந்திரம், ௪-வது ஒளி, ௫-வது பாட்டு (“மேலொளி கீழதன்......” கூறுதல் காண்க. பவளக் கொழுந்து முத்து வயிரம் பொன் - இப்பொருள்கள் மண் (பிருதிவி) என்ற பூதத்தில் ஒளியாய் விளங்கும் பொருள்கள் என்று குறிக்கப்பட்டன. வேறு வேறு தனிப் பொருள்களில் விளங்கும் ஒளியை நாம் ஐம்பூதங்களில் மண்ணில் மாத்திரம் காணலாம் ஆதலின் இவைகள் கூறப்பட்டன. எஞ்சாத் தஞ்சம் மன் உரு - உயிரைத் தவிர ஏழு உருவங்களிலும் விளங்குகின்ற ஒளி. அவைகளில் நிறைந்து விளங்குகிற நாதத்தின் ஒளியாதலின் அது மன் உரு (நிலையான உருவம்) எனப் பட்டது. அந்த நாதத்தைத் தவிர ஏழு உருவங்களில் விளங்குகிற ஒளிக்குப் பிறிது புகலிடமில்லை யாதலின் நாதம் எஞ்சாத் தஞ்சம் என்று கூறப்பட்டது. பராசத்தியில் விளங்குகிற அருளொளி முதலாவது சுத்த மாயையிலுள்ள நாதத்தில் விளங்கி, அந்நாத ஒளி அது நிறைந்திருக்கின்ற எல்லாப் பொருள்களிலும் விளங்குகின்றது என்பது குறிப்பிடத் தக்கது. எஞ்சாத - எஞ்ஞான்றும் நீங்காத. எஞ்ஞாத தஞ்சம் - போகாப் புகல். வளர் ஒளி - சிவபெருமான் விளங்குகின்ற எட்டு உருவங்களில் ஏனைய ஏழு உருவங்கள் முன்னே கூறப்பட்டதனால் வளர் ஒளி என்பதற்கு உயிர்ப் பொருள்களில் விளங்கும் ஒளி எனப் பொருளுரைக்கப் பட்டது. உயிரினது தவம் முதிர முதிர சிவபெருமான் அருள் ஒளி அதனிடத்தில் ஏறி வருதலால் ‘வளர் ஒளி’ எனப் பட்டது. போற்றாதே ஆற்ற நாள் போக்கினேன் - அடிகள் தாம் சமண சமயத்திலிருந்து காலங் கழிந்ததை நினைந்து கூறுகின்றார். ‘இருநிலனாய்த் தீயாகி’ என்ற முந்திய தேவாரப் பாட்டு, சிவபெருமான் மண், நீர், தீ, வளி, வெளி, ஞாயிறு, திங்கள், உயிர் என்ற எட்டு உருவங்களாய் விளங்குகின்றான் என்று கூறியது. இப்பாட்டு அவன் அவ்வுருவங்களில் அருள் ஒளியாயும் (Energising force) விளங்குகின்றான் என்று கூறுகின்றது. (He is not only Static form but also dynamic force moving the whole world both animate and inanimate) முந்திய பாட்டில் ஞாயிறு திங்கள் என்று கூறியிருப்பவை இப்பாட்டில் நாதம் விந்து எனக் கூறப்பட்டன. ஞாயிறும் திங்களும் முறையே நாதமும் விந்துவுமாகும். திருமந்திரம், ௭-ம் தந்திரம், ௧௨-வது குருபூசை, “இந்துவும் பானுவுமென் றெழுகின்ற தோர் - விந்துவு நாதமும்” என்ற ௭-வது பாட்டு பார்க்கவும். மின்னுரு முதலாக் கூறப்பட்ட, உரு ஒவ்வொன்றுக்கும் இரண்டாம் வேற்றுமை “ஐ”யை விரித்துப் பொருள் கூறுதலுக்குப் பதிலாக ஐ வரும் இடங்களில் உம் கொடுத்துக் கூறி முடிவில் இவைகள் எல்லாம் ஆகிய சிவபெருமானை என்று பொருள் கூறப்பட்டது.

மலைபல வளர்தரு புவியிடை மறைதரு வழிமலி மனிதர்கள்
நிலைமலி சுரர்முத லுலகுக ணிலைபெறு வகைநினை வொடுமிகும்
அலைகடல்நடு வறிதுயில மரரியுரு வியல்பர னுறைபதி
சிலைமலிமதில் சிவபுர நினைபவர் திருமகளொடு திகழ்வரே. கரு

(உரை) மலைபல வளர்தரு புவியிடை - பல மலைகள் வளர்கிற நில உலகில்; மறைதரு வழிமலி மனிதர்கள் - அறிவு நூல்களிற் கூறப்பட்ட வழியில் ஒழுகி வருகிற மனிதர்களும்; நிலைமலிசுரர் முதல் உலகுகள் - நிலைபெற்றுள்ள தேவர் முதலியவர்கள் வாழ்கின்ற தேவலோக முதலிய உலகங்களும்; நிலைபெறும் வகை மிகும் நினைவொடு - நிலையாக நின்று நிலவும்படி (உள்ளத்தில்) நினைக்கும் மேலான நினைவுடன்; அலைகடல் நடு அறிதுயில் அமர் அரியுருவியல் பரன் - அலைகள் வீசுகிற கடலின் நடுவில் அறிதுயில் செய்யும் திருமாலின் உருவங்கொண்டுள்ள இறைவன்; உறைபதி - எழுந்தருளி யிருக்கும் இடமாகிய; சிலை மலி மதில் சிவபுரம் - கற்கள் நிறைந்துள்ள மதிற் சுவர்களாற் சூழப்பட்ட திருச்சிவபுரத்தை; நினைபவர் - (உள்ளத்தில்) எண்ணிக் கொண்டிருப்பவர்கள்; திருமகளொடு திகழ்வர் - திருமகள் அருட்பார்வையால் உண்டாகும் எல்லாச் செல்வங்களோடுங் கூடிச் சிறப்பாய் வாழ்வார்; ஏ - அசை.

(விளக்கம்) இத்தேவாரம் இறைவன் திருமாலை அதிட்டித்துக் காத்தற் றொழில் செய்தலைக் கூறுகின்றது. 'மலைபல வளர்தரு' என்பது மலைகள் வளர்ந்து வருவனவாக மேல்நாட்டு இயற்கை ஆராய்ச்சியாளரும் இக்காலத்துக் கூறுகிறார்கள். 'வளர்தரு' என்பதில் 'தரு' துணைவினை. வளர்கின்ற என்பது பொருள். மலையிற் பலநுகர் பொருள்கள் உண்டாதலாலும், அதனிடை நின்று வருகிற யாறுகளால் நிலவளமும் நீர் வளமும் உண்டாதலாலும், 'மலைபல வளர்தரு புவி' என்று புவி சிறப்பித்துக் கூறப்பட்டது. மறை - மறைவாயுள்ள உண்மைகளை எது மக்களுக்கு உணர்த்துமோ அது மறை. ஆகு பெயர். அது இங்கே பொதுவாய் அறிவு நூலைக் குறிக்கின்றது. 'மறைதரு' என்பதில், தரு - கூறுகின்ற 'மறைதரு வழிமலி மனிதர்கள் நிலைபெறு வகை' எனவே, மறைகளிற் கூறுகிற அறத்தின் வழி நடவாதார் நிலைபெற்றுச் சிறப்பாக வாழமாட்டார் என்பது பெறப்பட்டது. அறிதுயில் - நனவு அறிவுடன் சிந்திக்கின்ற. நினைபவர் - இறைவன் உயிர்களுக்காக அருளினால் எப்பொழுதும் செய்து வரும் காத்தற் றொழிலையும் அவன் அருளையும் உள்ளத்தில் எண்ணுகிறவர்கள்.

விரிகதிர் ஞாயிறல்லர் மதியல்லர் வேத விதியல்லர் விண்ணு நிலனும்
திரிதரு வாயுவல்லர் செறிதீயு மல்லர் தெளிநீரு மல்லர் தெரியில்
அரிதரு கண்ணியாளை யொருபாக மாக வருள் காரணத்தில் வருவார்
எரியர வாரமார் பரிமை யாருமல்ல ரிமைப்பாரு மல்ல ரிவரே. கசு

(உரை) தெரியில் - நுணுகி ஆராய்ந்து பார்த்தால்; இவர் - இறைவன்; விரிகதிர் ஞாயிறு அல்லர் - விரிந்த கிரணங்களையுடைய கதிரோன் அல்லர்; திங்கள் அல்லர் திங்களும் அல்லர்; வேதவிதியல்லர் - அறிவு நூல்களிற் கூறப்படும் ஆணையும் (நியமம்) அல்லர்; விண்ணும் நிலனும் திரிதருவாயுவல்லர் - விண்ணிலும் மண்ணிலும் திரிகிற காற்றுமல்லர்; செறிதீயுமல்லர் - நெருங்கி எரிகின்ற தீயுமல்லர்; தெளிநீருமல்லர் - தெள்ளிய நீரும் அல்லர்; அரிதரு கண்ணியாளை - செவ்அரி பரந்த கண்களை உடைய உமாதேவியாரை; ஒரு பாகமாக அருள்காரணத்தில் வருவார் - உயிர்களுக்கு அருள் செய்யும் பொருட்டுத் தமது இடது பாகத்தில் வைத்திருப்பவர்; எரி அரவு ஆரமார்பர் - சினம் கொள்ளும் பாம்பை மாலையாக மார்பில் அணிந்தவர்; இமையாரும் அல்லர் . உயிர்களுக்கு ஒளி செய்யாதிருப்பவருமல்லர்; இமைப்பாரும் அல்லர் - ஒளி செய்கிறவரும் அல்லர்.

(விளக்கம்) இத்தேவாரம், இறைவனுடைய உண்மை இயலை (சொரூப இலக்கணத்தைக் கூறுகிறது. இறைவனை "இருநிலனாய்த் தீயாகி" என்ற பாட்டில் ஞாயிறாகியும் திங்களாகியும் இருக்கிறான் என்று கூறிவிட்டு இப்பாட்டில் ஞாயிறுமல்லன், திங்களுமல்லன், எனக் கூறுவது முரணாதோ எனின் முரணாது. 'இருநிலனாகி' என்ற பாட்டில் இறைவனுடைய பொது இயலும் (தடத்த இலக்கணமும்) 'இப்பாட்டில், அவனுடைய உண்மை இயலும் (சொரூப இலக்கணமும்) கூறப்பட்டன ஆகலின். இறைவனுடைய அருள் ஆற்றல் விளங்கும் உலகில் அவன் ஞாயிறு திங்கள் முதலிய எட்டு வடிவங்களை உடையவனாயிருக்கிறான் என்பதும், உலகில் விளங்காது தானாக நிற்கும் தன்னுடைய உண்மை நிலையில் அவன் ஞாயிறு திங்கள் அல்லன் என்பதும் கூறப்பட்டன. திருநாவுக்கரசு சுவாமிகள் பிற இடங்களிலும் 'அருக்கனாவான் அரனுருவல்லனோ' என்றும் "அங்கதிரோன் றன்னை அண்ணலாக் கருதவேண்டாம்" என்றும் "மண்ணல்லை விண்ணல்லை" என்றும் கூறியருளினமை காண்க. வேதங்களும் இறைவனை விசுவன் (உலகினுள்ளான்) எனக் கூறியதுடன் விசுவாதீதன் (உலகினைக் கடந்தவன்) எனவும் கூறுகின்றன. எரி அரவு - எரி என்ற சொல்லுக்கு ஒளி விளங்குகின்ற என்றும் பொருள் கூறலாம். அரவு - ஒளி விளங்கும் விந்து - சத்தியாகிய குண்டலி சத்தியைக் குறிக்கிறது. குண்டலி - பாம்பு. இமையாரு மல்லர் இமைப்பாரு மல்லர் என்பதில் இமைத்தல் - விளங்குதல், ஒளி செய்தல், "மின்னுறழ் இமைப்பிற் சென்னி பொற்பண்" என்ற திருமுருகாற்றுப்படை அடி-வது வரியில், 'இமைப்பு' என்ற சொல்லுக்கு நச்சினார்க்கினியர் 'விளக்கம்' என்று உரை செய்திருத்தல் காண்க. இமையார்-ஒளி செய்யார். (எதிர்மறை) இமைப்பார் - ஒளி செய்வார். (உடன்பாடு) ஒளி செய்தல் = அறிவு விளங்கச் செய்தல் இறைவனுடைய அளவில் பேரொளிக்கு நாம் உலகிற்காணும்படி எடுத்துக் காட்டாக விளங்குவது கதிரவன் ஒளி. அக்கதிரவன் ஒளி முன்னர் எல்லா உயிர்களும் இயங்குவன அன்றி அவன் ஒருயிர்க்கு ஒளி செய்தலும் பிறிதோர் உயிர்க்கு ஒளி செய்யாதிருத்தலும் இலன். அதுபோல், பேரொளியாய் விளங்குகிற இறைவன் திருமுன்பு எல்லா உயிர்களும் தங்கள் வினைக்கு ஏற்ப அறிவு விளங்கப்பெற்று இயங்கும் தகுதி அடைகின்றன. அவன் உயிர்கள் எல்லாமும் தகுதி அடையவேண்டும் என்ற எண்ணங் கொண்டு (சங்கற்பித்து) அவைகளை இயங்க வைக்கின்றான் (அதிட்டிக்கின்றான்) அன்றிக் காணத்தால் இயங்க வைக்கிறான். (அதிட்டிக்கிறான்) அல்லன். ஆதலின், உயிர்கள் பொருள்களை நுகர்ந்து வேற்றுமைப்படுவனபோல், அவன் வேற்றுமைப் படான். "மன்னுசிவன் சந்நிதியில் மற்றுலகம் சேட்டிக்கும் என்னும் மறை" என்பதும் இதுவே.* 'இமையாரு மல்லர் இமைப்பாரு மல்லர்' என்பது உலக இயக்கத்துக்கு இறைவன் காரணனா யிருப்பினும் வேற்றுமைப்படான் என்பதை உணர்த்துகிறது.

மாயமாய மனங்கெடுப் பானை மனத்துளே மதியா யிருப்பானைக்
காயமாயமு மாக்கு விப்பானைக் காற்றுமாய்க் கனலாய்க் கழிப்பானை
ஓயுமாறுறு நோய்புணர்ப்பானை யொல்லை வல்வினைகள் கெடுப்பானை
வேய்கொ டோளுமை பாகனைநீடூர் வேந்தனைப் பணியா விடலாமே. க௬

(உரை) மாயம் ஆய மனம் கெடுப்பானை - வஞ்சனையைச் செய்வதாகிய மனத்தை அவ்வஞ்சனை யில்லாதிருக்கச் செய்கிறவனை. மனத்துளே மதியாய் இருப்பானை - வஞ்சனையில்லாமற் செய்யப்பட்ட அம்மனத்தினுள்ளே தூய அறிவாய் விளங்குகின்றவனை ; மாய காயமும் ஆக்குவிப்பானை - மாயையால் உடலை உண்டுபண்ணி அவ்வுடலில் உயிரைச் சேர்ப்பானை ; காற்றுமாய்க் கனலாய்க் கழிப்பானை - அவ்வாறு உண்டுபண்ணின

* இமையார் இமைப்பர். என்பனவற்றிலுள்ள இமைத்தலுக்குக் கண்ணிமைத்தல் எனப்பொருள்கொண்டு அவை முறையே தேவர்கள் மக்கள் என்று பொருள்படும் என்று கூறுதலுமுண்டு.

உடலைக் காற்றாயும் தீயாயும் கழியச் செய்கிறவனை ; ஓயும் ஆறு நோய் புணர்ப்பானை - (உயிர் உலக நுகர்வில்) தளர்வு அடையும்படி துன்பங்களைக் கூட்டுவிக்கின்றவனை ; ஒல்லை வல்வினைகள் கெடுப்பானை - (அவ்வாறு உயிர் துன்பம் நுகரும்படி செய்து) அது செய்த கொடிய வினைகளின் பயனைப் போக்குவித்து விரைவில் பக்குவப் படுத்து கிறவனை ; வேய்கொள் தோள் உமை பாகனை - மூங்கிலைப்போலும் தோள்களையுடைய உமா தேவியாரை இடது பாகத்தில் வைத்திருப்பானை ; நீடூர் வேந்தனை - திருநீடு ஊரில் திருக்கோயில்கொண் டெழுந்தருளி யிருக்கும் (பெரிய) மன்னனை; பணியா விட லாமே-வணங்காமல் இருக்க முடியாது. (அதாவது வணங்கியே தீரவேண்டும் என்றபடி.)

(விளக்கம்) முதல் மூன்று அடிகளிலும் உள்ள ஒவ்வொரு அடியிலும் எதிரிடைப் பட்ட இவ்விரண்டு கருத்துக்கள் அடங்கிய இவ்விரண்டு சொற்றொடர்கள் வைக்கப் பட்டு-உயிருக்குப் பக்குவம் (தகுதி) வருவித்தற் பொருட்டு, முன்னைய சொற்றொட ரால் கட்டினுற் செய்யும் தொழிலும் : பின்னைய சொற்றொடரால் அக்கட்டை நீக்கும் தொழிலும் கூறப்பட்டிருக்கிற அழகு நோக்கற்பாலது.

முதலடி : முதலாவது உயிரானது மலத்தினுலாகிய அறியாமையால் மனத் தின்பாலும், மனத்தை ஈர்த்து பொருள் நுகர்வுகளிற் செல்கிற ஐம்புலன்களின்பாலும், வயப்பட்டுக் காமம் வெகுளி மயக்கங்களுக்கு உட்பட்டுத் தீய நெறியிற் செல்கிறது. துன்பநுகர்விஞல், அது தீய நெறியினின்று விலகி மனத்தூய்மை அடைந்தபொழுது இறைவன் அவ்வுள்ளத்தில் விளங்கித் தோன்றுகிறான். "மாறி நின்று என்னை மயக்கி டும் வஞ்சப்புலன் ஐந்தின் வழிஅடைத்து" என மாணிக்கவாசக சுவாமிகள் கூறியிருப் பது காண்க.

இரண்டாவது அடி : காயமாயமும், என்பதை 'மாயகாயமும்' என மாற்றிவைத் துப் பொருள் உரைக்கப்பட்டது.மாயை என்பது மாய எனக் குறைந்து நின்றது. காயம் என்பது இங்கே பரு(தூல) உடலைக் குறிக்கிறது. சைவசித்தாந்தத்திற் கூறியுள்ள "உள் ளது தோன்றல்" என்னும் வழக்குப்படி (சற்காரியவாதப்படி) அழிவு என்பதெல்லாம் பருமை (தூலம்)யானது நுண்மை (சூட்சுமம்) ஆவதன்றிப் பிறிதன்று. ஐம்பெரும் பூதக் கூட்டத்தாலாகிய பரு உடலிலுள்ள மண் நீர் என்னும் பரும்பூதங்கள் தீ, காற்று என்னும் நுண் பூதங்களாக மாறி உலகப்பரப்பைச் சேர்கின்றது ஆதலின் காற்று மாய்க்கனலாய்க் கழிப்பானை" என்று அடிகள் கூறினர் வெளி (ஆகாயம்) புறக்கண் ணுக்குத் தெரியாது. ஆதலின் கூறப்படவில்லை போலும்.

மூன்றாவது அடி : உயிரானது தான்செய்த வினைப்பயனுக இறைவனுற் கொடுக்கப் பட்ட துன்பம் நுகர்தலினுலேயே விடய நுகர்வுகளில் ஓய்வடைந்து பயன் கருதிச் செய்யும் வினைகளைச் செய்யாமலிருக்கின்றது என்ற கருத்தைக் கூறுகிறது.

நாலாவது அடி : மூன்று அடிகளினும் கூறப்பட்ட செயல்களை இறைவன் உயிர் மேல்வைத்த பேரருளாற் செய்கிறான் என்னும் கருத்து வெளிப்படுத்த அடிகள் இறை வனை, வேய்கொள்தோள் உமைபாகன் என்று கூறியருளினர். அடியார்களாகிய நமக்கு நம்பொருட்டு இத்துணை அருள் செய்கின்றவனை வணங்கி அவன் வழியில் நின்று அவ னுக்குள் அடங்காமல் இருத்தல் உய்யுந்தீர்வு இல்லாத செய்ந்நன்றி மறத்தல் ஆகும் என் பது ஈற்றிலுள்ள வினுப்பொருளுடைய ஏகாரத்தாற்றெளிவிக்கப்பட்டது.

வேந்தன் - உயிர்களை ஆள்கிற மன்னன். இறைவன் உயிர்களை ஆளுகிற வேந் தன் என்றும், அவனை உயிர்கள் பணிதல் வேண்டும் என்றும் கூறப்படுதலினுல் இறைவ னுக்கும் உயிர்களுக்கும் என்றும் உள்ள தொடர்பு ஆகிய ஆண்டான் அடிமைத் தொடர்பு குறிப்பிடப் பட்டது. பணிதல் என்பது அடிமைகளாகிய உயிர்கள் ஆண்டான் ஆகிய இறைவனுக்குத் தன் முனைப்பு இல்லாமல் தாழ்மையுடன் அடங்கி அவனது அருள்வழி நிற்றல் வழிபாடும் அதுவே யாகும். பணியா விடலாமே - என்பதன் ஈற்றிலுள்ள ஏகாரம் - வினுப்பொருள் குறித்து எதிர்மறைப் பொருள் தந்து நின்றது. "அத்தா வுனக் காளாயினி யல்லேன் எனலாமே" என்பது போல.

௨. உயிரவை நிலை

கருவாகிக் குழம்பிருந்து கலித்து மூளை
கருநரம்பும் வெள்ளெலும்புஞ் சேர்ந்தொன் றாகி
உருவாகிப் புறப்பட்டிங் கொருத்தி தன்னால்
வளர்க்கப்பட் டுயிராருங் கடைபோ காரால்
மருவாகி நின்னடியே மறவேன் அம்மான்
மறித்தொருகால் பிறப்புண்டேல் மறவா வண்ணம்
திருவாரூர் மணவாளா திருத்தெங் கூராய்
செம்பொன் ஏகம்பனே திகைத்திட் டேனே. ௧௯

(உரை) அம்மான் - தந்தையே! திருவாரூர் மணவாளா - திருவாரூரில் உமாதேவியாருடன் மணக்கோலங் கொண்டிருப்பவனே; திருத்தெங்கூராய் - திருத்தெங்கூரிலிருப்பவனே; செம்பொன் ஏகம்பனே - சிவந்த பொன் னிறமுடையவனாய் இரு ஏகம்பத்தில் (காஞ்சிபுரத்தில்) இருப்பவனே; உயிரார் - உயிரானது; கரு - (தாயாரது) கருப்பையில்; குழம்பு ஆகி இருந்து (உம்) - சுக்கிலமும் சுரோணிதமும் கலந்த நெகிழ்ச்சிப் பொருளாகி யிருந்தும்; மூளை கலித்தும் - (பின் அதனிடமிருந்து) மூளை உண்டாகியும்; கருநரம்பும் வெள்ளெலும்பும் சேர்ந்து ஒன்றாகி (உம்) பின் கருமையான நரம்புகளும் வெண்மையான எலும்புகளும் (இரதம், தோல் செந்நீர், தசை முதலிய தாதுக்களும்) சேர்ந்து திரண்ட பிண்டப் பொருளாகியும்; உருவாகிப் புறப்பட்டு (உம்) - (இவ்வாறு) ஓர் உடல் உருவாகித் தாயாரது கருப்பையிலிருந்து வெளியே உலகிற் பிறந்தும்; இங்கு ஒருத்தி தன்னால் வளர்க்கப்பட்டு (உம்) - இந்த உலகில் அத்தாயாரால் பேணி வளர்க்கப்பட்டும்; கடைபோகார் - வாழ்நாள் எல்லை முடிவு வரையும் உடலில் நிலைத்திராது இடையிலே இறந்து போகின்றது. (உடலில் உயிர் நிற்கும் நிலை இவ்வளவு நிலையில்லாததாயிருக்கின்றது) மரு ஆகி - (உடலில் உயிர் நிற்கும் வரை நான்) சிவமணம் கமழப் பெற்றவனாயிருந்து; நின் அடியே மறவேன்-உனது இரண்டு திருவடிகளையே மறவாது நினைந்து கொண்டிருப்பேன். (இது என்னால் செய்யக்கூடியது) மறித்து (ஆனால் இந்த உடலை விட்டு எனது உயிர் நீங்கினபின்) மறுபடியும், ஒரு கால் பிறப்பு உண்டேல் ஒரு முறை உலகிலே பிறக்க நேரிடுமானால்; மறவா வண்ணம் - நினது திருவடிகளை மறவாமல் இருப்பேனோ என்று; திகைத்திட்டேன் - மயங்குகின்றேன்; ஆதலின் நான் அவ்வாறு பிறந்தால் நினது திருவடிகளை மறவாதிருக்கும்படி அருள் செய்யல் வேண்டும் என்பது குறிப்பெச்சம்.

(விளக்கம்) கருஆகிக் குழம்பிருந்து - என்பது கரு(வில்) குழம்பு ஆகி யிருந்து என மாற்றிப் பொருளுரைக்கப்பட்டது. 'கருவிலுருவாகி வந்து' என அருணகிரி நாதர் திருப்புகழில் கூறியருளினர். குழம்பு - இரண்டு முதலிய பொருள்கள் கலந்து மண்போல கடினமில்லாமலும் நீர்போல் நெகிழ்ச்சியாயில்லாமலு மிருக்கிற நெகிழ்ச்சிப் பொருள்.

சுக்கிலமும் சுரோணிதமும் கலந்த பொருள் இங்கே குழம்பு எனப்பட்டது. கவித்தல் - என்பது உள்ளே அடங்கி யிருப்பது வெளிப்பட்டுத் தோன்றல்; உண்டாதல். கருநரம்பும் வெள்ளெலும்பும் - இனம் பற்றி பிற தாதுக்களும்கொள்ளப்படும். உயிரார் - கடைபோகார் - ஆர் என்ற பன்மை உருபு இகழ்ச்சிக் குறிப்பாய் உயிருடனும் அது கொண்டு முடிகிற பயனிலை 'கடை போகார்' என்ற வினை முற்றுடனும் சேர்க்கப்பட்டன. "உயிரினார் கிடந்தார் முனி பண்டமே" எனவும் "ஆவியார்" எனவும் அடிகள் வேறிடங்களிலும் இவ்வாறு கூறி அருளினர். கடைபோதல் - கடை நாள்வரையும் நிலை நிற்றல். உயிருள்ள உடல் இன்ன காலம் அழியும் என்ற உறுதி இன்றிக் குழந்தைப்பருவம், இளமைப் பருவம், காளைப்பருவம் முதலியபருவங்களில் ஒன்றில் அழிவதாயிருத்தலின் "கடைபோகார்" என்றார். கடை போகார் ஆல் என்பதில், ஆல் அசை. மரு - மணம். இங்கே சிவ மணத்தைக் குறிக்கிறது. சிவமணங் கமழ்தலாவது - உயிர் தனக்குச் சிவனிடத்துள்ள அத்துவிதத் தொடர்பினால் தன்மை மறந்து அவனை எப்பொழுதும் நினைந்து இன்பம் நுகர்ந்துகொண்டிருத்தல். இந்த நிலையில் திருவருளை மறத்தல் முடியாது ஆதலின் 'மறவேன்' என்றார். நின்னடியே - என்பதிலுள்ள ஏகாரம் தேற்றப் பொருளில் வந்தது. இகைத்திட்டேனே - இகைத்தல் என்பது மயங்குதல் மறுகுதல் திருவடிகளை மறவாதிருத்தல் வேண்டுமே நன்னுடலை விட்டுப் பரு உடலுக்கு வந்தபொழுது ஒரு வேளை மறந்து விடுவேனோ என்று மயங்குதல். இந்தக்கருத்தை அடிகள் "துறக்கப்படாத" என்ற முதற்குறிப்புடைய தேவாரப் பாட்டில் "பிறந்தால் பிறையணி வார்சடைப் பிஞ்ஞகன். பேர் - மறப்பனோ கோலோ என்றென் னுள்ளங்கிடந்து மறுகிடுமே" என்று கூறி அருளினர்.

கால்கொடுத் திருகை யேற்றிக் கழிநிரைத் திறைச்சி மேய்ந்து
தோல்படுத் துதிரநீராற் சுவரெடுத் திரண்டு வாசல்
எல்வுடைத் தாவமைத்தங் கேழுசா லேகம் பண்ணி
மால்கொடுத் தாவிவைத்தார் மாமறைக் காட னாரே. கஎ

(உரை) மாமறைக்காடனாரே - பெருமை பொருந்திய திருமறைக் காட்டில் திருமேனி கொண்டருளியிருக்கும் சிவபெருமானே; கால் கொடுத்து(உம்) - (கீழே இரண்டு) கால்களை நிறுத்தியும்; இருகை ஏற்றி(உம்) - இரண்டு கைகளை (மேலே இரண்டு தோள்களுடன்) சேர்த்து வைத்தும்; கழி நிரைத்து (உம்) - (எலும்புகளாகிய பல கம்புகளை இரண்டு கால்களுக்கும் இரண்டு கைகளுக்கும் ஊடே எல்லா உடல் உறுப்புகளிலும்) ஒழுங்காய்க் கொழுவி வைத்தும். இறைச்சி மேய்ந்து (உம்) - (எலும்புகளுக்கு ஊடே அவைகள் உரசாதபடி) தசைகளை நிறைத்து வைத்தும்; உதிரநீரால் சுவர் எடுத்து (உம்) - செந்நீராகிய நீருடன் தசைகளைப்பிசைந்து முன் பின் பக்கங்களாகிய) சுவர்களை எழுப்பியும்; தோல்படுத்து (உம்) - (இவைகளை எல்லாம் தோலாற் பொதிந்து மூடியும்; இரண்டு வாசல் எல்வு உடைத்தாக வைத்து (உம்) - வாய் குதம் என்ற இரண்டு வாயில்களை அவ்வுடலுக்குப்பொருந்தவைத்தும்; அங்கு - இவ்வாறு அமைத்த அவ்வுடலில்; எழு சாலேகம் பண்ணி (உம்) கண்கள் இரண்டு, காதுகள் இரண்டு, நாசிகள் இரண்டு, மெய்த்துளை ஆகிய எழு பலகணிகள் செய்துவைத்தும் (உண்டாக்கப்பட்ட உடலில்); ஆவி - உயிரை; மால் கொடுத்து வைத்தார் - (உடலை நிலையான மெய்ப்பொருள் எனக் கருதும்) மயக்கத்துடன் உலகில் வாழும்படி செய்தார்.

(விளக்கம்) உயிர் உலகில் வாழ்தற்கு இறைவன் உடலை அமைத்தது, உயிரோடு விளங்கும் உடல் இருத்தற்கும் மக்கள் ஒரு வீடு அமைத்தல் போல்வது என்று உருவகப்படுத்தி இத்தேவாரப் பாட்டுக் கூறப்பட்டது. இரண்டு வாசல் - உணவுப் பொருள் உடலினுட் கொள்ளுதற்கு வாயும், அவ்வுணவுப் பொருள் செறிந்துச் சாரமாய் உடலுடன் சேர்ந்தபின் எஞ்சி நிற்பது கழிதற்குக் குதமும் ஆகிய இரண்டு வாசல்கள் ஒன்பது வாசல்களினின்றும் பிரித்துக் கூறப்பட்டன. எழு சாலேகம் - ஒரு வீட்டினுள்ளே

வெளியேயிருந்து காற்றும் ஒளியும் வருதற்கும் வீட்டிலிருக்கிற காற்று வெளியே போதற்கும் பலகணிகள் அமைந்திருத்தல் போல் வெளியே உள்ள விடய உணர்ச்சிகள் உடலினுள்ளே சென்று உயிரை அடைதற்கும் உயிர், வெளியே உள்ள விடயங்களிற் செல்லுதற்கும் உடலினது ஏழுவாயில்களும் அமைகின்றன. இந்த ஏழுவாயில்களும் வாயும் சேர்ந்து ஐம்பொறிகள் ஆகின்றன. ஏல்வு உடைத்தா - ககர உயிர்மெய் ஈற்றில் தொக்கது. மாமறைக்காடனார் ஆவியை (உடலில்) மால்கொடுத்து வைத்தார் என முடிக்க. கால்கொடுத்தும், இருகை ஏற்றியும், கழி நிறைத்தும், இறைச்சி மேய்ந்தும், தோல்படுத்தும், சுவர் எடுத்தும், இரண்டு வாசல் வைத்தும், ஏழு சாலேகம் பண்ணியும், உண்டாக்கப்பட்ட உடல். இந்த வினையெச்சம் ஒவ்வொன்றிலும் 'உம்' தொக்கி நிற்பது விரித்துப் பொருள் உரைக்கப்பட்டது. கேவல நிலையில் ஆணவ மலத்தினால் அறியாமையில் மூழ்கிக் கிடந்த உயிரைச் சகல நிலையில் உலக வாழ்வில் விட்டுக் கருவி அறிவினால் மயக்கிப் பக்குவப்படுத்தித் தெளிவித்துச் சுத்த நிலையை அடையச் செய்தற்கு உயிருக்கு உடல் உட்கருவி உலகு நுகர்ச்சிகள் (தனுகரண புவன போகங்கள்) இறைவனால் கூட்டப்பட்டன. ஆதலின் 'மால் கொடுத்து ஆவி வைத்தார்' என அடிகள் கூறியருளினர். இக்கருத்தை அடிகள் 'குறுவித்தவா குற்ற நோய் வினைகாட்டி' என்ற முதற் குறிப்பு உடைய திரு ஐயாற்றுத் திருவிருத்தம் பத்துப் பாட்டுக்களிலும் உரைத்தருளினர்.

> பொக்கமாய் நின்ற பொல்லாப் புழுமிடை முடைகொ ளாக்கை
> தொக்குநின் றைவர் தொண்ணூற் றறுவருந் துயக்க மெய்தி
> மிக்குநின் றிவர்கள் செய்யும் வேதனைக் கலந்து போனேன்
> செக்கரே திகழு மேனித் திருக்கொண்டீச் சரத்து ளானே. - ௧௫

(உரை) செக்கர் திகழும்மேனி - சிவந்த வானம் போன்று விளங்கும் நிறமுடையவனாய்; திருக்கொண்டீச் சரத்துள்ளானே - திருக்கொண்டீச் சரத்தலத்தில் திருமேனி கொண்டிருப்பவனே; பொக்கமாய் நின்ற பொல்லாப் புழுமிடை முடைகொள் ஆக்கை - நிலையில்லாததும் பொல்லாத புழுக்கள் நிறைந்ததும் புலால் நாற்றம் உடையதுமாகிய உடலின்கண்; ஐவர் தொண்ணூற்று அறுவரும் தொக்கு நின்று - ஐம்புலன்களும் தொண்ணூற்று ஆறு தத்துவங்களும் ஒன்று சேர்ந்துகொண்டு; துயக்கம் எய்த மிக்கு நின்று - நான் சோர்வு அடையும்படி (என்னை அடக்கி) எனக்கு மேற்பட்டு நின்றுகொண்டு; இவர்கள் செய்யும் வேதனைக்கு - இந்த ஐந்து புலன்களும் தொண்ணூற்றாறு தத்துவங்களும் எனக்குச் செய்கின்ற துன்பங்களினால். அலந்து போனேன் - நொந்தேன்; வருந்தினேன். இத்துன்பங்களினின்றும் அடியேனைக் காத்தருளல் வேண்டும் என்பது குறிப்பெச்சம்.

(விளக்கம்) செக்கரே - என்பதிலுள்ள ஏ - அசை நிலை. செக்கர் என்பது செவ்வானம் - மேனி நிறம். பொக்கமாய் நின்ற - பரு உடல் மாறிமாறி அழிந்து நிலையில்லாததாயிருத்தலால் அது பொய் எனப்பட்டது. நின்ற - எப்பொழுதும் உள்ள இயல்பு பற்றி நிற்கிற என்பது நின்ற என இறந்த காலத்தாற் கூறப்பட்டது. (நன்னூல் பொதுவியல். ௩௩-வது சூத்திரம்) ஐவர் தொண்ணூற்றறுவர் - ஐம்புலன்கள் (பஞ்சேந்திரியங்கள்) தொண்ணூற்றாறு தத்துவங்களில் அடங்குமாயினும் அவைகள் மனதுடன்சேர்ந்து உயிரை உலக போகத்தில் அமிழ்த்தி மயக்கும் சிறப்புத் தொழில் பற்றி வேறாகப் பிரித்தும் கூறப்பட்டன. இத்தத்துவங்கள் உயிரில்லாத அஃறிணைப் பொருள்களாயினும் உயிர் அவைகளைத் தன்னின்றும் வேறாகப் பிரித்து உயிரில் பொருள் என்று அறியாது உயிர்ப் பொருள்கள் போலக் கருதி அவைகளுக்குள் அடங்கி ஒழுகலால் அவைகள் உயர்திணைப் பொருள்களாகக் கூறப்பட்டன. மிக்கு நின்று - மேற்கொண்டு நின்று.

(dominate) வேதனைக்கு - வேதனையினால்; உருபு மயக்கம். இவர்கள் - மேலே கூறிய ஐவர் தொண்ணூற்றறுவர்களைக் குறிக்கின்ற சுட்டுப் பெயர். ஏ - ஈற்றசை.

ஐவகையரை யரவராகியாட்சி கொண்டொரு காலவர் நீங்கார்
அவ்வகையவர் வேண்டுவ தானலவரவர் வழியொழுகி நான்வந்து
செய்வகை யறியேன் சிவலோகா தீவணா சிவனே யெரியாடீ
எவ்வகை யெனக்குய் வகையருளாயிடை மருதுறை எந்தை பிரானே. ௧௯

(உரை) சிவலோகா - சிவலோகத்திலிருக்கிறவனே; தீவணா - தீப்போல் செந்நிறமுடைய உருவனே; சிவனே-எப்பொழுதும் நன்மையையே செய்கிறவனே; எரி ஆடீ-தீயைக் கையில் வைத்துக்கொண்டு பொதுவில் நடனம் செய்கிறவனே; இடை மருது உறைஎந்தை பிரானே - திருவிடைமருதூரில் எழுந்தருளியிருக்கின்ற எனது தந்தையே, எனது தலைவனே; ஐவகையர் - ஐந்து ஐந்து இனமாய் அமைந்திருக்கின்ற தத்துவக் கூட்டங்கள்; ஐயர் அவர் ஆகி - எனக்குத் தலைவர்களாகி; ஆட்சிகொண்டு - (என்னைத் தங்கள் வயப்படுத்தி) ஆளுகை செய்து; அவர் ஒரு கால் நீங்கார்-அவர் என்னை விட்டு ஒருபொழுதும் விலகி யிருக்கமாட்டார்; அவர் - அந்த ஐந்து இனங்களாயுள்ள தத்துவக் கூட்டங்கள்; அவ்வகை வேண்டுவதானல் - என்னை அவ்வாறு வயப்படுத்தி ஆள விரும்புவார்களானால்; நான் அவர் அவர் வழி ஒழுகி வந்து - நான் அவரவர் எவினபடி நடந்து உலக போகம் நுகர்ந்து கொண்டு (உன்னை நினையாமலிருப்பேனாகில்) செய்வகை அறியேன் - அவைகளுடைய ஆட்சியினின்றும் தப்பி உய்வதற்கு என்ன செய்யவேண்டும் என்பது அறியமாட்டேன்; உய்வகை எவ்வகை அருளாய் - (ஆதலின்) நான் எவ்வழியில் உய்யலாமோ அந்த வழியை எனக்குத் தெரிவிப்பாயாக.

(விளக்கம்) ஐவகையர் - ஐந்து ஐந்து இனமாயுள்ள (Sets of five) தத்துவக் கூட்டங்கள். அவ்வினங்களாவன: தூல தன்மாத்திரை (ஐம்பூதங்கள்) ஐந்து, சூக்கும தன்மாத்திரை ஐந்து, ஞானேந்திரியம் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து, அந்தக் கரணங்கள் நான்கும் மூலப்பகுதியும் சேர்ந்து ஐந்து, காலம் நியதி கலை வித்தை அராகம் ஐந்து, சுத்த வித்தை ஈசுரம் சாதாக்கியம் சத்தி சிவம் ஐந்து. ஐவர் என்று சொல்லாது ஐவகையர் என்று சொன்னதனால் ஐம்புலன்கள் என்று பொருள் கொள்வதற்கு இல்லை. திருவள்ளுவர் "சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின் வகை" என்று கூறியதற்குப் பரிமேலழகர் எழுதிய உரையை நோக்குக. ஐயர் அவர் - ஐயர்=தலைவர்; அரசர். அவர் - பகுதிப் பொருள் விகுதி. தீவணா - தீவண்ணா. என்றது தீவணா எனக்குறுகியது - குறுக்கல் விகாரம். வண்ணன் என்னும் ணகார ஈற்று உயர்திணைப் பெயர் ஈறு கெட்டு ஈற்றயல் ணகரம் நீண்டு விளிப் பெயர் ஆயிற்று. வண்ணம்=நிறம். எரி ஆடீ - ஆடி என்பதிலுள்ள டகர இகரம் நீண்டு விளிப் பெயர் ஆயிற்று. எந்தை பிரானே - எனக்குத் தந்தையும் தலைவனுமா யிருப்பதால் என்னைக் காத்தல் உன் கடன் என்பது குறிக்கப்பட்டது. பிரானே என்பதிலுள்ள ஏ-விளியுருபு. சிவன்-என்ற சொல்லுக்குப் பேராசிரியர் "எவ்வுயிர்க்கும் எப்பொழுதும் நன்மையைச் செய்தலாற் சிவன்" என 358-வது திருக்கோவையார் பாட்டில் உரை கூறியிருத்தல் காண்க.

வரைகிலேன் புலன்க ளைந்தும் வரைகிலாப் பிறவி மாயப்
புரையிலே அடங்கி நின்று புறப்படும் வழியுங் காணேன்
அரையிலே மிளிரு நாகத் தண்ணலே அஞ்ச லென்னாய்
திரையுலாம் பழன வேலித் திருக்கொண்டீச் சரத்து ளானே. ௨௦

(உரை) அரையிலே மிளிரும் நாகத்து அண்ணலே - அரையிலே ஒளி செய்கின்ற பாம்புகளை அணியாக அணிந்த தலைவனே; திரை உலாம் பழன வேலி - நீர் பெருகி அலை வீசுகின்ற வயல்களை வேலியாகவுடைய; திருக்கொண்டீச் சரத்துளானே - திருக்கொண்டீச்சரப்பதியில் எழுந்தருளி யிருக்கின்றவனே; புலன்கள் ஐந்தும் வரைகிலேன் - மெய்

வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்புலன்களையும் அடக்கி ஆளமுடியாமலிருக்கிறேன்; வரைகிலாப்பிறவி - இத்தனை என்று அளவுபடுத்த முடியாது நான் எடுத்த பிறவிகளில்; மாயப்புரையிலே அடங்கி நின்று - நிலையில்லாத உடலிலே (ஐம்புலன்களையும் என்வயப் படுத்தி உனக்குள்ளே) அடங்கி நின்று; புறப்படும் வழியும் காணேன் - உடலோடுகூடிய பிறவியை விட்டு நீங்கி (உன்னை அடையும்) வழியையும் நான் அறியமாட்டேன்; அஞ்சல் என்னாய் - (இவ்வாறு தயங்கிக் கொண்டிருக்கிற என்னை) அஞ்சாதே என்று சொல்லிக் காத்தருள்வாய்.

(விளக்கம்) வரைகிலேன் - வரை = அளவு. வரைதல் - அளவு படுத்தல், அடக்கல், கில் என்பது ஆற்றல் உணர்த்தும் இடை நிலை. என் - தன்மை ஒருமை விகுதி. மாயப் புரை - மாயம் = பொய் - அதாவது நிலையில்லாதது - புரை = குடில் அது இங்கே குடில் போன்ற உடலைக் குறிக்கிறது. மாயப்புரையிலே அடங்கி நின்று புறப்படும் வழி என்பது உயிரானது மனம் ஐம்புலன்களை விடயங்களிற் செல்லவொட்டாது அடக்கி உலகப்பற்றைவிட்டு இறைவனுடைய திருவடிகளிலே நிறுத்தி நினைந்து கொண்டிருந்து அவ்வாறு நினைந்ததன் பயனாகப் பிறவி நீங்கும் வழி. மிளிரும் நாகம் - பாம்பு ஒளியோடு விளங்குகிற குண்டலி சத்தியாகிய சுத்தமாயையைக் குறித்தலால் 'மிளிரும்' என்றார். என்னாய் - என்று சொல்லாய். ஆய் என்பது முன்னிலை ஏவல் ஒருமை வினைமுற்று விகுதி.

> கழித்திலேன் காம வெந்நோய் காதன்மை யென்னும் பாசம்
> ஒழித்திலே னூன்கணோக்கி யுணர்வெனு மிமைதிறந்து
> விழித்திலேன் வெளிறு தோன்ற வினையெனுஞ் சரக்குக் கொண்டேன்
> அழித்திலேன் அயர்த்துப் போனே னதிகைவீ ரட்ட னீரே. உக

(உரை) அதிகை வீரட்டனீரே - திருவதிகை வீரட்டானத்தில் எழுந்தருளி யிருக்கிறவரே; காமவெந்நோய் கழித்திலேன் - விருப்பம் என்னும் கொடிய நோயை நீக்க மாட்டேன்; காதன்மை என்னும் பாசம் ஒழித்திலேன் - அந்த விருப்பத்துக்குக் காரணமாயுள்ள மயக்கத்தை (அவிச்சை) போக்கமாட்டேன்; ஊன்கண் நோக்கி - உடலினுள்ளே இறைவனை எனது அறிவின் கண்ணே ஆராய்ந்து அறிந்து; உணர்வு எனும் இமை திறந்து விழித்திலேன் - மெய்யுணர்வு என்று கூறப்படும் அகக்கண்ணைத் திறந்து பார்க்கமாட்டேன்; வெளிறு தோன்ற - ஏனெனில் அவ்வாறு அகக்கண் பார்வையின்மையால் (எனது அறிவின்மை வெளிப்பட) அதுகாரணமாக வினையெனும் சரக்குகொண்டேன் - நல்வினை தீவினை என்று சொல்லப்படும் பொருள்களை (எனது நெஞ்சத்துப் பாரமாகக்) கொண்டேன்; அழித்திலேன் - நல்வினை தீவினைப் பொருள்களை அகக்கண் பார்வையால் எனது நெஞ்சத்தில் இல்லாதிருக்கும்படி கெடுக்கவில்லை; அயர்த்துப்போனேன் - (நல்வினை தீவினைகளைக் கெடுத்தல் எனக்கு நலம் என்பதையும் அகக்கண் பார்வை யின்மையால்) நான் மறந்துவிட்டேன். இந்த நிலையில் நீர் எனது அகக்கண்ணைத் திறக்கச்செய்து காத்தருளல் வேண்டும் என்பது குறிப்பெச்சம்.

(விளக்கம்) இந்தத் தேவாரப் பாட்டில் உயிர், ஊனக் கண்ணினிற் பாசமுணராப்பதியை ஞானக்கண்ணினிற் சிந்தை நாடிப் பாசம் ஒருவித் தண்ணிழலாம் பதியை நாடச்செய்தல்வேண்டும் என்ற வேண்டுகோளைத் திருநாவுக்கரசு அடிகள் இறைவனிடத்துச் செய்கின்றார். உயிர் இறைவனை அடைதற்குத் தடையாயுள்ளன, உலக போக நுகர்ச்சியில் உன் முகத்திற் கேதுவாகிய பும்ஸ்துவமலம் என்றோதப்படும் பஞ்சக் கிலேசங்கள், அப்பஞ்சக் கிலேசங்கள், 1. அவிச்சை, 2. ஆங்காரம், 3. அவா, 4. ஆசை, 5. வெகுளி என்பன. இப்பஞ்சக் கிலேசங்களும் திருவள்ளுவ நாயனார் கூறுகின்ற காமம் வெகுளி மயக்கம் என்னும் மூன்றிலும் அடங்கும். இத்தேவாரத்தில் விருப்பம் (காமம்) மயக்கம் (அவிச்சை) என்ற இரண்டு கிலேசங்களும் கூறப்

புட்டன. இனம்பற்றி வெகுளியும் கொள்ளப்படும். இப்பஞ்சக் கிலேசங்கள் நீங்கினாலன்றி இருவினை நீக்கமும் அதுபற்றி அகக்கண் பார்வை என்னும் மெய்யுணர்வும் உண்டாகா. ஆதலின் அவைகள் இப்பாட்டில் முதலாவது கூறப்பட்டன. ஊன்கண் நோக்கி - ஊன் ஆகுபெயராய் உடலைக் குறிக்கின்றது. ஊன் கண் நோக்குதலாவது, வெளியே உலகிற் செல்கின்ற பார்வையைத் தடுத்து யோகந்தால் உடலினுள்ளே இறைவனை நோக்குதலாகும். இது யோகப்பார்வை. உணர்வு எனும் இமை திறந்து விழித்திலேன் - உணர்வு = இறைவனை அவனது அருளினால் உணரும் மெய்யுணர்வு. இது ஞானப் பார்வை. என்னும் என்பது எனும் எனக் குறுகிநின்றது. இமை என்பது இங்கே அகக்கண்ணை (ஞானக்கண்ணைக்) குறிக்கின்றது. இறைவன் அவனது அருளினால் உணரப்படுகிறவன் அன்றி அறியப்படுகிறவனும் ஓதப்படுகிறவனும் அல்லன். இக்கருத்தைக் காரைக்காலம்மையார் தமது அற்புதத் திருவந்தாதியில் "பிறரறியலாகாப் பெருமையருந்தாமே - பிறரறியும் பேருணர்வுந்தாமே" என்று கூறியருளினர். உலகெலா முணர்ந்தோதற் கரியவன் என்பதும் இக்கருத்தையே விளக்குகின்றது. காதன்மை - பாசம். காதல் + மை - ஆசை, விருப்பம். பாசம் = பற்று (Passion) இங்கே பற்றுக்குக் காரணமாகிய அவிச்சை (மயக்கம்) யைக் குறிக்கின்றது. வெளிறு - தோன்ற. வெளிறு = வெண்மை. அது அறியாமையைக் குறிக்கின்றது. திருக்குறள் 503 வது பாட்டில் பரிமேலழகர் உரை பார்க்க. வினை எனும் சரக்குக்கொண்டேன் - வினை என்னும் சரக்குக் கொள்ளுதலாவது உலகத்தில் சில பொருள்கள்மேல் விருப்பும் சில பொருள்கள்மேல் வெறுப்பும் சில உயிர்கள்மேல் நட்பும் சில உயிர்கள்மேல் பகைமையும் நெஞ்சில் நிறைந்து நின்று அவைகள் காரணமாக நல்வினை தீவினைகளைச் செய்தலாகும் வினை தீரினன்றி மெய்ஞ்ஞானம் விளையாது ஆதலின் அடிகள் இவ்வாறு கூறினார். அடிகள் சாக்கறைத் திருவிருத்தத் தேவாரத்தில் தமது நெஞ்சத்தை இறைவனுடைய மழுவாட்படையும் பல பூதமும் புலித்தோலுடையும் தலைமாலையும் பிறையொதுங்கும் சடை முதலியவைகளிருக்கும் சரக்கு அறை எனக் கூறியதை நோக்குக.

> மாட்டினேன் மனத்தை முன்னே மறுமையை உணரமாட்டேன்
> மூட்டிநான் முன்னை நாளே முதல்வனை வணங்க மாட்டேன்
> பாட்டிலாய் போல நின்று பற்றதாம் பாவந் தன்னை
> ஈட்டினேன் களைய மாட்டே னென்செய்வான் றோன்றி னேனே. ௨௨

(உரை) முன்னே - முற்காலத்திலே; மனத்தை மாட்டினேன் - நான் எனது மனதை (உலக நுகர்ச்சிகளிற்) செலுத்தினேன்; மறுமையை உணரமாட்டேன் - அவ்வாறு செலுத்தின காரணத்தால் நான் இப்பொழுது இறப்புக்குப் பின் மறுமையில் வரும் நிரயத் துன்பத்தை மனதில் உணர்ந்து நடக்கமாட்டேன்; முன்னை நாளே நான் முதல்வனை மூட்டி - முற்காலத்திலே நான் எனது மனதை இறைவனிடத்தில் பற்றும்படி செய்து; வணங்கமாட்டேன் - அவனை வழிபடாமற் போய்விட்டேன்; பாடு இல் நாய் போல் நின்று - அதனால் இப்பொழுது, பெருமையில்லாத நாய்போல் நின்று; பற்றதாம் பாவம் தன்னை ஈட்டினேன் - பாவச்செயல்களையே செய்து, அவைகளின் பயனை (எனது புத்தி தத்துவத்தில்) சேர்த்து வைத்துக்கொண்டேன்; களையமாட்டேன் - (அவ்வாறு நான் சேர்த்து வைத்திருக்கிற தீவினைப் பயன்களை வேண்டுவன செய்து) அடியோடு நீக்கவுமாட்டேன்; என் செய்வான் தோன்றினேன் - (பாவஞ்செய்யாமலாவது அல்லது ஒரு காலத்தில் அறியாமையினாற் பாவஞ் செய்தாலும் அதனை நீக்காமலாவது இருக்கிற இந்த உலகவாழ்வில்) நான் என்ன நற்பயனை அடைதற்காகப் பிறந்தேனோ தெரியவில்லை.

(விளக்கம்) மறுமையை உணர மாட்டேன் மறுமை என்பது இறப்புக்குப் பின் வரும் நிரயத்துன்பம். இம்மையில் ஒருவன் எம்மட்டில் வேட்கை வயப்பட்டு உலகபோக

நுகர்வுகளிற் பயில்வானேல் அம்மட்டில் அவன் மறுமையில் துன்பம் நுகருதல் நியதி ஆகும். முன்போக நுகர்வுகளிற் பழகின பழக்கம், பின்னை மறுமையில் துன்பம் வரும் என்று அறிந்தாலும் அத்துன்பத்தை தீவினை உணர வொட்டுவதில்லை யாதலின் 'உணர மாட்டேன்' என்றார். முதல்வனை மூட்டி - உருபுமயக்கம் - முதல்வனிடத்தில் மூட்டி என ஏழாம் வேற்றுமைப் பொருளில் வந்தது; மூட்டுதல் = பற்றச் செய்தல்; உலக வழக்கில் தீ மூட்டுதல் என வருகின்றது. வணங்கமாட்டேன் - வணங்கல் - வளைதல். அடிமை, நிலையில் உயிர் தனது அறிவு வேட்கை செயல்களை முதல்வனுடைய அறிவு வேட்கை செயல்களில் அடங்கச் செய்து தன் முனைப்பின்றி நிற்றலே வணங்கலாகும். வழிபடுதலும் அதுவே. இவ்வாறு வணங்குதலே உயிர்தனது வினைப்பயன்களை வேரோடுகளையும் வழியா யிருத்தலின், வணங்காமலிருத்தலினால், பற்றதாம்பாவத்தைக் களையமாட்டேன்' என்று அடிகள் பின்னை கூறியருளினார். பாட்டிலாய் - பாடு + இல் + நாய். டகரவொற்று இரட்டியது. பாடு = பெருமை - பாடில் - பெருமையில்லாத அதாவது இழிவான. பற்றதாம்பாவம் ஈட்டினேன் - பற்று + அது + ஆம் + பாவம் அது பகுதிப் பொருள் விகுதி. பற்று = பற்றுதல் - முதனிலைத் தொழிற் பெயர். ஒருவன் பாவத்தைப்பற்றி அதனைச் செய்து பழகினால் பாவம் அவனைப்பற்றிக் கொள்கிறது ஆதலின் 'பற்று ஆம் பாவம்' என்றார். பாவச் செயல் ஒவ்வொன்றும் கழிந்த பின்னும் அதன் பயன் புத்தி தத்துவத்திற் கிடந்து பக்குவப்பட்டுப் பின் அதனைச் செய்தவனுக்குத் துன்பமாய் விளைதலால் 'ஈட்டினேன்' என்றார். ஈட்டுதல் = தொகுத்தல். என்செய்வான் தோன்றினேன் - செய்வான் எதிர்கால வினையெச்சம். வான் - எதிர்கால வினையெச்ச விகுதி. தோன்றுதல் - பிறத்தல். "பிறப்பினாற் பெற்ற பயனாவதெல்லாம் - அறப்பதாந் தூநெறிக்கட்சென்று" என்று ஔவையார் கூறியபடி இறைவனை அடையச் செய்யாத பிறப்பினாற் பயனில்லை என்பதை அடிகள் கூறினார். திருநாவுக்கரசு அடிகள் வரலாற்றினால் இப்பாட்டிற் கூறப்பட்ட நிகழ்ச்சிகள் ஒன்றும் காணப்படாமையால் அவர் நம்போன்றவர்களுக்கு அறிவுறுத்த இப்பாட்டைக் கூறினார் என்று நாம் நினைக்கவேண்டியதாயிருக்கிறது.

பழியுடை யாக்கை தன்னிற் பாழுக்கே நீரிறைத்து
வழியிடை வாழ மாட்டேன் மாயமுந் தெளிய கில்லேன்
அழிவுடைத் தாய வாழ்க்கை ஐவரா லலைக்கப் பட்டுக்
கழியிடைத் தோணி போன்றேன் கடவூர்வீ ரட்டனீரே. ௨௫

(உரை) கடவூர் வீரட்டனீரே - திருக்கடவூர் வீரட்டம் என்ற தலத்தில் எழுந்தருளியிருக்கின்றவரே; பழியுடை யாக்கை தன்னில் - பழிக்கப்படும் பாவச் செயல்களைச் செய்தற்கு இடமாயிருக்கிற இந்த உடலில்; பாழுக்கே நீர் இறைத்து - உலக வாழ்வைப் பயன்பட வாழாது வீணாகக் கழிப்பதல்லாமல்; வழியிடை வாழமாட்டேன் - பயன்படும் முறைமையில் நான் வாழமாட்டேன்; மாயமும் தெளிய கில்லேன் - இவ்வாறு நான் உயிர் வாழ்தற்குக் காரணமாயிருக்கிற வஞ்சனையையும் நான் தெளிவாய் அறிந்து கொள்ள முடியாமலிருக்கிறேன்; அழிவுடைத்தாய வாழ்க்கை - அடிக்கடி பிறந்தும் இறந்தும் அழிகின்ற உடலிலுள்ள உயிர் வாழ்க்கையானது; ஐவரால் அலைக்கப்பட்டு - ஐம்புலன்களால் ஆட்சி செய்யப்பட்டுத் துன்பம் அடைதலால்; கழியிடைத் தோணி போன்றேன் - உப்பங்கழியிற் செல்கிற தோணி அங்கும் இங்கும் அலைகளால் மோதப்பட்டு நேர்வழியிற் செல்லாதிருத்தல் போல நானும் ஐம்புலன்களால் ஆட்டுண்டு எனது வாழ்க்கையை நேர் வழியிற் செலுத்த இயலாது வருந்துகின்றேன். ஆதலால் தேவரீர் என்னைக் காத்தருள் செய்தல் வேண்டும் என்பது குறிப்பெச்சம்.

(விளக்கம்) பழி - பழிக்கப்படும் பாவச் செயல்கள். யாக்கை - யாத்தல் - கட்டுத்தல், தசை, நரம்பு முதலிய தாதுக்களால் கட்டப்படுதலின் இவ்வுடல் யாக்கை எனப்பட்டது. யாக்கை தன்னில் - தன் அசை. பாழுக்கே நீர் இறைத்து - என்பது உருவகம்.

பாட்டில் உவமைப் பொருள் விளக்கப்படவில்லை - பாழ் என்பது பாழ்நிலம், உவர் முதலியவற்றால் விளையாத நிலம். பயிர் முளையாத நிலத்துக்கு வீணாக நீர் இறைத்தல்போல உயிர் வாழ்வைப் பயன்பட வாழாது வீணாகக் கழித்து என உவமையும் உவமப் பொருளும் விரியும். இறைத்து, என்ற சொல்லுக்கு அடுத்து 'அன்றி' என்ற சொல் தொக்கி நிற்கிறது. அது சொல்லெச்சம். வழி இடை - வழி = முறைமை. இடை 'ஏழாம் வேற்றுமை உருபு. முறைமையாக. அதாவது பயன்படும்படியாக. கழி - கடலுக்கு அருகிலுள்ள உப்பங்கழி (Backwaters) கழியிடைத் தோணி போன்றேன் என்பதும் உருவகம். இதனுடைய உவமப் பொருள் விளக்கிப் பதவுரை கூறப்பட்டது. ஏ - ஈற்றசை. இந்தப் பாட்டும் நம் போல்வார்க்கு அறிவுறுத்தக் கூறப்பட்டது.

குலம்பொல்லேன் குணம்பொல்லேன் குறியும் பொல்லேன்
குற்றமே பெரிதுடையேன் கோல மாய
நலம்பொல்லேன் நான்பொல்லேன் ஞானியல்லேன்
நல்லாரோ டிசைந்திலேன் நடுவே நின்ற
விலங்கலேன் விலங்கலா தொழிந்தே னல்லேன்
வெறுப்பனவும் மிகப்பெரிதும் பேச வல்லேன்
இலம்பொல்லேன் இரப்பதே ஈய மாட்டேன்
என்செய்வான் றோன்றினே னேழை யேனே. உச

(உரை) குலம் பொல்லேன் - நற்குலத்தினிற் பிறவாததனா லாகிய குற்றமுடையேன்; குணம் பொல்லேன் - நற்குணத்தினைப் பொருந்தாததனா லாகிய குற்ற முடையேன்; குறியும் பொல்லேன் - வாழ்க்கையில் நற்குறிக்கோ ளில்லாமையாலாகிய குற்றமும் உடையேன்; குற்றமேபெரிது உடையேன் - இவ்வாறு குலம் குணம் குறிகளால் மிகுதியாகக் குற்றங்களையே உடையேன்; கோலமாய நலம்பொல்லேன் - உடல் உரு அழகு இல்லாமையா லாகிய குற்ற முடையேன்; நான் பொல்லேன் - உயிர்நல மில்லாமையா லாகிய குற்ற முடையேன்; ஞானிஅல்லேன் - உயிர் இறைவனை வழிபட்டு அதனாலுண்டாகும் மெய் அறிவினை உடையே னல்லேன்; நல்லாரோடு இசைந்திலேன் - (அந்த மெய் அறிவு எனக்கு உண்டாகும் வண்ணம்) மெய் அறிவுடைய நல்லாரோடு இணங்கி ஒழுகினேன் அல்லேன்; நடுவே நின்ற விலங்கு அல்லேன் - (மேற்கண்ட குற்றங்கள் உள்ளவனாய் நான் மனிதப்பிறவியிற் பிறந்ததைப் பார்க்கிலும் குற்றங்கள் என்று எண்ணப்படா திருத்தற்கு) மனிதப் பிறவிக்கும் ஏனை நாலறிவு உயிர்களுக்கும் நடுவே உள்ள ஐயறிவு விலங்குப் பிறவியிற் பிறவாமற்போனேன்; விலங்கு அலாது ஒழிந்தேன் அல்லேன் - மனிதப் பிறவியிற் பிறந்தாலும் விலங்குகளுக்கு உரிய பண்புகள் என்னிடத்தில் இல்லாதபடி எனது அறிவினால் விடுத்தவனும் அல்லேன்; வெறுப்பனவும் மிகப்பெரிதும் பேசவல்லேன் - பிறர் வெறுக்கிற இன்னாச் சொற்களை மிக்குப் பேசும் வன்மையை உடையேன்; இலம்பொல்லேன் - (குற்றங்களுடன் ஒருவன் பிறந்தாலும் அவனுக்குச் செல்வ மிருந்தால் அக்குற்றங்கள் பிறரால் கவனிக்கப்படாதபடி) செல்வம் இல்லாமையாலுண்டாகும் குற்றம் உடையேன்; இரப்பதே ஈயமாட்டேன் - செல்வம் இல்லாமையினால் நான் பிறரிடம் பொருளை இரந்து வாங்குதல் அல்லாமல் அவருக்குக் கொடுக்கமாட்டேன்; ஏழையேன் என்செய்வான் தோன்றினேன் - (இவ்வளவு குற்றங்களையும் குறைவுகளையும் உடைய) ஏழையேனாகிய நான் உலகில் என்ன பயன் அடையும் பொருட்டுப் பிறந்தேனோ தெரியவில்லை.

(விளக்கம்) 'பொல்லேன்' என்ற சொல் பொல்லாப்பு அல்லது பொல்லாங்கு என்ற பண்புப் பெயரடியாகப் பிறந்த உயர்திணை ஆண்பால் தன்மை ஒருமைக் குறிப்பு வினை முற்று. பொல்லாப்பு அல்லது பொல்லாங்கு என்ற சொல் குற்றம் என்னும் பொருளில் வந்தது. அல்லேன் - அன்மை என்னும் பண்புப் பெயரடியாகப் பிறந்த உயர்திணை ஆண்பால் தன்மை ஒருமைக் குறிப்பு வினை முற்று. குறி என்பது வாழ்க்கையின் குறிக்கோள். "குறிக்கோள் இலாது கெட்டேன்" என்று அடிகள் திருக்கொண்டீச்சரம் தேவாரப்பதிகம் ௬-வது பாட்டிற் கூறினமை காண்க. கோலமாய நலம் - கோலம் = உடல் உரு. நலம் = அழகு. கண்டாரால் விரும்பப்படும் உடல் உருவழகு. நான் பொல்லேன் - மேலே கோலமாய் நலம் என்று உடல் நலம் குறிக்கப்பட்டபடியால் நான் என்ற சொல்லுக்கு உயிர் நலம் என்று பொருள் கூறப்பட்டது. 'நான் பொல்லேன்' என்பதற்கு 'நான்' என்னும் அகங்காரம் உடைமையால் குற்றமுடையேன் என்றலும் பொருந்தும். அக்குற்றமும் உயிர் நலம் இல்லாத குற்றம் ஆதலின் பொருள் வேறுபடாது. நடுவே நின்ற விலங்கு - மக்களுக்கு அடுத்துக் கீழும், ஓரறிவு முதல் நான்கு அறிவுவரை உள்ள உயிர்களுக்கு மேலும் உள்ளன விலங்குகள் ஆதலின், அவை 'நடுவே நின்ற விலங்கு' எனக் கூறப்பட்டன. விலங்கு அலாது ஒழிந்தேன் அல்லேன் - இங்கே விலங்கு என்ற சொல் விலங்குப் பண்பைக் குறிக்கின்றது. ஒழிதல் - விடுதல். இலம் - பண்புப்பெயர், வறுமை. இத்தேவாரப் பாட்டின் கருத்துக்களை அடிகள் பிறர்க்கு அறிவுறுத்துதற்காகத் தம்மே லேற்றிக் கூறினர் என்று நாம் நினைக்கவேண்டியதிருக்கிறது.

கருவுற்ற நாள்முதலாக உன்பாதமே காண்பதற்கு
உருகிற்றென் னுள்ளமும்நானுங் கிடந்தலந்தெய்த் தொழிந்தேன்
திருவொற்றியூரா திருவால வாயா திருவாரூரா
ஒருபற்றிலாமையுங் கண்டிரங்காய் கச்சியேகம்பனே. ௨௫

(உரை) கச்சி ஏகம்பனே - திருக்கச்சியேகம்பத்தில் (காஞ்சிபுரத்தில்) எழுந்தருளியிருக்கும் ஏகாம்பர நாதனே! திருஒற்றியூரா, திருஆலவாயா, திருஆரூரா - திருக்கச்சியேகம்பத்திலன்றித் திருவொற்றியூரிலும் திருவாலவாயிலிலும் திருவாரூரிலும் எழுந்தருளியிருக்கின்றவனே! உன்பாதமே காண்பதற்கு - உன் திருவடிகளையே நான் பார்ப்பதற்கு, கரு உற்ற நாள் முதலாக - தாயாரது கருப்பையில் நான் உரு அடைந்த காலம் தொட்டு, என் உள்ளம் உருகிற்று - எனது மனம் அன்பினால் உருகிக் கரைந்தது. நானும் கிடந்து அலந்து எய்த்து ஒழிந்தேன் - நானும் - உயிராகிய நானும் கருப்பையிற் கிடந்து துன்புற்று இளைத்தேன்; ஒருபற்று இலாமையும் கண்டு இரங்காய் - நின் திருவடிகளைத் தவிர வேறொரு பொருளிலும் நான்பற்றுவையாதிருத்தலை நீ அறிந்து என்மேல் இரக்கம் கொண்டு அத்திருவடிகளை எனக்குக் காட்டி அருளல் வேண்டும்.

(விளக்கம்) உன்பாதமே - ஏ இங்கே தேற்றப் பொருளில் வந்தது. என்னுள்ளமும் - உம் என்பது அசை நிலை. நானும் - இங்கே உம் என்பது எனது உள்ளம் அன்றி நானும்என இறந்தது தழீஇய எச்ச உம்மை. எய்த்து ஒழிந்தேன் - ஒழி, என்பது துணிவுப் பொருள் உணர்த்தும் விகுதி. எய்த்தேன் என்று பொருள்படும். திருவொற்றியூரான், திருவாலவாயான், திருவாரூரான் என்ற னகரமெய்யீற்று உயர்திணைப் பெயர்கள் எட்டாம் வேற்றுமை விளிப்பெயர்களாகும்பொழுது அவைகளின் ஈற்று னகரம் மெய்கள் கெட்டுத் திருவொற்றியூரா, திருவாலவாயா, திருவாரூரா என வந்தன.

பந்தித்த வல்வினைப் பற்றறப் பிறவிப்படு கடற்பரப்புத் தவிர்ப்பானைச்
சந்தித்த திறலாற் பணிபூட்டித் தவத்தை யீட்டியதம் மடியார்க்குச்

சிந்தித் தற்கெளிதாய்த் திருப்பாதஞ் சிவலோகந் திறந்தேற்ற வல்லானை
வந்திப்பார் தம்மனத்தி னுள்ளானை வலிவலந் தன்னில்வந்து கண்டேனே.

(உரை) சந்தித்த திறலால் - (மானிட வடிவில் குருவாய் வந்து தனக்கும் உயிருக்கு முளதாகிய தொடர்பை உணர்த்திய பின் சிவோகம் பாவனை அஞ்செழுத்தோதல் முதலிய பயிற்சிகளினது பயனாக மலங்களினின்று நீங்கப் பெற்று) தன்னைத் தங்களுடைய உள்ளத்தில் விளங்கும் அருளொளியாகக் கண்டு அதனால் அடைந்த மெய்யுணர்வினது வலிமையால்; பணிபூட்டி - அவனுடைய சரியைத் தொண்டைத் தன் முனைப் பின்றித் தாங்களாகவே மேற்கொண்டு செய்து; தவம் ஈட்டிய தம் அடியார்க்கு - அதனால் சிவபுண்ணியத்தைத் தேடிச் சேர்த்து வைத்த தனது மெய் அடியார்களுக்கு; பந்தித்த வல்வினைப் பற்றுஅற - அப்புண்ணியத்தால் அவர்களைப் பிணித்துக்கொண்டிருந்த வலிமையான நல்வினை தீவினைகளினது கட்டு முழுவதும் நீங்கவும்; பிறவிப் படுகடற் பரப்புத் தவிர்ப்பானை - ஆழமும் பரப்புமுடைய பிறவியாகிய பெரிய கடலினின்றும் அவர்களை நீக்குகிறவனும்; திருப்பாதம் சிந்தித்தற்கு எளிதாய் - தனது இரண்டு திருவடிகளை அவ்வடியார்கள் எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருத்தற்கு எளிதாயிருத்தலினால்; சிவலோகம் திறந்து ஏற்ற வல்லானை - அவர்களைச் சிவலோகத்திலே ஏறும்படி செய்து அங்கே தங்கியிருந்து சாலோகப் பேரின்பம் துய்க்கச் செய்யும் திறனுடையவனும்; வந்திப்பார் மனத்தினுள்ளானை - தன்னை உண்மையான அன்புடன் வழிபடுகிறவர்களுடைய உள்ளத்தில் அவர்கள் அறிய விளங்கி யிருக்கிறவனும் ஆகிய சிவபெருமானை; வலிவலத்தில் வந்து கண்டேனே - திருவலிவலம் என்ற தலத்திற்கு வந்து நான் கண்டு வழிபட்டேன்.

(விளக்கம்) இப்பாட்டு, சரியை நிலையிலுள்ள அடியார்களுக்குச் சிவபெருமான் அருள் செய்கின்ற திறத்தைக் கூறுகின்றது. சந்தித்த திறல் - சந்தித்தல் என்பது எதிர்ப்பட்டுக் காண்டல்: அதாவது உள்ளத்தில் விளங்கும் அருளொளியைக் காண்டல். இப்பாட்டில் சுந்தரமூர்த்தி அடிகள் மந்ததரம் சத்திநிபாதம் கைவரப்பெற்ற சரியையாளரைக் குறித்தலால் (சிவத்தினுடன்) 'ஒன்றுதல்' என்னாது (சிவத்தைச்) 'சந்தித்த' என உரைத்தருளினர். திறல் என்பது வலிமை. ஒளி என்று பொருள் கூறினும் பொருந்தும். 'சந்தித்ததிறல்' என்பது அடியார்கள் தங்கள் உள்ளத்தில் அருளொளிவிளங்கப்பெற்று அதனால் உண்டாகிற சிவத்தினுடைய மெய் அறிவு வலிமை. பணிபூட்டி - பணி = தொண்டு. சிவனுடைய கருவியாகத் தன் முனைப்பின்றிச் செய்யும் சரியைத் தொண்டு. மூன்றாவது அடியில் சிவலோகம் அடையும் வீட்டின்பம் கூறப்பட்டிருத்தலால் இங்கே பணி என்பது சரியைத்தொண்டு என்று கூறப்பட்டது. பூட்டி = பிறருடைய ஏவுதலின்றித்தாங்களாகவே மகிழ்வுடன் செய்து. தவத்தை ஈட்டிய தம் அடியார்க்கு - தவம் என்ற சொல் இங்கே ஆகுபெயராய்த் தவத்தினாற் செய்யப்படும் சிவபுண்ணியத்தைக் குறிக்கிறது - வல்வினைகளெல்லாம் சிவபுண்ணியத்தின் முன்பு தீயின் முன் பஞ்சுபோல ஆகின்றன ஆதலின், 'ஈட்டிய அடியார்' என்றார். அடியார் = சிவனுடைய திருவடிகளைச் சார்ந்திருப்பவர். உயிர்ப்பற்று பொருட் பற்றுக்களை விட்டு சிவனுடைய திருவடிகளாகிய திருவருளிலே பற்று உடையாராய் அத்திருவருளையே எப்பொழுதும் நினைந்துகொண்டிருப்பவர்கள் - 'தம் அடியார்' என்பதில் தம் என்பது ஒருமைப்பன்மை மயக்கம். 'மேலே தவிர்ப்பானை' என்று கூறியதற்கேற்பத் 'தன் அடியார்' என்றிருத்தல் வேண்டும். பிறவிப்படுகடற் பரப்பு - படு என்ற சொல் பிறவித் துன்பம் மிகுதியையும், பரப்பு என்ற சொல் அளவில் பிறவிகளையும் குறிக்கின்றன. எளிதாய் - என்பதிலுள்ள ஆக்கவினை காரணப் பொருட்டாய் வந்தது. சிவலோகம் திறந்து ஏற்றவல்லானை - மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம் யாத்திரைப்பத்தில் "செடி சேருடலைச் செல நீக்கிச் சிவலோகத்தே நமை வைப்பான்" என்றும், "அடைவோம் நாம் போய்ச் சிவபுரத்து

ணியார்தவ தடையாமே" என்றும் அடியார்களை நோக்கிக் கூறி யருளினமை காண்க. வந்திப்பார்தம் மனத்திலுள்ளானை - சிவனை வழிபடுதலின் பயன் வழிபடுகிறவர்களுடைய உள்ளத்தில் சிவன் விளங்கி நிற்பன் என்பதும், சிவன் உள்ளத்தில் விளங்க மலமும் அதற்கேற்ப நீங்கும் என்பதும் இதனாற்பெறப்படுகின்றன. உயிர்கள் சார்ந்ததன் வண்ணமாகும் இயற்கைத் தன்மை உடையவை. ஆதலின் அவை சிவனைச் சாரச்சார அவனது தன்மையை அடைகின்றன. தம் - அசை. வலிவலந்தனில் வந்து கண்டேன் - காண்டல் என்பது இங்கே நம்போல்வார் ஊனக் கண்ணாற் சிவலிங்கத்தைத் திருக்கோயிலிற் காணுதல்போல்வதன்று; அகக்கண்ணால் சிவலிங்கத் திருமேனியைக் குறியீடாகக் கொண்டு சிவனுடைய தன்மையை அறிதலாகும். திருநாவுக்கரசு அடிகள், திருவாய்மூர்த் திருத்தாண்டகத்தில் "பாட அடியார் பரவக் கண்டேன் பதினெண் கணங்களும் பாடக்கண்டேன் திருவாய் மூரடிகளை நான் கண்டவாறே" என்று கூறியருளினமை காண்க. ஏ - ஈற்றசை.

> கூசநீக்கிக் குற்றநீக்கிச் செற்றமனா நீக்கி
> வாசமல்கு குழலினார்கள் வஞ்சமனை வாழ்க்கை
> ஆசைநீக்கி யன்புசேர்த்தி யென்பணிந்தே றேறும்
> ஈசர்கோயி லெதிர் கொள்பாடியென்ப தடைவோமே. உஎ

(உரை) கூசம் நீக்கி - (சிவபெருமானை வழிபடுதற்கு) நாணுகையை நீக்கி; (மனம்) குற்றம் நீக்கி - மனதிலே உள்ள அவிச்சையாகிய குற்றத்தை நீக்கி; வாசம் மல்கு - குழலினார்கள் வஞ்சம் மனைவாழ்க்கை (மனம்) ஆசை நீக்கி - (அதுபற்றி உலக இன்ப நுகர்வின் பொருட்டு) மணம் கமழ்கின்ற கூந்தலையுடைய பெண்களுடன்கூடி வாழ்கின்ற கபடமான இல்வாழ்க்கைமேல் வைத்துள்ள மன ஆசையை நீக்கி; மனம் செற்றம் நீக்கி - (அவ்வுலக இன்ப நுகர்வு கிடையாதபொழுது) மனதில் எழுகின்ற வெகுளியை நீக்கி; அன்பு சேர்த்தி - (சிவபெருமானிடத்தில்) நிலையான அன்பு வைத்து; என்பு அணிந்து - (அயன் திருமால் இருவர்களுடைய) எலும்புகளை (மார்பின் மேலே) தரித்துக்கொண்டு; ஏறு ஏறும் - (ஊர்தியாக) அறவடிவாகிய எருதின் மேல் ஏறுகின்ற; ஈசர் கோயில் - சிவபெருமான் எழுந்தருளியிருக்கிற திருக்கோயில்; எதிர் கொள் பாடி என்பது அடைவோம் - திரு எதிர் கொள் பாடியில் உள்ளது என்பது அறிந்து (அடியார்களாகிய நாம்) அங்கே சென்று வழிபடுவோம்.

(விளக்கம்) சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடின இந்தத் தேவாரப்பாட்டு வீடுபேற்றை விரும்பும் அடியார்கள் சிவபெருமானை எவ்வாறு திருக்கோயிலில் வழிபடுதல் வேண்டும் என்பதைக் கூறுகின்றது. கூசம் நீக்கி - கூச்சம் என்ற சொல் கூசம் எனக்குறுகி நின்றது. வணங்குதற்கு நாணுகை. அதாவது வணங்குதற்கு மனதில் விருப்பமில்லாது அதனால் உடலுறுப்புகள் நிலமுற வணங்குதல் முதலிய செயல்களைச் செய்தற்கு ஒருப்படாதிருத்தல். (மனம்) குற்றம் நீக்கி - குற்றம் என்பது இங்கே பஞ்சக்கிலேசக் குற்றங்களில் ஏனைய குற்றங்களுக்குக் காரணமாயுள்ள அவிச்சை (அறியாமை)யைக் குறிக்கிறது. அவிச்சை என்பது நிலையான பேரின்பம் தரும் சிவபெருமானை நிலையாயுள்ள மெய்ப்பொருள் என்றுணராது, நிலையில்லாத உலகத்தை மெய்ப்பொருள் என மயங்கி அறிதல். திருவள்ளுவர் இதனை மயக்கம் எனக் கூறுவர். செற்றம் என்ற சொல்லுடன் சேர்த்துக் கூறப்பட்ட மனம், குற்றம் என்ற சொல்லுடனும் சேர்த்துப் பொருளுரைக்கப் பட்டது. வஞ்ச மனை வாழ்க்கை (மனம்) ஆசை நீக்கி - உலக இன்ப நுகர்வுகளைக் குறியாக உடைய இல்வாழ்க்கை இன்பம் தருவதுபோலக் காட்டித் துன்பம் தருதலால் அது வஞ்சமனை வாழ்க்கை எனக் கூறப்பட்டது. அறநெறிப்பட்ட சிற்றின்ப இல்வாழ்க்கையானது உயிர்ப்பற்றும் பொருட்பற்றும் உடையதாதலின், அவ்விருப்புக்களையும் நீக்கி ஒருமை

மனத்துடன் சிவபெருமானைப் பற்றி நிற்கும் அடியார்களுக்கு அவ்வில்வாழ்க்கைபொருந்தாது என்பார், 'வஞ்ச மனைவாழ்க்கை ஆசை நீக்கி' என்றார். அதே கருத்தைத் திருஞான சம்பந்த அடிகள் திருச்சோற்றுத் துறைப்பதிகம் முதலாவது பாட்டில், "செப்பநெஞ்சே நெறிகொள் சிற்றின்பந், துப்பனென்னாதருளே துணையாக, ஒப்பரொப்ப ரொளிகொள் வெண்ணீற் - றப்பர் சோற்றுத்துறை சென்றடை வோமே" என்றும், திருநாவுக்கரசு அடிகள் கோயில் பெரிய திருத்தாண்டகப் பதிகம் ௫-வது பாட்டில் "மடவாரோடும் பொருந்தணை மேல்வரும் பயனைப் - போகமாற்றிப் பொதுநீக்கித் தனைநினைய வல்லார்க்கென்றும் - பெருந்துணையை" என்றும் கூறியருளினர். மனம் என்றசொல் ஆசையுடனும் சேர்த்துப் பொருளுரைக்கப் பட்டது. மனம் செற்றம் - நீக்கப்படும் குற்றம் செற்றம் ஆதலின் செற்றமனம் என்பது மனம் செற்றம் எனமாற்றிப் பொருளுரைக்கப்பட்டது. குற்றம் (அவிச்சை) ஆசை செற்ற மனம் - இப்பாட்டிற் கூறப்பட்ட இந்த மூன்று குற்றங்களும் பிரகிருதி மாயா உலகபோக நுகர்வுகளுக்கு ஏதுக்களா யிருப்பன வாகும். இக்குற்றங்கள் மூன்றும் சிவபெருமானை நேரே உணரும் மெய்யுணர்தலுக்குத் தடைகளா யுள்ளன. திருவள்ளுவ நாயனார் திருக்குறள் 36ம் அதிகாரம் மெய்யுணர்தல் 10-வது குறளில் இம்மூன்று குற்றங்களையும் காமம் (ஆசை) வெகுளி (செற்றம்) மயக்கம் (அவிச்சை) எனக் கூறுகின்றார். சைவசமய நூல்களிற் கூறப்பட்ட அவிச்சை, அகங்காரம், அவா, ஆசை, வெகுளி (செற்றம்) ஆகிய பஞ்சக் கிலேசங்களில் அகங்காரம் அவிச்சையிலும் அவா ஆசையிலும் அடங்கும். அவித்தையால் ஆசையும் ஆசையால் செற்றமும் உண்டாகின்றன. செய்யுள் ஆதலின் இம்முறை பிறழ்ந்து மூன்று குற்றங்களும் கூறப்பட்டன. அன்பு சேர்த்தி - இங்கே அன்பு என்பது வேண்டா தொன்றும் வேண்டாது மேவும் நிலையாயுள்ள அயரா அன்பு (Whole-hearted unchanging personal love). என்பு அணிந்து - என்பு என்பது அயன் திருமால் இருவர்களுடைய எலும்புகள். அவர்களுடைய ஆயுள்முடிவில் சிவபெருமான் அவர்களுடைய எலும்புகளைத் தமது முதுகின்மேலே தரித்தருளுகின்றார். "நங்கா யிதென்ன தவம் நரம்போ டெலும்பணிந்து - கங்காளந் தோள்மேலே காதலித்தான் என்னேடீ - கங்காள மாமாகேள் காலாந் தரத் திருவர் - தங்காலஞ் செய்யத் தரித்தனன்காண் சாழலோ" என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறியருளி யிருத்தல் காண்க. எதிர்கொள் பாடி என்பது - என்பது என்ற சொல்லுக்கு முன் 'உள்ளது' என்ற சொல்லும் அதற்குப் பின் 'அறிந்து' என்ற சொல்லும் அவாய் நிலையான் வந்தன. அவை சொல்லெச்சங்கள். அடைவோம் - அடைந்து வழிபடுவோம் என்ற பொருளில் வந்தது. அது அடியார்கள் என்ற படர்க்கைப்பெயரையும் தன்னுடன் கூட்டும் உளப்பாட்டுத் தன்மைப் பன்மைத் தெரிநிலை வினைமுற்று; நாம் என்ற தொகைச் சொல்லை எழுவாயாகக் கொண்டது. ஏ - ஈற்றசை.

௯. இருண்மல நிலை

மெய்ம்மையாம் உழவைச்செய்து விருப்பெனும் வித்தைவித்திப்
பொய்ம்மையாங் களையை வாங்கிப் பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்பாராகில் சிவகதி விளையு மன்றே. ௨௮

(உரை) மெய்ம்மையாம் உழவைச் செய்து - (ஒருவர் அந்தக் கரணம் ஐம்புலன்களால் நுகரும் உலக இன்பமானது நிலையில்லாத சிற்றின்பம் என்றும் சிவனை அடைந்து பெறும் இன்பமே நிலையான பேரின்பம் என்றும் தமக்குக் குரவன் அறிவுறுத்தின உண்மையைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிவுற அறிந்தபின்) சிவத்தன்மை என்னும் உழவைத் தமது உள்ளத்திலே உழுது; விருப்பு எனும் வித்தை வித்தி - அவ்வாறு

உழுத உள்ளமாகிய நிலத்தில் சிவத்தை அடைதல் வேண்டும் என்ற விருப்பம் ஆகிய விதையை விதைத்து ; பொய்ம்மையாம் களையை வாங்கி - அங்ஙனம் விதைத்த உள்ளமாகிய நிலத்தில் முளைத்து வளர்ந்த சிவத்தன்மையாகிய பயிருடன் வளர்ந்திருக்கிற பழைய மலவாசனையாகிய களையைப் பிடுங்கி எறிந்து ; பொறை எனும் நீரைப் பாய்ச்சி - அவ்வாறு வளர்ந்த சிவத்தன்மையாகிய பயிர் காய்ந்துபோகாதபடி பிராரத்துவ வினையால் உடலுக்கு வருந்துன்பங்களைப் பொறுத்தல் என்னும் நீரைப் பாய்ச்சி ; தம்மையும் நோக்கிக் கண்டு - அங்ஙனம் வளர்ந்து முதிர்கின்ற சிவத்தன்மையாகிய பயிரிலிருந்து வெளிப்படுகின்ற சிவத்தையும் அச்சிவத்தினுள்ளே ௩௬ தத்துவக் கூட்டங்களிலிருந்தும் வேறாக விளங்குகிற தம்மையும் (உயிரையும்) உணர்ந்து ; தகவு எனும் வேலி இட்டு - அங்ஙனம் சிவத்தினுள் விளங்குகிற தம்மிடத்தில் உயிர் உணர்வு (தற்போதம்) வந்து பொருந்தாதபடி தாம் சிவத்தைவிட்டுத் தனித்து நில்லாத சேடப்பொருள் என்ற உரிமையை நினைந்து அஞ்செழுத்தோதல், சிவோகம் பாவனை செய்தல் ஆகிய வழிகளால் தடுத்துக் காத்து ; செம்மையுள் நிற்பர் ஆகில் - சிவத்தினுடன் ஒற்றுமைப்பட்டு நிற்கும் அத்துவித நிலையில் நிலைத்து நிற்பாராயின் ; சிவகதி விளையும் - சிவபோகமாகிய தானியம் (பலனாக) விளையும்.

இந்த அருமையான தேவாரப்பாட்டு, சிவம் நிலையான பேரின்பந் தரும் மெய்ப்பொருள் எனத் தெளிந்த ஒருவர் அப்பேரின்பத்தை அடைதற்குத் தமது உள்ளத்தில் என்ன சாதனங்கள் செய்தல் வேண்டும் என்னும் அநுபவ உண்மையை, உழவன் ஒருவன் தனது நிலத்தில் உழுது தானியம் விதைத்துப் பயிர் செய்து தானியம் விளையச் செய்கிற உருவகத்தில் வைத்துக் கூறுகின்றது. இதனால் சைவசமயம் செயல் முறைச் சமயம் என்பதும், சைவ சமயத்தில் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கூறப்படும் பேரின்பமானது எவராலும் தமது முயற்சியால் இம்மையிலேயே பெறப்படும் என்பதுங் கூறப்படுகின்றன. இந்தப் பாட்டிற் கூறப்படும் உழவன் தொழில் உருவகம், பரஞ்சோதி மாமுனிவர் திருவிளையாடற் புராணம் வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலம் ௬௭-வது பாட்டிலும் கூறப்பட்டிருத்தல் காண்க.

(விளக்கம்) மெய்ம்மை ஆகும் உழவைச் செய்து - மெய்ம்மை = சத்துத் தன்மை, உண்மைத் தன்மை, சிவத்தன்மை. (Reality) உழவைச் செய்தல் என்பது விதை விதைக்க நிலத்தை உழுது பண்படுத்தல்போல சிவத்தன்மையை அடையச் செய்யப் பயன் கருதாது மனம் மொழி மெய்களால் செய்யப்படும் செயல்களைப் பயின்று பயின்று உள்ளத்தைப் பண்படுத்தல் ஆகும். விருப்பு எனும் வித்தை வித்தி - விருப்பு - சிவத்தை அடைதல்வேண்டும் என்னும் பெரும் விருப்பம் (Intense desire). என்றும் என்பது எனும் எனக்குறுகி நின்றது. பின்னே வருகிற எனும் என்பதற்கும் இவ்வாறே கொள்க. விதை விதைத்தல் - என்பது ஒரு உழவன் தான் பெற வேண்டுமென்று விரும்புகிற தானியத்தைத் தனது நிலத்தில் விதைத்தல்போல, சிவத்தை அடைந்து பேரின்பம் பெற விரும்புகிறவர் அக்கருத்தைத் தமது உள்ளத்தில் உண்டாகச் செய்தல். பொய்ம்மை. ஆம் களையை வாங்கி - பொய்ம்மை = அசத்துத்தன்மை, மலத்தன்மை, (Unreality) பொய்ம்மையாம் களையை வாங்குதல் என்பது உழவன் தான் விதைத்துப் பயிர் வளர்ந்திருக்கிற நிலத்தில் அப்பயிர் வளம்பெற உண்டாகும் பொருட்டு அதனுடன் சேர்ந்திருக்கிற களைகளைப் பிடுங்கி எறிதல்போலப் பேரின்ப விருப்பர், சிவத்தன்மைக் கருத்து உண்டாயிருக்கிற தமது உள்ளத்தில் அக்கருத்துத் தடையின்றிப் பெருகி வளரும் பொருட்டு அதனிடத்தில் சேர்ந்துள்ள பழைய மலவாசனையை நீக்குதல். பொறை எனும் நீரைப் பாய்ச்சி - பொறை = எடுத்த உடலில் பிராரத்துவ வினையாலுண்டாகும் துன்பங்களை வெறுக்காது அமைதியுடன் பொறுத்தல். இனம் பற்றிப் பிராரத்துவ வினையால் வரும் இன்பங்களையும் விரும்பி மகிழ்ச்சி அடையாது நுகருதலும் கொள்ளப்படும். இவ்வெறுப்பு விருப்புக்கள் வழியில் பழைய மலவாசனை

உள்ளத்திற் புகுந்து சிவத்தன்மையைக் கெடுக்கும் ஆதலின், "பொறை என்னும் நீரைப் பாய்ச்சி" என்றார். "கமையெலாமுடையராகிக் கழலடி பரவுந் தொண்டர்க் - கமைவிலா அருள் கொடுப்பர்ஐயன் ஐயாற்றனார்க்கே" என அடிகள் திரு ஐயாறு திருநேரிசைப் பதிகத்தில் கூறியிருத்தல் காண்க. பொறை எனும் நீரைப் பாய்ச்சுதல் என்பது உழவன் தன் நிலத்தில் வளர்ந்திருக்கிற பயிர் கருகாது வளரும் பொருட்டு அந்நிலத்துக்கு நீரைப் பாய்ச்சுதல் போல, பேரின்ப விருப்பர் தமது உள்ளத்தில் பெருகி வளருகின்ற சிவத்தன்மை குன்றாதபடி தமக்குப் பிராரத்துவ வினையால் வரும் துன்ப இன்பங்களை உள்ளத்தில் யாதொரு எதிர்ப்பும் (Reaction) உண்டாகாதபடி வெறுப்பு விருப்புக்களின்றி அமைதியாய் நுகருதல். தம்மையும் நோக்கிக் கண்டு - தம்மையும் என்பதிலுள்ள 'உம்' இறந்தது தழீஇய எச்ச உம்மையாகச் சிவத்தை நோக்கிக் காணுதல் அன்றி என்னும் பொருள்பட நின்றது. தம்மையும் நோக்கிக் கண்டு என்பது உவமம் வெளிப்படக் கூறப்படவில்லை. தம்மையும் நோக்கிக் காணுதல் என்பது உழவன் தனது நிலத்தில் வளர்கிற பயிரிடமிருந்து தானியக் கதிர்களை வெளிப்படக் காணுதல்போல, பேரின்ப விருப்பர் தமது உள்ளத்தில் பெருகி வளரும் சிவத்தன்மையிலிருந்து சிவமும் அச்சிவத்தினுள்ளே அடங்கித் தாமும் (உயிரும்) வெளிப்பட்டு விளங்கக் காணுதல் ஆகும். முன் சிவமும் தாமும் வெளிப்படாமல் இப்பொழுது வெளிப்பட்டு விளங்குதற்குக் காரணம் மலம் நீக்கமும் அதுபற்றி மெய்ஞ்ஞானமும் (அருளறிவும்) உண்டாதலாகும். இக்கருத்தைப் பட்டணத்துப் பிள்ளையார் திருவிடை மருதூர் மும்மணிக் கோவையில் "நின் - தெய்வத் திருவருள் வந்து கிடைத்தலின் - மாயப்படலங் கீறித் தூய - ஞானநாட்டம் பெற்றபின் யானும் - நின்பெருந் தன்மையுங் கண்டேன் காண்டலும் - என்னையுங் கண்டேன் பிறரையுங் கண்டேன் - நின்னிலை யனைத்தையுங் கண்டேன் என்னே - நின்னைக்காணு மாந்தர் - தன்னையுங் காணுந் தன்மை யோரே". என்று கூறியருளினமை காண்க. தகவு எனும் வேலி இட்டு - தகவு, உரிமை. தகவு என்னும் வேலி இடுதல் என்பது, உழவன் தானியக் கதிர்களை உடைய பயிர்களுள்ள தன் நிலத்தில் மாடு முதலாயின வந்து பயிர்களைத் தின்று சேதப்படுத்தாத வண்ணம் நான்கு பக்கங்களிலும் வேலிபோட்டுத் தடுத்தல்போலப் பேரின்ப விருப்பர் தம்முடன் (உயிருடன்) சிவத்தை விளங்கக் கண்ட தமது உள்ளத்தில் உயிருணர்வு (தற்போதம்) தோன்றி அவ்விளக்கக் காட்சியைக் கெடுக்காதபடி தாம் ஆண்டானாகிய சிவத்தைவிட்டுப் பிரிந்து தனித்து நில்லாத அடிமைப் பொருள் என்னும் தமது உரிமையை நினைந்து அஞ்செழுத் தோதல், சிவோகம் பாவனை செய்தல் ஆகிய வழிகளால் தடுத்துக்காத்தல் ஆகும். "சிவமான சிந்தையிற் சீவன் சிதைய" என்று திருமூலர் கூறுதல் காண்க. (2428). செம்மையுள் நிற்பராகில் - செம்மை=ஒற்றுமை. செம்மையுள் நிற்றல்=உயிர் சிவத்தினுடன் அத்துவிதமாய்க் கலந்து ஒற்றுமைப்பட்டு நிற்றல். இதிலும் உவமம் கூறப்படவில்லை. உவமப்பொருள் மாத்திரம் கூறப்பட்டிருக்கிறது. உழவன் தன் நிலத்திலுள்ள தானியப்பயிர்க் கதிர்களைக் கண்ணுங் கருத்துமாய்ப் பார்த்து அவைகள் முதிர்ந்துவிளையுமாறு செய்தல்போல, பேரின்ப விருப்பர் தமது உள்ளத்தில் அடைந்திருக்கிற அத்துவித அநுபவ நிலையில் உறைந்து நின்று அதனை முற்றும் வண்ணம் செய்தல் என உவமமும் உவமப் பொருளும் விரியும். சிவகதி விளையும் - சிவகதி=சிவபோகமாகிய பலன். இதுவும் உவமம் வெளிப்படக் கூறப்படவில்லை. உழவனுடைய நிலத்தில் தானியக் கதிர்கள் விளைந்து தானியத்தை அவனுக்குப் பலனாகக் கொடுத்தல்போல, பேரின்ப விருப்பருடைய உள்ளத்தில் முற்றிய அத்துவித அநுபவ நிலை அவருக்குப் பேரின்பத்தைப் பலனாகக் கொடுக்கும் என உவமும் உவமப் பொருளும் விரியும். அன்று - ஏ - ஆசை நிலைகள். ஒருவர் (பேரின்ப விருப்பர்) 'உழவைச்செய்து வித்தை வித்திக் களையைவாங்கி நீரைப்பாய்ச்சி நோக்கிக்கண்டு வேலியிட்டுச் செம்மையுள் நிற்பராயின் சிவகதிவிளையும்' என முடிக்க. சிவகதி-எழுவாய். விளையும் - பயனிலை. உள்ளத்தில் (சிந்தையில்) வைத்து உயிர் சிவனைக் காணுதலைப் பற்றித்

திருமூலர் திருமந்திரத்தில், "சிந்தைய தென்னச் சிவனென்ன வேறில்லை-சிந்தையினுள்ளே சிவனும் வெளிப்படும்-சிந்தைதெளியத் தெளிய வல்லார்கட்குச்-சிந்தையினுள்ளே சிவனிருந்தானே" என்று கூறியருளினர். "செறிவிலேன் சிந்தையுள்ளே சிவனடி தெரியமாட்டேன்" என்றும், "ஊனையே கழிக்க வேண்டில் உணர் மின்கள் உள்ளத்துள்ளே" என்றும், "சிந்தையுள் சிவமதானார் திருச்செம்பொன் பள்ளியாரே" என்றும் திருநாவுக்கரசு அடிகள் பிற இடங்களிலும் கூறியருளினமை காண்க. இப்பாட்டில் "மெய்ம்மையாம் உழவைச்செய்து, விருப்பெனும் வித்தைவித்தி, பொய்ம்மையாங்களையை வாங்கிப் - பொறையெனும் நீரைப்பாய்ச்சி" என்பவற்றால் ஞானத்தில் சரியையும் சிவஞான போதம், ௮-ம் சூத்திரக் கருத்தும், தம்மையும் நோக்கிக்கண்டு, தகவெனும் வேலியிட்டு என்பவற்றால் சிவஞானபோதம் ௯-ம் சூத்திரக்கருத்தும், ஞானத்தில் கிரியையும் செம்மை யுள்நிற்பாராகில் என்பதனால் சிவஞான போதம் ௧௦-ம் சூத்திரக் கருத்தும், ஞானத்தில் யோகமும், சிவகதி விளையும் என்பதனால் ஞானத்தில் ஞானமும் ௧௧-ம் சூத்திரக் கருத்தும் கூறப்பட்டன.

உடம்பெனும் மனையகத்துள் உள்ளமே தகழியாக
மடம்படும் உணர்நெய்யட்டி உயிரெனுந் திரிமயக்கி
இடம்படு ஞானத்தீயால் எரிகொள இருந்துநோக்கில்
கடம்பமர் காளை தாதை கழலடி காணலாமே. ௨௬

(உரை) உடம்பு எனும்மனை அகத்துள் - (ஒருவன் தன்னுடைய) உடம்பு என்று கூறப்படும் வீட்டினுள்ளே; உள்ளமே தகழியாக - உள்ளத்தை அகலாக வைத்து; மடம்படும் உணர் நெய் அட்டி - (அந்த உள்ளமாகிய அகலில்) அறியாமையைக் கெடுக்கின்ற தெளிவு உணர்வு என்னும் நெய்யைப் பெய்து; உயிர் எனும் திரிமயக்கி - அந்த நெய்யில் உயிர் என்னும் திரியைக் கூடும்படி செய்து; இடம்படு ஞானத்தீயால் - அந்த உயிர் என்னும் திரியில் எரிகிற வியாபக அறிவு என்னும் தீ ஒளியால்; எரிகொள - (உடம்பு ஆகிய வீடு முற்றும்) ஒளி நிறைந்திருக்க; இருந்து நோக்கில் - அமைதியாக (சிவபெருமானுடன் ஒன்றி) இருந்து அகக்கண்ணினாலே பார்த்தால்; கடம்பு அமர் காளை தாதை - கடம்பமரத்தடியிலே வீற்றிருக்கின்ற குமரக் கடவுளுடைய தந்தையாகிய சிவபெருமானுடைய; கழல்அடி காணலாமே - வீரத்தண்டை அணிந்த இரண்டு திருவடிகளையும் உணர்ந்து பேரின்பம் அடையலாம்.

(விளக்கம்) இந்தத் தேவாரப்பாட்டு சிவபெருமான் உயிரின் உடம்பினுள்ளே இருக்கின்றான் என்றும், அவன் உடம்பினுள்ளே யிருந்தாலும் உடம்பை உறைவிடமாகக் கொண்டிருக்கிற உயிர் அறியாதபடி மறைந்திருக்கின்றான் என்றும், அவ்வாறு உடம்பினுள்ளே மறைந்து விளங்காமலிருக்கிற சிவபெருமானைக் கண்டு அவன் திருவடிகளை அடைதலுக்கு அவ்வுயிர் யாது செய்தல் வேண்டும் என்றும், உடம்பைக் குடியிருக்கிற வீடாக உருவகஞ் செய்து கூறுகின்றது. உடம்பு எனும் மனைஅகத்து - என்னும் என்பது எனும் எனக்குறுகியது - என்று கூறப்படும். மனை அகத்து = மனை உள்ளிடத்து; உள்ளம் - உள் + அம், உடலினுள்ளேயிருக்கிற கருவி யாதலால் உள்ளம் எனப்பட்டது. உள்ளுதற் கருவி யாதலின் உள்ளம் ஆயிற்றெனலும் பொருந்தும். உள்ள மானது உயிர் நினைத்து உய்த்துணர்ந்து அறிகின்ற கருவி. உள்ளம், மனம், சிந்தை நெஞ்சு என்பன ஒரு பொருட் சொற்கள். உள்ளமே என்பதிலுள்ள ஏ-பிரி நிலைப் பொருளில் வந்தது. அது சிவத்தை உணரும் கருவியாயிருத்தலால் ஏனைய கருவிகளினின்றும் பிரித்துக் கூறப்பட்டது. மடம்படும் உணர் - மடம் என்பது உலகத்தை மெய் என்றும் சிவத்தைப் பொய் என்றும் மயங்கி அறியும் உலக அறிவு - அவித்தைஅறியாமை படுதல்கெடுதல் உணர் = உணர்வு - முதனிலைத் தொழிற் பெயர். உலகத்தை நிலையில்லாத பொருள் என்றும்சிவத்தை மெய்ப்பொருள் என்றும் சிந்தித்துத்தெளிதலால் உணரும் தெளிவறிவு

(Intuition). இது சிவபெருமானுடைய சிறப்பியல்பை உணரும் தெளிவறிவு. உயிர் எனும் திரிமயக்கி - உயிரினிடத்துத் தெளிவறிவு உண்டானபொழுது அதனிடத்து சிவத்தின் வியாபக அருள் ஒளி வந்து சேர்தலால், அது திரி என உவமிக்கப் பட்டது. மயக்குதல் - கூட்டுதல், சேர்த்தல். இடம்படும் ஞானத்தீ - வியாபக அறிவாகிய தீ ஒளி. தீ என்பது இங்கே தீ ஒளியைக் குறிக்கிறது. சிந்தித்துத் தெளிந்ததனு லுண்டாகும் தெளிவு அறிவும் (குறைந்த) ஞானமாதலன்றி முற்றிய அநுபவ ஞானமாகாமையால் வீட்டின்பம் அடைதற்கு சிவத்தினுடைய அருட்பேரொளியாகிய வியாபகஅறிவு அத்தெளிவறிவுடன் கலத்தல் வேண்டும் என்பது கூறப்பட்டது. கடம்பு அமர் காளை - முருகக் கடவுள். எப்பொழுதும் இளங்குமரன் ஆதலின் அவனைக் காளை என்று அடிகள் கூறினர். கழல் - அடியார்களுடைய இடரை ஒழிக்கும் வீரத்தையும் அவர்களுக்கு வீட்டின்பம் கொடுக்கிற கொடையையும் குறிக்கிற கால் அணி. காணல் - உயிர் சிவத்தினுடன் அத்துவிதமாய்க் கலந்து மெய்அறிவால் உணர்தல். அவ்வாறு உணர்தலே பேரின்பம் அடைதல் ஆதலின் காணல் என்பதற்கு உணராது பேரின்பம் அடைதல் என்று பொருளுரைக்கப்பட்டது. ஏ - ஈற்றசை. ஒருவன் தான் குடியிருக்கிற வீட்டில் ஒரு அகல் வைத்து அதில் நெய் பெய்து திரி இட்டு அத்திரியில் விளக்குப் பொருத்த, அவ் விளக்கொளி அவன் கண்ணொளியுடன் கலந்து அவ்வீட்டினுள் முன் மறைந்துகிடந்த ஒரு மாணிக்கத்தை அவனுடைய புறக்கண்களுக்குத் தெளிவாய் விளக்குதல்போல, ஒருவன் தனது உயிர் உறைவிடமாயிருக்கிற உடலிலேயுள்ள உள்ளத்தில் சிவபெருமானுடைய சிறப்பியல்பைச் சிந்தித்துத் தெளிய அத்தெளிவு அறிவுடன் சிவபெருமானுடைய வியாபக அறிவு சேர்ந்து அவனுடைய அகக்கண்ணுக்கு முன் அவனுடைய உள்ளத்தில் மறைந்திருந்த சிவபெருமானை விளக்கிக் காட்டும் என இப்பாட்டினுடைய உவமமும் உவமப் பொருளும் விரியும்.

வானமிது வெல்லாம் உடையான் தன்னை
வரியரவக் கச்சானை வன்பேய்சூழக்
கானமதில் நடமாட வல்லான் தன்னைக்
கடைக்கண்ணால் மங்கைஉமை நோக்கா வென்மேல்
ஊனமது வெல்லா மொழித்தான் தன்னை
உணர்வாகி அடியேன துள்ளே நின்ற
தேனமுதைத் தென்கூடற் றிருவால வாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. ௫௦

(உரை) நான் - நான்; வானம் இது எல்லாம் உடையான் தன்னை - துறக்க உலகம் நில உலகம் முதலிய எல்லா உலகங்களை உடையவனும்; வரி அரவக் கச்சானை - வரியையுடைய பாம்பைக் கச்சாக (அரையிலே) கட்டினவனும்; வன்பேய்சூழக் கானம் அதில் நடமாட வல்லான் தன்னை - வலிய பேய்கள் தன்னைச் சூழ்ந்துநிற்கச் சுடுகாட்டில் சங்கார நடனம் ஆடுகின்ற வலிமை உடையவனும்; மங்கை உமை நோக்கா கடைக்கண்ணால் - (தனது இடது பாகத்திலுள்ள) உமாதேவியாரது அருள் நோக்காகக் கண்ணைக் கடைப்பக்கத்திற் சாய்த்துப் பார்த்து; என்மேல் ஊனம் அது எல்லாம் ஒழித்தான் தன்னை - என்னிடத்தி லுள்ள குற்றங்களை எல்லாம் நீக்கினவனும்; அடியேனது உள்ளே - அடியேனுடைய உள்ளத்தினுள்ளே; உணர்வாகி நின்ற தேன் அமுதை - நான் உணரும் உணர்வாகித் தேன் போலவும் அமுது போலவும் நின்று நிலையான இன்பம் தருகின்றவனும்; தென்கூடல் திருவால வாய்ச்சிவன் - தென்நாட்டிலே கூடல் என்னும் திருவாலவாயின் (மதுரையின்) கண் எழுந்தருளி யிருக்கின்றவனும் ஆகிய சிவபெருமானுடைய; அடியே - இரண்டு திருவடிகளையே; சிந்திக்கப்பெற்றேன் - நினைக்கப் பெறும் பேற்றினைப் பெற்றேன்; இப்பெறு கிடைத்தற்கு அரியது என்பது குறிப்பெச்சம்.

19

(விளக்கம்) நானே ஏ - அசை. வானம் இது எல்லாம் உடையான் தன்னை - வானம் = சிறக்க உலகம். இது என்னும் சுட்டுப்பெயர் அறிசுட்டாய் நாம் வாழும் நில உலகத்தைக் குறிக்கின்றது. எல்லாம் என்பதனால் இங்கே கூறப்படாத ஏனைய ஐந்து உலகங்களும் கொள்ளப்படும், தன் - அசை. கச்சு - அரைப்பட்டி (Belt). கானம் அதில் நடம் ஆடவல்லான் தன்னை - அது - பகுதிப்பொருள் விகுதி. கானம் என்பது அழிப்புக் காலத்தில் மாயா உருவங்களை எல்லாம் சிவபெருமான் அழித்து நிற்கின்ற சுடுகாடு. இந்தச் சுடுகாட்டில் அவன் செய்கின்ற நடனம் அழித்தல் (சங்காரம்) ஆகிய தொழிலைக் குறிக்கின்றது. தன் - அசை. மங்கை உமை நோக்கா - நோக்காக என்பது நோக்கா எனக் கடை உயிர்மெய் குறைந்து நின்றது. நோக்கு அருள் நோக்கு ஆதலின், அருளைக் குறிக்கும் 'மங்கை உமை நோக்காக' என்று அடிகள் கூறினார். "அருள் சூழ்கொண்ட அங் கயற்கண் அமுதே" எனக் குமரகுருபர அடிகள் மீனாக்ஷி அம்மைப் பிள்ளைத் தமிழில் கூறியிருத்தல்காண்க. கடைக்கண் - கண் + கடை; - கண் கடை என்பது கடைக்கண் எனமாறி நின்றது, இல்முன் என்பது முன்றில் என நின்றாற்போல. கண்ணினது கடை (Side look) அருட்குறிப்புடன் கண்ணைச் சாய்த்து நோக்கும் பார்வை கடைக்கண் பார்வை என்று கூறப்படும். ஊனம் அது எல்லாம் ஒழித்தான் தன்னை - ஊனம் = குற்றம். மலத்தினாலாகிய குற்றம். அது - பகுதிப் பொருள் விகுதி. "எல்லாம் ஒழித்தான்" என்றதனால் சிவபெருமான், தம்மிடம் மலத்தினாலாகிய குற்றங்களை எல்லாம் நீக்கி அருட்சத்தி முழுவதும் பதியச் செய்தான் என்று அடிகள் கூறுகின்றார். "ஊனங் தன்னை ஒருங்குடனறுத்து" என்று மாணிக்கவாசக அடிகள் கீர்த்தித்திரு அகவலில் கூறியிருத்தல் காண்க. உணர்வாகி - அருட்சத்தி முழுவதும் பதியப்பெற்ற பின் நிறைவான மெய் உணர்வு உண்டாகின்றது. உணர்வு என்பது உள்ளத்தினுள்ளே காண்பான் காட்சி காட்சிப் பொருள் என்னும் வேற்றுமையின்றிச் சிவபெருமானுடன் அத்துவிதமாய்க் கலந்து ஒன்றுதலால் உண்டாகும் உணர்வு தேன் அமுதை - தேனும் அமுதும் உலகிலுள்ளார்க்குத் தித்தித்து இன்பம் தருதல்போல நிலையான பேரின்பமாயிருக்கின்றவனை. தேன் - அமுது - உம்மை தொகை "இன்பமதனை யெய்து வார்க்கியு மவர்க் குருவம் இன்ப கனமாதலினால்" என்று உமாபதி சிவாச்சாரியார் கூறியிருத்தல் காண்க. மலம் முற்றும் ஒழிந்தபின் நிறைவான மெய்யுணர்வும், மெய்யுணர்வினால் பேரின்பமும் உண்டாகும் தன்மையை அடிகள் தமது அநுபவத்தில் வைத்து இந்தப்பாட்டிற் கூறுகின்றார். சிவன் அடியே, ஏ - தேற்றேகாரம். சிவபெருமானுடைய திருவடிகளை யன்றிப் பிறிதொன்றினையும் சிந்திப்பதில்லை என்று அடிகள் கூறுகின்றார். "மதிமலர்க்கொன்றையான் அடியலாற்பேணா எம்பிரான் சம்பந்தன்" என்பது திருத்தொண்டைத் தொகையிற் கூறப்பட்டிருத்தல் காண்க.

ஊனாகி உயிராகி யதனுள் நின்ற வுணர்வாகிப்
பிறவனைத்தும் நீயாய் நின்றாய்
நானேது மறியாமே என்னுள் வந்து
நல்லனவுந் தீயனவுங் காட்டா நின்றாய்
தேனாருங் கொன்றையனே நின்றி யூராய்
திருவானைக் காவிலுறை சிவனே ஞானம்
ஆனாயுன் பொற்பாத மடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியே னென்செய் கேனே. ௩௧

(உரை) தேன் ஆரும் கொன்றையனே - தேன் நிறைந்திருக்கின்ற கொன்றை மாலையைத் தரித்தவனே !; நின்றியூராய் - திருநின்றியூரில் எழுந்தருளி யிருக்கின்ற

வனே. திருவானைக்காவில் உறை சிவனே - திருவானைக்காவில் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானே; ஞானம் ஆனாய் - (இத்தலங்களில் இலிங்கத் திருமேனி கொண்டெழுந்தருளியிருத்தலன்றி) அறிவு உருவாய் இருக்கின்றவனே; ஊன் ஆகி - உடலாகி; உயிராகி - (அவ்வுடலினுள்ளே விளங்குகின்ற) உயிராகி; அதனுள் நின்ற உணர்வாகி - அவ்வுயிரினுள்ளே விளங்குகின்ற உணர்வாகி; பிறஅனைத்தும் நீயாய் நின்றாய் - இவைகள் அன்றிப் பிறபொருள்களெல்லாம் நீயாகவே விளங்கி நிற்கின்றாய்; நான் ஏதும் அறியாது - நான் (நினது அருள்பற்றி) சிறிதும் அறியாமல்; என் உள்வந்து - எனது உள்ளத்தினுள்ளே (அறிவாக) விளங்கி; நல்லனவும் தீயனவும் காட்டா நின்றாய் - நல்லன இவை தீயன இவை என்று எனக்குக் காட்டி அறிவுறுத்துகின்றாய்; அடியேன் - உனது அடிமையாகிய நான்; உன் பொற்பாதம் அடையப்பெற்றால்; ஆண்டவனாகிய உனது அழகிய இரண்டு திருவடிகளையும் சேரப்பெற்றால்; அல்லகண்டம் கொண்டு - துன்பத்துக்கு இடமாயிருக்கிற உடலினால்; என் செய்கேன் - நான் என்ன பயனை அடைவேன் (ஒரு பயனுமில்லை என்றபடி).

(விளக்கம்) ஞானம் ஆனாய் - சிவபெருமானுக்கு அருட்சத்தியாகிய ஞானமே உருவம் ஆதலின் ஞானம் ஆனாய் என்றார். ஊன் ஆகி - ஊன் = தசை, அது இங்கே ஆகு பெயராக உடலைக் குறிக்கிறது. உணர்வு - என்பது முன்னைய ௩௦-வது பாட்டில் விளக்கப்பட்டது; அங்குப் பார்க்க; நல்லனவும் தீயனவும் காட்டாநின்றாய் - உள்ளத்தினுள்ளே நின்று நல்லனவும் தீயனவும் காட்டுவது மனச்சான்று (Conscience) என்று கூறப்படும். அல்ல கண்டம் - துன்பம்; பழைய தமிழ்ச் சொல். இக்காலத்து வழங்கப்படுதலின்று. இங்கே அது ஆகு பெயராய்த் துன்பத்துக்கு இடமாயிருக்கிற உடலைக் குறிக்கின்றது. கொண்டு - மூன்றும் வேற்றுமைச் சொல் உருபு கருவிப் பொருளில் வந்தது. என் செய்கேன் - செய்கேன் என்பதில், கு-எதிர் காலத்தைக் காட்டும் விகுதி. சிவனது திருவடி அடையப் பெற்ற பின் உடலால் அடையத் தக்க பயன் ஒன்றுமில்லை. வினைப் பயன் நுகருதற்கு உலக வாழ்வில் உடம்போடு கூடிய பிறவி உண்டாதலால் வினை முற்றிலும் நீங்கி மெய் உணர்வு பெற்றுத் திருவடி அடைந்தபின் உடல் வேண்டப் படுவதில்லை என்பது கருத்து. ஏ - ஈற்றசை. இந்தப் பாட்டில் முதல் இரண்டு அடிகளிலும் திரோதானமல நிலையும் பின் இரண்டு அடிகளிலும் அம்மலம் நீங்கிய அருள் நிலையும் கூறப்படுகின்றன.

விள்ளத்தான் ஒன்று மாட்டேன் விருப்பெனும் வேட்கையாலே
வள்ளத்தேன் போல நுன்னை வாய்மடுத் துண்டிடாமே
உள்ளத்தே நிற்றி யேனும் உயிர்ப்புளே வருதியேனுங்
கள்ளத்தே நிற்றி யம்மா எங்ஙனங் காணுமாறே. ௧௨

(உரை) உள்ளத்தே நிற்றி எனும் - (சிவபெருமானாகிய நீ) எனது உள்ளத்தில் நிலையாக இருந்தாலும்; உயிர்ப்பு உளே வருதி எனும் - நான் எனது மூச்சை உடலினுள்ளே இழுத்து வாங்கும்பொழுது நீ அம்மூச்சுடனே வருகிறதாயிருந்தாலும்; வள்ளத்தேன் போல = (ஒருவன் தன் முன்னே வட்டிலில் வைத்திருக்கிற தேனை அதன் மேலுள்ள வேட்கையால் அதிலே தன் வாயை வைத்து மிக்க ஆவலாய் உறிஞ்சி உண்ணுதல் போல; விருப்பு எனும் வேட்கையாலே - எனது உள்ளத்தில் நின்னிடத்தில் அன்பு காரணமாக எழுகின்ற வேட்கையால்; நுன்னை வாய் மடுத்து உண்டிடாமே - எனது உள்ளத்திலிருக்கிற உன்னை எளிதில் அறிந்து எனது ஆசை தீர இன்பம் நுகராதபடி; கள்ளத்தே நிற்றி - உன்னை அறியாதிருக்கும்படி வஞ்சகமாய் நிற்கிறாய்; காணும் ஆறு எங்ஙனம் - (ஆதலின் உன்னை) உணர்ந்து நுகரும் தன்மை எப்படி? (உணரமுடியாது என்றபடி); அம்மா - இது என்ன வியப்பு! ஒன்றும் விள்ளமாட்டேன் - நான் இதைப்பற்றி எவரிடத்திலும் வாய்திறந்து சிறிதும் சொல்லமாட்டேன்,

(விளக்கம்) இந்தத் தேவாரப்பாட்டில் ஒருவர் தமது தவ முயற்சியின் பயனாகச் சிறிதளவு திரோத மலம் நீங்கித் தமது உள்ளத்திலே சிவபெருமானது அமுத வொளி ஒவ்வொரு நேரத்தில் சிறிது விளங்கி மறைந்துபோதலை உணர்ந்து வருத்தமும் வியப்பும் எய்துகின்ற அநுபவத்தை அடிகள் கூறுகின்றார்.

தெள்ளத் தேறித் தெளிந்து தித்திப்பதோர்
உள்ளத் தேறல்அமுத வொளி வெளி
கள்ளத்தேன் கடியேன் கவலைக் கடல்
வெள்ளத் தேனுக் கெவ்வாறு விளைந்ததே.

என்று அடிகள் தனித் திருக்குறுந்தொகையிற் கூறியருளினமை காண்க. உயிர்ப்புடனே - உள்ளே என்பது உளே எனக் குறுகி நின்றது. சிவசத்தி இயக்கத்தால் மூச்சு இயங்குதலால் உயிர்ப்புள்ளே வருதியேனும் என்றார். வள்ளத்தேன்போல - உவமப் பொருளுக்குக் கூறப்பட்ட "விருப்பெனும் வேட்கையாலே வாய் மடுத்துண்டல்" என்பதை உவமைக்கும் வருவித்துப் பதவுரையில் பொருள் கூறப்பட்டது. வள்ளத்தேன் என்றதனால் சேய்மையிற் சென்று வருந்திப் பெறும் மலைத்தேன்போல் அல்லாது எளிதில் உண்ணத்தகுந்த அண்மையிலுள்ள தேன் உள்ளத்திலுள்ளது என்பது குறிப்பிடப்பட்டது. தேன் உண்ணும் பொருளில் மிக்க இனிமையான பொருளா யிருத்தலுடன், உடல் நோயைத் தீர்க்கும் மருந்தாகவு மிருத்தல்போல சிவபெருமான் உயிர்களுடைய மலநோயைத் தீர்க்கும் மருந்தாயும் மலம் நீங்கின உயிர்களுக்கு நுகரும் இன்பப் பொருளாயு மிருத்தல்பற்றி அவனை சைவ சமயாசாரியர்களும் பிற பெரியார்களும் 'தேனே' எனவிளித்துப் பல இடங்களிலே பாடியிருக்கின்றனர். விருப்புஎனும் வேட்கை- என்னும் என்பது எனும் எனக் குறுகி நின்றது, என்று கூறப்படும். விரும்பு உள்ளத்திலே நிகழும் அன்பு; வேட்கை உள்ளத்திலே நிகழும் அன்பு காரணமாக வெளியிலுள்ள பொருள்களைப் பற்றுதல். வேட்கை = ஆசை. 'அன்பீனும் ஆர்வமுடைமை' என்றார் திருவள்ளுவநாயனார். ஆர்வம், வேட்கை, ஆசை என்பன ஒரு பொருட்சொற்கள். விருப்பின் காரியமாகிய வேட்கை என்பதற்குப் பதிலாக விருப்பெனும் வேட்கை என்று, காரணம் காரியமாக உபசரித்துக் கூறப்பட்டது. கள்ளத்தே நிற்றி - சிவபெருமான் உயிர்களுடைய உள்ளத்திலே அவைகள் அறியாது நிற்றலால் கள்ளத்தே நிற்றி என்றார். விள்ளத்தான் ஒன்றும் மாட்டேன் என்பதை ஒன்றும் விள்ளமாட்டேன் என மாற்றுக. ஒன்றும் - சிறிதும்; தான்-அசை. பெரியார்கள் தங்கள் உள்ளத்தில் சிவபெருமானைப் பற்றி உணரும் அநுபவத்தைப் பிறரிடம் சொல்லமாட்டார்கள். கண்டவர் விண்டிலரே என்ற பழமொழி இதனாலே வந்தது. காணும்ஆறே - காணுதல் என்பது உள்ளத்தில் உணர்தல். ஆறு = தன்மை. ஏ - ஈற்றசை.

வெள்ள மெல்லாம் விரிசடை மேலோர் விரிகொன்றை
கொள்ள வல்லான் குறைகழ லேத்துஞ் சிறுத்தொண்டர்
உள்ள மெல்லா முள்க நின்றாங்கே யுடனாடும்
கள்ளம் வல்லான் காதல்செய் கோயில் கழுக்குன்றே. ௩௩

(உரை) வெள்ளம் எல்லாம் விரிசடை கொள்ள வல்லான் - (பகீரதன் தனது தவவலியால் வானுலகி லிருந்து வரவழைத்த) கங்கை யாற்றின் பெருக்கை யெல்லாம் (ஒரு துளியாகச் செய்து தனது சென்னியின்மே லுள்ள) விரிந்த சடையிலே தாங்கும் ஆற்றல் உடையவனும்; மேல் ஓர் விரிகொன்றை கொள்ள வல்லான் - அக் கங்கையின் மேல் ஒரு விரிந்த கொன்றை மாலையைத்தரிக்கும் ஆற்றல் உடையவனும்; சிறுத்தொண்டர் உள்ளம் எல்லாம் உள்கி நின்று - தன் முனைப்பு கெட்டுத் தாழ்மையாம் தன்மையுடன் ஒழுகுகின்ற அடியார்களுடைய உள்ளம் முழுவதிலும் கலந்து நினைத்துக்கொண்

டிருந்து; ஆங்கே உடன் ஆடும் கள்ளம் வல்லான் - அவர்களுடைய உள்ளத்தில் அவர்களை ஆட்டுவித்துத் தானும் அவர்களுடன் அவர்கள் அறியாது நடனம் செய்யும் ஆற்றல் உடையவனும் ஆகிய சிவபெருமான்; காதல்செய் கோயில் - உயிர்களுக்கு அருள் செய்யும் பொருட்டு அவர்கள்மேல் அன்புகொண்டு எழுந்தருளி யிருக்கின்ற திருக் கோயிலானது கழுக்குன்று - திருக்கழுக்குன்றம் என்னும் தலத்தில் உள்ளது.

(விளக்கம்) வெள்ளம் எல்லாம் விரிசடை மேலோர் விரிகொன்றை கொள்ள வல்லான் - உலகமெல்லாம் அழிக்கும் தன்மையுடைய கங்கைப் பெருக்கை ஒரு துளியாகச் செய்து சடைமேல் வைத்ததும் அவ்வாறு துளியாகச் செய்யப்பட்ட கங்கையின்மேல் கொன்றை மாலையைத் தரித்ததும், சிவபெருமானுடைய முழுஆற்றலைக் குறித்தலால் அவனை வல்லான் என்று அடிகள் கூறினர். சிறுத்தொண்டர். சிறுமை + தொண்டர். தாழ்மையாம் மனத்தினை உடைய அடியார்கள். சிறுத்தொண்ட நாயனர் குறிப்பிடப் பட்டதாகச் சொல்லினும் பொருந்தும். ஆனல் அவரை இந்தத் தேவாரப் பதிகத்திற் குறிப்பிடக் காரணமில்லை. உள்கி நின்று - சிவபெருமான் பொதுவாக மக்கள் எல்லாருடைய உள்ளத்திற் கலந்து நின்று அவர்களுடைய அறிவு செயல்களை விளக்குகின்றன். அவ்வாறு அவன் உயிருக்கு அறிவு செயல்களை விளக்காவிட்டால் உயிர்ஒன்றனை அறிதலும் செய்தலும் முடியாது. இது காட்டும் உதவி என்று கூறப்படும். சிவபெருமான் பொதுத்தன்மையி லன்றிச் சிறப்பாகத் தொண்டர்களுடைய உள்ளத்திற் கலந்து நின்று உள்குதலால் சிறுத்தொண்ட ருள்ளமெல்லாம் உள்கிநின்று என அடிகள் கூறியருளினர். உடன் ஆடும் கள்ளம் வல்லான் - தொண்டர்களுடைய உள்ளத்தில் உடன் ஆடுதல் என்பது சிவபெருமான் தொண்டர்களுடைய உள்ளத்திற் கலந்து நின்று அவர்களை அதிட்டித்து அவர்கள் போகம் நுகரும்படி விடயத்திலும் கலந்து நிற்றலாகும். இவ்வாறு சிவபெருமான் செய்யாவிடின் அவர்கள் விடயத்திற் சென்று போகம் நுகருதல் செல்லாது. இது காணும் உதவி என்று கூறப்படும். காரைக்கா லம்மையார் தாம் பாடிய அற்புதத் திருவந்தாதி ௨௦-வது பாட்டில் 'அறிவிப்பான் தானே' என்று காட்டு முதவியைக் கூறியபின் 'அறிவா யறிகின்றன் தானே' என்று காணும் உதவியையும் உடன் கூறியருளியது காண்க. ஆடுதல் = நடனம் செய்தல். அது உயிர்களை இயக்கி ஐந்து தொழில்களையும் செய்தலைக் குறிக்கிறது. தொண்டர்கள் அறியாது அவர்களுக்குச் சிவபெருமான் காட்டு முதவியும் காணு முதவியும் செய்து வருதலின் அவனைக் 'கள்ளம் வல்லான்' என அடிகள் கூறினர். ஏ - ஈற்றசை.

௪. அருளது நிலை

நெறிநீர்மையர் நீள்வானவர் நினையும்நினை வாகி
அறிநீர்மையி லெய்துமவர்க் கறியு மறிவருளி
குறிநீர்மையர் குணமார்தரு மணமார்தரு குன்றில்
எறிநீர்வயல் புடைசூழ்தரு மிடும்பாவனம் மிதுவே. ௩௪

(உரை) நெறிநீர்மையர் - (நில உலகில்) அருள்வழியில் ஒழுகும் தன்மை உடைய மாந்தரும்; நீள்வானவர் - (வானுலகில் வாழும்) நீண்ட வாழ்நாளை உடையதேவரும்; நினையும் நினைவாகி (உம்) - தங்களுடைய உள்ளத்தில் நினைக்கின்ற நினைவாகியும்; எய்தும் அவர்க்கு - (அவ்வாறு அருள் வழியிலொழுகி தமது திருவடிகளை அடைய விரும்பும் அம் மாந்தருக்கும் தேவருக்கும்; அறிநீர்மையில் அறியும் அறிவு அருளி - (உம்) அவரவர் தத்தம் உள்ளத்தில் அறியும் இயல்பினை அறிந்து அவ்வியல்புக்குத் தக்கவாறு, தம்மை அறியும்படி அறிவித்துச் (சிவபோக விடயத்திற் செலுத்தியும் அருள் செய்கின்ற); குணம் ஆர்தரு - அருட் பண்பு நிறைந்துள்ள; குறிநீர்மையர் - உயிர்களெல்லாம் பேரின்

பம் அடைதற்குக் குறியிடமாம் தன்மையை உடைய சிவபெருமான் (திருக்கோயில் கொண்டிருக்கின்ற); மணம் ஆர்தருகுன்றில் - நறுமணங்கமழ்கின்ற மலைமேல் (அல்லது மலைப்பக்கத்தில்) உள்ள; எறி நீர்வயல் புடைசூழ்தரும் - அலைவீசுகின்ற நீருள்ள வயல்களாற் சூழப்பட்டிருக்கின்ற; இடும்பாவனம் இது - திரு இடும்பாவனம் என்ற தலம் (நாம் காண்கின்ற) இந்த இடம் ஆகும்; ஆகலான் அடியார்கள் இக்கோயிலுக்குச் சென்று வழிபடுக என்பது குறிப்பெச்சம்.

(விளக்கம்) நெறி நீர்மையர் - நெறி = அருள்நெறி. அதாவது அருளையே குறியாகக் கொண்டு ஒழுகும் நெறி. நீர்மை = இயல்பு, தன்மை. நெறிநீர்மையர் என்பது நீர் பள்ளத்தை நோக்கிச் செல்லுதல் இயல்பாதல் போல, அருளினையே நோக்கும் நெறியிலே ஒழுகும் இயல்பினை உடையவர். நீள்வானவர்-தேவர்கள் நுண்ணுடல்களை உடையவர் ஆதலின், அவர்கள் நமது புறக்கண்களால் அறியப்படமாட்டார்கள்; அவர்கள் மாந்தரை நோக்க நீண்ட வாழ்நாளை உடையர் ஆதலின் 'நீள்வானவர்' என்றார். தேவர்களுக்கு ஒருநாள், மாந்தருக்கு ஓர் ஆண்டு ஆகின்றது. பொதுவாக எல்லாத் தேவர்களும் கூறப்பட்டிருத்தலால் மாந்தரைப்போல் அவர்களுக்குள் அருள் நெறியில் ஒழுகாதவர் பெரும்பான்மை இலர் என்பது பெறப்பட்டது. நினையும் நினைவாகி - அருள்நெறியில் ஒழுகுகிறவர்களுடைய நினைவும் அவர்கள் பேரின்பம் அடைதல் வேண்டும் என்ற சிவபெருமானுடைய நினைவும் ஒன்றுபட்டிருத்தலால், அடிகள் "நினையும் நினைவாகி" என்றார். இதனால் கண்ணொளியானது தன்னுடன் கலந்துள்ள கதிரவனொளியின் துணையின்றி உலகப் பொருள்களைக் காண்டல் செல்லாததுபோல உயிருடைய ஏகதேச அறிவு வேட்கை செயல்கள், அவைகளுடன் சிவபெருமானுடைய நிறைவான அறிவு வேட்கைச் செயல்கள், கலந்து உணர்த்தினாலன்றி விளக்க முறா ஆதலின், உயிரினது தால அறிவுக்குள்ளே சிவபெருமானுடைய சூக்கும அறிவு நின்று உயிருக்குக் 'காட்டும் உதவி' யைச் செய்கிறது என்ற உண்மை கூறப்பட்டது "அறிவினுள்ளான் அறிவுக்குக் காட்டுநின்றானை" என்று சிவஞானபோத வெண்பா கூறுதல் காண்க. திருநாவுக்கரசு அடிகள் திருமாற்பேறு திருத்தாண்டகம் எ-வது பாட்டில், "நினையாதாரை நினையானை நினைவோரை நினைவோன் தன்னை" என்று கூறியருளினர். நினைவாகி என்பதற்குப் பின் 'உம்' தொக்கி நிற்பதை விரித்துப் பொருளுரைக்கப்பட்டது. பின் வருகிற 'அருளி' என்பதற்கும் அவ்வாறே 'உம்' விரித்துப் பொருளுரைக்கப்பட்டது. அறிநீர்மையில் அறியும் அறிவு அருளி (உம்) - உயிர்களெல்லாம் தத்தம் பக்குவத்துக்கு ஏற்பப் படிமுறையில் அறிவிக்க அறியும் தன்மையுடையன ஆதலின், அடிகள் இவ்வாறு கூறினார். திருமூலர் திருமந்திரம் 130-வது பாட்டில் (இரமண சாஸ்திரி பதிப்பு) "எவ்வாறு காண்பானறிவு தனக்கில்லை - அவ்வாறருட் செய்வனாதியரன்றானும்" என்று கூறியருளினர். இதனால் உயிர் ஒன்றனை விடயித்தற்கண் சிவபெருமான் அதனை அதிட்டித்து அவ்விடயத்திலுஞ் சென்று கலந்தால் அன்றி விடயியாது என்ற 'காணும் உதவி' கூறப்பட்டது. இந்தக் காணும் உதவி மேலே கூறப்பட்ட 'காட்டும் உதவி'யின் பின் நிகழ்வது. குணம் - அருட்குணம்; மாயையின் தொடர்புடைய சாத்துவிக முதலிய குணங்கள் அல்ல. அருட்குணம் என்பதில் அறிவு வேட்கை செயல்கள் அடங்கும்; இன்னும் முற்றறிவு முதலிய எண்குணங்களும் அடங்கும். ஆர்தரு - ஆர்தல் = நிறைதல். தரு - என்பது வேறு பொருளின்றி 'ஆர்' என்பதற்குப் பகுதிப் பொருள் விகுதியாய் வரும் துணைவினை. பின் வருகிற மணம் ஆர்தரு; சூழ்தரு என்பனவற்றிற்கும் இவ்வாறே கொள்க. ஆர்தரு குறிநீர்மையர் - மூன்று காலங்களுக்கும் பொதுவான வினைத்தொகை. குறி நீர்மையர் - குறி = குறியிடம் - முடிவிடம், இலக்கு; எல்லை. எல்லா உயிர்களும் முடிவில் அடைதற்கு இலக்கு ஆம் தன்மையர். திருநாவுக்கரசு அடிகள் திருக்கடம்பூர்க் கரக்கோயில் திருக்குறுந்தொகை கூ-வது பாட்டில் 'மல்லல் ஞாலத்து வாழுமுயிர்க்கெல்லாம் எல்லையான பிரானார்' என்று கூறியருளினமை காண்க. இப்பாட்டின் கருத்தை "நெறியே யெவ்

னும் நெறிநின்றவர்கள் - நினைக்கின்ற நீதி வேதாந்த நிலைக் - குறியே யென்னுங் குணக்குன்றே யென்னுங் - குலாத்தில்லை யம்பலக் கூத்தனையே" என்ற திருமாளிகைத் தேவர் திருவிசைப்பாப் பாட்டுக் கருத்துடன் ஒத்து நோக்குக. ஏ - ஈற்றசை.

நஞ்சடைந்த கண்டத்தர் வெண்ணீறாடி
　　நல்லபுலி யதள்மேல் நாகங்கட்டி
பஞ்சடைந்த மெல்விரலாள் பாகமாகப்
　　பராய்த்துறையே னென்றோர் பவளவண்ணர்
துஞ்சிடையே வந்து துடியுங் கொட்டத்
　　துண்ணென் றெழுந்திருந்தேன் சொல்லமாட்டேன்
புன்சடையின் மேலோர் புனலுஞ்சூடிப்
　　புறம்பயநம் மூரென்று போயினாரே. ௩௫

(உரை) நஞ்சு அடைந்த கண்டத்தர் - கடலில் நின்றெழுந்த நஞ்சினை உண்டதனால் ஆகிய நீலநிறக் கழுத்தினரும்; ஓர் பவள வண்ணர் - ஒப்பற்ற பவள நிறமேனியினருமாகிய சிவபெருமான்; வெண்ணீறு ஆடி (உம்) - தமது திருமேனி முழுதும் வெண்மையான திருநீறு பூசியும்; நல்லபுலி அதள்மேல் நாகம்கட்டி (உம்) - அழகான புலித்தோல் அரையில் உடுத்தி அத்தோலின்மேல் பாம்பினைக் (கச்சாகக்) கட்டியும்; பஞ்சு அடைந்த மெல்விரலாள் பாகமாக (உம்) - செம்பஞ்சு ஊட்டிய மென்மையான விரல்களை உடைய உமாதேவியாரை இடது பாகத்தில் வைத்தும்; புன்சடைமேல் ஓர் புனல் சூடியும் - தமது சிறிய சடையின் மேலே ஒப்பற்ற கங்கையை அணிந்தும்; துஞ்சு இடையேவந்து - நான் தூங்குங்காலத்து என்னிடத்தில் வந்து; பாராய்த்துறையேன் என்று - தாம் தங்கியிருக்கும் இடம் திருப்பாராய்த்துறை என்று சொல்லி; துடியும் கொட்ட - (அவ்வாறு சொன்னதும் அன்றித் தமது வலது கையில் வைத்திருக்கிற) உடுக்கையையும் கொட்டி ஒலிசெய்ய; துண் என்று எழுந்திருந்தேன் - (அவ்வொலியைக் கேட்டு நான்) அச்சங்கொண்டு நித்திரை நீங்கி எழுந்தேன்; சொல்லமாட்டேன் - நான் அவரிடம் ஒன்றும் சொல்லமுடியவில்லை; நம் ஊர் புறம் பயம் என்று போயினார் - "நமது ஊர் திருப்புறம்பயம்" என்று சொல்லி என்னை விட்டுச் சென்றனர்; ஆதலின் நமது ஊருக்கு 'வா' என்பது குறிப்பெச்சம்.

(விளக்கம்) இத்தேவாரப்பாட்டு நிரோத மலத்தின் வயப்பட்டுச் சிவபெருமானை மறந்து உலக போக வாழ்வில் உழல்கின்ற ஒருவனிடம் சிவபெருமான்வந்து தம்மை ஆய்ந்து நினைந்து துதிக்கும்படி சொல்லி அபயம் கூறிப்போனதாக அகப்பொருட்டுறையில் வைத்துத் தலைவி தனது பாங்கியிடம் கூறினதாகக் கூறுகின்றது.

நஞ்சடைந்த கண்டத்தர் - இதனால் சிவபெருமான் உயிர்களுக்குவந்த இடர்களை நீக்கி அருள் செய்கிறவர் என்பது குறிக்கப்பட்டது. வெண்ணீறு ஆடி - ஆடுதல் = பூசுதல், ஆடி என்ற வினையெச்சத்தின் பின் 'உம்' தொக்கி நின்றது; அதனை விரித்துப்பொருள் உரைக்கப்பட்டது. இவ்வாறே பின்வருகிற 'கட்டி, பாகமாக' என்பவற்றிற்கும் 'உம்' விரித்து உரைக்க. 'வெண்ணீறாடி' என்பதனால் சிவபெருமான் இயல்பாகவே பாசங்களினின்று நீங்கிய தூய்மை உடையர் என்பதும், உயிர்ப் பொருளையும் உயிரில் பொருளையும் அழிப்புக்காலத்தில் தம்மிடத்தில் ஒடுக்கி நிற்பவர் என்பதும் குறிப்பிடப்பட்டன. நல்ல புலிஅதள்மேல் நாகம் கட்டி - புலியும் பாம்பும் தாருகாவனத்து முனிவர்களால் சிவபெருமான்மேல் விடப்பட்டவை. பேரருளுடைய சிவபெருமானிடத்து, தீங்கு செய்யும் பிராணிகளும் யாதொரு ஊறுசெய்யும் ஆற்றலில வாயின என்பது குறிப்பிடப்பட்டது. பஞ்சு அடைந்த மெல்விரலான் பாகமாக - என்பதனால் சிவபெருமான் அருளின் வேறல்லாதவர் என்பது குறிப்பிடப்பட்டது. பாகமாக என்ற

சொற்றொடருக்குப் பின் 'வைத்து' என்ற சொல் அவாய்நிலையான் வந்தது. அதனை வருவித்துப் பொருள் உரைக்கப் பட்டது. புன்சடைமேல் ஓர் புனல் சூடியும் - இதனால் சிவபெருமான் வரம்பில்லாத ஆற்றல் உடையர் என்பது குறிப்பிடப்பட்டது. புன்சடை-புன்மை சிறியசடையைக் குறிக்கின்றது. புனல்என்ற சொல்லுக்குப்பின்னுள்ள 'உம்' என்பதைச் சூடிஎன்ற சொல்லுக்குப்பின் வைத்துப் பொருள் உரைக்கப்பட்டது. துஞ்சு இடையே வந்து - துஞ்சுதல் = தூங்குதல். அது இங்கே உயிர் திரோதமலத்தால் சிவனை மறந்திருத்தலை உள்ளுறைப் பொருளாகக் குறிக்கிறது; இடை = பொழுது; சமயம். பாராய்த்துறையேன் - பாரா + ஆய் = பாராய். நெட்டுயிர் ஆகாரங் கெட்டது. பரவு, பாரா என ஆயது. சுரு = சுறவு. உணா = உணவு. பிணா = பிணவு என வருதல்போல. இரண்டும் முதனிலைத் தொழிற்பெயர்கள். பாரா ஆய் என வருதலை ஆய்பாரா என மாற்றி ஆய்தலுக்கும் பாவுதலுக்கும் என்று விரித்துப் பொருள் உரைக்க. துறை = தங்குமிடம். ஆகவே பாராய்த்துறையேன் - என்பதற்கு "உயிர்கள் ஆய்தலுக்கும் பரவுதலுக்கும் இடமாயுள்ள பொருள் நானுயிருக்கிறேன்" என்பது உள்ளுறைப்பொருள். ஆய்தல் சிவனுடைய பொது இயலை அறிதற்கேதுவான கேட்டல் சிந்தித்தல்களையும், பரவுதல் அவனுடைய சிறப்பு இயலை அறிதற்கேதுவான கேட்டல் சிந்தித்தல்தெளிதல் நிட்டைகூடல் நான்கினையும் குறிக்கும். இந்த உண்மையை மறந்து நீ உலகபோகத்தில் உழல்கின்றாய் என்று சிவபெருமான் திரோதமல வயப்பட்டிருக்கும் உயிருக்குச் சொன்னார் என்பது கருத்து. சிவஞானபோதம் அ-ம் சூத்திரத்தில் "ஐம்புலவேடரின் வளர்ந்து அயர்ந்தனை" என்றகருத்துக்கூறி உயிருக்கு அதன்உரிமையைச்சிவபெருமான் அறிவித்தவாறாயிற்று. துண் என்று - துண் - அச்சத்தைக் குறிக்கும் ஓர் இடைச்சொல். அது விரைவினையும் குறிக்கும். சொல்லமாட்டேன் - மாட்டாமை - இயலாமை. சிவன்வந்து அறிவித்ததை உணரலாமே அன்றி உணர்ந்ததைப் பிறருக்குச் சொல்ல முடியாது ஆதலின், சொல்ல மாட்டேன் என்றார். துடியும்கொட்ட - துடி - உடுக்கை. அதனைக் கொட்டுதலால் நாதம் உண்டாகின்றது. நாதம் அறிவுக்குக் காரணமா யிருத்தலால் துடிகொட்ட என்பது அறிவிக்க' என்று பொருள்படும். சிவபெருமான் தமது இயல்பினை உயிருக்குக் காட்டித் தாம் உயிருக்குந் தந்தையாந் தொடர்பு உடையவர் என்று அறிவித்தார் என்பது கருத்து. "உமையறியக் கொந்தணை தாரீருரைமினென்றேன் துடிகொட்டினரே" என்ற வாக்கியம் வருகிற பொன் வண்ணத் தந்தாதி ௬௯ வது பாட்டில் துடிகொட்டினரே என்பதற்கு "தாம் இன்னாரென உயிருக்குச் சிவபெருமான் அறிவித்தார்" என்ற பொருள் வெளிப்படையாய் விளங்குதல் காண்க. துடியும் என்பதிலுள்ள 'உம்' இறந்தது தழீஇய எச்சஉம்மை. "பாராய்த்துறையேன்" என்று உரைத்ததன்றி துடியும் கொட்ட என்று 'உம்' இறந்தது தழுவியது. துடிகொட்ட என்பதனால் சிவஞான போதம் அ-வது சூத்திரத்தில் "தம்முதல் குருவுமாயுணர்த்த" என்ற கருத்து உரைக்கப்பட்டது. எழுந்திருந்தேன் - எழுந்தேன் - இரு பகுதிப்பொருள் விகுதி. எழுந்தேன் என்பதற்கு "இனி உலகப்பற்றைவிட்டுச் சிவபெருமானை அடைதல்வேண்டும்" என்ற மன எழுச்சியை உடையவனாயினேன் என்பது உள்ளுறைப் பொருள். "ஆசான் முன்னே துயின் மாணவகரைத் தேசாய்த்தண்டா லெழுப்புஞ் செயல்போல், நேசாயீசனு நீடாணவத்தரை ஏசாதமாயாடனாலே யெழுப்புமே" என்று திருமூலர் திருமந்திரம் 2163-வது பாட்டிற் கூறியிருத்தல் காண்க. நம் ஊர் புறம்பயம் என்று போயினார் - வெளிப்படையாகப் புறம்பயம் என்பது திருப்புறம்பயம் என்ற தலத்தைக் குறிக்கின்றது. இந்தத் தேவாரம் திருப்புறம்பயத்திலுள்ள சிவபெருமானுக்குத் துதியாகப் பாடப்பட்டது. புறம்பயம் என்பதைப் பயம்புறம் என மாற்றி, "பயம் (உனக்குப்) புறம் (ஆகுக)" என விரித்து நீ அஞ்சவேண்டாம். நான் உன்னை உலகப்பற்று மயக்கத்திலிருந்து நீக்கிப் பேரின்பம் தந்து காத்தருளுவேன் நீ நம்மிடம் வா" என்ற கருத்தை உள்ளுறைப் பொருளாகக் கொள்க. உள்ளுறைப் பொருள் கொள்ளுங்கால் பாராய்த்

துறை என்பதிலுள்ள துறையை 'திரு சைவத்துறை' என்றும் 'புறம்பயம் நம் ஊர்' என்பதிலுள்ள ஊரினை சைவ (சமய)த் துறைபாலடையும் அருள்வெளி என்றும் நாம் கொள்ளலாம். ஏ ஈற்றசை. இத்தேவாரப்பாட்டு, அகப்பொருட்டுறையில் வைத்துஞானத்திற் சரியையும், சிறப்பியலுக்கு உரிய கேட்டல் ஞானத்தையும் கூறுகின்றது. இது பக்குவமுள்ள உயிருக்குச் சிவபெருமான் வெளிபட்டு உணர்த்துதலைக் கூறுகின்றது. பவள வண்ணர் - என்பதனால் தமது பெயர் சிவன் என்பதும் நஞ்சடைந்த கண்டம் முதலிய கோலங்களால் தமது அருட்பண்பும், புறம்பயம் நம் ஊர் என்றதனால் தமது ஊர் (பேரின்பத்துறை) இன்னது என்பதும் சிவபெருமான் கூறினதாக நாம் அறிந்து கொள்ளலாம்.

கொள்ளைக் குழைக்காதிற் குண்டைப் பூதங்
　　கொடுகொட்டி கொட்டிக் குனித்துப் பாட
உள்ளங் கவர்ந்திட்டுப் போவார்போல வுழிதர்வர்
　　நான் தெரிய மாட்டேன் மீண்டேன்
கள்ளவிழி விழிப்பர் காணாக் கண்ணாற்
　　கண்ணுள்ளார் போலக் கரந்து நிற்பர்
வெள்ளச் சடைமுடியர் வே[illegible]வர்
　　வெண்காடு மேவிய விகி[illegible]தனாரே. ௩. ௬

(உரை) காதில் - இரண்டு காதுகளிலும்; ஐக்குழைகொள - அழகான குண்டலங்களை அணிந்திருக்கின்ற; குண்டைப்பூதம் - குறுகித் தடித்திருக்கிற உடல்களை உடைய பூதங்கள்; கொடுகொட்டிக் கொட்டிக் குனித்துப் பாட - கொடு கொட்டி என்னும் பறையைக் கொட்டிக்கொண்டு ஆடிப் பாட; வெள்ளச் சடைமுடியர் - கங்கை யாற்றுப் பெருக்கை (ஒரு துளியாகச் செய்து) சடையுடைய தமது தலையிலே தரித் திருக்கிற வரும்; வேதம் நாவர் - வேதங்களை நாவினாலே சொன்னவரும்; வெண்காடு மேவிய விகிர்தனார் - திருவெண் காட்டில் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கிறவரும் ஆகிய சிவபெருமான்; உள்ளம் கவர்ந்திட்டுப் போவார் போல - எனது உள்ளத்தைத் தம் வயப் படுத்திக்கொண்டு நீங்கும் கருத்து உடையவர் போன்று; உழிதர்வர் - (அதன்கண்) ஞான நடனம் செய்து கொண்டிருப்பர்; நான் தெரிய மாட்டேன் மீண்டேன் - (அவ்வாறு சிவபெருமான் எனது உள்ளத்தில் ஞான நடனம் ஆடி அதனைத் தம் வயப்படுத்துவதை) நான் அறியாதவனாய் அவரோடும் ஒன்று பட்டுச் சேராது என் வழியிலே திரும்பினேன்; காணாக்கண்ணால் - (நான் அவ்வாறு திரும்பினதை அவர் பார்த்துத் தமது கருத்தை நான் அறிந்து கொள்ளும் வண்ணம்) தமது நெற்றி மேலுள்ள ஞானக் கண்ணினால்; கள்ள விழி விழிப்பர் - எனது ஊனக் கண்களுக்குத் தெரியாதபடி என்னைப் பார்ப்பார்; கண்ணுள்ளார் - எனது அறிவுக்குள் அறிவாயிருப்பவராகிக் கரந்து நிற்பர் - எனது உயிரறிவுக்குத் தெரியாமல் மறைந்து நிற்பர்; இது என்ன புதுமை என்பது குறிப்பெச்சம்.

இத்தேவாரப் பாட்டில் அடிகள், காமரச மறியும் பருவம் வந்த ஒரு தலைவி, தான் எதிர்ப்பட்ட தலைவன் தன்னிடம் வந்து செய்த புதிய அநுபவ நிகழ்ச்சிகளைத் தனது பாங்கிக்குக் கூறும் கூற்றாகச் சொல்லும் அகப்பொருட்டுறையில் வைத்துப் பேரின்பச் சுவை அறியும் பருவம் வந்த ஒருயிர், தான் சிவபெருமானிடம் புதிதாய் அடைந்து வருகிற அநுபவ நிகழ்ச்சிகளைக் கூறுகின்றார்.

(விளக்கம்) 'கொள்ளைக் குழைக்காதில்' - என்பதைக் 'காதில் ஐக்குழை கொள்' எனக்கொண்டு கூட்டுக. ஐ + குழை = ஐக்குழை எனக் ககர ஒற்றிரட்டித்தது. 'காது' என்பது இரண்டு காதுகளையும். 'குழை' என்பது இரண்டு குண்டலங்களையும் குறிக்கின்றன. குண்டைப்பூதம் - பூதங்கள் குறுகியனவும் தடித்தனவுமாயுள்ள உடல்களை உடையன ஆதலின், குண்டைப்பூதம் என்றார். பூதம் - பூதங்கள். சாதி ஒருமை - திருஞான சம்பந்த அடிகள் "குண்டைக்குறட் பூதம் குழும" என்று திருவதிகை வீரட்டானத் தேவாரம் ௧-வது பாட்டிற் (46-1) கூறியிருத்தல் காண்க. கொடு கொட்டி - ஒரு வகைப் பறை. கொட்டிக் குனித்துப் பாட - சிவபெருமான் நடனஞ் செய்யும் பொழுது பூதங்கள் தாளம் போட்டுப் பாடி ஆடுதலை அடிகள், "குழலோடு கொக்கரைகை தாளம் மொந்தைதக்குறட் பூதமுன்பாடத் தானாடும்மே" என்று திருவதிகை வீரட்டானம் அடையாளத் திருத்தாண்டகம் ௭ - வது பாட்டிற் கூறியிருத்தல் காண்க. விகிர்தனார் - இந்தச் சொல்லினது குறிப்புரையை அருள் முறைத்திரட்டு ௭ - வது பாட்டின் கீழ் நான் எழுதிய உரையிற் பார்க்க. (இதழ் ௪, பக்கம் ௧௨௦) உள்ளம் கவர்ந்திட்டுப் போவார் போல - 'உள்ளம் கவர்தல்' என்பது சிற்றின்பத் துறையில் காமரசம் அறியும் பருவம் அடைந்திருக்கிற தலைவிதனது உள்ளத்தை அவளை எதிர்ப்பட்ட தலைவன் வயப்படுத்தித் தன்னை அடையச் செய்தலாகும். பேரின்பத் துறையில் பேரின்பச் சுவையை அறியும் பருவமடைந்திருக்கிற உயிரைச் சிவபெருமான் உலக வாழ்வு வழியினின்று திருப்பி அதன் வயமொழிந்து தம் வயப்படும்படி செய்தலாகும். உயிர் தன்னுடைய ஏகதேச அறிவு வேட்கை செயல்கள் சிவபெருமானுடைய வியாபக அறிவு வேட்கை செயல்களுக்குள் அடங்கி நின்று ஒழுகுதல், உயிர் சிவபெருமானுடைய வயப்படுதலாகும். போவார் போல - ஒருவாறு பக்குவம் அடைந்து வருகிற உயிர்க்குச் சிவபெருமானது அருட்செயல் நன்கு விளங்காததால் "போவார் போல" என்றார். உழிதர்வர் = உழிதர்தல் - திரிதல். உழிதருதல் என்றும் சொல்லுவது உண்டு. சிற்றின்பத் துறையில் உள்ளத்தில் உழிதர்தல் என்பது தலைவியினுடைய உள்ளத்தைவிட்டுத் தலைவன் நீங்காதிருத்தல். "நெஞ்சத்தார் காதலவராக வெய்துண்டல் - அஞ்சுதுமவே பாக்கறிந்து" என்ற 1128-வது திருக்குறட் கருத்தை நோக்குக. பேரின்பத் துறையில் சிவபெருமான் உயிரினுடைய உள்ளத்தில் நடனம் செய்தலாகும். சிவபெருமான் அண்டத்திற்போலப் பிண்டத்திலும் உயிரினது உள்ளத்தில் ஐந்தொழிலாகிய நடனத்தை எப்பொழுதும் செய்துகொண்டிருக்கிறார். இங்கே பக்குவமடைந்து வருகிற உயிருக்குச் சிவபெருமான் அருளல் ஆகிய நடனம் செய்தலால் அந்நடனம் ஞானநடனம் என்று கூறப்பட்டது. நான் தெரியமாட்டேன் மீண்டேன் - மாட்டாமை = இயலாமை. சிற்றின்பத் துறையில் தலைவன் தனது உள்ளத்தைவிட்டு நீங்காமலிருத்தலைத் தலைவி அறிந்துகொண்டாலும் அவன் வயப்படாமலிருத்தலாகும். பேரின்பத்துறையில் உயிர் தனது உள்ளத்தில் சிவபெருமான் நடனம் செய்துகொண்டிருத்தலை அறிந்தாலும் நடனம் செய்யும் கருத்தை அறிந்து அவன் வயப்படாமலிருத்தலாகும். "மறந்தனன் யானுன்னரு ளறியாமையில்" என்று மாணிக்கவாசக அடிகள் கூறுதல் காண்க. (நீத்தல் விண்ணப்பம் ௧ - வது பாட்டு) காணாக் கண்ணாற் கள்ளவிழி விழிப்பார்-சிற்றின்பத்துறையில் தலைவன் தலைவிக்குத் தனது கண்களாற்பார்க்கும் பொதுநோக்காலன்றித் தனது உட்கருத்தை அறிவிக்கும் சிறப்பு நோக்காற் பார்த்தல். அந்நோக்கு உட்கருத்தை மறைத்துவைத்திருத்தலால் 'கள்ளவிழி விழிப்பார்' என்றார். தலைவியைத் தன்வயப்படுத்துதல் அந்நோக்கத்தின் உட்கருத்தாகும். "நெற்றி, மேற் கண்காட்டி நிறையுங் கொண்டீர்" என்று அடிகள் திருஆமாத்தூர்த்திருத்தாண்டகம் அ -

வதுபாட்டிற் கூறியருளினமைகாண்க. பேரின்பத்துறையில் ஒருவாறுபக்குவமடைந்தும் தமது ஞான நடனத்தின் கருத்தாகிய அருளை அறியாதிருக்கிற உயிருக்கு அதனை அவ்வுயிர் அறியும்படி செய்யச் சிவபெருமான் தமது அருட் பார்வையால் மெய்யுணர்வு உண்டாகும்படி நோக்குதல் ஆகும். ஊனக்கண்களுக்கு வேறாகப் பக்குவமடையாத உயிர்கள் காணக்கூடாத கண்ணுயிருத்தலால் நெற்றிக்கண்களைக் 'காணுக்கண்' என்றார். அந்நோக்குப் பருவமடையாத உயிர்களுக்குத் தெரியாது மறைவாயிருத்தலால், "கள்ள விழி விழிப்பர்" என்றார். காணுக்கண்ணுற் 'கள்ள விழி விழிப்பர்' என்றதனால் சிவபெருமான் உயிரினுடன் கலந்து நின்று உயிருக்குச் செய்யும் காட்டும் உதவியும் சிவபெருமான் பாசஞானத்தால் அறியப்படுவாரல்லர் என்ற உண்மையும் கூறப்பட்டனவாயின. "காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக்காலே" என்ற தேவார வாக்கியம் இக்கருத்தினையே கூறுவதாகும். கண்ணுளார்போலக் கரந்துநிற்பர் - பேரின்பத்துறையில் கண் = அறிவு கண் உள்ளார் - உயிரினது அறிவுக்குள் சூக்கும உயிராய் வேறறக்கலந்து இருப்பவராகி. வினைமுற்று வினையெச்சப் பொருளில் வந்தது. போல - அசைநிலை. சிவபெருமான் உயிரினது அறிவுக்குள் அறிவாய் வேறறக் கலந்திருத்தலினால் அவர் உயிர் அறிவால் அறியப்படுவார் அல்லர் என்பது கூறப்பட்டது. சிவபெருமான் உயிர் அறிவால் (பசுஞானத்தால்) அறியப்படுவார் அல்லர் ஆதலின் 'கரந்து நிற்பர்' என்றார். சிற்றின்பத்துறையில் தலைவன் தலைவியினுடைய நினைப்பினுள்ளாராய் அவள் உள்ளத்தைவிட்டு நீங்காதிருந்தாலும் அவளுக்கு மறைவாய்ப் பிரிந்திருக்கிறார் என்பது கூறப்பட்டது. உழிதர்கின்றார் விழிக்கின்றார், கரந்து நிற்கின்றார் என்று நிகழ்காலத்தாற் கூறற்பாலன; தெளிவு அல்லது இயல்புபற்றி உழிதர்வர், விழிப்பர், கரந்துநிற்பர் என எதிர்காலத்திற் கூறப்பட்டன. இப்பாட்டு சிவபெருமான் பக்குவமுள்ள உயிருக்கு அதன் உள்ளத்தில் நின்று அருள் செய்தலைக் கூறுகின்றது.

முற்றொருவர்போல முழுநீறாடி முளைத்திங்கள்
  சூடி முந்நூலும் பூண்டு
ஒற்றொருவர்போல உறங்குவேன்கை ஒளிவளையை
  யொன்றொன்றா எண்ணுகின்றார்
மற்றொருவ ரில்லைத் துணை யெனக்குமால்
  கொண்டாற்போல் மயங்கு வேற்குப்
புற்றரவக் கச்சார்த்துப் பூதஞ்சூழப்
  புறம்பயநம் மூரென்று போயினாரே. ௧௭

(உரை) ஒருவர் - ஒப்பற்றவராகிய சிவபெருமான்; முழுநீறு ஆடி(உம்) - தமது திருமேனி முழுவதும் வெண்ணீறணிந்தும்; முளைத்திங்கள் சூடி(உம்) - மூன்றாம் பிறைத் திங்களைச் சடையிலே அணிந்தும்; முந்நூல் பூண்டு(உம்) - (மார்பிலே) முப்புரிகளாலாகிய பூணூல் தரித்தும்; முற்று ஒருவர் ஒற்றுப்போல - முழுவதும் ஒருவரால் அனுப்பப்பட்ட தூதர்போல; உறங்குவேன்கை ஒளிவளையை ஒன்று ஒன்றா எண்ணுகின்றார் - உறங்குகின்றவளாகிய என்னுடைய ஒளிபொருந்திய கைவளையல்களை ஒன்று ஒன்றாகத் தள்ளி எண்ணிக்கை செய்கின்றார்; மால் கொண்டால்போல மயங்குவேன் - பித்துப்பிடித்த ஒருவர் அறிவின்றிச் செய்வதை அறியாது மயங்குதல்போல மயங்குகிறவளாகிய நான்; மற்று ஒருவர் எனக்குத் துணை இல்லை (என்று கூற) - (அப்பொழுது உம்மைத் தவிர) வேறுஒருவரும் எனக்குத் துணையில்லை என்று சொல்ல;

புற்றரவக் கச்சு ஆர்த்து - அவர் புற்றிலேயிருக்கின்ற பாம்புகளைக் கச்சாக (அரையிலே) கட்டி; பூதம் சூழ - பூதகணங்கள் தம்மைச் சூழ்ந்து செல்ல; நம் ஊர் புறம்பயம் என்று போயினார் - "நாம் இருக்கும் ஊர் திருப்புறம்பயம்" என்று கூறிக்கொண்டு (என்னைவிட்டு நீங்கிப்) போனார்.

(விளக்கம்) அடிகள் இத்தேவாரப் பாட்டில், திரோதமலம் வயப்பட்டு வாழ்ந்து வந்த உலகவாழ்வில் நுகர்ந்த சிற்றின்பத்தினது நிலையாமையையும், சிறுமையையும் அறியலுற்று, உலகவாழ்வினை விட்டுநீங்கி, நிலையான இன்பம் அடைதற்கு வழிஉண்டோ என மயங்கி நிற்கும் சமயத்தில் சிவபெருமான் தோன்றி அருள் செய்ததை, அகப்பொருட் டுறையில் சிற்றின்பச் சுவையை அறியலுறும் பருவம் வந்துள்ள ஒரு தலைவி தனது உறக்கத்தில் நிகழ்கிற கனவிற் றன்றலைவன் தோன்றித் தன் வளையல்களை எண்ணித் தனது ஊருக்கு வரும்படிச் சொன்னார் என்று தன்பாங்கிக்குக் கூறும் கூற்றில் வைத்துக் கூறுகின்றார். "முழு நீறாடி" என்பதனால், சிவபெருமான் உலக முழுவதையும் அழிப்புக்காலத்தில் தம்மிடத்து ஒடுக்குகிறவர் என்பதும், இவ்வாறவே பாசங்களினின்று நீங்கியதூயர் என்பதும் 'முளைத்திங்கள்சூடி' என்பதனால் அவர் தம்மை அடைந்தவருடைய இடர் நீக்குவார் என்பதும் 'முந்நூல்பூண்டு' என்பதனால் தமக்கு ஒன்றும் வேண்டாதவர் என்பதும் குறிப்பிடப்பட்டன. முற்று ஒருவர் போல - 'முற்று' என்ற சொல் இரண்டாவது வரியில் வருகிற 'ஒற்று' என்ற சொல்லுக்கு அடைமொழியாகச் சேர்த்துப் பொருள் உரைக்கப்பட்டது. போல - அசை நிலை. முற்று ஒருவர் ஒற்றும் போல: 'முற்றும்' என்பது மகர ஒற்றுக் கெட்டு 'முற்று' எனக் குறுகி நின்றது. முற்றும் - முழுவதும். ஒற்று - தூதன். நிகழும் செய்திகளை மறைந்து நின்று அறிந்து, தன்னை அனுப்பின முதல்வனுக்குச் சொல்லுகிறவன். (Spy) தலைவிதான் உறங்குங் காலத்து மறைவாய் நின்றுத் தன் வளையல்களைத் தலைவன் எண்ணிப் பார்த்ததனால் அவரைத் தலைவர் என்று கூறாது; 'முற்றிலும் ஒரு தூதன் போல வந்தார்' என்று கூறினார். சிற்றின்பத் துறையில் உறங்குதல் என்பது தலைவி தலைவனால் அடையும் இன்பத்தை மறந்து தூங்குதல். உறங்குவேன் கை ஒளிவளையை ஒன்று ஒன்றாய் எண்ணுகின்றார் - உறங்குதல் - பேரின்பத் துறையில் திரோத மலம் காரணமாக உலகவாழ்வில் மயங்கி இறைவனால் அடையப்பெறும் பேரின்பத்தை அறியாதிருத்தல். உறங்குவேன் - தெரிநிலை ஒருமைத்தன்மை எதிர்கால வினையாலணையும் பெயர். 'உறங்கினேன்' என இறந்த காலத்தாற் கூறற்பாலது. இயல்பு பற்றி எதிர்காலத்தாற் கூறப்பட்டது. 'வளை' என்பது உயிரை வளைத்திருக்கிற உலக வாழ்வுப் பற்றுக்களை உள்ளுறைப் பொருளாகக் குறிக்கும். இப்பற்றுக்கள் திரோத மலத்தால் உண்டாகியவை. அம்மலம் திருவருட்சத்தியால் இயக்கப்படுதலால் 'ஒளிவளை' என்றார். சிற்றின்பத் துறையில் 'ஒளிவளை' என்பது பொன்னாலாகிய வளையலை வளையைக் குறிக்கும். ஒன்று ஒன்றாய் எண்ணுதல்-என்பது உள்ளுறைப் பொருளாக திரோத மலத்தினாலுண்டாகும் பற்றுக்களை ஒன்று ஒன்றாய் சோதனை செய்து அவைகள் ஒவ்வொன்றும் எவ்வளவு உயிரை விட்டு நீங்கியிருக்கின்றன என்று ஆராய்ந்து பார்த்தல் ஆகும். இது, தீக்கையில் அத்துவ சோதனை என்று கூறப்படும். உயிர் பேரின்பச் சுவை அறியும் தகுதி அடைதற்கு உலக வாழ்வுப் பற்றுக்கள் முழுவதும் நீங்குதல் வேண்டப்படுதலின், அப்பற்றுக்கள் உயிரினை விட்டு நீங்கினவர் என்று சிவபெருமான் பார்த்தார் என்பார், 'ஒன்றொன்றாய் எண்ணுகின்றார்' என்றார். "பாதம் பணிவார் தம் பல் விறவி - ஆய்ந்தாய்ந் தறுப்பாய்" என்று இக்கருத்தைத் திருநாவுக்கரசு அடிகள் திருச்சத்தி முற்றத் திரு விருத்தம் 2 வது பாட்டிற் கூறியிருத்தல் காண்க. ௬-வது அடியில் 'போயினார்' என்று சொன்னதற்கேற்ப, 'உறங்கினேன்' என்றிருத்தற்பாலது. 'உறங்குவேன்' என எதிர்காலத்தாற் கூறினார், இது காலவழுவமைதி. மால்கொண்டால் போல மயங்குவேன் - மால் - பித்து. பைத்தியம் கொண்டால்+போல. கொண்டாற்போல மயங்குவேன்+கு - மயங்குவேன். தெரிநிலை ஒருமைத் தன்மை

எதிர்கால வினையாலணையும் பெயர் 'மயங்கினேன்' எனற்பாலது 'மயங்கினேன்' என நின்றது காலவழு வமைதி. மயங்குதல் - இன்னது செய்தல்வேண்டும் என்று அறியாது திகைத்தல். மயங்குதல் - சிற்றின்பத்துறையில் காமரசமறியவந்த தலைவி தலைவனால் அடையப்பெறும் சிற்றின்பத்தை அடையவழிதெரியாது மயங்குதல்; பேரின்பத்துறையில் பேரின்பச் சுவை அறியும் பக்குவம் வந்த உயிர் உலகவாழ்வு நிலையிலிருந்து தப்பிப் பேரின்பத்தை அடைதற்கு வழி தெரியாது மயங்குதல். நம் ஊர் புறம்பயம் என்று போயினர் - நம் ஊர் புறம்பயம் என்பது சிற்றின்பத்துறையில் தலைவன், சிற்றின்பமடையவழி அறியாது மயங்கிக்கொண்டிருக்கிற தலைவிக்குத் தமது ஊர் திருப்புறம்பயம் என்று கூறி அந்த ஊருக்கு வரும்படி தெரிவித்தல். "பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்" என்ற தேவார வசனத்தை ஒத்துநோக்குக; பேரின்பத் துறையில் இறைவன் பேரின்பமடைய வழி அறியாது மயங்கிக் கொண்டிருக்கிற உயிருக்குத் தாம் உயிர்களுக்கு அருள்செய்தற் பொருட்டுத் திருக்கோயில் கொண்டருளியிருக்கின்ற திருப்புறம்பயத்துக்கு வந்து தம்மைத் தமது வியாபக அறிவு வேட்கை செயல்களில் அடங்கி நின்று வழிபடல் வேண்டும் என்று தெரிவித்தல். சிவபெருமான் சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தமக்கு அடிமையாகப் பணிசெய்தல் வேண்டுமென்று அவரிடம் கூறி ஆவணவோலைகாட்டி மெய்ப்பித்த பொழுது 'நாமிருக்குமிடம் அருட்டுறை' என்று திருவெண்ணெய் நல்லூர்க்கோயிலுக்குட் புகுந்து வழி காட்டினதை நோக்குக. 'புறம்பயம்' என்ற சொற்றொடருக்கு உள்ளுறைப் பொருளாக, முன் "நஞ்சடைந்த கண்டத்தர்" என்ற 35-வது பாட்டின் கீழ் நான் உரைத்த கருத்துக்களைக் கொள்க. "அஞ்சலென்றடித் தொண்டனேற்கருள் நல்கினாய்" எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பாண்டிக் கொடுமுடித் தேவாரம் 5-வது பாட்டிற் கூறியிருத்தல் காண்க. பேரின்பம் நுகருமிடம் அச்சமில்லாத இடம் ஆதலின் 'புறம்பயம்' என்றார். சிவபெருமானுடைய திருவுருவங்களில் வலது கைகளில் ஒருகை அபயக்கையாயிருத்தலை நோக்குக. ஏ - அசை. பின்னே வருகிற 38-வது பாட்டில் 'நின்றார்' என்று கூறியதுபோல அன்றிப் 'போயினார்' என்று இப்பாட்டிற் கூறப்படுதலால், சிவபெருமான் உயிரினுடைய பக்குவத்தை ஆய்ந்து பார்த்துத் தாம் அதற்கு அருட்பார்வை செய்து மலம் நீக்குதற்குத் தகுதி உண்டாகவில்லை என்று அறிந்து, இன்னம் தம்மை அறிதல்வேண்டும் என்று அறிவித்துவிட்டுப் 'போயினார்' என்பது குறிப்பிடப்பட்டது. பாட்டில் சிவபெருமான் வந்தார், சோதனை செய்தார், போயினார் எனக் கூறப்பட்டன வெல்லாம் சிற்றறிவுடைய நம்போல்வார் அறிதற்கு உருவகமாய்க் கூறப்பட்டுள்ளன. அவர் ஒவ்வொரு உயிர்க்கும் அதனதன் பக்குவம் அறிந்து அறிந்து அருள் செய்துகொண்டிருக்கிறார் என்பது கருத்து.

வெள்ளநீர்ச் சடையனார்தாம் வினவுவார் போல வந்தென்
உள்ளமே புகுந்துநின்றார்க் குறங்குநான் புடைகள் போந்து
கள்ளரோ புகுந்தீரென்னக் கலந்துதான் நோக்கி நக்கு
வெள்ளரோமென் றுநின்றார் விளங்கிளம் பிறையனாரே. ௩௮

(உரை) வெள்ளம்நீர்ச் சடையனார் - கங்கையாற்றுப் பெருக்கை அடக்கி அதனை ஒருதுளியாகச் சடையில் வைத்தவரும்; விளங்கு இளம்பிறையனார் - ஒளிவிளங்கும் மூன்றாம்பிறைச் சந்திரனை அணிந்தவரும் ஆகிய சிவபெருமான்; வினவுவார் போல வந்து - (உறங்குகின்ற என்னிடம்) கேள்விகேட்கிற குறிப்புடனே வந்து ; என் உள்ளமே புகுந்து நின்றார் - (நான் அறியும்படி) எனது உள்ளத்தில் வேறாக விளங்கி நின்றார்; உறங்கும் நான் - உறங்கிக்கொண் டிருக்கின்ற நான் ; புடைகள் போந்து - (அவர்) பக்கத்திலே போய்; புகுந்தீர் கள்ளரோ என்ன - எனது உள்ளத்தினுள்ளே நான் அறியாது புகுந்தவராகிய நீர் கள்ளரோ என்று அவரைக் கேட்க; தாம் - சிவபெருமான்;

நோக்கி - (எப்பொழுதும் எனது உள்ளத்தில் உறைகின்றவர் என்றுநான் அறிய எனது மலம் நீக்கும் வண்ணம் தமது அருட்பார்வையால்) என்னைப் பார்த்து; கலந்து - (முன்னே அவரை எனக்கு வேறாக நின்றார் என்று கருதிய என்னை இப்பொழுது அவரோடு அத்துவிதமாய்க்) கலக்கும்படி செய்து; நக்கு - (அவ்வாறு நான் அவருடன் அத்துவிதமாய்க் கலந்ததற்காக அகமகிழ்ச்சியினால்) புன்முறுவல் செய்து; வெள்ளரோம் என்று நின்றார் - (நாம்முன் நீ அறியாது கூறியபடி கள்ளர் அல்ல; இப்பொழுது நீ அறிகிறபடி உனது உள்ளத்தில் எப்பொழுதும்) கள்ளமில்லாமல் (மெய்ம்மையாக) இருக்கிறவர் என்று கூறிக்கொண்டு நின்றார்.

(விளக்கம்) 'வெள்ளம்நீர்ச் சடையனார்' என்பதனால் சிவபெருமான் பேராற்றலுடையவர் என்பதும், 'இளம்பிறையனார்' என்பதனால் சிவபெருமான் தம்மை அடைந்தவர்களுடைய இடரைத் தீர்ப்பவர் என்பதும் குறிப்பிடப்பட்டன. 'இளம் பிறையனாரே' என்பதிலுள்ள ஏ - அசை. வினவுவார்போல வந்து - கேள்விகேட்கிற குறிப்பு முகத்திலே விளங்கியது என்பார், 'வினவுவார்போல' என்று கூறினார். கேள்வி கேட்கிறதற்கு வேறாகநிற்றல் வேண்டப்படுதலால் பல 'வேறாகநின்று' என்று பதவுரை செய்யப்பட்டது. "நமது 'அருமைமகனே! நீமலப்பற்று நீங்கி நம்மைச்சேர்ந்து பேரின்பம் அடையும் தகுதி பெறுதற்கு நாம் உனக்கு உலகவாழ்வும் அதற்கு வேண்டப்படும் தனுகரண புவனபோகங்களும் கொடுத்தோமே, அவைகளை நமது கருத்து நிறைவேறும்படி பயன் படுத்திக் கொண்டாயா?" என்பதுகேள்வி. 'என் உள்ளமே புகுந்து நின்றார்' - 'உள்ளமே' என்பதிலுள்ள ஏகாரம் தேற்றம். 'புகுதல்' என்பதுஇங்கே விளங்கிநிற்றல், சிவபெருமான் எப்பொழுதும் எல்லா உயிர்களுடைய உள்ளத்திலும் இருப்பவர் ஆதலின், உள்ளத்தில் ஒளி உருவாய் விளங்கியது உறுதியாய்த் தெரிந்தது என்பார், 'உள்ளமே புகுந்து நின்றார்' என்றார். உள்ளத்திலே விளங்கியது மறையாமல் விளங்கியவாறே 'நிலைபெற்றுநின்றார்' என்பார் 'நின்றார்' எனக் கூறினார். 'நின்றார்க்கு' என்பதிலுள்ள கு - சாரியை. "இரந்திரந் துருக என்மனத்துள்ளே எழுகின்ற சோதியே" எனவும், "சோதியாய்த் தோன்றும் உருவமே" எனவும் மாணிக்கவாசக அடிகள் கூறியிருத்தல் காண்க. உறங்கும்நான் - பேரின்பத்துறையில் உறங்குதல், என்பது உள்ளுறைப்பொருளாகத் திரோத மலத்தின் வயப்பட்டு சிவபெருமானை அறியாதிருத்தலைக் குறிக்கின்றது. சிற்றின்பத் துறையில் தலைவி தலைவனை அறியாதிருத்தலைக் குறிக்கின்றது. புடைகள் போந்து - புடை - பக்கம். கள் - அசை. சிவபெருமான் உயிரினது உள்ளத்தில் வேறாய் விளங்கிநிற்றலால் "உயிர் புடைபோந்து" என்று கூறப்பட்டது. புகுந்தீர் கள்ளரோ என்ன - புகுந்தீர் - முன்னிலைத் தெரிநிலை. இறந்தகால வினையா லணையும் பெயர். சிவபெருமான் இதுகாறும் உயிரினுடைய உள்ளத்திலே விளங்காமல் மறைந்து நின்று, திரோத மலம் நீங்கின பருவம் வந்த இப்பொழுது ஒளிஉருவில் விளங்கி நின்றுள்ளதை அறிந்த உயிர் புதிதாய் விளங்கினவரைக் 'கள்ளர்' என மயங்கி அறிந்தது என்பார் 'கள்ளரோ' என்றார். 'கள்ளரோ' என்பதிலுள்ள ஓகாரம் வினாப்பொருளைத் தந்துநின்றது. நோக்கி - நோக்கம் - அருட்பார்வை - சிவபெருமான் தாம் உயிருக்கு இன்ன தொடர்பு உடையவர் என்று அறியாதிருந்த உயிரை அத்தொடர்பை அறியச் செய்ய அதன் மலம் நீக்கும் வண்ணம் அருட்பார்வையாற் பார்த்தல், இது, நயன தீக்கை என்று கூறப்படும். முதலாவது வரியிலுள்ள 'தாம்' என்ற சொல் மூன்றாம் வரியில் வருகின்ற 'நோக்கி' என்ற வினைக்கு எழுவாயாகவும், மூன்றாவது வரியிலுள்ள 'தான்' அசை நிலையாகவும் கொள்ளப்பட்டன. கலந்து - சிவபெருமான் உயிரினிடத்து அருட்பார்வை செய்து அதனோடு தாம் எப்பொழுதும் அத்துவிதமாய் (இரண்டற)க் கலந்து நிற்றலை அது அறியும்படி செய்தலே இங்கே கூறப்பட்ட கலத்தல் ஆகும். முன் கலவாது, இப்

பொழுது கலந்தது உயிரே அன்றிச் சிவபெருமான் அல்லர். திரோதமல நிலையில் சிவபெருமான் உயிரினோடு அத்துவிதமாய்க் கலந்து நின்ற முறைமை போல, திரோதமலம் நீங்கின அருள் நிலையில் உயிர் சிவபெருமானோடு அத்துவிதமாய் நிற்கின்றது என்ற உண்மை (கலந்து) என்பதனால் இங்கே கூறப்பட்டது. இவ்வாறு உயிர் சிவபெருமானோடு அத்துவிதமாய்க் கலந்து ஒன்றாகும் நிலை சிவயோகம் ஆகும். சிவயோகத்தின் பின் நிகழும் சிவபோகம் நிகழ்ந்ததாக இத்தேவாரப் பாட்டு கூறவில்லை. நோக்குதலின் பின் கலப்பு நிகழ்தல் முறைமையாதலின், பாட்டில் 'கலந்து நோக்கி' என்றிருப்பதை நோக்கிக் கலந்து என மாற்றிப் பொருளுரைக்கப்பட்டது. நக்கு - நகுதல் - புன்முறுவல் செய்தல்; சிறு நகை செய்தல். அகமகிழ்ச்சி காரணமாக முகம் மலர்ந்து சிறுநகை செய்தல். ஓருயிர் திரோத மலத்தினின்று நீங்கித் தமது அருளை அறிந்து, தம்மோடு கலந்ததற்காக சிவபெருமான் அகம் மகிழ்ந்து முகம் மலர்ந்து சிறு நகை செய்தார் என்பது 'நக்கு' என்ற சொல்லாற் கூறப்பட்டது. வெள்ள ரோம் என்று நின்றார் - வெள்ளர் - கள்ளமில்லாதவர் "வெள்ளைக்கில்லை கள்ளச் சிந்தை" என்னும் ஔவையார் முது மொழியில், 'வெள்ளை' என்பது கள்ளம் இன்மையைக் குறிக்கின்றது என்பது நன்கு விளங்குகின்றது. திருஞான சம்பந்த அடிகளுடைய திருக்கானூர்த் தேவாரம் ௧௦-வது பாட்டில் "தாமோர் கள்வர் வெள்ளர் போல" என்று வரும் சொற்றொடரில் 'வெள்ளர்' என்ற சொல்லுக்கு இப்பொருள் தெளிவாய் விளங்குதல் காண்க. ஓம் - தன்மைப் பன்மை விகுதி; உளப்பாட்டுத் தன்மைப் பன்மை விகுதி அன்று. தன்மைப் பன்மை சிவபெருமான் உலகிற்கு முழுமுதற்றலைவர் என்பதைக் குறிக்கின்றது. 'உளோம் போகீர்' என்று சிவபெருமான் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத் திருவெண்பாக்கத்தில் கூறி அருளினமை காண்க. நின்றார் - போயினார் என்று முன்னைய 37-வது பாட்டிற் கூறியது போலக் கூறாமல் இப்பாட்டில் 'நின்றார்' எனக் கூறப்படுதலினால் உயிர் சிவபெருமானுடைய அருட்பார்வையால் மல நீக்கம் அடைந்தபின் சிவபெருமானோடு கலந்திருக்கும் சிவயோக நிலையில் நிலைத்திருந்தது என்பது குறிப்பிடப்பட்டது. இப்பாட்டில் (ஒளி உருவில்) 'உள்ளமே புகுந்து நின்றார்' என்பதனால் சிவரூபம் என்னும் தமது சத்துத் தன்மையையும், 'நோக்க' என்பதனால் சிவ தரிசனம் என்னும் தமது சித்துத் தன்மையையும், 'கலந்து' என்பதனால் தமது ஆநந்தத்தன்மை விளங்குகின்ற சிவயோக நிலையையும் சிவபெருமான் உயிருக்கு விளங்கும்படி செய்தார் என்பது உய்த்துணர்க. திருநாவுக்கரசு அடிகள் இந்தத் தேவாரப்பாட்டில் திரோத மலம் நீங்கிப் பேரின்பச் சுவை உணரும் பருவமடைந்த ஓருயிரிடத்தில் சிவபெருமான் வந்து தமது அருட்கண்ணால் நோக்கி மல நீக்கம் செய்து சிவயோக நிலையை அடையச் செய்தான் என்ற உண்மையைச் சிற்றின்பச் சுவையை உணரும் பருவமடைந்த ஒரு தலைவி, தன்னிடம் உறங்கும்பொழுது முன் ஊழினாற் காட்சிப்பட்ட தனது தலைவன் வந்து அவனுடைய உருவ நலமும் பண்பு நலமும் காட்டித் தன்னோடு கலந்தான் என்ற செய்தியைத் தன் பாங்கிக்குச் சொன்னாள் என்னும் அகப்பொருட்டுறையில் வைத்துக் கூறினார்.

சரண மாம்படியார் பிறரி யாவரோ
கரணந் தீர்த்துயிர் கையி கழ்ந்தபின்
மரண மெய்திய பின்னவை நீக்குவான்
அரண மூவெயி லெய்தவ னல்லனே. ௩௧

(உரை) உயிர் - உயிரானது; 'கரணம் தீர்த்து கையில் இகழ்ந்தபின்' தனது கருவி அறிவைவிட்டு (அக்கருவி அறிவின் வழி செய்யப்படுகின்ற) செயலினும் மறத்திலைச்

செய்த பின்னும்; மரணம் எய்திய பின் - எல்லா அறிவுக் கருவிகளும் செயற் கருவிகளும் தன்னிடம் ஒடுங்கிய பின்னும்; நவை நீக்குவான் - உயிரினுடைய 'நான்' என்னும் அகப்பற்று 'எனது' என்னும் புறப்பற்று ஆகிய குற்றங்களை உயிரைவிட்டு நீக்குகின்றவன்; அரணம் மூ எயில் எய்தவன் அல்லனே - கோட்டைகளாற் சூழப்பட்ட முப்புரங்களையும் வில்லினால் எய்து அழித்தவனாகிய சிவபெருமான் அல்லவா? (சிவபெருமானே என்றபடி); ஆதலின் சரணம் ஆம்படியார் - உயிர்கள் முடிவில் பேரின்பம் அடைதற்குச் சேரும் புகலிடமாயுள்ளவர்; பிறர் யாவரோ - அச்சிவபெருமானை யல்லது வேறு யாருமில்லை; ஆதலால் மாந்தர்களே சிவபெருமானை அடைந்து வழிபடுங்கள் என்பது குறிப்பெச்சம். அவ்வழிபாடு அடுத்த 40-வது தேவாரப்பாட்டிற் கூறப்படுகிறது.

(விளக்கம்) கரணம் தீர்த்து - கரணம் என்பது கருவி. அது இங்கே ஆகுபெயராய்க் கருவி அறிவைக் குறிக்கின்றது. ஐம்புலன்கள் அந்தக் கரணங்களால் அறியும் அறிவு. தீர்த்தல் - விடுதல். "தீர்தலும் தீர்த்தலும் விடற் பொருட்டாகும்" என்பது தொல்காப்பியச் சூத்திரம். கையில் இகழ்ந்தபின் - கை என்பது இங்கே ஆகுபெயராய்க் கைகளினாலும் பிற புற உறுப்புகளாலும் செய்யப்படும் செயலைக் குறிக்கின்றது. கை என்னும் சொல் திருக்குறள் 1036-வது பாட்டு "உழவினார் கைம்மடங்கின்" என்பதில் செயல் என்ற பொருளில் வழங்கப்பட்டிருத்தல் காண்க. இகழ்தல் - மறத்தல். திருக்குறள் 538-வது குறளில் வருகிற 'இகழ்ந்தார்' என்ற சொல்லுக்கு 'மறந்தவர்' என்று பரிமேலழகர் உரை கூறியிருத்தல் காண்க. கருவி அறிவை விட்டபின்னும் அவ்வறிவின் வழி நிகழும் செயல் பழைய வாசனையால் நிகழும் ஆதலின், அடிகள் 'கரணந் தீர்த்து' என்று கூறியபின் "கையில் இகழாதபின்" என்றும் கூறினார். "நற்றவா உனைநான் மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் நமச்சிவாயப் பதிகத்தில் கூறியருளினர். கரணம் தீர்த்தலும் கையில் இகழ்தலும் பின்வருகிற மரணம் எய்தலைவிட ஒன்றுக்கொன்று மிக நெருங்கிய தொடர்புடையன ஆதலின், அடிகள் அவை இரண்டினையும் ஒன்று சேர்த்து அவைகளுக்குப் பின்னர் 'பின்' என்ற அடைமொழி கூறினார். மரணம் எய்தியபின் 'மரணம்' என்பது உயிர் பருவுடலிலிருந்து நுண்ணுடலில் ஒடுங்குதல். அது, இங்கே 'ஒடுக்கம்' என்ற பொருளில் வந்தது. உயிரினிடத்தில் எல்லாக் கருவிகளும் ஒடுங்குதல் இங்கே மரணம் என்று கூறப்பட்டது. சிவஞான சித்தியார் ஒன்பதாஞ் சூத்திரம் "கரணங்கள் கெடவிருக்கை" என்ற இரண்டாவது பாட்டில் 'மரணம்' என்ற சொல்லுக்குப் பத்தாவது அவத்தை என்று சிவஞான சுவாமிகள் பொருள் கூறியருளினார்கள். அதேபொருள்தான் இந்த இடத்திலும். கேவலம் சாக்கிர அவத்தையிலிருந்து எண்ணினால் சகலத்தில் துரியாதீத அவத்தைப் பத்தாவது அவத்தையாகின்றது. இந்த அவத்தையில் உயிர் கருவிக் கூட்டத்திலிருந்து நீங்கித் தனித்து நிற்கின்றது. இந்த அவத்தையில் கருவிக் கூட்டம் எல்லாம் ஒடுங்கி உயிர்மாத்திரம் தனித்து நிற்கிற நிலை. கரணம் தீர்த்தல், கையில் இகழ்தல், மரணம் எய்தல் என்ற மூன்று நிலைகள் முறையே ஒன்றினொன்று அதிகமாய் இப்பாட்டில் கூறப்பட்டிருக்கின்றன. இந்த மூன்று நிலைகளையும் முறையே சிவசமவாத சைவர், பாடாணவாத சைவர், பேதவாத சைவர் என்ற மூன்று அகச்சமயவாதிகள் கூறுகின்றார்கள். இந்த மூன்று அகச்சமய வாதிகளும் சுத்தாத்துவித சைவரைப்போல பதி பசு பாசம் என்ற முப்பொருள்களையும் ஒப்புக்கொண்டு உயிர், வீட்டினை அடையுந் தன்மையில் அவரினின்றும் வேறுபடுகிறார்கள். உயிர் சிவத்தினைக் கூடி வீட்டின்பம் அடைதல் வேண்டியதில்லை என்றகொள்கையில் மூன்று வாதிகளும் ஒத்தகொள்கை யுடையவர்களா யிருக்கிறார்கள். இந்த ஒத்த கொள்கையை அவர்கள் மூவரும் கொள்ளுதலிலும் அவர்களுக்குள் சிறிது பேதமிருக்

நின்றது. சுத்தாத்துவித சைவசமயத்தின்படி வெவ்வேறு வாதிகளுடைய கொள்கையானது அவரவருடைய அறிவுநிலையைப் பொறுத்து உள்ளது. சுருங்கக் கூறின், சிவசமவாதிகள், உயிர் கருவி அறிவினை நீங்கி உலகத்தை அசத்து என்று கண்டவிடத்து உலகத்துக்கு மேற்பட்டு நான் சிவம்எனத் தோன்றும் உயிர் அறிவால் பதியைக் காண்டலே முத்தியாகும் என்பர் பாடாணவாத சைவர். 'நான்சிவம்' என நிகழும் ஞானமன்றி உயிர்கருவி அறிவைக் கீழாசநாடி சுட்டிக்காணும் காட்சியும் சுகதுக்க அநுபவ உணர்ச்சியு மில்லாமல் கற்போல இருக்கும் நிலையை முத்தி என்பர் பேதவாத சைவர். உயிர் தன்மாட்டு ஒருவனது நிழல், உச்சிப்பகற் பொழுதில் அவன் அடிக்குள் அடங்கி நிற்றல்போலக் கருவிக் கூட்டமெல்லாம் வந்து ஒடுங்கியபொழுது பக்குவம் அடைந்து சிவனுடைய அருளால் அவன் திருவடியைக் கூடாமல், நிரந்தரமாய் நின்று முத்தியை அடையும் என்பர். (விரிவைச் சங்கற்ப நிராகரணம் நூலிற் பார்க்க) இந்த மூன்று வாதிகளும் உயிர் பாசஞானம் (கருவி அறிவு) நீங்கியபின் பதிஞானத்தால் பதியைக் கூடுதல் வேண்டாது பசுஞானத்தால் முத்தி அடைதல் கூடும் என்று கூறுகிறவர்கள். இவர்கள் யான், எனது என்னும் செருக்கு நீங்காதவர்கள். வேதாந்திகள் என்னும் ஏகான்ம வாதிகளும் ''நான் பிரமம்'' என்னும் பசு ஞானம் உடையவர்களாயினும் பசு பாசங்களை ஒப்புக்கொள்ளாதவர்கள் ஆதலின், அவர்கள் அகப்புறச் சமயத்தார் ஆகக் கொள்ளப்படுவர். உயிரினிடம் கருவிக் கூட்டமெல்லாம் ஒடுங்கி நின்ற நிலை முடிவான பசு ஞான நிலையாதலின் அதனை அடிகள் கடைசியாகக் கூறி அருளினர் இந்த நிலைக்குப் பின் நிகழ்வன மேற் கூறிய மூன்று வாதிகளும் அறியாமலிருக்கிற நின்மல சாக்கிரம் முதல் நின்மலத் துரியாதீதம் வரை உள்ள நிலைகள். நவை-பின்+நவை=பின்னவை நவை - குற்றம்; 'யான்' என்ற அகப்பற்றினாலும் 'எனது' என்ற புறப்பற்றினாலும் உண்டாகும் குற்றம். நீக்குவான் அரணம்மூ எயில் எய்தவன் அல்லனே - உயிர் பசுஞானத்துக்கு உரிய யான் எனது என்ற குற்றங்களினின்று நீங்கிப் பதி ஞானத்தாற் பதியோடு அத்துவிதமாய்ச் சேர்ந்து முத்தி அடைதல் கூடுமே அன்றி மேலே கூறிய மூன்று நிலைகளினு முள்ள பசு ஞானமுடையவர்கள் கூறுகிறபடி முத்தி அடைதல் முடியாது என்பார், அடிகள் ''நவை நீக்குவான் அரண்மூ வெயிலெய்தவனல்லனே'' என்றார். ''யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க் - குயர்ந்த வுலகம் புகும்'' என்று திருவள்ளுவ நாயனார் கூறி யருளினமை காண்க. அல்லனே என்பதிலுள்ள ஏகாரம் வினாப் பொருளில் ''நவை நீக்குவான் அவனே யாவன்'' என்னும் பொருள்பட நின்றது. சரணம் ஆம்படியார் - சரணம் - புகலிடம்; சேரும் முடிவிடம் (Goal) சிவபெருமான் மல்லை ஞாலத்து வாழு முயிர்க்கெலா மெல்லையான பிரானுயிருச்சின்றான் என்ற உண்மை கூறப்பட்டது. படியார் - தன்மை உடையவர்; அருட் பண்புடையவர்; தமக்கென ஒன்றும் வேண்டாது உயிர்களின் பொருட்டுப் படைத்துக் காத்து அழித்து மறைத்து அருள் செய்யும் கருணையாளர். ஆகும் என்ற ஆக்க வினை இடையிலுள்ள 'கு' கெட்டு 'ஆம்' என நின்றது. பிறர் யாவர் - பிறர்+யாவர் - பிறரியாவர், இகரம் குற்றியலிகரம். யாவரோ என்பதிலுள்ள ஓகாரம் பிறர் யாவரும் இல்லை என்ற எதிர்மறைப் பொருளில் வந்தது. சிவபெருமான் ஒருவரே சரணமாம்படியார் என்பது பொருள். திருநாவுக்கரசு அடிகள் இந்தத் திருக்குறுந் தொகைத் தேவாரப் பாட்டில் ''இருதிறனறிவுள இரண்டலா ஆன்மா'' அசத்தினைச் சார்ந்து அசத்தின் வண்ணமாய் அசத்தினை அறிந்து அசத்தின் மேலாய் அடைந்த பசுஞான நிலைக்குப் பின் சத்தினைச் சார்ந்து சத்தின் வண்ணமாய்ச் சத்தினுள் அடங்கி சத்தினை அறிந்து அடைகிற பதிஞானத்தால் சிவபெருமானோடு (சத்தினோடு) அத்துவிதமாய்க் கலந்து பேரின்பம் அடைதல் வேண்டுமே அன்றிப் பசுஞான நிலையில் பேரின்பம் அடைதல் முடியாது என்ற உண்மையைக் கூறியருளினார்.

வேறுயர் தாழ்வு தன்மை வினைதுக்க மிக்கபகை தீர்க்கு மேயவுடலில்
தேறிய சிந்தை வாய்மை தெளிவிக்க நின்றகரவைக் கரந்து திகழும்
சேறுயர் பூவின்மேய பெருமானும் மற்றைத் திருமாலும் நேட எரியாய்ச்
சீறிய செம்மையாகு சிவன்மேய செல்வத் திருநாரையூர் கைதொழவே. ௪௦

(உரை) சேறுயர் பூவின் மேயபெருமானும் - சேற்றில் (முளைத்து நீர்மட்டம் வரை) ஓங்கி வளர்கின்ற தாமரைப் பூ மேலிருக்கின்ற படைப்புக் கடவுளாகிய அயனும், மற்றைத் திருமாலும் - மற்றும் காப்புக் கடவுளாகிய திருமாலும்; நேட - (முறையே தமது முடி அடிகளை அன்னப் பறவையாய் உயரப் பறந்தும் பன்றியாய்க் கீழே அகழ்ந்தும்) தேட அவர்கள் காணமுடியாதபடி; எரியாய்ச் சீறிய - (அவர்களுக்குமுன்) தீப்பிழம்பாய்த் தோன்றி அவர்களைக் கோபித்த; செல்வத்திரு நாரையூர்மேய - வளம் பொருந்திய திருநாரையூரில் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கின்ற; செம்மை ஆகு - எல்லார்க்கும் எப்பொழுதும் நன்மையாகின்ற; சிவன் - சிவபெருமானை; கைதொழ - (ஒருவன் மனதினால் நினைத்து நாவினால் மந்திரஞ் சொல்லி வாழ்த்திக்) கைகளினால் வணங்க; உடலில்மேய - உடலிலும் (அந்தக் கரணத்திலும்) பொருந்தியுள்ள; வினை - வினைமலமும்; துக்கம் - துன்பத்தை விளைக்கின்ற உலக போக நுகர்ச்சிக்குப் பற்றுக்கோடாயுள்ள மாயாமலமும்; மிக்கபகை - (வினைமலத்தையும் மாயாமலத்தையும் துணையாகக் கொண்டு மோகம் மதம் இராகம் கவலை தாபம் வாட்டம் விசித்திரம் ஆகிய இவைகளுக்கு மூலகாரணமாய் நின்று) உயிருக்கு மிக்க பகைமையைச் செய்கின்ற ஆணவமல வலியும்; தீர்க்கும் - (அவனை விட்டு) நீங்கும்; வாய்மை தெளிவிக்க - (மலங்கள் அவ்வாறு நீங்குதல், காரணமாகத் தன்னாலே தொழப்பெற்ற சிவன் தனது சிந்தையில் அருளொளி விளங்கச் செய்து) சிவமே மெய்ப் பொருள் என்ற உண்மையைத் தெளிவாய் அறியும்படி செய்ய; தேறிய சிந்தை - அவ்வாறு தேற்றப்பட்டதனால் ஐயம் திரிபுகளினின்று முற்றிலும் நீங்கித் தெளிவு அறிவை அடைந்த சிந்தை; நின்றகரவைக் கரந்து திகழும் - (திரோதமலம் வயப்பட்ட காலத்தில்) நிலைத்திருந்த பொய்த் தன்மையினின்று முழுவதும் நீங்கிச் சிவம் பிரகாசித்தலுடன் விளங்கும்; வேறு - (அவ்வாறு அவனுடைய சிந்தையில் சிவம் பிரகாசித்து விளங்குதலால் முன் வாழ்ந்துவந்த வாழ்வுக்கு) வேறாய் அவனுக்கு; உயர் வாழ்வு - மேலான பேரின்ப வாழ்வும்; உயர் தன்மை - அவ்வாழ்வுக்கு உரிய மேலான குணங்களும்; (உண்டாம்) - உண்டாகும்.

திருஞானசம்பந்த அடிகள் இந்தத் தேவாரப் பாட்டில் சிவன் திருக்கோயில் வழிபாட்டினது பயனைக் கூறி அருளினார். அவ்வழிபாடு எவ்வாறு செய்யப்படல் வேண்டும் என்பது முன் "கூசம் நீக்கி" என்ற 27-வது பாட்டிற் கூறப்பட்டது. வழிபாட்டினது பயன் வழிபடுகிறவருடைய உள்ளத்தில் அவரது அநுபவத்தில் நிகழ்வது.

(விளக்கம்) - சேறுயர் பூவின்மேய பெருமான் - சேறுயர்பூ - தாமரைப்பூ - வடமொழியில் தாமரையைக் குறிக்கும் பங்கஜம் (பங்கயம்) என்ற சொல் சேற்றில் உண்டானது என்று பொருள்படும். பெருமான் - தலைவன். படைப்புத் தலைவன். நேட எரியாய்ச் சீறிய - அயனும் மாலும் சிவனைத் தங்கள் தவவலியாற் காண முயலாமல் தங்களுக்குள் ஒவ்வொருவரும் தாம்தாம் பெரியர் என்று செருக்குற்று காண முயன்றதனால் அவர்கள் தம்மைக் காண முடியாதபடி அவர் தீ உருவாய் நின்றார். அவ்வாறு சிவன் தீ உருவாய் நின்றது அவர்கள் கொண்ட செருக்குக்காகத் தாம் கொண்ட கோபத்தின் பொருட்டு என்பார் 'சீறிய' என்றார். செம்மையாகு சிவன்மேயச் செல்வத் திருநாரையூர் - இதனை செல்வத் திருநாரையூர் மேய செம்மையாகு சிவன் என உரைநடை செய்து பொருளுரைக்கப்பட்டது. செம்மை - நன்மை. ஆகு சிவன் - மூக்

காலத்துக்கும் பொதுவான வினைத் தொகை. செம்மை ஆகு சிவன் - எக்காலத்திலும் எல்லா உயிர்களுக்கும் நன்மை ஆகிற சிவன். திருநாவுக்கரசு அடிகள் திருக்கற்குடித் திருத்தாண்டகம் 9-வது பாட்டில் 'செம்மை தரும் பொருளானை' என்ற சொற்றொடரிலும் 'திரிபுரத்தோர் மூவர்க்குஞ் செம்மை செய்த தலையானை' என்ற சொற்றொடரிலும் செம்மை என்ற சொல் நன்மை யென்று பொருள் படுதல் காண்க. இன்பம் ஈதலே நன்மையாதலின் செம்மை என்ற சொல்லுக்கு இன்பம் என்றும் பொருள் கொள்ளலாம். திருக்கோவையார் 358-வது பாட்டில் சிவன் என்ற சொல்லுக்குப் பேராசிரியர் "எவ்வுயிர்க்கும் எப்பொழுதும் நன்மையைச் செய்தலாற்சிவன்" என்று உரை செய்திருத்தல் அறிக. கைதொழ - மனதினால் நினைத்தலும் நாவினால் வாழ்த்தலும் கையினால் தொழுதலுடன் இனம் பற்றிச் சேர்த்துக்கொண்டு பொருள் உரைக்கப்பட்டது. "மனமது நினைய வாக்கு வழுத்த மந்திரங்கள் சொல்ல இனமலர் கையில் கொண்டங் கிச்சித்த தெய்வம் போற்றி" என்று அருணந்தி சிவாச்சாரிய சுவாமிகள் சிவஞான சித்தியார் சுபக்க நூலில் உரைத்தருளினர். மனத்துடன் கூடாத எந்தப் புறச் செயலும் பயனிலதாகும். இங்கே சிவபெருமானுக்குத் தன் முனைப்பின்றிச் செய்யும் வழிபாடு கூறப்பட்டது. தன் முனைப்பின்றிச் செய்யும் வழிபாடாவது உயிர்கள் சிவபெருமானுடைய வியாபக வேட்கை அறிவு செயல்களுக்குள் தங்கள் வேட்கை அறிவு செயல்கள் வியாப்பியமாய் அடங்கி நிற்கும்படி வழிபடுதலாகும். தொழ - தெரிநிலை நிகழ்கால வினை யெச்சம் அன்று. அது தான்கொண்டு முடியும் தீர்க்கும், திகழும், (உண்டாகும்) என்ற வினைமுற்றுக்களால் உணர்த்தப்படும் தொழில்களுக்குக் காரணப் பொருட்டாய் வந்த இறந்த காலவினை யெச்சம்; மழை பெய்யக் குளம் நிறையும் என்றாற்போல எ - அசை. உடலின் மேய வினை துக்கம் மிக்க பகை தீர்க்கும் - மேய - மேவிய என்ற சொல்லின் இடைக் குறை. உடலின் மேய - இனம் பற்றி அந்தக் கரணத்திலும் எனச் சேர்த்துப் பொருளுரைக்கப்பட்டது. அந்தக் கரணங்கள் சேராமல் உடலில் யாதொரு தொழிலும் நிகழாது. வினை என்ற சொல் இங்கே ஆகு பெயராய் வினை மலத்தை (கன்ம மலத்தை)க் குறிக்கிறது. துக்கம் - துன்பம். வினைப்பயனாகிய இன்ப துன்பங்களை உயிர் நுகர்தற்குப் பற்றுக் கோடாக உடல் அந்தக் கரணங்கள் உள்ளன. இந்த உடல் அந்தக் கரணங்கள் மாயையிலிருந்து உண்டாதல் பற்றி துக்கம் என்பது இங்கே ஆகு பெயராய் மாயை மலத்தைக் குறிக்கிறது. பேரின்பத்தை நோக்க உலக வாழ்வு இன்பமும் துக்கமே ஆதலின் மாயை மலம் இங்கே துக்கம் என்று குறிப்பிடப்பட்டது. மிக்க பகை என்ற சொற்றொடர் இங்கே உலக வாழ்வில் உயிருக்கு எல்லாத் துன்பங்களுக்கும் காரணமாயிருக்கிற ஆணவ மலத்தைக் குறிக்கின்றது. வினை மாயை ஆணவம் ஆகிய மூன்று மலங்களும் அநாதியாயினும் ஆணவ மலம் உயிருடன் அநாதியே கூடியுள்ள சகச மலம் ஆகும்; ஏனை வினை மாயை மலங்கள் ஆணவ மல வலி நீக்கத்தின் பொருட்டு இடையே வந்து கூடிய ஆகந்துக மலங்கள். இவ்வாறு ஆணவ மலம் மூலமல மாய் உயிரினுடைய எல்லாத் துன்பங்களுக்கும் காரணமாயிருத்தல் பற்றி அதனை அடிகள் 'மிக்க பகை' என்றார். உடல் உட்கரணங்களானவை ஆணவ மலமும் அதற்குத் துணையாயுள்ள வினை மாயை மலங்களும் தொழிற்பட்டு உயிருக்கு மயக்க அறிவையும் துன்பத்தையும் விளைத்தற்குப் பற்றுக் கோடாம் இடங்களாயிருத்தலின், 'உடலில் மேய' என்றார். தீர்க்கும் - நீங்கும்; ஒழியும். தன்வினை ; கைதொழ - வினை துக்கம் மிக்க பகை தீர்க்கும் திகழும் (உண்டாகும்) என்பது தொழுதல் காரணமாக (Cause) தீர்த்தல் நிகழ்தல் உண்டாதல் திகழும் - உயர்வாழ்வு தன்மை என்பது உயர் வாழ்வுஉயர் தன்மை எனப் பிரியும். உயர் என்ற அடைமொழியைத் தன்மைக்கும் கூட்டுக. உயர் வாழ்வு - வாழ்வுக்கு அடையாளம் இன்பம் அடைதல் ஆகும். தன் கணவனோடு சேர்ந்து வாழாத ஒரு பெண்ணை உலகர் 'வாழாத பெண்' என்று கூறுகிறார்கள். உலகில்

அடையும் வாழ்வு சிற்றின்பம் அடையும் வாழ்வு. அதற்கு மேலான பேரின்பம் அடையும் வாழ்வு இது ஆதலின் 'உயர்வாழ்வு' எனக் கூறினார். உலக வாழ்வையும் பேரின்ப வாழ்வையும் மாணிக்கவாசக சுவாமிகள் ஒரு சேரக்குறிப்பிட்டு "வாழ்வு அற வாழ்வித்த மருந்தே" என்று பிடித்தபத்து ௧-வது பாட்டிற் கூறியருளினார். பெருந்துறைப் பெருமானை நன்றிறைஞ்சி யேத்துகிற அடியார்களே வாழ்ந்தார்கள் ஆவார்கள் என்று பண்டாய நான்மறை ௪-வது பாட்டில் அவர் கூறியிருத்தலும் காண்க. உயர்வாழ்வு அடைதல் இங்கே சிவயோகத்தைக் குறிக்கின்றது. சிவயோகத்தில் உண்டாகும் இன்ப நிலையை அடிகள் 'உயர்வாழ்வு' என்றார். உயர் தன்மை என்பது சிவயோக இன்ப வாழ்வுக்கு உரிய மேலான குணங்கள். உலக வாழ்வுக்கு உரிய தாமத இராசதசாத்துவிகக் குணங்களுக்கு மேலான குணங்கள் ஆதலின் 'உயர் தன்மை' என்றார். சார்ந்த வண்ணமாதற்றன்மையை உடைய உயிரின் மாட்டுப்பதியும் சிவனுடைய குணம் இங்கே உயர் தன்மை என்பது கூறப்பட்டது. உண்டாகும் என்ற சொல் அவாய் நிலையால் வந்த சொல்லெச்சம் ஆதலின் அதனைத் தன்மை என்ற சொல்லுக்குப்பின் சேர்த்துப் பொருள் உரைக்கப்பட்டது.

(குறிப்பு) சிவரூபம் ஆன்மசுத்தி. சிவதரிசனம் சிவயோகம் என்ற சொற்றொடர்களின் பொருள் விளக்கத்துக்கு இதனை ஓதும் சிவநேயர்கள் உண்மை நெறி விளக்கம் நூல் 3, 4, 5 பாட்டுக்களைப் பார்க்க.

இருளாய வுள்ளத்தி னிருளைநீக்கி
யிடர்பாவங் கெடுத்தேழை யேனையுய்யத்
தெருளாய சிந்தைதனைத் தெருட்டித்
தன்போற் சிவலோக நெறியறியச் சிந்தைதந்த
அருளானை ஆதிமா தவத்துளானை ஆறங்க
நால்வேதத் தப்பால் நின்ற
பொருளானைப் புள்ளிருக்கு வேளூரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே. ௪௧

(உரை) ஏழையேனை உய்ய - அறியாமையினாலே கிடந்து உழல்கின்றவனாகிய என்னை ஈடேற்ற; உள்ளத்தில் - (எனது) சிந்தையில்; இருளாய இருளை நீக்கி - அறியாமைக்குக் காரணமான ஆணவமல வலியை நீக்கி; இடர் - (உலகத்துன்பத்துக்குப் பற்றுக்கோடாயுள்ள உடலுக்குக் காரணமாயுள்ள) மாயை மலத்தையும்; பாவம் - (பாவ புண்ணியங்களுக்குக் காரணமான) வினைமலத்தையும்; கெடுத்து - (என்னை வந்து தாக்காதிருக்கும்படி) அழித்து; தெளியாத சிந்தைதனை - தானாக மயக்கத்தினின்று நீங்கமுடியாத என்னுடைய சிந்தையை; தெருட்டி - மயக்கத்தினின்று நீங்கித்தெளிவு அறிவு அடையும்படி செய்து; (அவ்வாறு சிந்தை தெளிவறிவை அடைந்ததனால்; தன் சிவலோக நெறி அறிய - தான் இருக்கிற சிவலோகத்தை அடையும் வழியை நேரே அறியும் வண்ணம்; சிந்தை தந்த - அச்சிந்தையைப் பொய்த்தன்மை நீங்கி சிவத்தன்மை எய்தும்படி செய்த; அருளானை - பேரருள் உடையவனும்; ஆதி ஆன் - எல்லாப் பொருள்களும் தோன்றுதற்குக் காரணமா யிருக்கிறவனும்; மாதவத்துள்ளானை - பெருந்தவப் பயனா யுள்ளவனும்; ஆறு அங்கம் நால்வேதத்து அப்பால் நின்ற பொருளானை - நான்கு வேதங்களையும் ஓதி அறிதற்கு உறுப்புக்களா யுள்ள மந்திரம், வியாகரணம், நிகண்டு, சந்தோபிசிதம், நிருத்தம், சோதிடம் என்னும் ஆறு வேதாங்கங்களையும் நான்கு வேதங்களையுங் கடந்து நிற்கின்ற பொருளா யுள்ளவனும்; புள்ளிருக்கு வேளூரானை - திருப்புள்ளிருக்கு வேளூரில் (வைத்தீஸ்வரன் கோயி

வில்) திருக்கோயில் கொண்டருளியிருக்கிறவனும் - ஆகிய சிவபெருமானை; போற்றுதல் - வணங்காமல்; ஆற்றநாள் போக்கினேன் - நீண்ட காலம் (வீணாகக்) கழித்தேன். ஆதலால் மாந்தர்களே நீங்கள் உங்கள் வாழ்நாளை வீணாகக் கழியாமல் சிவபெருமானை வணங்குங்கள்; அவன் உறுதியாய் உங்கள் சிந்தையை மயக்கத்தினின்று தெளிவித்து சிவமாந் தன்மையாக்கி ஆண்டு கொள்வான் என்பது குறிப்பெச்சம்.

(விளக்கம்) ஏழையேன் - ஏழைமை என்னும் பண்புப் பெயரடியாகப் பிறந்த உயர்திணை ஆண்பால் ஒருமைத் தன்மைக் குறிப்பு வினையாலணையும் பெயர் - ஏழைமை, அறியாமை; ஏழையேன் - அறிவில்லாதவனாகிய நான். உள்ளத்தில் இருளாய இருளை நீக்கி - முதலாவது இருள் அறியாமையையும் இரண்டாவது இருள் அந்த அறியாமைக்குக் காரணமான ஆணவ மலத்தையும் குறிக்கின்றன. இருளுக்குக் காரணமான இருள் என்பதற்குப் பதிலாக இருளாய இருள் என்று காரியத்தைக் காரணமாக உபசரித்துக் கூறினார். ஆய என்பது ஆகிய என்பதன் இடைக் குறை. ஆணவமலம் மாயையாலாகிய உடல் முழுவதும் நிறைந்திருந்தாலும் உள்ளம் (சிந்தை) அறிதலுக்குச் சிறப்புக் கருவியாயிருத்தலின் உள்ளத்தில் என்று கூறினார். "அளப்பருங் கரணங்கள் நான்கும் சிந்தையே யாக" என்று சேக்கிழார் பெரியபுராணத்திற் கூறியருளினமை காண்க. ஆணவமல வலி நீங்குமே அன்றி ஆணவ மலம் என்றும் அழியாது ஆதலின் "ஆணவமல வலியை நீக்கி" என்று உரை செய்யப்பட்டது. இடர் - துன்பம். முன்னைய 40-வது பாட்டில் அடிகள் மாயை மலத்தைத் துக்கம் என்று குறித்ததுபோல இப்பாட்டில் அதனை இடர் என்ற சொல்லால் குறிப்பித்தருளினார். அங்கே கூறிய குறிப்பு உரைகளை இதற்கும் கொள்க. பாவம் - இங்கே பாவம் என்ற சொல் ஆகுபெயராய்ப் புண்ணிய பாவங்களுக்குக் காரணமான இருவினையை அதாவது வினை மலத்தைக் குறிக்கிறது. திரோத மலத்தினது வயப்பட்ட உலக வாழ்வு நெறியில் செய்யப்படுகிற புண்ணியமும் பாபத்தைப்போலவே பிறவிக்குக் காரணமாய் அருள் நெறியிலுள்ள புண்ணியத்தை நோக்கப் பாவம் ஆதலின் புண்ணிய பாவம் என்னாது பாவம் என்றார். கெடுத்து - ஆணவமலம், என்றும் உள்ள பொருள் ஆதலின் அதனை 'நீக்கி' என்றும், ஆகந்தக மலங்களாகிய வினை மாயை மலங்கள் முற்றிலும் அழியுந் தன்மையன ஆதலின் அவைகளைக் 'கெடுத்து' என்றும் கூறினார். தெளியாத சிந்தை தனைத் தெருட்டி - உயிருக்குச் சிந்தையானது உலக வாழ்வு நெறியில் உலகமே மெய்ப் பொருளென்னும் மயக்க அறிவு (விபரீத உணர்வு)க்கு இடமாகியும் மயக்க அறிவு நீங்குகிற பருவம் வந்தபொழுது சிவபெருமான் மும்மலங்களையும் அறுத்து அச்சிந்தையில் விளங்கித் தோன்றி சிவமே மெய்ப் பொருள் என்று தெளிவித்தற்கு இடமாகியும் இருத்தலின் "தெளியாத சிந்தைதனைத் தெருட்டி" என்றார்; தெருட்டி - பிறவினை. தெருள் - தன் வினை. "சிந்தைய தென்னச் சிவமென வேறில்லை" என்று திருமூலர் திருமந்திரத்திலும், சிந்தையுட் சிவமாய் என்று அடிகள் திருக்கச்சியேகம்பம் திருக்குறுந் தொகை 5-வது பாட்டிலும் உயிருக்குச் சிந்தையானது தெளிவு அறிவை அடையும் இடம் என்று கூறியருளினர்; மாணிக்கவாசக அடிகள் "சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி" என்றார். சிவலோக நெறி அறியச் சிந்தை தந்த - சிந்தை தெளிவுஅறிவை அடைதலும் பேரின்பம் பெறுதற்குச் சிவலோகம் அடைதலிலேயே நாட்டம் வைத்தலால் "சிவலோக நெறியறியச் சிந்தை தந்த" என்றார். சிந்தை தருதலாவது சிற்றின்ப வாழ்வை நினைந்து கொண்டிருந்த சிந்தையைப் பேரின்ப வாழ்வையே நினைக்கும்படியான சிந்தையாகமாறுதலை அடையச் செய்தல். அருளானை - சிவபெருமான் உயிர்கள் மேல் வைத்த பேரருளினால் அவைகளுடைய சிந்தையிலுள்ள மலம் அறுத்து சிந்தையைத் தெளிவித்துப் பேரின்பம் அடையச் செய்கின்றான் என்பார் 'அருளானை' என்றார். ஆதிமாதவத்துளானை - ஆதியான மாதவத்துளான் எனப் பிரித்து உரை செய்யப்பட்டது. உயிர்கள் தனுகரண புவனபோகங்களு

டன் வாழ்தற்கு இறைவன் காரணமாயிருத்தலின் அவைகளைச் சிந்தை தெளிவித்துச் சிவலோக நெறி அறியச் செய்தல் அவன் கடன் என்பார், ஆதியான் என்றும் அவ்வாறு செய்தல் இறைவனுக்குக் கடனாயினும் உயிர்களும் முயன்று மெய்ஞ்ஞானம் தரக்கூடிய தவம் செய்தல் வேண்டும் என்பார், மா தவத்துள்ளானை என்றும் கூறினர். ஆற்ற நாள் - நாள். இங்கே காலத்தைக் குறிக்கிறது - ஆற்ற நாள் - நீண்ட காலம்; போக்கினேன் - அடிகள் தாம் சமண சமயத்தில் வீணுகக் கழித்த காலத்தை எண்ணி அத்தன்மையில் பிறரும் அவ்வாறு காலங் கழியாது இறைவனை வழிபடல் வேண்டும் என்று அறிவுறுத்த வேண்டி இவ்வாறு கூறினர். ஏ - ஈற்றசை.

௩. அருளுரு நிலை

ஏவியிடர்க் கடலிடைப்பட் டிளைக்கின் றேனை
இப்பிறவி யறுத்தேற வாங்கி யாங்கே
கூவியம ருலகனைத்து முருவிப் போகக் குறியிலறு
குணத்தாண்டு கொண்டார் போலும்
தாவிமுதற் காவிரிநல் யமுனைகங்கை சரசுவதிபொற்
றாமரைபுட் கரணி தெண் ணீர்க்
கோவியொடு குமரிவரு தீர்த்தஞ் சூழ்ந்த
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்தனாரே. ௪௨

(உரை) தாவி வருகாவிரி நல்யமுனை சரசுவதி - பாய்ந்து ஓடுகின்ற காவிரி நல்ல யமுனை சரசுவதி; பொற்றாமரை புட்கரணி தெண்ணீர்க் கோவி ஒடுகுமரி தீர்த்தம் - பொற்றாமரை புட்கரணி தெளிந்த நீரையுடைய கோவி - கன்னியாகுமரி ஆகிய புண்ணிய தீர்த்தங்களெல்லாம்; சூழ்ந்த - சூழ்ந்திருக்கிற; குடந்தைக் கீழ்க்கோட்டத்து எங்கூத்தனார் - கும்பகோணத்தில் குடந்தைக் கீழ்க்கோட்டம் என்ற நாகேசுவர சுவாமி கோயிலில் திருமேனி கொண்டருளியிருக்கும் சிவபெருமான்; இப் பிறவி இடர்க்கடல் இடைப்பட்டு இளைக்கின்றேனை - இந்தப் பிறவித் துன்பமாகிய கடலின்கண் அகப்பட்டுத் தளர்ந்து கிடக்கின்றவனாகிய என்னை; அறுத்து - (அப்பிறவித் துன்பத்தினின்று நீங்கும்படி பிறவிப்பற்றை) ஒழித்து; ஏறஏவி - பிறவிக்கடலினின்று கரை ஏறி வரும்படி ஆணை செய்து; ஆங்கே வாங்கி - (அவ்வாணையின்படி நான் நடக்க) அப்படியே இழுத்து; அமர் உலகு அனைத்தும் உருவிப்போகக் கூவி - இருக்கின்ற உலகங்களை எல்லாம் ஊடுருவிச் சென்று அவைகளுக்கு அப்பால் வரும்படி என்னை அழைத்து; குறியில் அறுகுணத்து ஆண்டுகொண்டார் - யாதொரு முடிவிடமும் இல்லாத தன் வயத்தனாதல் முற்று முணர்தல் இயல்பாகவே பாசங்களினீங்குதல் முடிவிலாற்றலுடைமை பேரருளுடைமை வரம்பிலின்பமுடைமை ஆகிய ஆறு குணங்களையும் (அவரை நான் சேர்ந்தபொழுது) என்னிடம் பதியும்படி செய்து (என்னோடு அத்துவிதமாய்க் கலந்து தமது அடிமையாக ஆண்டுகொண்டார்.

(விளக்கம்) தாவி - தீர்த்தம் - புட்கரணி என்பது ஒரு தீர்த்தத்தின் பெயர் - வடமொழிச் சொல். காவிரி முதலிய தீர்த்தங்களெல்லாம் கும்பகோணத்திலுள்ள திருக்குளத் தீர்த்தத்திற் சேர்ந்திருப்பதை அத்தல புராணத்திற் காண்க. எல்லாத் தீர்த்தங்களும் சேர்ந்திருக்கும் திருக்குளத்தில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருதரம் மாமகம் நடப்பது பிரசித்தி. குடந்தைக் கீழ்க்கோட்டம் - குடந்தை - கும்பகோணம். கோட்டம் - கோயில். குடந்தைக் கீழ்க்கோட்டம் என்பது கும்பகோணத்திலுள்ள நாகேசுவரசுவாமி கோயில். கூத்தனார் - கூத்தன் - நடனம் செய்யும் பெருமான்.

கூத்தனார் - மரியாதைப் பன்மை. இடர்க்கடல் இடை - பிறவித்துன்பம் மிகுதியைக் குறிக்க இடர்க்கடல் என்றார். இடை ஏழாம் வேற்றுமை உருபு. இளைக்கின்றேனை உயர்திணை ஆண்பால் ஒருமைத்தெரிநிலை தன்மை நிகழ்கால வினையாலணையும் பெயர். ஏற--பிறவித் துன்பம் கடலுக்கு உவமிக்கப்பட்டதால் அதனைக்கடத்தலை(க்கரையினின் றும்)ஏறஎன்றார். வாங்கி-இழுத்து-கடற்கரை மேலிருக்கிற ஒருவன் கடலினுள்கப்பட்டுக் கரையேற முடியாது தயங்கும் வேறு ஒருவனைக் கரைமேல் விடுக்க ஒரு கை பிடித்து இழுத்தல்போல இறைவன் என்னைப் பிறவிக்கடலினின்றும் இழுத்து - வாங்கி என் பதனால் அடிகள் இறைவனது உதவியின்றிப் பிறவிக்கடலைக் கடக்கமுடியாது என்ற உண்மையைக் கூறினார். அமர் உலகு அனைத்தும் - அமர் - இருக்கின்ற உள்ளதாய (Existing) உலகு அனைத்தும் - பிரகிருதிமாயை அசுத்தமாயை சுத்தமாயை என்ற மூவகை மாயாபுவனங்கள் முற்றும் ஊடுருவிப்போக - கீழேயிருந்து ஒவ்வொரு புவனங்களையுங் கடந்து முடிவில் எல்லாப் புவனங்களையும் தாண்டிப்போக - புவனங் கள் பருமை நுண்மை பேதங்களின்றி (Different States of matter) இடபேதங்க ளுடையன அல்ல. பேரின்பம் அடைதலுக்கு எல்லாத் தத்துவங்களையும் புவனங்களை யும் கலைகளையும் கடந்து போகவேண்டிய திருத்தலின் உலகு அனைத்தும் என்றார். கூவி - "இருளைத் துரந்திட்டிங்கே வா என்றங்கே கூவும் - அருளைப் பெறுவாறுசைப் பட்டேன் கண்டா யம்மானே" என்று மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத்திற் கூறி யிருத்தல் காண்க. குறியில் அறுகுணத்து ஆண்டுகொண்டார் - அறுகுணங்கள் பத வுரையிற் கூறப்பட்டன. இந்த அறுகுணங்களும் எட்டுக் குணங்களாகவும் கூறப்படுத லுண்டு. இவை சத்து சித்து ஆனந்தம் (உண்மை அறிவு இன்பம்) என்ற மூன்று குணங்களிலும் அடங்கும். இக்குணங்கள் இறைவனை விட்டுப் பிரியாத குணங்கள். அவைகளைத் தாமசம் இராசதம் சாத்துவிகம் என்ற குறியுடைய மாயா குணங்களி னின்று வேறு எனக் குறித்தற்குக் குறியில் அறுகுணம் என்றார். இன்னும் இறைவனி னின்றும் வேறாகாத இக்குணங்கள் வேறொன்றிலும் அடங்காமல் தாமே தனித்து நிற்பன ஆதலாலும் குறியில் குணங்கள் எனப்பட்டன என்று கூறலாம். இறைவன் அடிகளை அறுகுணங்களால் ஆண்டுகொள்ளுதல் என்பது இறைவன் தமது வியாபகக் குணங்களில் அடிகளுடைய குணங்களை அடங்கும்படி செய்து அத்துவிதமாய்க் கலந்து நிற்றல் ஆகும். அவ்வாறு இறைவன் செய்யுங்கால் அடிகளிடத்தில் இறைவனுடைய குணங்கள் முற்றிலும் பதிந்து பேரின்பம் உண்டாகின்றது. அடிகள் இதைப் பேரின்ப நிலைப் பேற்றைத் திருமறுமாற்றத் திருத்தாண்டகம் 10-வது பாட்டில் "எண்குணத்து ளோமே" என்றார். கொண்டார்போலும் என்பதில் போலும் அசை. ஆதலின் உல கத்தீரே நீங்களும் இறைவனை வழிபடுங்கள் என்பது குறிப்பெச்சம்.

வெறியார் மலர்க்கொன்றை சூடினானை
    வெள்ளானை வந்திறைஞ்சும் வெண்காட்டானை
அறியா தடியே னகப்பட்டேனை
    அல்லற் கடல்நின்று மேறவாங்கி
நெறிதா னிதுவென்று காட்டினானை
    நிச்சலநலி பிணிகள் தீர்ப்பான் தன்னைப்
பொறியா டரவார்த்த புனிதன் தன்னைப்
    பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேன்நானே. ௪௫

(உரை) வெறியார் கொன்றை மலர் சூடினானை - நறுமணம் பொருந்திய கொன்றை மலர் மாலையைத் (தனது சென்னியின்மேல்) அணிந்தவனும்; வெள்ளானை வந்து இறைஞ்சும் வெண்காட்டானை - தேவேந்திரனுடைய வெள்ளை யானை வந்து வணங்கு

கின்ற திருவெண்காட்டி லிருக்கின்றவனும்; அறியாது - (பிறவித் துன்பம் இன்னது என்று) தெரியாமல்; அகப்பட்டேன் அடியேனை - பிறவிக் கடலிற் சிக்கிக்கொண்ட அடியவனாகிய என்னை; அல்லல் கடல்நின்று - அப்பிறவித் துன்பக் கடலினின்று; ஏறவாங்கி - கரை ஏறும் வண்ணம் இழுத்து; நெறி இது என்று காட்டினானை - (வீட்டின்பத்தைச் சேர்தற்கு வழி அறியாது திகைத்துக்கொண்டிருந்த எனக்கு) வழி இது என்று காட்டினவனும்; நிச்சல நலி பிணிகள் தீர்ப்பானை - எப்பொழுதும் என்னை வருத்துகின்ற மலநோய்களை ஒழிக்கிறவனும்; பொறி ஆடு அரவு ஆர்த்த புனிதனை - புள்ளிகளை உடைய ஆடுகின்ற பாம்பை(க் கச்சாக அரையிலே) கட்டின தூய்மையானவனும்; பொய்யிலியை - பிறப்பு இறப்பின்றி நித்தியமா யிருப்பவனும் ஆகிய சிவபெருமானை; நான் - நான்; பூந்துருத்திக் கண்டேன். திருப்பூந்துருத்தி என்கிற தலத்திலே திருக்கோயில் கொண்டருளி யிருப்பதைப் பார்த்தேன்.

(விளக்கம்) வெள்ளானை வந்து இறைஞ்சும் வெண்காட்டான் - தேவேந்திரனுடைய வெள்ளை யானை சாப நீக்கத்தின் பொருட்டுத் திருவெண்காட்டில் எழுந்தருளி யிருக்கின்ற சிவபெருமானை வணங்கிய வரலாற்றை அத்தலத்துப் புராணத்திற் காண்க. அகப்பட்டேன் அடியேனை - அடியேன் அகப்பட்டேன் என்பதை அகப்பட்டேன் அடியேன் என மாற்றுக. அகப்பட்டேன் உயர்திணை ஆண்பால் ஒருமைத் தன்மை. இறந்தகாலத் தெரிநிலை வினையாலணையும் பெயர். அடியேன் - அடிமை என்னும் பண்புப் பெயரடியாகப் பிறந்த குறிப்பு வினையாலணையும் பெயர். அல்லற் கடல் - மக்களது உலக வாழ்க்கையிலுள்ள துன்பம் மிகுதியாயிருத்தல்பற்றி அது கடல் என்று உருவகம் செய்யப்பட்டது. ஏறவாங்கி - உலக வாழ்க்கைத் துன்பம் அல்லற் கடலுக்கு உவமிக்கப்பட்டதால் உலக வாழ்க்கைப் பற்றை ஒழித்துப் பேரின்ப நெறிக்குச் செல்லுதலை கரை ஏறுதலுக்கு உவமித்தார். வாங்கி=இழுத்து - பிறப்பிறப்பு இல்லாத இறைவன் பிறவித் துன்பத்தில் அழுந்தும் என்னை இழுத்து. அடிகள் சமண் நெறியிலிருந்த தமக்கு இறைவன் சூலைநோயை ஏவித் திருவதிகைக்குவரும்படி 'செய்து' ஆண்டமையை 'வாங்கி' என்றார். இது நெறி என்று காட்டினானை - அடிகள் தாம் சமண சமயத்திலிருந்தபொழுது பேரின்பம் அடைதற்கு நெறி அறியாதிருந்துப் பின் அந்நெறி இறைவனாற் காட்டப்பட்டதால் இது நெறி என்று காட்டினானை என்றார். தான் - அசை. நிச்சல் - நித்தல் என்பதன் போலி. வைத்த என்பது வைச்ச என வருதல்போல. புனிதன் - மலரகிதன். பொய்யிலி - உண்மைப் பொருள். சத்துப்பொருள் பிறப்பு இறப்பின்றி நித்தமா யுள்ளான். தான் ஒன்றனையுஞ் சாராது தன்னை எல்லாப் பொருள்களும் சார்ந்து நிற்றற்கு ஆதாரமாயுள்ள தனிப் பொருள். தீர்ப்பான். உயர்திணை ஆண்பால் ஒருமைப்பாடாக எதிர் காலம் தெரிநிலை வினையாலணையும் பெயர். இயல்புபற்றி தீர்க்கின்றவன் எனக் கூறற்பாலது, தீர்ப்பான் எனக் கூறப்பட்டது. தீர்ப்பான் தன்னை - புனிதன் தன்னை என்பவைகளில் 'தன்' இரண்டும் அசை நிலைகள். கண்டேனே என்பதிலுள்ள ஏ - யும் அசை நிலை. ஆதலின் உலகத்தீரே நீங்களும் இறைவனை வழிபடுங்கள் என்பது குறிப்பெச்சம்.

குலங்கெடுத்துக் கோணீக்க வல்லான் றன்னைக்
குலவரையின் மடப்பாவை யிடப்பாலானை
மலங்கெடுத்து மாதீர்த்த மாட்டிக்கொண்ட
மறையவனைப் பிறைதவழ்செஞ் சடையினானைச்
சலங்கெடுத்துத் தயாமூல தன்ம மென்னுந்
தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க் கெல்லாம்
நலங்கொடுக்கு நம்பியை நள்ளாற் றானை
நானடியே னினைக்கப்பெற் றுய்ந்தவாறே. ௪௪

(உரை) தயாமூல தன்மம் என்னும் தத்துவத்தின் வழி நின்று - அருளாகிய காரண அறம் என்று கூறப்படும் உண்மைப்படி நிலைபெற்று நின்று ஒழுகி; தாழ்ந்தோர் எல்லார்க்கும் - தன்னை வணங்குகின்றவர்கள் எல்லாருக்கும்; குலம் கெடுத்து (உம்) - அவர்கள் குடும்பம், கோத்திரம், குடி, குலம், நாடு முதலிய மக்கள் இனங்களுக்குச் சேர்ந்தவர்கள் என்று தங்களை மதிக்கும் செருக்கை நீக்கியும்; கோள் நீக்க வல்லான் - அச்செருக்கினாற் கொள்ளப்படும் தீமைக் குணத்தை நீக்கும் வன்மை உடையவனாகியும்; குலவரையின் மடப்பாவை இடப்பாலான் - சிறந்த மலையாகிய இமயமலை அரசனது புத்திரியாகிய பார்வதியை (மணந்து அவளை)த் தனது இடது பக்கத்தில் வைத்தவனாகியும்; மலம் கெடுத்து (உம்) - உயிரினது அழுக்காகிய அவா மிகுதியை நீக்கியும்; மாதீர்த்தம் ஆட்டிக்கொண்ட மறையவனும் - மிக்க மாண்புடைய தீர்த்தம் என்று கூறப்படும் அருள் நீரிலே முழுகுவித்து அநுக்கிரகம் செய்த வேதாகமப் பொருளாயிருப்பவனாகியும்; பிறைதவழ் செஞ்சடையினானும் - மூன்றாம் பிறைச் சந்திரன் தங்கியிருக்கின்ற சிவந்த சடையை உடையவனாகியும்; சலம் கெடுத்து (உம்) வெகுளியை நீக்கியும்; நலம் கொடுக்கும் நள்ளாற்றான் நம்பியை - பேரின்பத்தை அருளும் திருநள்ளாற்றில் திருக்கோயில் கொண்டருளிய உத்தமனாகிய சிவபெருமானை; அடியேன் நான் - அவனுக்கு என்றும் மீளா அடிமையாயிருக்கும் நான்; நினைக்கப்பெற்று - மனதினால் நினைத்தும் (நாவினாலே துதித்தும் உடலினாலே தொழுதும்) வழிபாடு செய்யப் பெற்றதனால்; உய்ந்தஆறு (இது ஆகும்) - (பிறவித் துன்பத்தினின்றும் தப்பிப்) பிழைத்த வழி இது ஆகும்; ஆதலின் உலகத்தீரே நீங்களும் அவ்வாறு சிவபெருமானை வழிபட்டு உய்யுங்கள் என்பது குறிப்பெச்சம்.

(விளக்கம்) தயாமூல தன்மம் என்னும் தத்துவம் - தயாமூல தன்மம் என்ற சொற்றொடர் தயா ஆகிய மூலதன்மம் எனவிரியும். தயா = அருள்; வடமொழி. அது தயவு என்றும் தமிழில் வழங்கப்படும். மூலம் = காரணம். தன்மம் = அறம். மூலதன்மம் = காரண அறம். திரோதமலம் வயப்பட்ட உலக நெறியில் அருளின் காரியமாய் அருளின் வழி நடைபெறும் அறமானது வீட்டு நெறியில் அருளே அறமா யிருத்தலின், அடிகள் அருளாகிய காரண அறம் என்று பொருள்படும் தயாமூல தன்மம் என்றார். உலகநெறியில் அறமும் மறமும் உண்டு. வீட்டு நெறியில் மறம் என்பதே இல்லை. வீட்டு நெறியில் அருளே அறமா யிருத்தலின் ஒளவையார் பொருளின்பங்களுடன் அறமும் விட்டதே பேரின்ப வீடு என்று கூறினார். தத்துவம் = உண்மை. (Reality.) தாழ்ந்தோர்க்கு எல்லாம் - இது தாழ்ந்தோர் எல்லார்க்கும் என உரைநடை செய்து பொருளுரைக்கப்பட்டது. தாழ்தல் = வணங்குதல். உயிர்கள் சிவபெருமானை ஆண்டவன் ஆகவும், தங்களை அடிமைகளாகவும் கொண்டு தங்கள் அறிவு வேட்கை செயல்களை சிவபெருமானுடைய வியாபக அறிவு வேட்கை செயல்களுக்குள் அடங்கும்படி தன் முனைப்பின்றி நின்று வணங்குதல். குலம் கெடுத்து - குலம் = கூட்டம். அது இங்கே ஆகுபெயராய், குடும்பம், குடி, சாதி, குலம், நாடு முதலிய மக்கட்கூட்ட இனங்கள் பற்றி எழுகின்ற செருக்கைக் குறிக்கின்றது. இது அவிச்சை (மயக்க அறிவு) யால் உண்டாகிறது. கோள் என்பது கொள் என்ற முதனிலை நீண்ட தொழிற்பெயர். கோள் = கொள்ளப்படுவது. அது இங்கே ஆகுபெயராய்க் கொள்ளப்படும். தீமைக் குணத்தைக் குறிக்கிறது. தீமைக்குணம் என்பது குடும்ப முதலிய இனங்களுக்குப் புறம்பேயுள்ள மக்களிடத்தில் அருளுக்கு மாறான வேற்றுமையும் பகைமையும் கொள்ளுதல். ஒருவனுக்கு அவனைப்பற்றிய செருக்கைப் பார்க்கிலும் அவனுடைய குடும்ப முதலிய இனம் பற்றிய செருக்கு அவ் வினத்தார்களாற் போற்றப்பட்டு வலி உடையதா யிருத்தலின், அதனை அடிகள் இங்கே கூறினார். இக்காலத்து நமது நாட்டில் சாதி பற்றியும் மேற்கு நாடுகளில் வகுப்பு பற்றியும் நாடு பற்றியும் எழுகின்ற குலச்செருக்கா லுண்டாகும் கலக்கங்களும் துன்பங்களும் தெளிவு. கெடுத்து - நீங்கும்படி செய்து. குலங்கெடுத்து என்பதில் கெடுத்து என்பதற்குப்பின் உம் தொக்குநிற்பதை விரித்துப் பொருள் கூறப்பட்டது. அவ்வாறே மலங்கெடுத்து, சலங்கெடுத்து என்பவற்றிற்கும் கொள்க. குலவரை = சிறந்த மலை. மலைகளிற் சிறந்தது இமயமலை ஆதலின் அதனை அடிகள் குலவரை என்று கூறினார். குலவரை என்பது இங்கே அன்மொழித் தொகையாய் இமயமலைக்கு அரசனைக் குறிக்கிறது. குலவரையன் என்ற பாடமும் உண்டு.

அப்பொழுது அதற்குச் செம்பொருள் கொள்ளலாம். மடப்பாவை - மடப்பமுள்ள பாவைபோன்றவள் - பார்வதி. ‘குலவரையின் மடப்பாவை இடப்பாலான்’ என்பதனால் இறைவன் பேரருளுடையவன் என்பது குறிப்பிடப்பட்டது. மலம் கெடுத்து. மலம் - அழுக்கு. அது இங்கே அவாவைக் குறிக்கிறது. திருவள்ளுவ நாயனார், “தூய்மை யென்பதவா வின்மை” என்றார். 364-வது குறள். மாதீர்த்தம் ஆட்டிக்கொண்ட மறையவன் - மாதீர்த்தம் என்பது இங்கே அருளைக் குறிக்கிறது. எவ்வாறு நீரானது உடலினது அழுக்கைக் கழுவித் தூய்மை செய்கிறதோ, அவ்வாறே அருளானது உயிரினது அழுக்காகிய மலத்தை நீக்குதலின் அது நீருக்கு உவமிக்கப்பட்டது. சிவன் கோயில் திருவிழாவின் முடிவில் தீர்த்தம் கொடுத்தல் அருளல் ஆகிய தொழிலைக் குறித்தல் காண்க். ஆட்டிக்கொள்ளுதல் - அருளில் மூழ்குவித்தல். “அருளென்னுங்கிற்றீர்த்த நீராட்டிக் கொண்டாய்” என்று அடிகள் தனித்திருத்தாண்டகம் 8-வது பாட்டிற் கூறியருளினார். மறை என்ற சொல் வேதத்தையும் ஆகமத்தையும் உணர்த்துதலின் “மறையவன்” என்பதற்கு வேதாகமப் பொருளாயுள்ளவன் என்று உரை கூறப்பட்டது. வேதாகமங்களைக் கூறினவன் என்றும் பொருள் கூறலாம். “பிறைதவழ் செஞ்சடையன்” என்பதனால் இறைவனது பேரருள் குறிப்பிடப்பட்டது. சலம் கெடுத்து - சலம் - வெகுளி; கோபம். நம்பி - ஆண்மகனிற் சிறந்தவன்; உத்தமன். நினைக்கப்பெற்று - நினைக்கப் பெற்றதனால் என்று பொருள்பட்டுக் காரணப் பொருட்டாய் வந்தது. ‘நினைத்தல்’ என்பதற்கு இனங்களான நாவினாலே துதித்தலும் உடலினாலே தொழுதலும் கொள்ளப்பட்டன. உய்ந்த ஆறு (இது ஆகும்)—உய்தல்-பிறவித்துன்பத்தினின்றும் தப்பிப்பிழைத்தல். ஆறு - வழி. அவாய் நிலையால் இது ஆகும் என்ற சொற்கள் வருவித்துப் பொருள் உரைக்கப்பட்டது. ஏ - ஈற்றசை. இப்பாட்டில் ‘குலம் கெடுத்து’ என்பதனால் செருக்கு ஆகிய மயக்க நீக்கமும், (அவிச்சை) மலம் கெடுத்து என்பதனால் அவா நீக்கமும், சலம் கெடுத்து என்பதனால் வெகுளி நீக்கமும் கூறப்பட்டன. பிரகிருதிமாயாபுவன போக நுகர்ச்சிக்கு ஏதுக்களாயுள்ள அவிச்சை ஆங்காரம் அவா ஆசை வெகுளி என்னும் பஞ்சக் கிலேசங்களும் இங்கே கூறப்பட்ட மயக்கம் அவா (காமம்) வெகுளி என்ற மூன்றில் அடங்கும். (சிவஞான பாடியம் 158-ம் பக்கம் பார்க்க) இம்மூன்று குற்றங்களும் நீங்கினலொழிய உயிருக்கு உலக போகப்பற்று நீங்கிச் சிவபோகப் பெருவாழ்வு உண்டாகாதாகலின், அடிகள் இவற்றினது நீக்கத்தைக் கூறினர். “காமம் வெகுளி மயக்க மிவைகடிந்—தேமம் பிடித்திருந் தேனுக் கெறிமணி - யோமென்னு மோசையினுள்ளே யுறைவதோர் - தாம மதனைத் தலைப்பட்டவாறே” என்று திருமூலரும், “காமம் வெகுளி மயக்கமிவை மூன்றன் - நாமங் கெடக்கெடுநோய்” என்று திருவள்ளுவரும் கூறியருளினமை காண்க. தாழ்ந்தோருக்கெல்லாம் மலங் கெடுத்தும் வல்லானாகியும் இடப் பாலானாகியும் மலங் கெடுத்தும் மறையவனாகியும் சடையினனாகியும் சலங்கெடுத்தும் நலம் கொடுக்கும் நள்ளாற்றான் நம்பியை அடியேன் நான் நினைக்கப்பெற் றுய்ந்தவாறே என முடிபு செய்துகொள்க. இப்பாட்டில் வருகிற தன் ஐகளை அசை நிலைகளாகக் கொள்க. சிவபெருமான் உமாதேவியை இடப்பால் வைத்திருத்தலும் சடையினை உடைத்தாதலும் ஆன்மாக்களுக்கு அருள் செய்தற்குக் கொண்ட தடத்த உருவங்கள். திருநாவுக்கரசு அடிகள் இப்பாட்டில் சிவபெருமான் தன்னை அருளே தாரகமாகக் கொண்டு வழிபடுகிறவர்களுக்குக் காமம் வெகுளி மயக்கம் என்னும் மூன்று குற்றங்களையும் நீக்கிப் பேரின்ப வாழ்வை அளிப்பன் என்றும் அவ்வாறு தாம் அவனை வழிபட்டதால் பிறவித் துன்பம் நீங்கிப் பேரின்ப வாழ்வு பெற்றார் என்றும் கூறுகின்றார். இவ்வாறு அடிகள் தாம் அடைந்த அநுபவத்தைத் “தன்னைச் சரணென்று தானடைந்தேன” என்ற முதற் குறிப்பு உடைய தேவாரப்பாட்டினும் உலகத்தாருக்கு அறிவுறுத்தி யருளினார்.

நில்லாத நீர்சடைமேல் நிற்பித்தானை
நினையாஎன் நெஞ்சை நினைவித்தானை
கல்லா தனவெல்லாங் கற்பித்தானைக்
காணா தனவெல்லாங் காட்டினானைச்
சொல்லா தனவெல்லாஞ் சொல்லி யென்னைத்
தொடர்ந்திங் கடியேனை யாளாக்கொண்டு
பொல்லாவென் னோய்தீர்த்த புனிதன் தன்னைப்
புண்ணியனைப் பூந்துருத்திக் கண்டேன்நானே. ௬௫

(உரை) நில்லாத நீர்சடைமேல் நிற்பித்தானை - (பகீரதனது தவவலியால் விண்ணுலகிலிருந்து மண்ணுலகிற்கு வேகமாய்) வந்துகொண்டிருந்த கங்கை நீர்ப்பெருக்கை ஒரு துளியாக அடக்கித் தனது சடையின்மேல் நிற்கும்படி செய்த ஆற்றலுடையவனும்; நினையா என்னெஞ்சை நினைவித்தானை - (கட்டுக்காலத்தில் அறியாமையால்) தன்னை நினையாதிருந்த எனது நெஞ்சில் (கட்டு விடுதலைக் காலத்தில் தனது அருளொளி விளங்கும்படி செய்து) தன்னை இடையறாது நினைக்கும்படி செய்தவனும்; கல்லாதன எல்லாம் கற்பித்தானை - அவ்வாறு எனது நெஞ்சை நினைக்கும்படி செய்தமையால் நான் முன் கல்லாதிருந்த அருளினது பெருமையை இப்பொழுது கற்பித்தவனும்; காணாதனஎல்லாம் காட்டினானை - அவ்வாறு கற்பித்தமையால் கருவி அறிவினால் நான் முன் அறியக்கூடாத உண்மைகளை எல்லாம் இப்பொழுது அருளறிவால் அறியும்படி செய்தவனும்; சொல்லா தனஎல்லாம் சொல்லி - அவ்வாறு அறியச் செய்தமையால் நான் முன் நாவினாற் சொல்லத் தெரியாதன வெல்லாம் இப்பொழுது எனது நெஞ்சில் உணரும்படி செய்தவனும்; அடியேன் என்னை இங்கு தொடர்ந்து - என்றும் மீளா அடிமையாயுள்ள என்னை (ஆண்டானாகிய தான்) இவ்வுலகில் தொடர்ந்து வந்து தன்னை நான் தொடரும்படி செய்து; ஆளாக் கொண்டுஎன் பொல்லா நோய்தீர்த்த புனிதன் தன்னை - அடிமையாக ஆண்டு அருள் செய்து இதுவரை தன்னை அறியவொட்டாது என்னைப் பற்றிக்கொண்டு எல்லாத் துன்பங்களுக்கும் காரணமாயிருந்த ஆணவ மலத்தை என்னைவிட்டு நீங்கும்படி செய்த தூய்மையானவனும்; புண்ணியனை - அறவடிவினனுமாகிய சிவபெருமானை; நான் பூந்துருத்தி கண்டேன் - நான் திருப்பூந்துருத்தி என்ற தலத்திலே கண்டு வணங்கினேன்.

(விளக்கம்) நினையாஎன் நெஞ்சை நினைவித்தானை - நெஞ்சு, உள்ளம், சித்தம், சிந்தை, இதயம் என்பன ஒரு பொருட்சொற்கள். நெஞ்சானது கட்டுக்காலத்தில் ஐம்புலனைச் சார்ந்து கீழ்நோக்கி உலகத்தைப் பற்றுதற்கும், கட்டு விடுதலைக் காலத்தில் ஐம்புலனைச் சாராது மேல்நோக்கிச் சிவத்தைப் பற்றுதற்கும் நடுவான இடம் ஆதலின், 'நினையா என்னெஞ்சம் நினைவித்தானை' என்றார். சிந்தையிற் சிவம் (திருநாவுக்கரசர் தேவாரம்) 'சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி' (திருவாசகம்) சித்தந் திரிந்து சிவமயமாகியே (திருமந்திரம்) என்ற சொற்றொடர்கள் அக்கருத்தினைக் குறிக்கின்றன. நினையா - என்பதில் ஈற்றில் தகா உயிர் மெய்தொக்கி நிற்கிறது. கற்பித்தானைக் காட்டினானை சொல்லி தொடர்ந்து - நினைவித்தல், கற்பித்தல், காட்டுதல், சொல்லுவித்தல், தொடர்வித்தல் என்ற செயல்கள் ஒன்றன்பின் ஒன்றாய் முறையே எதுவும் பயனுமாய் வருகின்றன. உலகில் ஒருவன் கருவி அறிவைக் கொண்டு ஓர் உண்மையை அறிந்து அவ்வுண்மையைச் செயலில் நிகழ்த்துதற்கு ஓர் ஆசாரியன் அவனுக்கு அதைப்பற்றி நினைப்பூட்டுதலும், கற்பித்தலும், அறிவித்தலும், சொல்லுவித்தலும், செய்வித்தலும் நிகழ்த்துதலை நாம் காண்டல்போல் சிவபெருமான் கட்டுக் காலத்தில்

தனது அருளை அறியாதிருந்த உயிர்க்கு இருவினையொப்பு மலபரிபாகப் பருவம் வந்தபொழுது தனது அருளை இதுவரை மறந்திருந்த உயிர்க்கு அறிவித்தல் கற்பித்தல் சொல்லுவித்தல் செய்வித்தல் ஆகிய தொழில்களை அவ்வுயிரினிடத்தில் நிகழச் செய்கின்றான் என்பது கருத்து. சொல்லி என்பது இங்கே உணரும்படி செய்வது என்று பொருள்படும். அது இங்கே உணர்வித்து என்ற பிற வினைப்பொருளில் வந்தது. அவ்வாறே தொடர்ந்து என்ற சொல்லும் தொடர்வித்து என்ற பிற வினைப்பொருளில் வந்தது. புனிதன் தன்னை - புனிதன் - மலரகிதன். இயல்பாகவே பாசங்களினின்று நீங்கினவன். தன் - அசை. புண்ணியனை - உயிர்களுக்கு நலந்தரும் வினையையே செய்கின்றவன் அறவன். கண்டேன் - காணுதல் என்பது இங்கே அருளால் அறிதலைக் குறிக்கிறது. ஏ - ஈற்றசை.

ஆட்டு வித்தால் ஆர்ஒருவர் ஆடா தாரே
அடக்கு வித்தால் ஆர்ஒருவர் அடங்கா தாரே
ஓட்டு வித்தால் ஆர்ஒருவர் ஓடா தாரே
உருகு வித்தால் ஆர்ஒருவர் உருகா தாரே
பாட்டு வித்தால் ஆர்ஒருவர் பாடா தாரே
பணி வித்தால் ஆர்ஒருவர் பணியா தாரே
காட்டு வித்தால் ஆர்ஒருவர் காணா தாரே
காண்பாரார் கண்ணுத லாய்க் காட்டாக்காலே. ௪௧

(உரை) :—(கண்ணுதலாய்) காட்டுவித்தால் - சிவபெருமான் பருவம் வரப் பெற்ற அடியார்களுக்கு அகக்கண்ணைக் கொடுத்து அவர்கள் அந்த அகக்கண்ணால் தனது அருளையும் தன்னையும் அறியும்படி செய்தலாகிய காட்டும் உதவியையும் (அவர்களை விடயத்திற் பற்றும்படி செலுத்திச் சென்று விடயத்திலும் கலந்து நிற்றலாகிய காணும் உதவியையும்) செய்தால்; ஆர் ஒருவர் காணாதாரே - அவனை யார்தாம் அறியாதவர் (எல்லாரும் அறிவார் என்றபடி); கண்ணுதலாய்க் காட்டக்காலே காண்பார் ஆர் - அவன் அவ்வாறு தனது நெற்றிக் கண் மூலமாய்ப் பருவம் வந்த அடியார்களுடைய அகக்கண்ணைத் திறக்கும்படி செய்து காட்டும் உதவியும் காணும் உதவியும் செய்யாவிட்டால் யார்தாம் அவனை அறிவார் (ஒருவரும் அறியமாட்டார் என்றபடி). சிவபெருமான் அவ்வாறு பருவம் வந்த அடியார்களுக்குக் காட்டும் உதவியும் காணும் உதவியும் செய்தமையினால் அவர்கள் அவனை அருள் அறிவால் நேரே அறியும் வலி உடையராயினர் என்னும் உடன் பாட்டினாலும் அவன் அவ்வாறு காட்டும் உதவியும் காணும் உதவியும் செய்யாவிட்டால் ஒருவருமே அவனை அருள் அறிவால் நேரே அறியும் வலியுடையர்களாகார் என்னும் எதிர் மறையினாலும் சிவபெருமான் உதவியின்றிப் பருவம் வந்த அடியார்களும் அவனை அருள் அறிவால் அறிந்து உய்யமாட்டார்கள். (ஆதலின்); அடக்குவித்தால் ஆர் ஒருவ[illegible] அடங்காதார்?; சிவபெருமான் அவ்வாறுதான் ஆண்டவன் அவர்கள் தனக்கு என்றும் மீளா அடிமைகள் என்னும் அத்துவித உண்மையை அடியார்களுடைய அருள் அறிவுக்குக் காட்டாகி வேறாக நின்று அறிவித்தலாகிய காட்டும் உதவியைச் செய்தால் யார் தங்களுடைய அறிவு வேட்கை செயல்களை முறையே அவனுடைய அறிவு வேட்கை செயல்களுக்குள் அடங்கும்படி செய்து அடங்காதவர்?; உருகுவித்தால் ஆர் ஒருவர் உருகாதார் - சிவபெருமான் உயிருக்குக் கட்டு நிலை கட்டு விடுதலை நிலைகளிரண்டினும் எப்பொழுதும் அத்துவிதமாய் நின்று செய்து வரும் பேருதவியை அவன் அறிவித்த அருளறிவில் அறிந்த அடியார்கள் அவ்வுதவியை நினைந்து நினைந்து அகங்குழைந்து அவன் மீதூர்ந்த அன்பினால் உருகும்படி செய்தால் யார் உருகாதவர்?; பணிவித்தால் ஆர் ஒருவர் பணியாதார் - சிவபெருமான் அவ்வாறு

அடியார்களுடைய அறிவுக்குக் காட்டாகி நின்று காட்டுமுதவியைச் செய்வது மன்றி அவர்களை விடயப் பொருளாகிய தன்னைப் பற்றும்படி இழுத்துத் தன் வசமாக்கிப் பேரின்பமடையும்படி காணும் உதவியையும் செய்தால் யார் அவன் அருளையே தாரகமாகக் கருதி அவ்வருளில் ஒடுங்கி வணங்காதவர்?; ஆட்டுவித்தால் ஆர் ஒருவர் ஆடாதார் - மேலே கூறியவாறு அடங்கின அடியார்களை அந்த அகநிகழ்ச்சி காரணமாகச் சிவபெருமான் புறத்திலும் ஆடும்படி செய்தால் யார் ஆடாதவர்?; பாடுவித்தால் ஆர் ஒருவர் பாடாதார் - மேலே கூறியவாறு உருகின அடியார்களை அந்த அகநிகழ்ச்சி காரணமாகச் சிவபெருமான் புறத்திலும் பாடும்படி செய்தால் யார் பாடாதவர்?; ஓட்டுவித்தால் ஆர் ஒருவர் ஓடாதார் - மேலே கூறியவாறு வணங்கின அடியார்களை அந்த அகநிகழ்ச்சி காரணமாகச் சிவபெருமான் புறத்திலும் ஓடும்படி செய்தால் யார்தான் ஓடாதவர்?

(விளக்கம்) :—இப்பாட்டில் சிவபெருமான் பருவம் வரப் பெற்ற அடியார்களுக்குச் செய்து வரும் காட்டும் உதவி கூறப்பட்டது. இனம்பற்றி அதனோடு சேர்த்துக் கொள்ளப்படுகின்ற காணும் உதவியும் உரையிற் கூறப்பட்டது. காட்டும் உதவியும் காணும் உதவியும் முன்னைய தேவார உரைகளில் விளக்கப்பட்டன. காட்டும் உதவி காணும் உதவிகளின் பயனாக அடியார்களிடம் அறிவு வேட்கை செயல்களின் நிகழ்ச்சிகளாக முறையே அகத்தில் நிகழ்கிற அடங்குதல் உருகுதல் பணிதல்களும், புறத்தில் நிகழ்கிற ஆடுதல், பாடுதல், ஓடுதல்களும் கூறப்பட்டன. செய்யுளாதலின் முறை பிறழ்ந்து வைக்கப்பட்ட இந்த அகநிகழ்ச்சி புறநிகழ்ச்சிகள் முறைமையின் வைத்துப் பொருள் கூறப்பட்டன. அடங்குதல் உருகுதல் பணிதல் (வணங்குதல்) ஆகிய மூன்று அகநிகழ்ச்சிகள் முறையே ஒன்றுக்கொன்று ஏதுவும் பயனுமாயுள்ளன. "அயரா அன்பின் அரன்கழல் செலுமே (சிவஞான போதம் ௧௧.ம் சூத்திரம்) என்ற முறையில் அடியார்கள் தங்களுக்குச் சிவபெருமான் அருள் அறிவில் அறிவித்ததை அறிந்த அறிவால் அடங்கி, திருந்திய வேட்கையாகிய அன்பினால் அவனிடத்தில் அகங்குழைந்து உருகி, செயலினால் அவனிடம் சென்று இரண்டறக் கலந்து ஒடுங்கிப் பேரின்பமுறும் தன்மை இந்த அகநிகழ்ச்சிகளாற் கூறப்பட்டன. இம்மூன்று நிகழ்ச்சிகளும் அறிவு வேட்கைச் செயல்களின் நிகழ்ச்சிகளாக முறையே ஒன்றுக்கொன்று மிக்க சூக்குமமாகவுள்ளன. அடங்குதலைவிட உருகுதலும், உருகுதலைவிடப் பணிதலாகிய ஒடுங்கி இன்புறுதலும் சூக்குமமாக வுள்ளன. மலம் நீங்கப் பெற்ற அடியார்களுக்கு எடுத்த உடலுள்ளளவும் புறநிகழ்ச்சிகளும் நிகழும் ஆதலின், ஆடுதல், பாடுதல், ஓடுதல் ஆகிய புறநிகழ்ச்சிகளும் கூறப்பட்டன. ஆடுதல் அறிவின் நிகழ்ச்சியாகவும், பாடுதல் அன்பின் (வேட்கை) நிகழ்ச்சியாகவும், ஓடுதல் செயலின் நிகழ்ச்சியாகவும் முறையே ஒன்றுக்கொன்று ஏதுவும் பயனுமாயுள்ளன. இவைகள் முறையே ஒன்றுக்கொன்று மிக்க தூலமாயுள்ளன. மாணிக்கவாசக அடிகள் "ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கன்பிலை யென்புருகிப் - பாடுகின்றிலைப் பதைப்பதும் செய்கிலை" என்றும், தாயுமான அடிகள் "ஆடுவதும் பாடுவதும் ஆனந்தமாக நின்னைத் தேடுவதும் நின்னடியார் செய்கை பராபரமே" என்றும் இந்தப் புறநிகழ்ச்சிகளைக் கூறியருளினர். அகநிகழ்ச்சி நிகழ்வதாயினும் புறநிகழ்ச்சி நிகழ்வதாயினும் உள்ளும் புறமும் ஒரு தன்மைக் காட்சியராயுள்ள அடியார்கள் பசுபாசப் பொருள்களைப் பாராமல் பதி ஒன்றையே பார்த்திருந்து இன்புற்றிருப்பர். (கண்ணுதலாய்க்) காட்டுவித்தால் - காட்டாக்காலே என்ற சொல்லுக்கு முன்னேயுள்ள கண்ணுதலாய் என்ற அடைமொழி இதற்கும் சேர்த்துப் பொருள் கூறப்பட்டது. கண்ணுதலாய்க் காட்டுதல் என்பது பருவம் வந்த உயிர்க்கு சிவபெருமான் அதன் அகக்கண் (ஞானக்கண்) திறக்கும்படி செய்து அந்த அக்கண்ணால் அது தன்னை (சிவபெருமானை) அறியும்படி செய்தல் "இங்கவரன் ஞானக் கண்ணைக் கொடுத்தருளினாலே - சோதிக்குட் சோதியாய்த் தோன்றிடுவன்றானே" என்று சிவஞான சித்தியாரிற் கூறப்பட்டிருத்

தல் காண்க. கண்ணுதலாய்க் காட்டாக்காலே - காட்டாக்கால் - எதிர்மறை வினையெச்சம்; காட்டு-பகுதி; ஆ - எதிர்மறை விகுதி; கால் - வினையெச்ச விகுதி; ஏ - அசை. ஆர் ஒருவர் - ஆர் உயர்திணை முப்பாற்கும் பொதுவான 'யார்' என்ற வினாப் பெயரின் விகாரம்; ஒருவர் - ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவான உயர்திணைப் பெயர். ஆர் ஒருவர் - என்ற இரண்டு சொற்களும் ஒரு சொன்னீர்மைப்பட்டு "ஒருவரென்பது உயரிருபாற்றாய்ப், பன்மை வினைகொளும் பாங்கிற் றென்ப" என்ற நன்னூல் சூத்திர விதியால் காணுதார் என்றும், எதிர்மறை உயர்திணைப் பலர் பாற்படர்க்கை வினையாலணையும் பெயர்ச் சொல்லைப் பயனிலையாகக்கொண்டு முடிந்தது. இவ்வாறே பிற "ஆர் ஒருவர்" களுக்கும் கொள்க. ஆர் ஒருவர் காணுதார் என்ற வினு எல்லாரும் காண்பார் என்ற பொருள்பட நின்றது. இவ்வாறே ஆர்ஒருவர் அடங்காதார் முதலியவைகளுக்கும் கொள்க. காணுதார் முதலியவற்றிலுள்ள ஏக்கள் அசை நிலைகள்.

எல்லியும் பகலு மெல்லாந் துஞ்சுவோர்க் கொருவர் வந்து
புல்லிய மனத்துக் கோயில் புக்கனர் காம னென்னும்
வில்லிஐங் கணையி னுனை வெந்துக நோக்கி யிட்டார்
அல்லியம் பழன வேலி அதிகைவீ ரட்ட னுரே. ௪௭

(உரை) காமன் என்னும் (பெயரிய)—காமன் என்று சொல்லப்படும் பெயரை உடையவனும்; வில்லி - வில்லையுடையவனும்; ஐங்கணையினுனை - தாமரை, மா, அசோகு, முல்லை, நீலம் என்ற ஐந்து பூக்களையும் அவ்வில்லில் வைத்து எய்கின்ற அம்புகளாக உடையவனும் ஆகிய மன்மதனை; வெந்து உக நோக்கி இட்டார் - அவன் உடல் எரிந்து அழியும்படி தமது நெற்றிக் கண்ணினுலே தீ எழப் பார்த்தவரும்; அல்லியம் பழனவேலி - ஆம்பல் மலர்கள்பூக்கும் அழகிய வயல்களை வேலியாக உடைய; அதிகை வீரட்டனுர் - அதிகை வீரட்டானம் என்ற தலத்தில் திருக்கோயில் கொண்டருளி யிருப்பவரும் ஆகிய சிவபெருமான்; எல்லியும் பகலும் துஞ்சுவோர் ஒருவர்க்கு - (திரோதமலம் வயப்பட்ட கட்டுக்காலத்தில்) இரவும் பகலுமாகிய எல்லாக் காலங்களிலும் தமது அருளை மறந்து தூங்குகின்ற ஒருவரது; புல்லிய மனத்து - பிரியாமலிருக்கிற உள்ளத்தில்; கோயில் புக்கனர் - அவர் கட்டு நீங்கித் தமது அருளை சேரே அறியும் பருவம் வந்தகாலத்தில்) தாம் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலாக அருள் ஒளியுடன் விளங்கினுர்.

(விளக்கம்) காமன் என்னும் - என்னும் - என்று சொல்லப்படும் - தெரிநிலை வினைப் பெயரெச்சம்: என்னும் என்ற சொல்லுக்குப்பின் தொக்கி நின்ற பெயரிய என்றசொல் வருவித்துப் பொருளுரைக்கப்பட்டது. வெந்துஉக நோக்கி இட்டார் - என்பதனுல் தம்மைச் சேரும் அடியாரிடத்து மன்மதனைச் சேரவொட்டார் என்பது குறிப்பிடப்பட்டது. வெந்து உக - தீயினுல் வெந்து பொடியாய்ச்சிந்த; நோக்கி இட்டார் - நோக்கினுர்; இடுதுணைவினை. எல்லியும் பகலும் எல்லாம் துஞ்சுவோர்க்கு ஒருவர் - துஞ்சுவோர்க்கு ஒருவர் என்பதைத் துஞ்சுவோர் ஒருவர்க்கு என மாற்றி உரை நடை செய்க. ஒருவர்க்கு - வேற்றுமை மயக்கம். ஆரும் வேற்றுமைப் பொருளில் வந்தது. துஞ்சுதல் - திரோதமலம் வயப்பட்ட கட்டுக் காலத்தில் சிவபெருமானது அருளை முற்றிலும் மறந்திருத்தல்; ஒரு காலத்திலாவது நினைக்கமாட்டார் என்பார் எல்லியும் பகலு மெல்லாம் துஞ்சுவோர் ஒருவர் என்ருர். எல்லாம் - முழுவதும். புல்லியமனத்து - எப்பொழுதும் பிரியாதிருக்கிற மனம்; எல்லா உயிர்களுடைய உள்ளத்திலும் நீங்காது இருக்கின்றவர் என்பார் 'புல்லிய மனம்' என்ருர். புல்லிய என்ற சொல்லுக்கு இழிவான என்றும் பொருள் கூறலாம். "நிலவாத புலாலுடம்பில் நிற்ப தொத்து நிலையில்லா" உள்ளம் ஆதலின் அவ்வாறு கூறினுர் என்று கொள்ளுதலும் பொருந்தும்; மனம் + அத்து - மனத்து; அத்து - சாரியை; கோயில் புக்கனர் - புறத்தே திருக்கோயில்

கொண்டருளுந்தல் போல உள்ளத்தில் ஒளியாக விளங்கினர் - தாம் உயிருக்கு எக்காலத்திலும் உதவி செய்யும் பேருளைப் பருவம் வந்த உயிர்க்குத் தெரியும்படி செய்தார் என்பார் கோயில் புக்கனர் என்றார். தமது திருவருளை முற்றிலும் மறந்து உலக நுகர்வுகளை நுகர்ந்துகொண்டிருக்கின்ற திரோத மலம் வயப்பட்ட உயிருக்குச் சிவபெருமான் பருவம் சேரப்பெற்ற காலத்தில் அத்திருவருள் அதற்கு விளங்கும்படி அதனது உள்ளத்தில் ஒளியாக விளங்குகிறார் என்ற உண்மை இப்பாட்டிற் கூறப்பட்டது.

> துஞ்சும் போதுஞ் சுடர்விடு சோதியை
> நெஞ்சுள் நின்று நினைப்பிக்கும் நீதியை
> நஞ்சு கண்டத் தடக்கிய நம்பனை
> வஞ்சனேன் இனி நான்மறக் கிற்பனே. ௪௮

(உரை) :—துஞ்சும்போதும் - திரோதமலம் வயப்பட்டு உயிர் திருவருளை மறந்து தூங்குங் காலத்திலும்; (நெஞ்சுள் நின்று) சுடர்விடு சோதியை (அதனுடைய (உள்ளத்தில்) நிலையாக நின்று தமது அருளொளியை வீசிக்கொண்டிருக்கும் பேரொளிப் பொருளாயிருக்கிறவனும்; நெஞ்சுள் நின்று நினைப்பிக்கும் நீதியை - அதனுடைய உள்ளத்தில் நிலையாக நின்று நன்று இது தீது இது என்று நினைக்கும்படி செய்த நடுநிலைப் பொருளாயிருப்பவனும்; நஞ்சு கண்டத்து அடக்கிய நம்பனை - தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்த காலத்து அதனின்றெழுந்த நஞ்சை அவர்கள் உய்யும்படி தமது கண்டத்தில் அடக்கிவைத்த அன்பனாயிருக்கிறவனும் ஆகிய சிவபெருமானை; வஞ்சனேன் நான் - வஞ்சகனாகிய நான்; இனி - (சிவபெருமானால் ஆண்டருளப் பெற்ற காலத்துக்கு முன் அவனை நான் மறந்திருந்தது போல்) அவனால் ஆண்டருளப் பெற்று அவனது அருளையும் அவனையும் அறிந்த பின்னும்; மறக்கிற்பனே - என்னால் மறக்க முடியுமோ?

(விளக்கம்) :—துஞ்சும்போதும் - துஞ்சுதல் என்பது திரோத மலம் வயப்பட்டுத் திருவருளை முற்றிலும் மறந்திருத்தல். உம் இறந்தது தழீஇய எச்சம் அது திரோத மலம் நீங்கின காலத்தில் அவன் அதனுடைய உள்ளத்தில் ஒளி விளக்கம் செய்துகொண்டிருக்கிறது மல்லாமல்'' என்ற பொருளைக் குறிக்கின்றது. நெஞ்சுள் நின்று சுடர்விடு சோதி - நெஞ்சுள் நின்று என்ற சொற்றொடரை சுட்டுவிடு சோதியுடனும் நினைப்பிக்கும் நீதியுடனும் கூட்டுக. எப்பொழுதும் உயிரினுடைய நெஞ்சில் அருளொளி விளங்கினாலும் அது பிறவிக்குருடன் பகலவன் ஒளியை அறியாதிருத்தல் போலக் கட்டுநிலையில் அவ்வொளியை அறியமாட்டாது என்பார் "துஞ்சும்போதும் சுடர்விடு சோதியை" என்றார். நினைப்பிக்கும் நீதி - சிவபெருமான் நீதி உருவனாதலின் எல்லா உயிர்களுடைய உள்ளத்தில் நின்று நன்று தீது அறிவிக்கும் உள்ளச் சான்று (Conscience)ஆயிருக்கின்றான் என்பது கருத்து. "நீதிபலவும் தனதுருவாமென மிகுத்தவநீதியோடு தானமர்விடம்'' என்று திருஞானசம்பந்த அடிகள் திருவைகாத் தேவாரப் பதிகம் 4-வது பாட்டிற் கூறியருளினார். திருநாவுக்கரசு அடிகள் "நானேது மறியாதே என்னுள் வந்து நல்லனவுந் தீயனவுங் காட்டா நின்றாய்'' என்று திருவானைக்காத் திருத்தாண்டகம் 2-வது பாட்டிற் கூறியருளியதும் காண்க. நஞ்சுகண்டத்து அடக்கிய நம்பன் - நம்பன் என்ற சொல் நண்பன் என்பதன் மரூஉ; அன்பன். பகரத்துக்கு முன் ணகர வொற்றுக்குப் பதிலாக அதன் இனவெழுத்தாகிய மகர ஒற்றுவந்தது. வன்பு, வம்பு எனவும், மேன்பாடு மேம்பாடு எனவும் வருதல்காண்க. தண்பு என்ற சொல் உலக வழக்கில் தம்பு என வருதலுங் காண்க. வஞ்சனேன் - வஞ்சம் பொய். திருநாவுக்கரசு அடிகள் தாம் சிவபெருமானால் ஆட்கொள்ளப்பெற்ற காலத்திற்குமுன் பொய்ச்சமயமாகிய சமண சமயத்திலிருந்தமையை நினைந்து தம்மை 'வஞ்சனேன்' என்று கூறினார். இனி மறக்கிற்பனே - கில் - ஆற்றல் உணர்த்தும் ஒரு இடைநிலை; ஏ - வினா - எதிர்

மறைப்பொருள் தந்தது. சிவபெருமானால் ஆட்கொள்ளப்பெற்று அவனை நான் நினைப்பும் மறப்பும் அற்ற நிலையில் எப்பொழுதும் நினைத்துக்கொண்டிருக்கும் பொழுது நான் எவ்வாறு மறக்கமுடியும்? என்று அடிகள் கூறினார். "தன்னை அறிவித்துத் தான்றனைச் செய்தானைப் பின்னை மறத்தல் பிழை" என்ற சிவஞான போதம் கஉ-ம் சூத்திர வெண்பாக் கூறுதல் காண்க. இப்பாட்டில் 'சுடர்விடுஞ் சோதி' என்பதனால் சிவபெருமானுடைய சத்துத் தன்மையும் 'நினைப்பிக்கும் நீதி' என்பதனால் அவனுடைய சித்துத் தன்மையும் நஞ்சுகண்டத் தடக்கிய நம்பன் என்பதனால் அவனுடைய ஆநந்தத் தன்மையும் குறிப்பிடப்பட்டன. சச்சிதானந்தம் ஆகிய சிவபெருமான், தனது சத்துத் தன்மையினால் உயிருக்கு ஒளி விளங்கவும், தனது சித்துத் தன்மையினால் உயிருக்கு அறிவு விளங்கவும், தனது ஆநந்தத் தன்மையினால் உயிருக்கு ஆநந்தம் விளங்கவும் செய்கின்றான் என்ற உண்மை கூறப்பட்டது.

உயிரா வணமிருந் துற்று நோக்கி
உள்ளக் கிழியின் உரு வெழுதி
உயிரா வணஞ்செய் திட்டுன் கைத்தந்தால்
உணரப் படுவாரோ டொட்டிவாழ்தி
அயிரா வணமேறா தானே றேறி
அமரர்நா டாளாதே ஆரூராண்ட
அயிரா வணமே என்னம்மா னேநின்
அருட்கண்ணால் நோக்காதார் அல்லாதாரே. சக

(உரை) :—அயிராவண மேறாது = கைலாயத்திலுள்ள யானைமேலேறாது; ஆனேறேறி = எருதின்மேலேறி; அமரர் நாடாளாதே = விண்ணுலகத்தை ஆளுதல் செய்யாது; ஆரூராண்ட = திருவாரூரை யாளுதல் செய்த; ஐராவணமே = பிருதிவி மூர்த்தியே (நில உருவினனே); என்னம்மானே = எனது தந்தையே; உயிராவணமிருந்து = மூச்சு (வெளியே) விடாமலிருந்து, அதாவது, மூச்சு அடக்கி; உற்று நோக்கி = அசையாமற் பார்த்த வண்ணமே பார்த்துக்கொண்டிருந்து; உள்ளக்கிழியின் = உள்ளமாகிய துணியில்; உருவெழுதி = (உனது அடிகளுடைய) வடிவம் எழுதி; உயிராவணம் = உயிராகும் தன்மை உண்டாகும்படி; அதாவது, தன் முனைப்பு இல்லாதபடி; உன் கைத்தந்தால் = உன் வசம் ஒப்புவித்து விட்டால்; உணரப்படுவாரோடு = நீ உயிருடைய தன்வயமின்மையை அதற்கு உணர்த்தி உன்னால் அவ்வுண்மை உணரப்பட்ட உயிரோடு; ஒட்டி வாழ்தி = இரண்டற (உயிருடன்) சேர்ந்து கலந்து அதற்கு உன்னுடைய பேரின்பத்தைக் கொடுத்து வாழச் செய்கின்றாய்; நின்னருட் கண்ணால் நோக்காதார் = ஆதலால் இவ்வாறு நினது அருளை அடையாதவர்கள்; அல்லாதாரே = மக்களாய்ப் பிறந்தும் மக்கள் அல்லாதவர்களாவார்கள்.

(விளக்கம்) அயிராவணம் (ஐராவணம்) என்பது கைலாய மலையிலுள்ள இரண்டாயிரம் கொம்புகளுடைய ஒரு யானை. 'அயிராவணமேறாது ஆனேறேறி அமரர் நாடாளாதே ஆரூராண்ட' என்பது "வான்பழித் திம்மண் புகுந்து மனிதரை யாட்கொண்ட வள்ளல்" என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறிய வண்ணம் விண்ணுலகத்தை விட்டு இம் மண்ணுலகத்துக்கு வந்து உயிர்களை யாட்கொள்ளும் சிவபெருமானுடைய அருட்டிறம் கூறுகின்றது. உயிராவணம் - உயிர்த்தல் என்பது மூச்சுவிடுதல். உயிராவண்ணம் - மூச்சு விடாதபடியிருத்தல், இது பிராணயாமம் என்று கூறப்படும் யோகத்துக்குரிய எட்டு உறுப்புகளில் ஒன்று. உள்ளத்தை அடக்குதற்கு மூச்சடக்கம் (பிராணயாமம்) துணையாயிருக்கின்றது. "மன்மன மெங்குண்டு வாயுவுமங்குண்டு" என்றார் திருமூலர். உற்றுநோக்கி - என்பது நுண்ணிதாய்ப் பார்த்த வண்ணமே பார்த்துக்கொண்டிருத்தல்

அதாவது, மனதைப் பிறபொருளிற் செல்லாமற் றடுத்துத் தியானப் பொருளைப் பார்த்துக்கொண் டிருக்கும்படி நிறுத்துதல். உணரப்படுவார் - ஒருவர் தியானத்தால் சிவபெருமானுடன் ஒன்றித் தன்வய மழிந்தபொழுது அவர், தானென்ன ஒரு முதலாக நின்று உணராததால் உணரப்படுவாரோடு என்று அடிகள் செயப்பாட்டு வினையாற் கூறினார். ஒட்டிவாழ்தி - ஒட்டிவாழ்தல்; சிவபெருமானுடன் இரண்டற (அத்துவித மாய்)க் கலந்து அவனது திருவடி இன்பத்தை நுகர்தல். உலகிலுள்ள சில நெறிகள் போல் சிவநெறியானது அறிவு நூலில் வெளிப்படுத்தப்பட்ட உண்மைகளை நம்பி ஒழுகுகிற வெறுங்கொள்கை நெறி (Theoretical Religion) அன்று. சைவர் ஒருவர் அருள் நூல்களைக் கற்று ஐயந்திரிபு அறும்படி தெரிந்தார் வாயிற்கேட்டும் சிந்தித்தும், பின் பக்குவம் வந்தகாலை இறைவனால் அதிட்டிக்கப்பெற்ற குரவனுடைய உபதேச உண்மை மொழியைக் கேட்டும், கேட்ட உண்மையைத் தனது உள்ளத்தில் பற்றும் படிச் சிந்தித்தும்; சிந்தித்த உண்மையைத் தன்னுள்ளே தானாகத் தெளிந்தும், தெளிந்த உண்மையை நிட்டைகூடி இறைவனுடன் இரண்டற ஒன்றிப் பேரின்பம் நுகரச்செய்யும் நடைநெறி (Practical Religion) இந்நடைச் சிவநெறி (Practical Saivaism) சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் முறையே ஒன்றுக்கொன்று மேற்பட்ட நாலுநிலைகளை உடையது. ஒவ்வொரு நிலையிலும்நாலு நிலைகள் உள. இந்தஅருமைத் தேவாரப்பாட்டில் திருநாவுக்கரசு அடிகள் யோகத்தைக் கூறுகின்றார்.

அருந்துணையை அடியார்தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை யகன்ஞாலத் தகத்துள்தோன்றி
வருந்துணையுஞ் சுற்றமும் பற்றும் விட்டு
வான்புலன் களகத்தடக்கி மடவாரோடும்
பொருந்தணை மேல்வரும் பயனைப்போக மாற்றிப்
பொதுநீக்கித் தனைநினைய வல்லோர்க் கென்றும்
பெருந் துணையைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவாநாளே. ௫0

(உரை) :—அருந்துணையை = (அடியாரல்லாதார்க்குத்) துணையல்லாதவனா யிருப்பவனும்; அடியார்தம் அல்லல் தீர்க்கும் அருமருந்தை—அடியார்களுடைய துன்பங்களாகிய பிறவி நோயை நீக்குதற்குப் பெறுதற்கு அரிய மருந்து போன்றிருப்பவனும்; அகல் ஞாலத்து அகத்துள் = பரந்த நில உலகத்தினிடத்து; தோன்றி வரும் துணையும் சுற்றமும் பற்றும் விட்டு = உண்டாகி யிருக்கின்ற மனைவி மக்கள் உடன் பிறந்தார் முதலிய உறவினர்கள் பற்றும் ஏனைய உறவினர்கள் பற்றும் உலகப் பொருட்பற்றும் நீங்கி; வான்புலன்கள் அகத்து அடக்கி = வலியுள்ள ஐம்புலன்களையும் வெளியே விடயங்களிற் செல்லவொட்டாது தடுத்து; மடவாரோடும் பொருந்து அணைமேல் வரும் பயனைப் போக மாற்றி = பெண்களோடும் சேர்கின்ற படுக்கை மேலிருந்து நுகரும் சிற்றின்ப நுகர்ச்சியை (தமது உள்ளத்தை) விட்டுப் போகும்படி ஒழித்து; பொது நீக்கி = (சிவபெருமானை அவன்) உலகில் விளங்கும் பொது இயல்பில் வைத்து வழிபடுதலை நீக்கி; தனை நினைய வல்லோர்க்கு = அவனது உண்மை நிலையில் வைத்து நினைத்துச் சிறப்பாக வழிபடும் ஆற்றலுடையவர்களுக்கு; பெருந்துணையை = ஒப்பற்றதோர் பெரிய துணையாயிருப்பவனும்; பெரும்பற்றப் புலியூரானை = திருப்பெரும்பற்றப் புலியூரில் எழுந்தருளி யிருப்பவனும் ஆகிய சிவபெருமானைப் பற்றி; பேசாத நாளெல்லாம் = எந்த நாட்களில் நாம் (அடியார்கள்) பேசவில்லையோ அந்த நாட்களெல்லாம்; பிறவாநாளே = (தோன்றின நாட்களாயிருந்தாலும்) தோன்றாது வீணே பயனின்றிக் கழிந்த நாட்களே யாகும்.

௬. அறியுநெறி

புலன்களைப் போகநீக்கிப் புந்தியை யொருங்கவைத்து
இனங்களைப் போகநின் றிரண்டையும் நீக்கியொன்றாய்
மலங்களை மாற்றவல்லார் மனத்தினுட் போகமாகிச்
சினங்களைக் களைவர்போலுந் திருப்பயற் றூரனாரே. ௫௧

(உரை) திருப்பயற்றூரன் - திருப்பயற்றூர் என்னும் தலத்தில் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கின்ற சிவபெருமான்; புலன்களைப் போகநீக்கி (உம்) - தங்கள் ஞானேந்திரியங்கள் கன்மேந்திரியங்களை விடயங்களிற் செல்லவொட்டாமற் றடுத்தும்; புந்தியை ஒருங்கவைத்து (உம்) - புத்தி, இந்திரியங்களோடும் இந்திரியங்கள் விடயங்களோடும் சென்று விடய ஞானம் உண்டாகாதபடி தங்களிடத்தில் (ஆன்மாவினிடம்) புத்தியானது ஒடுங்கும்படி செய்தும்; இனங்களைப் போகநின்று (உம்) - அவ்வாறு புத்தி ஒடுங்கியதால் அப்புத்தியிலிருந்து காரியப்பட்டு அதற்கு இனங்களாயுள்ள தன்மம் (அறம்) ஞானம் (அறிவு) வைராக்கியம் (வெறுப்பு) ஐசுவரியம் (செல்வம்) அதன்மம் (மறம்) அஞ்ஞானம் (அறியாமை) அவைராக்கியம் (விருப்பு) அனைசுவரியம் (வறுமை) ஆகிய எட்டுப் பாவகங்களும் அப்பாவகங்களாகிய ஐம்பது சித்திகளும் அவற்றின் விரிவுகளுமாகிய எல்லாம் தங்களைவிட்டுப் போகும்படி செய்து அவற்றாற் றாக்கப்படாது நிலைத்து நின்றும்; இரண்டையும் நீக்கி (உம்) - இங்ஙனம் தங்களிடம் ஒடுங்கிய தத்துவங்களாலாகிய கருவி அறிவையும் (பாசஞானத்தையும்) கருவி அறிவு நீங்கிய பொழுது உயிர் அறிவு முனைத்து நில்லாதபடி அவ்வுயிர் அறிவையும் (பசுஞானத்தையும்) தங்களிடமிருந்து பற்றற நீக்கி; ஒன்றாய் (உம்) - அங்ஙனம் கருவி அறிவும் உயிர் அறிவுமாகிய இரண்டும் நீங்கியபொழுது காணும் அருட்பேரொளி அறிவுக்குள் அடங்கி அதனுடன் வேறற ஒன்றாகி (ஏகமாகி)யும்; மலங்களை மாற்றவல்லார் - ஆணவம் கன்மம் மாயை என்னும் மூன்று மலங்களையும் நீக்கவல்ல அடியார்களுடைய; மனத்தினுள் போகம்ஆகி - தெள்ளறிவு விளங்கப் பெற்ற தூய உள்ளத்தில் பேரின்பப் பொருளாய் நிறைந்தும்; சினங்களை மாற்றவல்லார் - பிராரத்த வினைப் பயனாகத் துன்பம் நுகர நேரின் அத்துன்பத்தின் மேல் வெறுப்புக்கொண்டு உள்ளத்தில் எழக் கடவதாகிய எதிர்ப்புகளை (reaction) ஒழிக்கவல்லவர் ஆவர்.

(விளக்கம்) திருப்பயற்றூரனார் மலங்களை மாற்றவல்லார் மனத்தினுட் போகமாகிச் சினங்களைக் களைவர் என்று பொருள் முடிபு செய்க. அடியார்கள் எங்ஙனம் மலங்களை மாற்றவல்லார் என்பதற்குப் புலன்களைப் போக நீக்கியும் புந்தியை ஒருங்க வைத்தும் இனங்களைப் போகநின்றும் இரண்டையும் நீக்கியும் ஒன்றாயும் மலங்களை மாற்றவல்லார் என்றும் பொருள் முடிபு செய்க. போக, நீக்க, ஒருங்கவைத்து, போகநின்று, நீக்கி, ஒன்றாய் என்ற வினையெச்சங்கள் மாற்ற என்ற வினை எச்சத்தைக் கொண்டு முடிந்தன. மாற்ற என்ற வினை யெச்சம், வல்லார் என்ற குறிப்பு வினையாலணையும் பெயரில் அடங்கி யிருக்கிற வல்லர் என்ற குறிப்பு வினை முற்றைக் கொண்டு முடிந்தது. புலன்களைப் போகநீக்க - புலன்கள் - இந்திரியங்கள் தங்கும் இடங்கள். அது இங்கே ஆகு பெயராய் இந்திரியங்களைக் குறிக்கின்றது. இனம்பற்றி இந்திரியங்களுக்கு உடனாய் நின்று துணை செய்யும் தூல தன்மாத்திரைகளும் சூக்கும தன் மாத்திரைகளுங் கொள்க. புலன்களை என்ற சொல்லைப் புலன்களினது என்ற ஆறாம் வேற்றுமைக்கு உருபு மயக்கமாகக் கொண்டும் இந்திரியங்களது போகம் அதாவது இந்திரியங்களால் நுகரப்படும் விடய போகங்களை நீக்கி என்று பொருள் கூறினும் பொருந்தும். நீக்கி என்ற வினை

யெச்சத்திற்குப் பின் தொக்கி நிற்கிற உம் விரித்துப் பொருள் உரைக்கப்பட்டது. அவ்வாறே பின் வருகிற வைத்து, நின்று, நீக்கு, ஒன்றாய் என்ற வினை எச்சங்களுக்கும் கொள்க. புந்தியில் ஒருங்க வைத்து (உம்) - மனம் அகங்காரம் புத்தி சித்தம் ஆகிய அந்தக் கரணங்கள் ஞானேந்திரியங்கள் கன்மேந்திரியங்கள் சூக்கும தன் மாத்திரைகள் தூல தன் மாத்திரைகள் பும் சத்துவ மலத்தோடு கூடிய புருடனாகிய ஆன்மாவுக்கு உலக விடயபோக நுகர்ச்சிகளுக்கு இடமாக (போக்கியமாக) உள்ளன. ஆன்மாவுக்கு விடய ஞானம் பொதுமையின் நிர்விகற்பகக் காட்சியாய் விளங்குதற்கு வித்தியா தத்துவத்திலுள்ள வித்தை கருவியாயுள்ளது. விடய ஞானம் சிறப்பு வகையில் பெயர் சாதி முதலியவற்றால் நிச்சயிக்கப்பட்ட சவிகற்பக் காட்சியாய் விளங்குதற்கு புத்தி கருவியாயுள்ளது. சாத்துவிகக் குணத்தான் மேற்பட்டு விளங்கும் புத்தியானது ஆன்மாவிற்கு எதிர் முகமாய வழி கண்ணாடியின் நிழல் போல அதன்கண் எதிர் விம்பமாய் விடய ஞானம் உண்டாகின்றது. நிச்சயித்த பின் புத்தியானது அவ்வவ்விடய வடிவினதாய்ப் பரிணமித்துத் தோன்றும் ஞானமாய் விளங்குதற்கு ஆன்மாவுக்கு அடுத்த புலனாதற்கு கருவியாய் அமைந்துள்ளது ஆதலின் அது புருடனால் செய்யப்படும் புண்ணிய பாவங்கட்கும் அப்புண்ணிய பாவங்களாலாகிய தன்மை ஞானம் வைராக்கியம் ஐசுவரியம் அதர்மம் அஞ்ஞானம் அவைராக்கியம் அனைசுவரியம் என்னும் எட்டுப் பாவகங்களுக்கும் அப்பாவகங்களாலாகிய சித்தி முதலியவைகளுக்கும் பற்றுக்கோடாயுள்ளது. இவை எல்லாம் விடய ஞானத்துக்கு ஏதுவாயுள்ளன. இதன் விரிவை சிவஞான பாடியத்தில் காண்க. இவ்வாறு விடய ஞானமாகிய மயக்க அறிவு விளங்குதற்கு புத்தி சிறந்த கருவியாயிருத்தலின் அது முதலாவது தனது சேட்டையற்று ஆன்மாவின்கண் ஒடுங்கினாலொழிய விடய ஞானமாகிய பாச ஞானம் ஒழியாது; பதிஞானத்துக்கு ஏதுவாகிய தெள்ளறிவு விளங்குதற்கு இடமுண்டாகாது, ஆதலின் புந்தியை ஒருங்க வைத்து என்றார். புந்தி ஒருங்குதலாவது புத்தி, மனம், அகங்காரம், இந்திரியங்களோடும் உலக விடயங்களிற் சென்று விடய ஞானமாய்ப் பரிணமியாதபடி ஆன்மாவின்கண் ஒடுங்குதல் ஆகும். இனங்களைப் போக நின்று - இனங்கள் என்பன இன்ன என்பது பதவுரையில் விளக்கப்பட்டது. "இலங்களை" என்னும் பாடமும் சில பிரதிகளில் உள்ளது. அது பொருத்தமான பாடம் அன்று. போக நின்று என்பது காரண காரியப் பொருளில் வந்தது இனங்கள் போதலின் பயனாக (ஆன்மாவின்கண்) நிலைத்து நின்று என்று பொருள் கொள்க. இரண்டையும் நீக்கு (உம்) - இரண்டு என்பன மேலே கூறப்பட்ட உலக விடய ஞானமாகிய பாச ஞானமும் பசு ஞானமும். தத்துவங்கள் சடப் பொருள்கள் ஆதலின் அவை இறைவனால் இயக்கப்பட்டாலன்றித் தாமாக இயங்கா என்று கண்டு அவைகளை ஆன்மா தன்னிடமிருந்து நீங்கிய பின் தோன்றுவதாகிய பசுஞானமும் நீங்கினால் அன்றிப் பதிஞானத்துக்கு ஏதுவாகிய அருளொளி விளக்கமாகிய தெள்ளறிவு விளங்காது, ஆதலின் இரண்டையும் நீக்கி என்றார். இறைவன் ஆன்மாவுக்கு வேறாய் நின்று அறிவித்தலும் உடனாய் நின்று அறிதலும் செய்யாவிடின், ஆன்மாவுக்கு அறிவு விளங்காது என்ற உண்மையை அறிதல் ஆன்மா தன் முனைப்பு நீங்கி ஆன்ம சுத்தி அடைதலுக்கு ஏதுவாயுள்ளது. ஆன்ம சுத்தியில் சிவ தரிசனம் நிகழும். ஒன்றாய் - ஆகி என்பது ஆய் எனக்குறுகி நின்றது—சிவத்தினுடன் வேறற 'ஏகமாகி; இது ஏகமாகி இறைபணி நிற்றலைக் குறிக்கிறது. மலங்களை மாற்றவல்லார்—"ஏகமாகி இறைபணி நிற்க மலமாயை தன்னொடும் வல்வினை இன்று" என்ற கருத்துக் கூறப்பட்டது. மனத்திலும் போகம் ஆகி - மனம் என்பது இங்கே பாசஞானம் பசுஞானங்கள் ஆகிய அழுக்குகள் நீங்கித் தூய்மை அடைந்த உள்ளம் அல்லது சிந்தை; இந்த மனதை அடிகள் 'காயமே கோயிலாக' என்ற தேவாரப்பாட்டில் 'மனமணி' என்று கூறுகின்றார். "ஏகமாய் நின்றே இணை அடிகள் ஒன்று உணரப் போகமாய்த்தான் விளைந்த பொற்

பிறான்" என்று சிவஞான போதம் 11 ம் சூத்திர வெண்பா கூறுதல் காண்க. சினங்களை மாற்றவல்லார் - சினம் என்ற சொல் இங்கே பிராரத்துவ வினையின் பயனாகத் துன்பம் நுகர நேரின் அதனை உள்ளத்திலுள்ளுஞ் சினங்கொண்டு வெறுத்து எதிர்த்தல் என்ற பொருளில் வழங்கப்பட்டது. இந்த எதிர்ப்பு (reaction) உள்ளத்தில் எழும் சினம் காரணமாக உண்டாதலின் அது சினம் எனக் கூறப்பட்டது. எதிர்ப்பு என்ற காரியம் சினம் என்ற காரணமாகக் கூறப்பட்டது. இந்த எதிர்ப்புகள் பலவாறாக எழுதலின் சினங்கள் எனப் பன்மையாற் கூறப்பட்டது. திருஞானசம்பந்த அடிகள் சினம்மலி அறுபகை என்று காமம் குரோதம் மோகம் லோபம் மதம் மாற்சரியம் என்னும் ஆறு குற்றங்களிலும் சினம் மலிந்திருப்பதாகக் கூறுதல் காண்க. (திருச்சிவபுரம் பதிகம் 5-வது பாட்டு) சிவபெருமான் தாம் அடியார்களுக்கு அருளிய பதிஞானத்தினால் அவர்களது உள்ளத்தில் சிவபோகமாய் விளங்குதலினால் விருப்பு வெறுப்புக்களால் உண்டாகும் எதிர்ப்புகள் எழமாட்டா என்பது கருத்து. உள்ளத்தில் புறம் நோக்கும் எதிர்ப்புகள் முற்றிலும் நீங்கினாலன்றி அதனிடத்தில் துவந்துவ மொழிந்த சிவபோக உணர்வு உண்டாகமாட்டாது.

பொறிப் புலன்களைப் போக்கறுத் துள்ளத்தை
நெறிப்படுத்து நினைந்தவர் சிந்தையுள்
அறிப்புறு மமுதாயவ னேகம்பம்
குறிப்பினாற் சென்று கூடித் தொழுதுமே. ௫௨

(உரை) உள்ளத்தைப் பொறிப்புலன்களைப் போக்கு அறுத்து - உள்ளத்தை ஐந்து பொறிகளின் வழியாய் விடயங்களிடத்துச் செல்லுதலை அறவே ஒழித்து; நெறிப்படுத்து - சிவபெருமானிடத்துச் செல்லும் வழியிற் பொருந்தும்படி செய்து; நினைந்தவர் சிந்தையுள் - அவனையே எப்பொழுதும் நினைத்துக்கொண்டிருக்கிறவாது தூய உள்ளத்தில்; அறிப்புறும் அமுதாயவன் - (பேரின்ப) உணர்வை அடைவிக்கும் அமுது போன்று பேரின்பப் பொருளாயிருக்கிறவனாகிய; ஏகம்பம் - திருக்கச்சியில் (காஞ்சிபுரத்தில்) கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கிற ஏகம்பநாதனை; குறிப்பினாற் கூடிச் சென்று - அவனுடைய திருவடிகளைச் சேர்தல் என்னும் மனதால் உணரப்படும் ஒரே கருத்துடன் (அடியார்களாகிய நாமெல்லோரும்) சேர்ந்து; தொழுதும் - வணங்குவோம், (வம்மின்.)

(விளக்கம்) பொறிப்புலன்களை பொறி - இந்திரியங்கள்; புலன்களை - விடயங்களிடத்து; வேற்றுமை உருபு மயக்கம். போக்கு அறுத்து - உலக நெறியை முற்றிலும் விட்டு; போக்கு அறுத்து - முதனிலைத் தொழிற் பெயர்; செல்லுதல்; படுதல். பொருந்தல் படுத்தல் பிறவினை; பொருந்தும்படி செய்தல் நெறிப்படுத்து - வீட்டு நெறியிற் செலுத்தி; நெறிப் படுத்து என்ற இரண்டு சொற்கள் ஒரு சொல் நீர்மைப்பட்டு செய்து என்னும் வினையெச்சவாய்ப்பாட்டு வினைமுற்றாய் நினைந்தவா என்ற வினையாலணையும் பெயர்ச் சொல்லில் அடங்கியிருக்கிற நினைந்து என்ற வினையெச்சம்கொண்டு முடிந்தது. சிந்தை - உள்ளம், சிந்தை என்பன ஒரு பொருட் சொற்கள். அறிப்பு உறும் அமுது ஆயவன் - அறிப்பு - உணர்வு. உறும் - அடைவிக்கும். பிறவினைப் பொருளில் வந்தது - அமுது ஆயவன் - பிறப்பு இறப்புக்களை நீக்கும் இன்பப் பொருளாயுள்ளவன். 'மத்தகஞ் சேர்தனி நோக்கினன் வாக்கிறந்தூறமுதே யொத்தகஞ் சேர்ந்தென்னை யுய்யநின்றோன்" என்று திருக்கோவையார் 106-வது பாட்டு கூறுதல் காண்க. முன்னைய 51-வது பாட்டில் 'மனத்தினுட் போகமாகி' என்பதும், இப்பாட்டில் 'அறிப்புறும் அமுதாயவன்' என்பதும் ஒரே பொருளன. 51-வது பாட்டில் 'மனத்தினுட் போகமாகி' என்பதற்குக் கூறிய கருத்துக்களை இதற்கும் கொள்க.

குறிப்பு எனப்படுவது மனத்தாற் குறித்து உணரப்படுவது. தொல்காப்பியம் சொல்லதிகாரம் 297-வது சூத்திரம் சேனாவரையர் உரை தொழுதும் - தும் - எதிர்காலம் காட்டும் விகுதி வம்மின் - என்பது குறிப்பெச்சம் "வம்மின் அடியீர் நாண்மலரிட்டுத் தொழுதுய்ய" என்று திருஞானசம்பந்த அடிகள் திருவீழிமிழலைத் தேவாரம் 3-வது பாட்டிற் கூறுதல் காண்க. நாங்கள் தோன்றா எழுவாய் தொழுதும் - பயனில்லா உலக நெறியில் விடய போக நுகர்ச்சியை முற்றிலும் விட்டு வீட்டுநெறியில் சிவபோக நுகர்ச்சியை நாடி சிவபெருமானை ஒருநெறிய உணர்வினாற்றொழும் அடியார்களது தூய உள்ளத்தில் சிவபெருமான் பேரின்ப உணர்வுப் பொருளாயிருப்பன் என்ற உண்மை இப்பாட்டிற் கூறப்பட்டது.

செஞ்சுடர்ச் சோதிபவளத் திரடிகழ் முத்தனைய
நஞ்சணிகண் டனல்லூருறை நம்பனைநா னொருநாள்
துஞ்சிடைக்கண்டு கனவின்றலைத் தொழுதேற் கவன்றான்
நெஞ்சிடை நின்றகலான் பலகாலமு நின்றனனே. ௫௩

(உரை) செஞ்சுடர்ச் சோதிப் பவளத்திரள் - சிவப்பு நிறமான தீயின்கண்ணுள்ள ஒளிபோல விளங்கும் பவளத் தொகுதியையும்; திகழ் முத்து(த்திரள்) - ஒளி விளங்குகின்ற முத்துக்களின் தொகுதியையும்; அனைய - போன்று விளங்கும்; நஞ்சணி கண்டன் - கடலினின்றெழுந்த ஆலகால நஞ்சைத் தரித்த கழுத்தை உடையவனும்; நல்லூர் உறை நம்பனை - திருநல்லூரில் திருக்கோயில் கொண்டெழுந்தருளிய நண்பனுமாகிய சிவபெருமானை; ஒருநாள் - முன் ஒரு நாளில்; நான் துஞ்சிடைக்கனவின் தலைக்கண்டு கைதொழுதேன் - நான் உறங்கும்பொழுது கனவினிடத்துக் கண்டு கைகளிரண்டையும் கூப்பி வணங்கினேன்; (அவன்) - (அவ்வாறு நான் வணங்கின நாள் தொட்டு) சிவபெருமான்; நெஞ்சிடை நின்று அகலான் - எனது நெஞ்சை விட்டு நீங்காதவனாய்; பலகாலமும் - எப்பொழுதும்; நின்றனன் - நிலை பெற்று நிற்கின்றான். தோழீ! இஃது என்ன வியப்பு என்பது குறிப்பெச்சம்.

(விளக்கம்) இந்தப்பாட்டு ஒரு தலைவி தன் தலைவனைப்பற்றித் தோழிக்குக் கூறிய கூற்றாக அகப்பொருட்டுறையில் வைத்துப் பாடப்பட்டது. மயக்க அறிவு நீங்கித் தெள்ளிய அருள் அறிவு விளக்கப் பெற்ற அடியார்களுடைய தூய நெஞ்சில் சிவபெருமான் எப்பொழுதும் பேரொளியாய் விளங்குகின்றான் என்பது இப்பாட்டின் கருத்து; செஞ்சுடர்ச் சோதிப் பவளத்திரள் - சுடர் என்பது இங்கே ஆகுபெயராய்ச் சுடரையுடைய தீயைக் குறிக்கிறது; சோதி-ஒளி. பவளத்திரள் பல பவளங்கள்சேர்ந்த தொகுதி. பவளம் தீயைப்போல ஒளி விளக்கும் சிவந்த நிறமாயிருத்தலின் செஞ்சுடர்ச் சோதிப் பவளத்திரள் என்றார்.; திகழ்முத்து - திரள் என்ற சொல்லை முத்துக்கும் கூட்டுக. முத்துத்திரள்போல வெண்மை நிறம் சிவத்தினது தன்னியலுக்கும் பவளம்போல தூய சிவந்த நிறம் பொது இயலுக்கும் உவமைகளாகக் கூறியவாறும். வெண்மை என்பது எல்லா நிறங்களும் சேர்ந்ததன்றித் தனித்தவொரு நிறம் அன்று. வெண்ணிறமான பளிங்கானது தான் எந்த எந்த நிறப்பொருளைச் சாரினும் அந்த அந்த நிறப் பொருளாய்க் காட்டுதலன்றி அப்பொருள்களினது நிறம் யாதின்பாலும் தோயாதிருத்தல் போல சிவம் எந்த உயிர்ப் பொருளைச் சாரினும் தான் அதனைப் பற்றாது அதனைக் கடந்து பிறிதாய் விளங்குதலை வெண்மை நிறம் குறிக்கிறது. பவளநிறம் போன்ற தூய சிவப்பு நிறம் தூய அன்பைக் குறிக்கிறது சிவம் எல்லா உயிர்களுடனும் வேறறக் கலந்து அவ்வுயிர்களேயாய் அவ்வுயிர்களெல்லாம் தன்னைப்போல பேரின்பம் அடைதல் வேண்டும் என்னும் பேரன்பை உடையவனாயிருத்தலைத் தூய சிவப்பு நிறம் குறிக்கிறது. கம்பன் இச்சொற்பொருளுக்கு 48-வது பாட்டின்கீழ் எழுதிய குறிப்புக்களைப் பார்க்க, இன்-

சாரியை. கனவின் தலை-தலை-ஏழாம் வேற்றுமை யுருபு. கை தொழுதேற்குகைதொழு தேன்+கு. கு - சாரியை. பல்காலம் - 'பல்லாண்டு' என்பது எக்காலத்தையும் குறித்தல்போல பல காலம் என்பதும் எக்காலத்திலும் என்று பொருள்படும். நின்றனன் - இயல்புபற்றி அல்லது தெளிவுபற்றி நிகழ் காலத்தாற் கூறற்பாலது இறந்த காலத்தாற் கூறப்பட்டது. இருள் மல நிலைக்குக்கீழ் 32-வது பாட்டு "உள்ளத்தே நிற்றி யேனுங் கள்ளந்தே நிற்றி" என்று கூறுதலாலும் அருள் நிலைக்குக் கீழ் 35, 37 பாட்டுகள் "(வந்து) புறம்பயம் நம்மூரென்று போயினரே" என்று கூறுதலானும் 38-வது பாட்டு "வெள்ளரோமென்று நின்றார்" என்று கூறுதலானும் அருளுரு நிலைக்குக்கீழ் 47-வது பாட்டு "புல்லிய மனத்துக் கோயில் புக்கனர் என்று கூறுதலானும் அறியும் நெறிக்குக்கீழ் இந்த 53-வது பாட்டு "நெஞ்சிடை நிறைகலான் பல்காலமும் நின்றனனே" என்று கூறுதலாலும் விளங்குகிற வேற்றுமைக் கருத்துக்களின் அழகை நோக்குக. இவ்வேற்றுமைக் கருத்துக்கள் பல்வேறு நிலைகளிலுள்ள உயிரின் பக்குவங்களுக்கு ஏற்ற இறைவனது அருட்செயலைக் குறிக்கின்றன.

உன்மத்தக மலர்சூடி யுலகந்தொழச் சுடலைப்
பன்மத்தகங் கொண்டு பல்கடை தோறும் பலிதிரிவான்
என் மத்தகத்தே யிரவும்பகலும் பிரிவரியான்
தன்மத்தகத் தோரிளம் பிறைசூடிய சங்கரனே. ௫௪

(உரை) தன்மத்தகத்து ஓர் இளம்பிறைசூடிய சங்கரன் - தனது சென்னி மேலே மூன்றாம் பிறைச் சந்திரனைத் தரித்திருக்கின்ற சிவபெருமான்; உன்மத்தகம் மலர் சூடி - ஊமத்தம் பூக்களையும் அச்சென்னியின்மேல் அணிந்துகொண்டு; உலகம்தொழ - உலகத்திலுள்ளார் வணங்கி நிற்க; சுடலைப் பல்மத்தகம்கொண்டு - சுடுகாட்டிலுள்ள பற்களோடு கூடிய தலையோட்டைக் (கையில்) வைத்துக்கொண்டு பலி பல்கடை தோறும் திரிவான்-பிச்சை எடுத்ததற்காகப் பல மனைவாயில்தோறும் சென்று திரிகின்றான்; என் மத்தகத்தே பகலும் இரவும் பிரிவு அரியான் - (அவன்) என் மனத்தினிடத்துப் பகலும் இரவுமாகிய எக்காலத்திலும் பிரியாமலிருக்கின்றான்.

(விளக்கம்) சங்கரன் வடமொழிச் சொல். சம், இன்பம், கரன், செய்கின்றவன், உயிருக்கு இன்பத்தைச் செய்கிறவன்; பல+மத்தகம்=பன்மத்தகம் மத்தகம் என்பது தலை. அது இங்கே தலையோட்டைக் குறிக்கிறது. சிவபெருமான் பிரமனது தலையோட்டில் பலி எடுக்கின்றான் என்பது புராண வரலாறு. பலிதிரிவான் - பலிக்குத் திரிவான்; பலி எடுத்தற்குத் திரிவான். என் மத்தகத்தே மனத்தகத்தே என்பது, எதுகைபற்றி மத்தகத்தே எனக் குறுகின்றது. குறுக்கல்விகாரம். அரியான் - அருமை என்ற பண்புப் பெயர் அடியாகப் பிறந்த குறிப்பு வினை முற்று. பிரிவு அரியான் - இங்கே அருமை இன்மை என்னும் பொருள்பட நின்றது, எக்காலத்திலும் பிரியமாட்டான்.

புள்ளுவர்ஐ வர்கள்வர் புனத்திடை புகுந்து நின்று
துள்ளுவர் சூறைகொள்வர் தூநெறி விளையவொட்டார்
முள்ளுடை யவர்கள் தம்மை முக்கணன் பாதநீழல்
உள்ளிடை மறைந்து நின்றங்குணர் வினால்எய்ய லாமே. ௫௫

(உரை) புள்ளுவர் ஐவர் கள்வர்-ஐம்பொறி வேடர்களாகிய ஐந்து திருடர்கள்; புனத்திடைப் புகுந்து நின்று - உலகமாகிய பாலை நிலக்காட்டில் சென்று நின்று; துள்ளுவர் சூறை கொள்வர் - வீட்டு நெறியிலொழுகும் மாந்தராகிய வழிப்போக்கரிடம் குதித்து

அவர்களுடைய மெய் அறிவு ஆகிய பொருளை ஆறலைத்துக் கொள்ளை செய்வாராகி; தூநெறி விளையல் ஒட்டார் - அவர்கள் சிவபெருமானை அடையச் செய்யும் தூயநெறியில் ஒழுகி மெய் அறிவு முதிர்தற்கு விடமாட்டார்; முள்ளுடையவர்கள் தம்மை - தீயசெயல்களை உடைய அந்த ஐம்பொறி வேடர்களை; முக்கணான் பாதநீழல் உள்ளிடை மறைந்து - மூன்றுகண்களை உடைய சிவபெருமானுடைய இரண்டு திருவடிகளின் நிழல் வியாபகத்துக்குள் அடங்கி அவர்கள் அறியாமல் மறைந்து; அங்கு நின்று உணர்வினால் - அவ்விடத்தில் நின்று (திருவடி நீழலிலடங்கி நிற்றலினாலுண்டாகிய) மெய்யுணர்வினைத் துணைக்கொண்டு; எய்யலாம் - வில்லினால் எய்து வெல்லலாம். ஆதலின் அடியார்களே சிவபெருமானுடைய திருவடி நீழலைச் சார்ந்து ஐம்பொறிப்பகையை வெல்லுமின் என்பது குறிப்பெச்சம்.

(விளக்கம்) துள்ளுவர், சூறை கொள்வர் - இந்த இரண்டு வினைமுற்றுக்களும் வினையெச்சப் பொருள் தந்து நின்றன. துள்ளுவர் என்பது ஐம்பொறிகள் உயிருக்குள் அடங்காது நிற்றலையும், சூறை கொள்வர் என்பது அவைகள் உயிரை உலக விடய நெறியில் ஈர்த்துச் செல்லுதலையும் குறிக்கின்றன. தூநெறி விளையல் ஒட்டார் - தூநெறி - மயக்க அறிவினின்று நீங்கிய தூயநெறி. அது சிவமே மெய்ப்பொருள் எனத் துணிந்து அப்பொருளை அடையச் செல்லும் பேரின்ப வீட்டுநெறி. சிற்றின்பத்தைத் தரும் மல அழுக்கு விரவிய உலக நெறியினின்று வேறு பிரித்தற்கு அதனைத் தூநெறி என்றார். தூநெறி விளையல் என்பது வீட்டு நெறியிலொழுகி மெய் அறிவு மேலும் மேலும் முதிர்தல். முள் உடை அவர்கள் - முள் என்பது இங்கே பிறரைத் துன்புறுத்தும் தீவினையைக் குறிக்கிறது. உடைய என்பது உடை எனக் குறுகி நின்றது. முக்கணான் பாத நீழல் உள்ளிடை மறைந்து - முக்கண்ணான் என்பது முக்கணான் எனக் குறுகியது. உள்ளிடை - உள்ளிடம் அதாவது திருவடி நீழல் வியாபகத்துக்குப் புறமல்லாதது. பாதம் நீழல். உள்ளிடை மறைந்து நிற்றலாவது மாந்தர் சிவபெருமானுடைய அறிவு வேட்கைச்செயல்களினது வியாபகத்துக்குள்முறையே தங்கள் அறிவு வேட்கைச் செயல்களை வியாப்பியமாய் அடங்கச் செய்து தன் முனைப்பின்றி நிற்றல். இவ்வாறு அவர்கள் அடங்கி நிற்கும்பொழுது அவர்களுக்குப் பாச உலகம் தோன்றாது ஆதலின், மறைந்து என்றார். உணர்வு - மேலே கூறியவாறு அறிவு வேட்கைச் செயல்கள் அடங்கி நிற்றலாலுண்டாகும் மெய்யுணர்வு. எய்யலாம் - எய்யல் - வில்லினால் அம்பு எய்யல் புள்ளுவர் என்பதற்கு ஏற்ப எய்யலாம் என்றார். அது இங்கே வெல்லுதல் என்னும் பொருள்பட நின்றது. உவமப் பொருள்களும் உவமிக்கப்படும் பொருள்களும் முற்றிலும் வெளிப்பட உரைக்கப்படாததால் இப்பாட்டு ஏகதேச உருவகம். சிவபெருமானுடைய திருவடி நீழலாகிய அருள் வியாபகத்துள் அடங்கி நின்றால் அல்லாமல் வீட்டு நெறியிலொழுகும் மாந்தர்கள் உலகப் பற்றுக்களை ஒழித்து மெய்யுணர்வை அடைதல் முடியாது என்பது இப்பாட்டில் அடங்கியுள்ள கருத்து. செய்யப்படு பொருள்களாகிய ஐம்பொறிகளை உயிருள்ள வினை முதல்போல உயர்திணையில் வைத்து அடிகள் கூறியதால் ஐம்பொறிகள் உயிருக்குள்ளடங்கி அதன் வயப்பட்டு ஒழுகாது அதனைத் தம் வயப்படுத்தித் தாங்கள் விரும்பும் விடயபோகத்தில் ஈர்த்துச் செல்லும் திறன் குறிப்பிடப்பட்டது.

பத்திப் பேர்வித்திட் டேபரந்த ஐம்புலன்கள் வாய்ப்
பாலேபோகா மேகாவாப் பகையறு வகைநினையா
முத்திக்கே விக்கத்தே முடிக்கு முக்குணங்கள் வாய்
மூடாவூடாநா லந்தக் கரணமுமொரு நெறியாய்ச்

சித்திக்கே யுய்த்திட்டுத் திகழ்ந்தமெய்ப் பரம்பொருள்
சேர்வார்தாமே தானாகச் செயுமவ னுறையுமிடங்
கத்திட்டோர் சட்டகங் கலந்திலங்கு நற்பொருள்
காலேயோ வாதார்மேவுங் கழுமல வளநகரே. ௫௬

(உரை) பகைஅறும்வகை நினைய - காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மார்ச்சரியம் என்னும் ஆறுபகைகளும் அறவே நீங்கும் வண்ணம் நினைந்து ; பாந்த ஐம்புலன்கள் வாய்ப்பாலே போகாமே - உலக போகவிடயங்களிற் பாந்து செல்கின்ற ஐந்து பொறிகளிடத்துச் சிறிதும் செல்லாமல் ; முத்திக்கு இக்கத்தே முடிக்கும் முக்குணங்கள்வாய்-வீடுபேற்றிற்குத் தடையினையே விளைக்கும் சாத்துவிகம் இராசதம் தாமதம் என்னும் முக்குணங்களிடத்து ; மூடா(தும்) ஊடா(தும்) - மறைவுபடாமலும் பிணங்காமலும் ; காவா - தங்களைக் காத்தும் ; நால் அந்தக்கரணமும் ஒரு நெறியாய் - மனம், அகங்காரம், புத்தி, சித்தம், என்கிற நான்கு அந்தக்கரணங்களையும் ஒடுக்கிச் சித்தம் (சிந்தை) என்ற ஒரு வழிப்படுத்திச் சிந்தைசெய்து: சித்திக்கே உய்த்திட்டு (உம்) - மெய் அறிவு பெறுதற்கே செலுத்தியும் ; பேர்பத்தி வித்திட்டு (உம்) - பேரன்பு ஆகிய விதையை விதைத்தும் ; திகழ்ந்த மெய்ப்பரம் பொருள் சேர்வார் - அவ்வாறு செயத் தன் பயனாகத் தங்கள் உள்ளத்திலே அருளொளியாய் விளங்குகிற உண்மையாயும் மேலானதாயுமுள்ள பொருளை இடைவிடாது நினைத்துக்கொண்டிருக்கிற அடியார்களை ; தானாகச் செய்தவன் உறையும் இடம் - தன்னோடு இரண்டறக் கலக்கும்படி செய்கிற சதாசிவமூர்த்தி (இலிங்க வடிவில்) திருக்கோயில் கொண்டெழுந்தருளி இருக்கும் இடமானது ; கத்திட்டோர் - அருள் நூல்களைக் கற்றுக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்த பெரியார் ; சட்டகம் - தங்களுடைய செம்மை அறிவுடன் ; கலந்து இலங்கு பொருள்கால் - அத்துவிதமாய்ச் சேர்ந்து விளங்கும் நற்பொருளிடத்து ; ஓவாதார் மேவும் - (இடையறாது சிந்தை செய்தலை) ஒழியாதவராகி உறைகின்ற ; வளம் கழுமல நகரே - செழிப்பான திருக்கழுமலம் நகர் ஆகும் ; ஆகையாலே அடியார்களே திருக்கழுமலத்தில் வீற்றிருக்கின்ற சதாசிவப் பெருமானைத் தொழுது உய்மின் என்பது குறிப்பெச்சம்.

(விளக்கம்) பகை அறும் வகை நினையா - இங்கே கூறப்பட்ட ஆறு பகைகளும் பிரகிருதி மாயைப் போகத்தின் உன் முகத்திற்கு ஏதுவாகிய அவிச்சை, ஆங்காரம், அவா, ஆசை, கோபம் என்னும் பஞ்சக் கிலேசங்களுள் அடங்கும். மோகம் - அவிச்சை ; மதம் - ஆங்காரம் ; காமம் - அவா ; உலோபம் - ஆசை ; குரோதமும் மார்ச்சரியமும் கோபத்திலடங்கும். பின்னே கூறப்படுகிற ஐம்புலனடக்க முதலியனவெல்லாம் பஞ்சக்கிலேசங்களை ஒழித்தற்கு ஆதலின் 'பகையறும் வகை நினையா' என்றார். பாந்த ஐம்புலன்கள் வாய்ப்பாலே போகாமே (உம்) - புலன்கள் என்ற சொல்லுக்கு மேலே 51-வது பாட்டின் கீழ்க் கூறிய குறிப்புரையைக் கொள்க. வாய் - ஏழாம் வேற்றுமை உருபு. பால் - பகுதி ; ஒரு சிறிதும் ; ஏ. அசை; போகாமே - போகாது ; மே என்பது எதிர் மறையிடத்து வந்த வினையெச்ச விகுதி. தொக்கி நின்ற 'உம்' விரித்துக்கூறப்பட்டது. முத்திக்கு இக்கத்தே முடிக்கும் - இக்கு + அத்து + ஏ = இக்கத்தே ; இக்கு - தடை ; ஏ - தேற்றப் பொருளில் வந்தது - முத்திக்கே என்பதிலுள்ள ஈற்று ஏகாரம் அசை. முக்குணங்கள் வாய். வாய் - ஏழாம் வேற்றுமை உருபு. மூடா, ஊடா - மூடா, ஊடா இரண்டும் எதிர் மறைவினை யெச்சங்கள். இரண்டிலும் 'து' விகுதிகள் தொக்கி நின்றன. எண் 'உம்'களும் தொக்கி நின்றன. முக்குணங்கள் வாய் மூடாதும் முக்குணங்கள் வாய் ஊடாதும் என விரிக்க. வாய் - ஏழாம் வேற்றுமை உருபு. முக்குணங்கள் வாய் மூடல் என்பது ஆன்மா முக்குணங்களிடத்து மறைந்து அவைகளின் மயமாய் விளங்கல். பிரகிருதி மாயா தத்துவங்கள் ஆன்மாவை உலகவிடய போகம் நுகரும் தன்

மையிற் செலுத்தும் குண மயமாயிருத்தலின், முக்குணங்கள் வாய் மூடா என்றார். முக்குணங்களவாய் ஊடல் என்பது முக்குணங்களுடன் பிணங்கி எதிர்த்தல் (Opposition). மூடலும் ஊடலும் ஆகிய இந்த இரண்டு நிலைகளும் இன்றி முக் குணங்களும் தங்கள் சேட்டைகள் முற்றிலும் ஒழிந்து ஆன்மாவின்கண் அடங்கி நிற்றல் வேண்டும் என்பார், முக்குணங்கள் வாய் 'மூடா', 'ஊடா' என்றார். காவா - செய்து என்ற வாய்ப்பாட்டு வினையெச்சம். எண் உம்மை தொக்கி நின்றது. நால் அந்தக் கரணமும் ஒரு நெறியாய்-நான்கு அந்தக் கரணங்களும் உலக போக நுகர் வின்கண் நான்கு நெறிகளிற் சென்று விடயித்தல் போல் அல்லாமல் மெய்ப்பொருளைச் சிந்தித்தற் றொழிலைச் செய்யும் சித்தம் (சிந்தை) என்ற ஒரு நெறிப்பட்டு "அளப்பருங் கரணங்கள் நான்கும் சிந்தையேயாக" என்று சேக்கிழார் அடிகள் பெரிய புராணத்தில் கூறியருளினமை காண்க. அவ்வாறு நான்கு அந்தக் கரணங்களும் ஒரு நெறிப்பட்டு ஆன்மாவுக்குள் அடங்கி ஆன்மா சிவத்தைச் சிந்திக்கவில்லையாயின் அதன் சிந்தையில் அருள் ஒளி விளங்கி தெளிந்த அறிவு உண்டாகாது ஆதலின், ஒரு நெறியாய் என்றார். சித்திக்கே உய்த்திட்டு (உம்) - சித்தி என்பது இங்கே மெய் அறிவைக் குறிக்கிறது. ஏ தேற்றப் பொருளில் வந்தது. உய்த்திட்டு என்பதற்குப் பின் எண் 'உம்' தொக்கி நின்றது. பேர்பத்தி வித்திட்டும் - பத்திப்பேர் என்பதனைப் பேர் பத்தி என மாறுக. பேர் - பெரிய; பேர்பத்தி - பேரன்பு; உலக நெறியில் காணப்படும் ஏகதேசப்பட்ட அன்பினின்றும் பிரித்தற்கு 'பேர்பத்தி' என்றார். உயிரில் பொருள் உயிர்ப்பொருள் ஒன்றினையும் பற்றாது சிவம் ஒன்றனையேபற்றி நிற்கும் அன்பு பேரன்பு ஆகும் (Absolute impersonal love) உலக விடயங்களைப்பற்றி நிகழும் ஞானரூபமாகிய புத்தி தத்துவத்தின் அராக நீங்கியபொழுது முத்திக்கால எல்லை அளவும் நீங்காது நிற்கும் வாதனாரூபமாய்ப் பொதுமையில் நிகழும் அராக தத்துவ அராகம் உலக விடயங்களிற் செல்லாது சிவத்தினைப்பற்றும் சிவ அராகமாய் வெளிப்பட்டு இச்சா ரூபமாயுள்ள ஆன்மாவின் இச்சாசத்தியை முத்திக்கு ஏதுவாகிய சாதகங்களிற் செலுத்துதலால் பத்திப்பேர் வித்திட்டு என்றார். இவ்வுண்மை சிவஞான பாஷியத்திலும் (156, பக்கம்) பௌஷ்கர ஆகமத்திலும் கூறப்பட்டுளது. நிகழ்ந்த மெய்ப்பரம் பொருள் சேர்வார்தாமே - நிகழ்ந்த - இயல்புபற்றி இறந்த காலத்தாற் கூறப்பட்டது - மெய்ப் பரம்பொருள் - என்பதை மெய்ப்பொருள் பரம்பொருள் என விரிக்க. நிலையில்லாத உலகப் பொருளினின்று பிரித்தற்கு மெய்ப்பொருள் என்றும், உயிர்ப்பொருளினின்று பிரித்தற்குப் பரம்பொருள் என்றுங் கூறினார். சேர்தல் என்ற சொல்லுக்கு இடைவிடாது நினைத்தல் என்று பரிமேலழகர் திருக்குறள் முதல் அதிகாரத்தில் கூறியிருத்தல் காண்க. தாமே - தாம் அசை நிலை. ஏ - பிரிநிலைப் பொருளில் வந்தது. தானாகச் செய்தவன் உறையும் இடம் - தானாகச் செய்தவன் - இருவேறு பொருள்களாயிருக்கிற தானும் (சிவமும்) அடியார்களும் வேற்றுமையின்றி ஒன்றெனும்படி அத்துவிதமாய்ச் சேரும்படி செய்கிறவன். சிறப்பு இயலில் மெய்ப்பரம் பொருளாயுள்ளவனே, பொது இயலில் இருக்கமலத்தில் சதாசிவ வடிவிலும் விளங்குகின்றான் என்பார், "மெய்ப் பரம்பொருள் சேர்வார் தாமே தானாகச் செய்தவன்" என்று கூறினார். நத்திட்டோர் என்பது நத்திட்டோர் என்று எதுகை நோக்கித் திரிந்தது. இடு - துணைவினை கற்றோர் முதல் மூன்று அடிகளிலும் சேர்வார் வரை அடியார்களைப்பற்றிக் கூறப்பட்ட கருத்துக்கள் 4-வது அடியில் நத்திட்டோர் என்ற சொல்லாற் கூறப்பட்டன. சட்டமகம் - சட்டம+கம=சட்டங்கம். சட்டம் - செம்மை ; கம - அறிவு. சட்டங்கம்=செம்மை அறிவு. சிவத்தினையே நேர்மையாய் நினைப்பும் மறப்பு அறநினைக்கும் அறிவு; நலந் திலங்கும் நற்பொருள் காலே - நற்பொருள் - நலமாகிய இன்பத்தினையே உயிர்களுக்கு எப்பொழுதும் செய்கின்ற பொருள் ; கால் ஏழாம் வேற்றுமை யுருபு ; ஏ - அசை. மூன்றாவது அடியில் நிகழ்ந்த மெய்ப் பரம்பொருள் என்பது நான்காவது அடி

யில் 'இலங்கும் நற்பொருள்' என்றும், மூன்ருவது அடியில் 'தாளுகச் செய்யும்' என்பது நான்காவது அடியில் 'கலந்து' என்றும் கூறப்பட்டன. ஓவாதார் ஓவுதல் - ஒழிதல் - (சிந்தித்தலை) ஒழியாதாராகி அதாவது இடையருது சிந்தித்துக் கொண்டிருக்கிறவர்களாகி. மூன்ருவது அடியில் சேர்வார் என்பது நான்காவது அடியில் ஓவாதார் என்றும் கூறப்பட்டது. இந்த அழகிய சந்தத் தேவாரப்பாட்டில் முதல் மூன்று அடிகளும், அடியார்களுடைய அக இலக்கணம் கூறி அத்தகைய அடியார்களுக்கு அருள் செய்யும் திருக்கழுமல நாதருடைய பெருமையும் கூறுகின்றன. நான்காவது அடி திருக்கழுமலத்தில் வாழ்கின்ற அடியார்களுடைய பெருமையைக் கூறுகின்றது. ஓர் ஊருக்குச் சிறப்பானது அதன்கண் வாழும் அடியார்களினுலும் அவ்வடியார்கள் சார்ந்து அருள் விளங்கச் செய்யும் திருக்கோயிலினுலும் உண்டாகிறது என்ற உண்மையும் இப்பாட்டிற் குறிப்பிடப்பட்டது. "ஐம்புலன்கள் வாய்ப் போகாமலும் முக்குணங்கள் வாய் மூடாமலும் ஊடாமலும் காவா" என்பதனுல் அடியார்கள் புத்தி தத்துவத்தின் வழி உலக விடயத்தைப் பற்ருது நின்று விடயத்தின் கண்ணுள்ளதாகிய புறப்பற்றை ஒழித்தல் வேண்டும் என்பதும் "காலந்தக் காணமுமொரு நெறியாய்ச் சித்திக்கேயுய்த்திட்டு" என்பதனுல் அவர்கள் அகங்காரம் மனங்களின் வழி தங்களைப் பற்ருது புருட தத்துவத்தின் கண்ணுளதாகிய அகப்பற்றை ஒழித்தல் வேண்டும் என்பதும், "பத்திப் பேர் வித்திட்டு" என்பதனுல் முன் அசுத்த மாயையிலுள்ள அ்ராக தத்துவத்தின்கண் பொதுமையாக நிகழ்ந்த தங்கள் இச்சையை அவர்கள் சிவனிடத்திலே திருப்பிச் சிவ அராகமாக மாற்றி அவனது அருட் பேரொலியைத் தங்கள் தூய உள்ளத்தில் உணரும் இன்ப உணர்வு உடையவர்களாதல் வேண்டும் என்பதும் கூறப்பட்டன. பும்சத்துவ மலத்தோடுகூடிய ஆன்மா, உலக போகம் நுகரும் தன்மை (போததிருத்துவம்) முற்றிலும் நீங்குதற்கு அவ்வுலக போக நுகர்ச்சியிற் செலுத்துவனவாகிய மண் முதல் அசுத்த மாயா கலா தத்துவம்வரை உள்ள தத்துவங்களிற்ருேய்தலினின்றும் நீங்கித் தூய்மை அடைதல் வேண்டும் என்பதும் இப்பாட்டிற் கூறப்பட்டது.

அகனமர்ந்த வன்பினரா யறுபகை செற்றைம் புலனுமடக்கி ஞானப்
புகலுடையோர் தம்முள்ளப் புண்டரிகத் துள்ளிருக்கும் புராணர் கோயில்
தகவுடைநீர் மணித்தலத்துச் சங்குளவர்க் கந்திகழச் சலசத்தீயுண்
மிகவுடைய புன்குமலர்ப் பொரியட்ட மணஞ்செய்யு மிழலையாமே. ௫௭

(உரை) ஐம்புலனும் அகத்து அடக்கி - தமது ஐம்பொறிகளையும் புறத்தே உலக விடயங்களிற் செல்லவொட்டாது தம்மிடத்து (ஆன்மாவினிடத்து) அடங்கி நிற்கச் செய்து ; அறுப்கை செற்று - காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மார்ச்சரியம் என்ற (பஞ்சக்கிலேசங்களுள் அடங்குவனவாகிய) அறு பகைகளையும் வென்று ; அகன் அமர்ந்த அன்பினர் ஆய் - புறம் சிறிதும் நோக்காது உயிரினிடத்து விளங்கும் நிறைந்த அன்பினை உடையவராய்; ஞானப்புகல் உடையோர் - மெய்ஞ்ஞானத்தையே களைகணுக (தாரகமாகக்) கொண்டு அதனுள் அடங்கித் தாமே அம் மெய்ஞ்ஞானமாய் மிளிர்கின்ற அடியார்களுடைய ; உள்ளம் புண்டரிகத்துள்ளிருக்கும் புராணர் கோயில் - தூய உள்ளமாகிய தாமரைப் பூவினையே உறைவிடமாகக்கொண் டெப்பொழுது மெழுந்தருளியிருக்கும் பழமையாகிய சிவபெருமான் வீற்றிருக்கும் திருக்கோயில் (இருக்கிற இடமானது); சங்கு வர்க்கம் உள - சங்கு என்ற வகைக்குச் சேர்ந்துள்ளனவாகிய உயிர்ப் பிராணிகள் ; தகவு உடைநீர் மணித்தலத்து - ஆழமும் பெரிதுமான நீரையுடைய அழகிய தாமரைத் தடாகத்தில் ; திகழ் அச்சலசத் தீ உள் - விளங்குகின்ற அந்தச் செந்தாமரைப் பூவாகிய ஓமகுண்டத் தீயின்கண் ; மிக உடைய புன்கு மலர்ப் பொரியட்ட

மணம் செய்யும் மிழலையாமே - மிகுதியாக உடைய புன்னைவெண் மலர்களாகிய பொறிகளைப் பெய்து தங்களுக்குள் மணம் செய்கின்ற திருவீழிமிழலையாகும்.

(விளக்கம்) அறு பகை செற்று - அறுபகை என்பதற்கு மேலே 56-வது பாட்டின் கீழ் எழுதப்பட்ட விளக்க உரையைப் பார்க்க; அகன் அமர்ந்த அன்பினராய் - அகன் அமர்ந்த அன்பு என்பதற்கு மேலே 56-வது பாட்டின் கீழ் எழுதப்பட்ட விளக்க உரையைப் பார்க்க. அகன், அகம் என்பதன் போலி; புராணர் - முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம் பொருளா யுள்ளவர்; கோயில் - இங்கே கோயிலிருக்கும் இடத்தை அல்லது ஊரைக் குறிக்கிறது; சங்கு வர்க்கம் உள - சங்குஉள வர்க்கம் - சங்கு வர்க்கம் உள என மாறுக; உள - குறிப்பு வினையா லணையும் பெயர், பன்மை. உள்ளனவாகிய பிராணிகள்; தகவு - தகுதி - ஆழத்தினாலும் நீளம் அகலங்களினாலும் உண்டாகின்ற தகுதி; சலசம் - வடமொழிச் சொல். ஜலஜம் - நீரிற்றோன்றிய தாமரை; பொறி அட்ட மணம் செய்யும் - அட்டி என்பது அட்ட எனத் திரிந்தது; விகாரம். இப்பாட்டின் முன் இரண்டு அடிகளில் சிவபெருமான் அடியார்களுடைய தூய உள்ளத்தில் உறைந்திருப்பவன் என்பது கூறப்பட்டது; பின் இரண்டு அடிகளில் இயற்கை வருணனை கூறப்பட்டது.

சுழித்துணையாம் பிறவிவழித் துக்கநீக்குஞ்
சுருள்சடை யெம்பெருமானே தூயதெண்ணீ
ரிழிப்பரிய பசுபாசப் பிறப்பைநீக்கு மென்றுணையே
யென்னுடைய பெம்மான்றம்மான்
பழிப்பரிய திருமாலு மயனுங்காணாப் பரிதியே
சுருதிமுடிக் கணியாய் வாய்த்த
வழித்துணையா மழபாடி வயிரத்தூணே
யென்றென்றே நானரற்றி நைகின்றேனே. ருஅ

(உரை) பழிப்பரிய திருமாலும் அயனும் காணாப் பரிதியே - தேவர்களாலும் மக்களாலும் புகழ்தற்கு உரியவராகிய திருமாலும் அயனும் (முறையே அடியும் முடியும் தேடியும்) அவர்களால் அறியமுடியாத பகலவனொளி போன்று தீப்பிழம்பாய் நின்றவனே; (அவ்வாறு தவவலியாலன்றி உடல் வலியால் நின்னைக் காண முயன்ற திருமால் அயன்களுக்கு நீ அறிதற்கரியாதவனா யிருந்தாலும் உண்மை அன்புடைய அடியார்களுக்கு எளியவன் ஆதலின்); நான் சுழிப்பிறவிவழி துக்கம் நீக்கும் - நான் (நின்னை ஆழநீர்ச்) சுழியைப் போலுள்ள உலக வாழ்க்கைப் பிறவி வழியில் நிகழும் துன்பங்களை ஒழிக்கின்ற; துணையாம் தூயதெண்ணீர் சுருள்சடை எம்பெருமானே - எனது துணையாய் மலம் நீங்கித் தெளிந்த சுத்தமாயை ஒளியாய் எனது (உள்ளத்தில் விளங்கும்) சுருண்ட சடையுடைய எனது பெருமானே (1) (என்றும்); இழிப்பரிய - இகழ்ச்சிக்குரியதல்லாத; பசுபாசப் பிறப்பை நீக்கும் என்னுடைய பெம்மான் தம்மான் என் துணையே - உயிர்ப்பற்று உலகப் பொருட்பற்றுக்களாலுண்டாகிற உலக வாழ்வுப் பிறப்பினையும் (இறப்பினையும்) ஒழிக்கும் எனக்குக் கடவுளும் தலைவனுமாய் எனது உள்ளத்தில் உயிரொளியாய் விளங்கும் என் துணையே (2) (என்றும்); சுருதி முடிக்கு அணியாய் வாய்த்த வழித்துணையாம் மழபாடி வயிரத்தூணே - வேதாகமங்களினது சிரசுக்கு அழகாயும் அரிதிற் கிடைக்கப்பெற்ற எனது பேரின்ப வாழ்க்கை வழித்துணையாகியும் எனது உள்ளத்தில் உணரப்படுகின்ற திருமழபாடியின்கண் எழுந்தருளியிருக்கும் வயிரத் தூண் போன்று அருட்பேரொளியாய் விளங்கும் சிவபெருமானே (3) (என்றும்); என்று என்று - எனது நாவினாற் சொல்லிச் சொல்லி; அரற்றி நைகின்

றேன் - (அன்பினால் அகங்குழைந்து உருகி) அழுது தன் வயமழிந்து நின்வயப்பட்டு நின்னோடு கூடிப் பேரின்பம் உணர்கின்றேன்.

(விளக்கம்) முதலாவது அடியை சுழிப்பிறவி வழித் துக்கம் நீக்கும் தூயதெண்ணீர் சுருள்சடை எம்பெருமானே என்று உரைநடை செய்க ; சுழிப்பிறவி - ஆழநீர்ச் சுழியானது தன்னைச் சேர்ந்த பொருளை நீருக்குள்ளே இழுத்து நீர்நிலைக்கு மேலே வரவொட்டாமற் செய்தல்போல உலக வாழ்க்கைப் பிறவியானது மக்களை உலக விடய போகத்தில் அமிழ்த்தி அதினின்றும் தப்பிச் சிவன் திருவடியை அடையவொட்டாமற் செய்தலினால் அடிகள் பிறவியைச் சுழியாக உருவகம் செய்தார். துக்கம் - உலக வாழ்க்கையில் இன்பமிருப்பினும் அவ்வின்பம் கணந்தோறும் மாறுவதாய்ப் பேரின்பத்தை நோக்கத் துன்பமாயிருத்தலினால் பிறவி வழித்துக்கம் என்றார். துணையாம் - துணையாகும் என்பது துணையாம் எனக்குறுகியது. தூயதெண்ணீர் - தெள் + நீர் = தெண்ணீர் நீர் என்பது இங்கே ஒளியைக் குறிக்கிறது. நவமணிகளின் ஒளி நீர் என்று பேச்சு வழக்கிலும் கூறப்படுகின்றது. தூயதும் தெளிந்ததுமான சுத்தமாயையின்கண் விளங்கும் அருள்ஒளி; அசுத்தமாயை பிரகிருதிமாயைகளில் மலத்துடன்விரவிய ஒளியினின்றும் பிரித்தற்கு தூயதெண்ணீர் என்றார். இந்த அருள்ஒளி அடியாரது தூய உள்ளத்தில் விளங்குவதாயுள்ளது. இழிப்பரிய பசுபாசப் பிறப்பை நீக்கும் - இழிப்பரிய - என்பதிலுள்ள அருமை பழிப்பரியஎன்பதிற்போல இன்மை என்ற பொருள்படகின்றது. இகழ்ச்சிக்குரியது அல்லாத. அதாவது புகழ்ச்சிக்குரியது. எகான்மவாதிகள் முதலிய ஒருசாரார் உலகவாழ்வு இழிக்கத்தக்கது என்று கூறுதல்போல அல்லாது மலம் நீங்கிப் பேரின்பப் பயனை அடைதற்காகவே உலக வாழ்வு இறைவனால் அமைக்கப்பட்டுள்ளது என்று சைவ சமயம் கூறுதலால் அடிகள் இழிப்பரிய பிறவி என்றார். உலகவாழ்க்கையிலுள்ள பிறப்பு உயிர்ப் பற்றினையும் பொருட் பற்றினையும் பற்றி வருதலால் பசுபாசப் பிறப்பு என்றார். என்னுடைய பெம்மான் தம்மான் - பெருமான் பெம்மான் என மருவியது. பெரியவன் - கடவுள். தம்மான், தலைவன், தம்பிரான் என்பதுபோல; சுருதி முடிக்கு அணி - சுருதி என்பது கேட்கப்படுவது ; வேதாகமங்களைக் குறிக்கிறது. அபரஞானத்தை உணர்த்துகிற வேதாகமங்கள் பரஞானத்துக்கும் (மெய்யுணர்வுக்கும்) வழியா யிருத்தலின் சுருதி முடிக்கு அணி என்றார். முடி - சிரசு ; தலை. அதாவது முடிந்த முடிபு ; அணி - அழகு. மழபாடி வயிரத் தூண் - வயிரத் தூண் என்பது வயிரத்தூண் ஒளியைக் குறிக்கிறது. வயிரத்தூண் மிக்க ஒளியுடையதாய் அதன் அணிமையிலுள்ள பிற பொருள்களின் ஒளிகளைத் தனக்குள் அடங்கச் செய்து தான் அவ்வொளிகளுக்கு அடங்காது ஒளிருதல் போல, சிவபெருமான் தனது அருட்பேரொளி அறிவால் எவ்வெவ் வுயிரினது அறிவையும் தனக்குள் அடங்கும்படி செய்து அவையாதொன்றிலும் பற்றாதவனாய் சுயம்பிரகாச முடையனாய் விளங்குகின்றான் என்பது கூறப்பட்டது. ஆற்றி னைகின்றேனே - ஆற்றுதல் - அழுதல் ; அகங் குழைந்து உருகி அழுதல். நைதல் - இங்கே தேய்தல் அல்லது குறைதலைக் குறிக்கிறது ; அதாவது சீவத்தன்மை குறைந்து சிவத்தன்மை மிகுதல். சீவத்தன்மை குறைந்து சிவத்தன்மை மிகுதலால் ஆன்மா தன்வய மழிந்து சிவன் வயமாகி அவனுடன் வேறற ஒன்றிக் கலந்து பேரின்ப முறுதல் உண்டாகிறது. இந்தத் தன் அநுபவத்தை அடிகள் இங்கே கூறுகின்றார். "சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாம் திருப்பெருந் துறையுறை சிவனே" என்று மாணிக்கவாசக அடிகள் கூறி அருளினமை காண்க. திருநாவுக்கரசு அடிகள் இந்தத் தேவாரப்பாட்டின் பதவுரையிலே 1, 2, 3 என எண்ணிட்டுக் குறிக்கப்பட்ட மூன்று சொற்றொடர்களையும் அடிக்கடி கூறி அகங் குழைந்து உருகி அழுது தன்வய மழிந்து சிவன்வயப்பட்டுப் பேரின்பம் உணர்ந்ததாகத் தமது அநுபவத்தைக் கூறுகின்றார். அந்தச் சொற்றொடர் ஒவ்வொன்றிலும் சிவபெருமான் தமது அருமைத் துணையாய்த் தமது உள்ளத்தில் அருள் ஒளியாய்

விளங்கினதாகவும் அவர் கூறுகின்றார். முதலாவது ஒளியானது சுத்த மாயையில் விளங்கும் தூய அருள் ஒளியையும் இரண்டாவது ஒளியானது ஆன்மாவின்கண் விளங்கும் அருள் ஒளியையும் மூன்றாவது ஒளியானது தனி அருள் ஒளியையும் குறிக்கின்றன. முதலாவது அருள் ஒளியால் பொருட்பற்று (புறப்பற்று) நீக்கமும் தத்துவ சுத்தியும் தத்துவ தரிசனமும், இரண்டாவது அருள் ஒளியால் பொருட் பற்றுடன் உயிர்ப் பற்று (அகப்பற்று) நீக்கமும் ஆன்ம சுத்தியும் ஆன்ம தரிசனமும், மூன்றாவது அருள் ஒளியால் பொருட்பற்று உயிர்ப் பற்றுகள் நீங்கின காரணத்தால் தன்வய மழிந்து சிவன்வய மடைதலும் சிவதரிசனமும் சிவயோகமும் உண்டாகின்றன. முதலாவது அருள் ஒளி இரண்டாவது அருள் ஒளியிலும் இரண்டாவது அருள்ஒளி மூன்றாவது அருள் ஒளியிலும் ஒன்றினொன்று அடங்கும் தன்மை உடையன. முதலாவது அருள்ஒளி மாயை மல நீக்கத்துக்கும் இரண்டாவது அருள்ஒளி வினைமல நீக்கத்துக்கும் மூன்றாவது அருள்ஒளி ஆணவமல நீக்கத்துக்கும் காரணமாயுள்ளன. இந்த ஒளிகள் ஞானத்து யோகமாகிய சிவயோக நிலையில் விளங்கும் ஒளிகள். இந்த மூன்று ஒளிகளும் அகண்ட பேரொளியில் அடங்குவன. இந்த மூன்று ஒளிகளையும் திருமூலர் 2808-வது திருமந்திரத்தில், "அறிவுக் கறிவாம் அகண்ட வொளியும் பிறியா வலத்தினிற் பேரொளிமூன்றும், அறியா தடங்கிடி லத்த னடிக்குட் பிரியா திருக்கிற் பெருங்கால மாமே" என்று கூறியருளினர். மாணிக்கவாசக அடிகள், "சோதியாய் எந்நான்றும் அன்பர் தொடர் வறுத்து" என்று முதலாவது ஒளியையும், "சோதியாய் மருளகற்றி" என்று இரண்டாவது ஒளியையும், "சோதியாய் இன்பம் பெருக்கி" என்று மூன்றாவது ஒளியையும் திருவாசகம் திருவெண்பா 11-வது பாட்டிற் குறிப்பிட்டருளியது காண்க.

மேனியிற் சீவரத் தாரும் விரிதருதட் டுடை யாரும் விரவலாகா
ஊனிகளாயுள்ளார் சொற்கொள்ளாது முள்ளுணர்ந் தங்குய்மின்றொண்டீர்
ஞானிகளாயுள்ளார்க ணான்மறையை முழுதுணர்ந் தைம் புலன்கள்செற்று
மோனிகளாய் முனிச்செல்வர் தனித்திருந்து தவம்புரியு முதுகுன்றமே. ௯

(உரை) தொண்டீர் - சிவபுண்ணியத் தொண்டு செய்யும் அடியார்களே ; மேனியிற் சீவரத்தாரும் - தங்கள் உடம்பிலே அவர் ஆடையைத் தரித்திருக்கிற புத்தர்களுடனும்; விரிதருதட்டு உடையாரும் - அகலமான பனையோலைத் தடுக்கினை ஆசனமாக உடையவராகிய சமணர்களுடனும்; விரவலாகா(து) (உம்) - சேராமலும் ; ஊனிகளாய உள்ளார் - உடம்பேதாம் என்ற உணர்வுடையர்களாகிய அந்தப் புத்தர் சமணர்கள்; சொற் கொள்ளாதும் - கூறுகிற சொற்களை உங்கள் உள்ளத்திலே உண்மைகளாகக் கொள்ளாமலும்; ஞானிகளாய் உள்ளார் - அருள் நூல்களைக் கற்றுக்கேட்டுச் சிந்தித்துத்தெளிந்த மெய் அறிவு உடையவர்களும்; நான்மறையை முழுது உணர்ந்து நான்கு வேதங்களையும் ஐயம் திரிபு இன்றி அறிந்து அவைகளிற் கூறப்பட்டுள்ள முடிவான பொருளை உள்ளத்தில் உணர்ந்து ; ஐம்புலன்கள் செற்று - மெய்வாய் கண் மூக்குச் செவிகளாகிய ஐந்து பொறிகளையும் உலக விடயங்களிற் செல்ல வொட்டாது வென்று ; மோனிகளாய - உலக விடயவாதனையினின்றும் முற்றிலும் நீங்கினவர்களாய்; முனிச் செல்வர் முனிவர்களாயுள்ள அருட்செல்வர் ; தனித்திருந்து தவம் புரியும் - தனியாக இருந்து கொண்டு தவம் செய்கின்ற ; முதுகுன்றம் - திருமுது குன்றம் என்ற தலத்தில் திருக்கோயில் கொண்டருளி யிருக்கின்ற சிவபெருமானை ; உள் உணர்ந்து - உங்கள் உள்ளத்தில் வேறற ஒன்றி உணர்ந்து ; அங்கு - அவ்வுள்ளத்தில் (சிவமாம் தன்மையை அடைந்து); உய்மின் - பிறவித் துன்பத்தினின்றும் தப்பிச் சிவபெருமானுடைய திருவடி நிழலின்கண் வாழ்ந்து பேரின்பம் உடையவர்களாய்ப் பிழையுங்கள்.

(விளக்கம்) தொண்டீர் - விளிப்பெயர் - தொண்டர் என்பதிலுள்ள ஈற்றயல் அகரம் ஈகாரமாயிற்று. மேனியின் சீவரத்தார் - மேனி என்பது வடிவம். அது இங்கே

ஆகு பெயராய் உடலைக் குறிக்கிறது. சீவரத்தார் = சீவரம் + அத்து + ஆர் அத்து சாரியை, ஆர் - உயர்திணைப் பலர் பாற் படர்க்கை விகுதி; சீவரம் = வடமொழிச் சொல் சிவப்பு. அது இங்கே புத்தறவிகள் தரிக்கிற சிவப்பு ஆடையைக் குறிக்கிறது. சீவரத்தார் - சிவப்பு ஆடையைத் தரிக்கிறவர்களாகிய புத்தத் துறவிகள், விரிதருதட்டு உடையார் - விரிதரு - விரிந்த; அகலமான. தட்டு - ஆசனத்தடுக்கு; சமணர்கள் கையில் வைத்துக்கொண்டிருக்கிற பனையோலைத் தடுக்கு; சமணர்களைக் குறிக்கிறது. விரவலாகா - விரவலாகாது என்பது விரவலாகா என ஈற்று உயிர் மெய் 'து' தொக்கி நின்றது; விரவலாகாது என்பதற்குப்பின், கொள்ளாதும் என்பதிலுள்ள உம் கூட்டுக. அடியார்களல்லாதாருடைய இணக்கம் அடியார்களைச் சிவன் திருவடியை மறப்பித்து மீளவும் மலங்களில் வீழ்த்துமாதலான் புத்தர் சமணர்களுடன் விரவலாகாது என்றார். ஊனிகளாயுள்ளார் - ஊன் ஆகுபெயராய் உடலைக் குறிக்கிறது; ஊனிகள் இ - வினை முதற் பொருளை உணர்த்தும் விகுதி - உடலை உடையவர்கள், அதாவது உடலையே தாங்களாக உணரும் அறிவினை உடையவர்கள்; புத்தர்களும் சமணர்களும் தங்களிடத்தில் இறைவன் உள்ளும் புறமும் நிறைந்திருக்கிறான் என்னும் உணர்வு இல்லாதவர்களாதலின் அவர்களை அடிகள் ஊனிகள் என்றார். ஞானிகள் - மெய்ஞ்ஞானத்தை உடையவர்கள், அருளால் அறியும் மெய்யறிவு உடையவர்கள்; இரண்டாவது அடியில் ஊனிகள் என்றதற்கு மூன்றாவது அடியில் ஞானிகள் எனவும் 4-வது அடியில் மோனிகள் எனவும் நேர் எதிரிடைகளாய்க் கூறியிருத்தல் காண்க. மோனிகள் - மோனமென்பது ஞான வரம்பு என்று ஔவைப் பிராட்டியார் கூறியபடி மோனம் என்பது உயிர் விடயங்களாலும் விடயவாதனைகளாலும் சிறிதும் தாக்கப்படுதலின்றி அமைதி (சாந்தம்) பெற்று அந்த அமைதிகாரணமாக மெய் உணர்வு பெறும் நிலையைக் குறிக்கிறது. முனிச்செல்வர் - முனியாகிய செல்வர் முனிகளாகிய செல்வர்; ஒருமைப்பன்மையக்கம்; முனிதல் வெறுத்தல்; உலக விடயங்களை வெறுத்து அருளையே நிறைந்த செல்வமாக உடைய பெரியார். தனித்திருந்து-மௌனத்துக்குத் தனிமை துணையாயுள்ளது; இறைவனோடு கலந்து இன்பம் உணரும் மோனஞானிகள் தனிமையினையே விரும்புவார்கள். முதுகுன்றம் - இது திருமுது குன்றம் (விருத்தாசலம்) என்ற தலத்தில் திருக்கோயில் கொண்டருளி யிருக்கும் சிவபெருமானைக் குறிக்கிறது.

கள்ளனேன் கள்ளத் தொண்டாய்க் காலத்தைக் கழித்துப் போக்கித்
தெள்ளியே னாகிநின்று தேடினே னாடிக் கண்டேன்
உள்குவா ருள்கிற் றெல்லா முடனிருந் தறிதி யென்று
வெள்கினேன் வெள்கி நாணும் விலாவிறச் சிரித்திட் டேனே. ௧௦

(உரை) கள்ளனேன் - வஞ்சகனாகிய நான்; கள்ளத் தொண்டாய் - (நான் சமண சமயத்தி லிருந்த காலத்தில்) முன்னே, சிவபெருமானுக்கு ஆட்பட்டுத் தொண்டு செய்யாமல் பொய்யான சமணசமய ஆசிரியனா யிருந்து தொண்டு செய்தவனாய்; காலத்தைக் கழித்துப் போக்கி - (கிடைத்தற்கரிய மானிடப் பிறவி வாழ்க்கைக்) காலத்தை நல்வழியிற் பயன் படுத்தாது வீணாகப் போக்கிவிட்டு; தெள்ளியேன் ஆகி நின்று - (சிவநெறியை நான் அடைந்து சிவபெருமானால் ஆட்கொள்ளப் பெற்ற பொழுது) எனது உள்ளத்தில் விளங்கும் அருளொளியை அறியும் தெள்ளறி வுடையவனாய் நிலை பெற்று நின்று; நாடித் தேடினேன் - உலகவாழ்க்கைப் பற்றுக்களை முற்றிலும் விட்டுச் சிவபெருமானையே நினைக்கும் கருத்து உடையவனாய் அவனைத் தேடினேன்; கண்டேன் - தேடின தேட்டத்தின் பயனாக அவனை எனது உள்ளத்திலே மெய்யுணர்வினால் உணர்ந்தேன்; உள்குவார் உள்கிற்று எல்லாம் - நினைக்கிற மாந்தர்கள் தங்களுடைய உள்ளத்தில் நினைக்கின்ற கருத்துக்களை எல்லாம்; உடன் இருந்து அறிதி

என்று - அவர்களுக்கு வேறாக நின்று அறிவிப்பதுமன்றி அவர்களுட னிருந்தும் நீ அறிந்து வருகிறாய் என்று (நான் எனது தெள்ளிய அறிவினால் அறிந்த பொழுது:) வெள்கினேன் - நீ எனது உள்ளத்தி லிருப்பதை அறியாதிருந்த காலத்தில் நான் மறைவாக நினைந்த வஞ்சக் கருத்துக்களை நோக்க எவ்வாறு எனது அறியாமை இருந்தது என நினைந்து வெட்கம் அடைந்தேன்; நானும் வெள்கி விலா இறச் சிரித்திட்டேன் - நான் அவ்வாறு வெட்கம் அடைந்து எனது விலா எலும்புகள் முறிந்துவிடுமோ என்று தோன்றும் வண்ணம் பெருஞ்சிரிப்புச் சிரித்தேன்; ஆதலின் தொண்டர்களே நீங்கள் சிவபெருமானுக்கு உண்மையான தொண்டு செய்து உய்மின் என்பது குறிப்பெச்சம்.

(விளக்கம்) கள்ளனேன் - தன்மை ஒருமைக் குறிப்புவினையாலணையும் பெயர். கள்ளத் தொண்டு - வஞ்சகமான பணி; செய்தற்கு உரியதல்லாத வழியிற் செய்யப்படும் பணி. உடல் அந்தக்கரணங்களை உயிருடன் சேர்த்து வைத்தும் அக்கருவிகளின் வழியும் அருளின் வழியும் காட்டுமுதவியும் காணுமுதவியும் இடையறாது உயிர்க்கு செய்துவருகிற சிவபெருமானுக்கு உரியதாகிய மனம் வாக்குக் காயங்களாற் செய்யத்தகுந்த தொண்டை உயிர் அவ்வுண்மையை அறியாது வேறு வழியிற் செய்யப்படும் தொண்டை அடிகள் கள்ளத் தொண்டு என்றார். அடிகள் தாம் சமண் சமயத்தில் இருந்த காலத்தில் செய்த தொண்டை நினைந்து கூறுகிறார். தெள்ளியேன் - தன்மை ஒருமை குறிப்புவினையாலணையும் பெயர். தேடினேன் நாடிக் கண்டேன் - நாடுதல் தேடுதலின் பின்னும் காணுதல் தேடுதலின் பின்னும் நிகழ்கின்றன ஆதலின் தேடினேன் நாடி என்பது நாடித் தேடினேன் என மாறிவைத்துப் பொருள் கூறப்பட்டது. "(திருமாலயன்) நாடிக் காணமாட்டாத தழலாய நம்பனைத் தேடிக் கண்டுகொண்டேன்" என்று அடிகள் திருவாரூர்த் தேவாரம் 10-வது பாட்டிற் கூறியருளினமை காண்க. நாடுதல் - உள்ளத்தில் சிவனைக் கருதி நினைத்தல். தேடுதல் - ஆன்மா தன்கண் விளங்கும் ஆன்ம அறிவிற் சிவனைத் தேடுதல். காண்டல் - ஆன்மா தற்போதங் கெட்டு அருளோடு வேறற நின்று அவ்வருளால் சிவனைக் காணுதல். நாடுதல் ஆன்மதரிசனத்திலும் தேடுதல் ஆன்மசுத்தியிலும் காண்டல் சிவதரிசனத்திலும் சிவயோகத்திலும் நிகழும். நாடுதல் தேடுதல் காணுதல் மூன்றும் உள்ளத்தில் அருள்ஒளி விளங்கித் தெள்ளறிவு உண்டாயபின் நிகழ்தலால் தெள்ளியேனாகி நாடித்தேடினேன் கண்டேன் என்றார். நாடுதல் ஞானத்துச் சரியை நிலையையும் தேடுதல் ஞானத்துக் கிரியை நிலையையும் காண்டல் ஞானத்து யோகநிலையையும் குறிக்கின்றன. நாடித் தேடிக் காணுதல் சிவனை அருளால் அறியும் நெறி என்பது கூறப்பட்டது. உள்கிற்று எல்லாம் - அஃறிணை ஒன்றன்பால் படர்க்கைத் தெரிநிலை வினையாலணையும் பெயர். நினைத்த கருத்துக்களெல்லாம் ஒருமை பன்மை மயக்கம்; பால் வழு அமைதி. உடனிருந்து அறிதி - இது சிவன் ஆன்மாவுக்குச் செய்து வருகிற காணும் உதவி; காரைக்காலம்மையார் இதனை "அறிவாய் அறிகின்றான் தானே" என்று கூறி அருளினார். உள்ளத்தில் ஆன்ம அறிவோடு சென்றியைந்து அவ்வுள்ளத்தை விட்டு நீங்காதிருக்கிற சிவன், ஆன்மா தனது உள்ளத்திற் கருதுகிற பொருள்களை அறியாமலிருக்க முடியாது என்ற உண்மையைத் தாம் தெள்ளிய அறிவை அடைதற்கு முன் அறியாதிருந்ததற்கு வெட்கம் அடைந்ததாக அடிகள் கூறுகின்றார். நானும் - உம் - அசை. சிரித்திட்டேன் - இடு - துணை - வினை - பகுதிப்பொருள் விகுதி. சிரித்தேன். முறுவலித்தல், அளவிற் சிரித்தல், பெருகச் சிரித்தல் என்னும் மூவகைச் சிரிப்புக்களில் இது பெருகச் சிரித்தல்; அறியாமை காரணமாக வந்த வெட்கத்தின் மெய்ப்பாடு.

நிலையாய நின்னடியே நினைந்தே னினைதலுமே
தலைவா நின்னினையப் பணித்தாய்சல மொழிந்தேன்.

சிலையார் மாளிகை சூழ்திரு மேற்றளி யுறையும்
மலையே யுன்னையல்லால் மகிழ்ந்தேத்த மாட்டேனே. சூக

(உரை) தலைவா - எனது ஆண்டவனே ; நின்அடியே - நினது திருவடிகளையே ; நிலையாய் நினைந்தேன் - (எனது உள்ளம் மண் முதல் கலை இறுதியாகவுள்ள பிரகிருதி மாயை அசுத்த மாயா தத்துவங்களிலும் புவனங்களிலும் அடையத்தக்க விடயபோகப் பற்றுதலொழிந்து துவந் துவத்தன்மை கெட்டுத் தூய்மை அடைந்து நினது அருளொளியுடன் கூடி நிற்கும் நிலையில்) நினைப்பும் மறப்புமின்றி நான் நின்னையே எப்பொழுதும் ஒரு தன்மையதாய் நினைந்துகொண்டிருந்தேன் ; நினைதலும் அவ்வாறு நான் நின்னையே எப்பொழுதும் நினைந்துகொண்டிருக்கிற நிலையை அடைந்தபொழுது; நின் நினையப்பணித்தாய் - நான் நினைக்கின்றேன் என்ற தற்போதமும் எனக்கு இன்மையால் நீ எனது அறிவு வேட்கை செயல்களை எல்லாம் நினது வியாபக அறிவு வேட்கை செயல்களுக்குள் அடங்கச்செய்து என்னை உனது ஆளாக ஏற்றுப் பணி கொண்டருளினாய்; சலம் ஒழிந்தேன் - அதனால் நான் இருவினைத் துவந்துவங்களால் சிறிதும் தாக்கப்பட்டு விகாரம் அடையாது ஒரு தன்மைத்தாகிய அமைதி பெற்று எனது உள்ளத்தில் நின்னையே உணரும் பேரின்ப உணர்வைப் பெற்றேன் ; சிலையார் மாளிகை சூழ்திருமேற்றளி யுறையும் மலையே - (ஆதலால்) கற்களினால் கட்டப்பட்ட வீடுகள் சூழ்ந்திருக்கிற திருமேற்றளி என்ற தலத்தில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் அருள்மலையே ; உன்னை அல்லால் மகிழ்ந்தேத்தமாட்டேன் - உன்னையன்றி வேறொரு தெய்வத்தை நான் உள்ளம் உவந்து துதிக்கமாட்டேன் ; அடியார்களே நீங்களும் திருமேற்றளி உறைகின்ற சிவபெருமானுடைய திருவடிகளையே நினைந்து உய்மின் என்பது குறிப்பெச்சம்,

(விளக்கம்) தலைவா - தலைவா என்று முதலாவது அடிகள் சிவபெருமானை விளித்தது "உன்னை நான் பணிதல் என் கடன் நீ என்னைக் காத்தல் உன்கடன்" என்பது குறிப்பிடப்பட்டது - தலைவன் என்ற சொல் ஆண்டான் அடிமைத் தொடர்பைக் காட்டுகிறது. நின் அடியே-ஏ தேற்றம். நிலையாய் நினைந்தேன்-ஆன்மா துவந் துவங்களினின்று (Pairs of opposites) நீங்கியும் பொருட்பற்று உயிர்ப் பற்றுக்கள் நீங்கியும் தன் முனைப்புக் கெட்டு மல இருள் நீங்கியபொழுது சிவபெருமானே தனக்கு உண்மையில் நிலையான பற்றுவான் என உணர்ந்து அவனைப் பற்றும்பொழுது நினைப்பும் மறப்புமற்ற சிவயோக நிலை உண்டாகிறது. அந்த நிலையை நினைந்து சுந்தரமூர்த்தி அடிகள் நின்னடியே நிலையாய் நினைந்தேன் என்றார். அடி என்பது திருவருளைக் குறிக்கிறது. "சட்டோ நினைக்க அமுதாம் கெட்டேன் மறப்பேனோ கேடுபடாத் திருவடியை" என்று மாணிக்கவாசக அடிகள் கூறி அருளினமை காண்க. திருநாவுக்கரசு அடிகள் மேலே 41வது பாட்டில் "வஞ்சனே னினி நான் மறக்கிற்பனே" என்று கூறி யருளினார். நிலையாய் என்ற சொல்லில் மேலே 51வது பாட்டில் "புலன்களைப் போக நீக்கிப் புந்தியையொருங்கவைத்து இனங்களைப் போகநீக்கி இரண்டையும் நீக்கி யொன்றாய் மலங்களை மாற்ற வல்லார்" என்ற இரண்டரை வரிகளிலுள்ள கருத்துக்களும் அடங்கி யிருக்கின்றன. பொறிகளைப் புலன்களிற் போகாது நீக்கியும் புந்தியையும் அதன் இனங்களையும் ஒடுக்கியும் ஆன்மா விடயபோகத்தில் அறவே செல்லாதிருந்தாலொழிய அதற்கு சிவனை நிலையாக நினைக்கும் நினைப்பு உண்டாகாது. நின்நினையப்பணித்தாய் - பணித்தல் அருள்செயல் இந்தச் சொற்றொடரால் குறிக்கப்பட்ட பொருள் மேலே 49-வது பாட்டில் "உணரப்படுவார்" என்ற சொல்லாற் குறிக்கப்பட்டிருத்தல் காண்க. சலம் ஒழிந்தேன் - மேலே 51-வது பாட்டில் மனத்திடைப் போகமாகிச் சினங்களை மாற்றவல்லார் என்ற தொடர்களாற் குறிக்கப்பட்ட பொருளும் 49-வது பாட்டில் உணரப்படுவாரோ

பொட்டி வாழ்தி என்ற சொற்றொடராற் குறிக்கப்பட்ட பொருளும் இப்பாட்டில் "சலமொழிந்தேன்" என்று கூறியவாற்றாற் குறிக்கப்பட்டிருத்தல் காண்க. 51-வது பாட்டின் கீழ்க் கூறப்பட்ட குறிப்பு உரைகளை இதற்குங் கொள்க. சலம் ஒழிதலின் பயன் உள்ளத்தில் சிவபோக உணர்வு பெறுதல் ஆதலால் பேரின்ப உணர்வு பெற்றேன் என்று உரை செய்யப்பட்டது.

> அஞ்ச வருவாரும் தொழுவிப்பாரும் வழுவிப்போய்
> நெஞ்சம் புகுந்தென்னை நினைவிப்பாருமுனை நட்பாய்
> வஞ்சப்படுத் தொருத்தி வாணாள் கொள்ளும் வகைகேட்
> டஞ்சும் பழையனூ ராலங்காட் டெம்மடிகளே. ௧௨

(உரை) அஞ்சவருவாரும் - (எனது ஐம்பொறிகளும் அந்தக் கரணங்களும் தங்கள் இனங்களுடன் உலக போக விடயங்களிற் செல்லும் பற்று) முற்றிலும் கெடுதலால் எனது உள்ளத்தில் பேரொளியாய் விளங்கித் தோன்றுகிறவரும்; தொழுவிப்பாரும் - (அவ்வாறு பேரொளியாய் விளங்குகிற காரணத்தால் எனது அறிவு வேட்கை செயல்களைத் தமது அறிவு வேட்கைச் செயல்களின் வியாபகத்துள் அடங்கச் செய்து) தற்போதமின்றித் தம்மை வணங்கும்படி என்னைச் செய்கிறவரும்; நெஞ்சம் புகுந்து என்னை நினைவிப்பாரும் - அவ்வாறு நான் தற்போதம் கெட்டுத் தமது அருள் வியாபகத்தில் அடங்கி நிற்க எனது உள்ளத்தில் விளங்கி மேலிட்டு நின்று தம்மையே என்னை நிலையாக நினைக்கும்படி செய்கிறவரும்; முனை - முன் ஒருநாள்; ஒருத்தி - நீலி என்னும் ஒருமாயப் பெண்; நட்பாய் வஞ்சப்படுத்து - (எழுபது வேளாளரை) நட்புச் செய்து (தன்னோடுகூட வந்த வணிகன் தனது கணவன் என்றும் அவனைத் தன்னுடன் கலந்திருக்கும்படி செய்தால்தான் அவனுக்கு ஊறு ஒன்றுஞ் செய்வதில்லை என்றும் அவர்களிடம் உறுதி மொழி கூறி அதனை நம்பும்படி அவர்களை) வஞ்சித்து; வழுவிப் போய் வாழ்நாள் கொள்ளும் வகை கேட்டு - (அவ்வெழுபது வேளாளரும் அவனுக்காக அவ்வணிகனுடம் பிணைக்கொடுக்க அவன் உடன்பட்டு அவளோடு அன்றிரவு கலந்திருந்த பொழுது) பின் தான் செய்த உறுதி மொழியினின்றும் தவறி (அன்றிரவில்) அவனது உயிரைக் கொன்ற செய்தியைக் கேட்டு; அஞ்சும் பழையனூர் ஆலங்காட்டு எம் அடிகள் - அவர்கள் அஞ்சித் தாங்கள் செய்த வாய்மையைக் காக்கத் தீக்குழியில் விழுந்து இறந்த பெருந்தகைமைச் சிறப்பு வாய்ந்த பழையனூரைச் சேர்ந்த திருவாலங்காட்டில் திருக்கோயில் கொண்டிருக்கும் சிவபெருமானவர்.

(விளக்கம்) இப்பாட்டு - திருஞானசம்பந்த அடிகள் காரைக்காலம்மையார் தலையாலே நடந்து சென்று வணங்கின திருவாலங்காட்டைக் காலினால் மிதிக்க அஞ்சி அவ்வூருக்கு அணிமையிலுள்ள ஒரூரில் இரவு தங்கியிருந்தபொழுது சிவபெருமான் அவரது கனவிலே தோன்றி "ஆலவனத்தமர்ந்தருளும் அப்பராகிய நம்மைப் பாடுதற்கு அயர்த்தனையோ" என்று கூற, விழித்தெழுந்து பாடிய தேவாரப் பதிகத்தின் முதலாவது பாட்டு. இந்நிகழ்ச்சிக்கு ஏற்ப "அஞ்ச வருவார்" என்பதற்கு நான் உறங்கும் பொழுது என்கனவிலே தோன்றுகிறவரும் என்றும் "தொழுவிப்பாரும்" என்பதற்குக் கனவிலே கூறிய ஆணையால் திருவாலங்காட்டுக் கோயிலுக்குப் போய்த் தொழும்படி செய்கிறவரும் என்றும் "நெஞ்சம் புகுந்தென்னை நினைவிப்பாரும்" என்பதற்கு அவ்வாறு நான், தொழுதலால் எனது உள்ளத்தில் அருளொளியாய் விளங்கித் தம்மை எப்பொழுதும் என்னை நினைக்கும்படி செய்கிறவரும் என்றும் பொருள் கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு பொருள்கொள்ளுதல் புற வழிபாடுபற்றிப் பொருத்தமாயிருப்பினும் பதவுரையிற் கூறப்பட்ட பொருள் அக வழிபாடுபற்றிப் பொருத்தமுடைத்து.

சிவபெருமானால் ஞானப்பால் கொடுத்து ஆட்கொள்ளப்பெற்று நான்குவகை அருள் ஞானங்களையும் அடைந்த அடிகள், சிவபெருமான் திருவடிகளை ஒருகணமேனும் மறந்திருந்ததாகக் கூறுதல் சிறிதும் பொருந்தாது; மற்றென்னையோ எனின் அடிகள் திருவாலங்காட்டுக் கோயிலுக்குப் போய்த் தொழுது பாடத் தமது உள்ளத்திலொரு காரணம்பற்றிக் குறிக்கொள்ளாதிருந்ததற்காகவே சிவபெருமான் அவர் கனவிலே தோன்றி அறிவித்தார் என்று கொள்ளுதலே பொருத்த முடைத்து. பதவுரையிற் கூறப்பட்ட பொருள்கொள்ளாக்கால் இப்பாட்டு அறியும் நெறியின் கீழ் வைக்கப்படுதற்கு இடமில்லை. அடிகள் பக்குவமுள்ள ஆன்மாக்கள் அடையும் அநுபவ நிலையைத் தம்மேலேற்றிக் கூறி அருளினர் என்று நாம் கொள்ளல்வேண்டும். அறியும் நெறியின் கீழே பல பாட்டுக்களிற்போல இப்பாட்டிலும் (1) ஆன்மா தனது பொறிபுலன் காணமெல்லாம் ஒடுங்கித் தற்போதங் கெட்டு நிற்கிற நிலையும் (2) தற்போதம் கெட்ட ஆன்மாவைச் சிவபெருமான் தமது திருவடி வியாபகத்துள் அடக்கும் நிலையும் (3) சிவபெருமான் அந்த ஆன்மாவுடன் வேறறக் கலந்து சிவபோக இன்பம் உணரச் செய்யும் நிலையும் கூறப்பட்டுள்ளன. மேலே 55-வது பாட்டில் "நம்பனை நாவொருகால் - துஞ்சிடைக் கண்டுக் கனவின்றலைத் தொழுதேற்கவன்றன் - நெஞ்சிடை நின்றகலான் பல்காலமு நின்றனனே" என்று கூறப்பட்ட மூன்று நிலைகளும் இப்பாட்டினும் கூறப்பட்டுள்ளன. சொற்களும் கூட ஏறக்குறைய ஒத்திருக்கின்றன. இதே மூன்று நிலைகளும் ஞானத்து யோகம் கூறுகிற சிவஞானபோதம் 10-வது சூத்திர வெண்பாவில் "நானேனவோன் - நில்லென்றுதானே யெனுமவனைத் தன்னடி வைத் தில்லென்று தானுமிறை" என்று கூறியிருத்தல் காண்க. அஞ்ச வருவார் - காரணகாரியப் பொருளில் வந்தது மழைபெய்யக் குளம் நிறைந்தது என்றாற்போல. அஞ்ச - அஞ்சுதலால் இறந்த காலம். அஞ்சுதல் - கெடுதல்; உறங்கல். வருவார் - அருளொளியாய உள்ளத்தில் விளங்குகிறவர்; தோன்றுகிறவர். முன்னைய பொருள்கள் புறவழிபாட்டுக்கும் பின்னைய பொருள்கள் அகவழிபாட்டுக்கும் கொள்க. தொழுவிப்பார் - திருவடி வியாபகத்தில் அடங்கச் செய்தல் தொழுவித்தலாகும். தற்போதம் கெட்ட ஆன்மாவுக்குத் தனதுசெய லொன்றுமின்மையால் தொழுவிப்பார் என்று பிறவினையாற் கூறினர். நெஞ்சம் புகுந்து என்னை நினைவிப்பார் - புகுதல் - நிலையாய் விளங்கி நிற்றல். சிவபெருமானது திருவடி வியாபகத்துள் அடங்கி நிற்கப்பெற்ற ஆன்மாவுக்குத் தனக்கென அறிவு வேட்கை செயல்களின்மையால் என்னை நினைவிப்பார் என்றார். முனை ஒருத்தி கட்பாய வஞ்சப் படுத்து வழுவிப்போய் வாணாள் கொள்ளும் வகைகேட் டஞ்சும் பழையனூர் என்று உரைநடை செய்க. முனை - முன்னை என்ற சொல் முனை எனத் திரிந்தது. வஞ்சப்படுத்து வஞ்சம்+படுத்து. வஞ்சனைக்குள் அகப்படுத்து அதாவது வஞ்சித்து. வாணாள் கொள்ளும் வகை - வாழ்+நாள் வாணாள் உயிர் உடலோடு கூடிநின்று வாழும் நாள். வாணாள் கொள்ளுதல் - உடலினின்றும் உயிரைப் பிரித்தல். வகை வகுக்கப்படுவது; வகுத்துக் கூறப்படுவது. அது இங்கே, வாணாள் கொண்டாள் என்ற செய்தியைக் குறிக்கிறது. அஞ்சும் பழையனூர் - ஊரிலிருக்கிறவர்கள் அஞ்சுதல் ஊர் மேலேற்றி உரை செய்யப்பட்டது. வருவார், தொழுவிப்பார், நினைவிப்பார் மூன்றும் பயனிலைகள்; அடிகள் - எழுவாய்.

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய வாரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்

அன்னையையும் அத்தனையு மன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தா ராசா ரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் றாளே. ௫௩

(உரை) நங்கை - பெண்ணிற் சிறந்தவள் ஆகிய தலைவி; முன்னம் - முதலாவது: மூர்த்தி அவனுடைய நாமம் கேட்டாள் - (கண் கவரும் வனப்பு வாய்ந்த) தன் தலைவனுடைய உருவத்தைப் பார்த்து அவனுடைய புகழை அறிந்தாள்; அவன் இருக்கும் வண்ணம் கேட்டாள் - (பின்னர்) அவனிடத்திலுள்ள குணங்கள் இன்னஎன அறிந்தாள்; பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள் - அதன்பின் அவன் வாழும் ஊர் திருவாரூர் என அறிந்தாள்; பெயர்த்தும் - (முன் களவொழுக்க காலத்தில் அவனிடத்தில் மயல் கொண்டதுபோல) கற்பொழுக்கம் பூண்ட பின்னும்; அவனுக்கே பிச்சி ஆனாள் - அவனிடத்திலே மயக்கம் கொண்டு அயரா அன்பை உடையவளானாள்; அன்றே - (தலைவனிடத்தில் மயக்கங்கொண்டு அயரா அன்பு உடையவளான) அப்பொழுதே; அன்னையையும் அத்தனையும் நீத்தாள் - (முன்னே தனக்குத் துணையாகச் சார்பு வைத்திருந்த) தாய் தந்தையர்களையும் (பிற உறவினர்களையும்) துறந்தனள்; அகலிடத்தார் ஆசாரத்தை அகன்றாள் - பரப்பான உலகத்திலுள்ளவர்களுடைய இற்செறிதல் நாணுடைமை முதலிய கட்டுப்பாட்டு ஒழுக்கங்களை எல்லாம் நீங்கினாள்; தன்னை மறந்தாள் - (முன் தன் பெற்றோர்களிடமிருந்தபொழுது) தான் இன்னாள் எனக் கொண்டிருந்த நினைப்பும் இல்லாதவளானாள்; தன் நாமம் கெட்டாள் - அந் நினைப்பினால் உண்டாயிருந்த செயல் புகழ் முதலியவற்றையும் மறந்தனள்; தலைவன்தாள் தலைப்பட்டாள் - தன்னுடைய தலைவனையே சார்பாக்கொண்டு அவனுடைய அன்பாகிய காவலின்கீழ் வந்து பொருந்தினள்.

(விளக்கம்) இந்த அருமையான தேவாரப்பாட்டு இருவினையொப்பும் மலபரிபாகமும் சத்திநிபாதமும் அடைந்த ஒருயிர் சிவபெருமானது உண்மை இயலை (சொருப இலக்கணத்தை) மெய்யுணர்வினால் உணர்ந்து அறிந்து உயிர்ப்பற்றுப் பொருட்பற்றுக்களை முற்றிலும் விட்டு தன்முனைப்புச் சிறிதுமின்றி, தன் அறிவு செயல் முற்றிலும் கெட்டு, சிவபெருமானுடைய திருவருளில் இரண்டறக்கலந்து பேரின்பம் அடைந்தது என்ற உண்மையைத் தலைவி தலைவன் என்னும் உருவகத்தில்வைத்துக் கூறுகின்றது. மேலே கூறியபதவுரை உருவக உவமைக்குப் பொருந்தக் கூறப்பட்டது. விளக்க உரையில் அவ்வுரை உருவகப் பொருளுக்கும் (உவமேயப் பொருளுக்கும்) பொருந்தும்படியாயும் கூறப்படும். இவ்வாறு உருவகம் செய்து கூறுதல் அகப்பொருள் என்று கூறப்படும். அகப்பொருள் என்பது ஒருவன் உள்ளத்தினுள்ளே நிகழ்ந்து அவனால் உணர்ந்து அறியப்படும் இன்பமாகிய பொருள். அகம் ஆகு பெயராய் அகத்தில் நிகழும் இன்பம் எனப் பொருள் பட்டது. இன்பம் இருவகை. ஒன்று உலகப்பொருளில் பற்று வைத்து உலக நுகர்வை நுகரும் சிற்றின்பம் (உலக போகம்); மற்றொன்று சிவப்பொருளில் பற்று வைத்து அச்சிவத்தை நுகரும் பேரின்பம் (சிவபோகம்.) சிற்றின்பமாயினும் பேரின்பமாயினும் இன்பமானது ஒருவரால் தன்னுள்ளே உணர்ந்து அறியப்படும் தன்மையுடையது; பிறர் அதனைச் சொல்லக்கேட்டு அறியப்படுந்தன்மை உடையதன்று. வெல்லத்தை முன் சுவைத்து அறிந்த ஒருவனே "வெல்லம் இனிப்பாயிருக்கிறது" என்று பிறனொருவன் தன்னுணர்வினால் அறிந்ததைச் சொல்லக்கேட்டு அறிதல் முடியும். அதுபோல பேரின்பத்தை நுகர்ந்து உணர்ந்து அறிந்த பெரியோர்கள் அதனை உணர்ந்து அறியாத உலக மக்களுக்கு அவர்கள் பேரின்பம் இன்னது என ஒருவாறு துவக்கத்தில் அறியும்படி அவர்களுக்குப் பழக்கமாயுள்ள நெறிப்பட்ட சிற்

றின்ப நிலையில் உயிரைத் தலைவியாகவும் சிவபெருமானைத் தலைவனாகவும் உருவகம் செய்து கூறுதலே அகப்பொருட்டுறையில் வைத்துக் கூறுதலாகும். மாணிக்கவாசக சுவாமிகள் திருக்கோவையார் என்ற நூலை அகப்பொருட்டுறையில் வைத்துப் பாடியருளினர். சமயாசாரிகள் நால்வரும் தேவார திருவாசகங்களில் பல பாட்டுக்கள் அகப்பொருள் குறித்துப் பாடி யிருக்கிறார்கள். திருநாவுக்கரசு சுவாமிகள் பாடிய பல அகப்பொருட் பாட்டுக்களில் இப்பாட்டு ஒன்று. இவ்வாறு அகப்பொருளிற் பாடும் நூல் வழக்கு தமிழருக்கே உரியது. அகப்பொருளைக் கூறும் பொருளிலக்கணமும் தமிழ் மொழியிலன்றி ஆரியம் முதலிய வேறு எம்மொழியிலும் கிடையாது. சிவபெருமான் தலைவனாகவும் உயிர் தலைவியாகவும் வைத்து உருவகம் செய்ததற்குக் காரணங்கள் உளவோவெனிற் கூறுதும். (1) சிற்றின்பத் துறையில் பாயுஞ்சத்தியுடைய தலைவன் (positive element) தாங்குஞ் சத்தியுடைய தலைவிக்கு (negative element) இன்பங் கொடுத்தல்போல் பேரின்பத்துறையில் வரம்பில் இன்பமுடைய சிவபெருமான், ஒன்றைச் சார்தலும் சார்ந்தவண்ணமாதலும் இயற்கையாக்வுடைய உயிருக்குப் பேரின்பம் கொடுக்கின்றவனா யிருக்கிறான். தலைவி தலைவனுடன் அன்பினால் ஈருடல் ஒருயிரெனச் சார்ந்து கலத்தலினால் சிற்றின்பமடைதல் போல உயிர் அயரா அன்பினால் சிவபெருமானைச் சார்ந்து அவனுடன் இரண்டற (அத்துவிதமாக)க் கலத்தலினாலே பேரின்பம் அடைகிறது. சைவசித்தாந்த உண்மைக்கூறாகச் சத்தி சிவத்தில் ஒடுங்குதல் போலச் சத்தியின் கூறாகிய பெண் சிவத்தின் கூறாகிய ஆணில் ஒடுங்குதல் வேண்டும்; ஒடுக்கநிலையில் சத்தியும் சிவமுஞ் சேர்ந்து ஒரு பொருளாதல் போலப் பெண்ணும் ஆணும் சேர்ந்து ஒரு பொருளாகின்றன. சாரப்பட்ட பொருள் சிவத்தின் கூறாகிய ஆண்; சாரும்பொருள் சத்தியின் கூறாகிய பெண் ஆகும். உலக வழக்கில் பெரும்பான்மையும் பெண் ஒருத்தியே “அறிவுமிக்க நன்னாணமு நிறைமையு மாசையு மிங்குள்ள—உறவும் பெற்ற நற்றாயொடு தந்தையுமுடன் பிறந்தவரோடும்—பிரியவிட்டு” ஆண் ஒருவனை அடைந்து “உனை அடைந்தனன் என்று கொள்” என்று கூறி அவனுடைய இல்லத்தில் இல்லாளாக அமைந்து இன்புறுகின்றாள். 1 தன்னை மறந்தாள். 2 தன் நாமங் கெட்டாள். 3 தலைவன்தாள் தலைப்பட்டாள் மூன்றும் முறையே ஒன்றினுக் கொன்று ஏதுவும் பயனுமாய் அமைந்திருக்கின்றன. உயிர், தன்னை மறத்தலும் தன் நாமங் கெடுதலும் முறையே சிவஞானபோதம் ௧௦-வது சூத்திரத்திற் கூறப்பட்ட “ஏகனாதலையும்” “இறைபணி நிற்றலையும்” தலைவன் தாள் தலைப்படல் மேற்படி ௧௧-வது சூத்திரத்திற் கூறப்பட்ட “அரன்கழல் செல்லுதலையும்” குறிக்கின்றன. இப்பாட்டில் முன் கூறப்பட்ட 1 அவன் நாமம் கேட்டல், 2 அவனிருக்கும் வண்ணம் கேட்டல், 3 அவனுடைய ஆரூர் கேட்டல் மூன்றும் முறையே ஒன்றனுக்கொன்று ஏதுவும் பயனுமாய் அமைந்திருத்தலையும் பின் கூறப்பட்ட 1 தன்னை மறந்தாள். 2 தன்நாமம் கெட்டாள், 3 தலைவன்தாள் தலைப்பட்டாள் மூன்றும் முறையே ஒன்றனுக்கொன்று அவ்வாறே ஏதுவும் பயனுமாய் அமைந்திருத்தலையும் முன் கூறப்பட்ட நாமம் வண்ணம் ஆரூர் மூன்றும்ஆண்டவனாகிய சிவபெருமானுக்கு உரியனவாயும், பின் கூறப்பட்ட தன்னை மறத்தல் தன் நாமம் கெடுதல் தலைவன் தாள் தலைப்படுதல் ஆகிய மூன்று பயன்களும் அடிமையாகிய உயிர் அடைதற்கு உரியனவாயும், உயிர் முன் கூறப்பட்ட சத்துச் சித்து ஆநந்தத் தன்மைகளை உடைய சிவபெருமானைச் சேர்ந்து பின்கூறப்பட்ட மூன்று பயன்களையும் இதுகாறும் அடையவொட்டாமல் இடையிலே இடையீடாக நின்று தடுத்துக்கொண்டிருந்த பொல்லாத ஆணவமலத்தாலுண்டாகிய உயிர்ப்பற்று பொருட்பற்றுக்களை இந்த இரண்டு திரயங்களுக்கும் இடையிலே வைக்கப்பட்டிருத்தலையும் சிவநேயச் செல்வர்கள் உற்று நோக்கி உள்ளி உள்ளம் கரைந்து உருகிப் பெருகி உவட்டா இன்பம் தெவிட்டாமல் அடைவார்களாக. ஆ! இப்பாட்டின் அருமைதான் என்னே என்னே !!

வன்னாக நாண் வரைவில்லங்கி கணை யரிபகழி
தன்னாக முறவாங்கிப் புரமெரித்த தன்மையனை
முன்னாக நினையாத மூர்க்கனேன் ஆக்கைசுமந்
தென்னாகப் பிரிந்திருக்கேன் என்னாரூர் இறைவனையே. ௯௪

(உரை) வல்நாகம் - வலிய பாம்பாகிய ஆதிசேடனை (வில்லிலே கட்டும்) கயிறாக வும்; அரிபகழி - திருமாலை அம்பாகவும்; ஐகண் அங்கி - அழகிய கண்ஆகிய நெற்றிக் கண்ணைத் தீயாகவும் கொண்டு; வரைவில் - மகாமேருமலையாகிய வில்லை; தன் ஆகம் உற வாங்கி - தனது உடலிலே பொருந்தும்படி வளைத்து; புரம் எரித்த தன்மையனை - (தேவர்களைக் காக்கும்பொருட்டு அவர்களுக்குத் தீங்கு இழைத்துக்கொண்டு வந்த) திரிபுர அசுரர்களை எரித்த ஆற்றல் உடையவனும்; என் ஆரூர் இறைவனை - எனக்குப் பல இன்பநலங்கள் தந்தருளிய திருவாரூர்ப் புற்றிடங் கொண்டானுமாகிய சிவ பெருமானை; ஆக்கை சுமந்து - இந்த உடற்சுமையைத் தாங்கிக்கொண்டு; முன்னாக நினையாதிருந்த மூர்க்கனேன் - (திருவாரூரை விட்டுத் திருவொற்றியூருக்கு வந்து சங் கிலியை மணந்து அங்கே வாழ்ந்துகொண்டிருந்த) பலகாலமாக நினைந்து வழிபாடு செய்யாதிருந்த அறிவிலியாகிய நான்; என் ஆகப் பிரிந்திருக்கேன் - என்ன கதி அடைய இன்னமும் எவ்வளவு காலம் பிரிந்து திருவொற்றியூரில் இருப்பேன்?

(விளக்கம்) சுந்தரமூர்த்தி அடிகள் தாம் சங்கிலிநாச்சியாரை மணந்து திரு வொற்றியூரிலிருந்து 'காலங்கள் பல' சென்றபின் திருவாரூர்ப் புற்றிடங்கொண்ட பெருமானை நினைந்து அங்குச் சென்று அவரைக்கண்டு புறவழிபாடு செய்தல் வேண் டும் என்ற கருத்துத் தமது உள்ளத்தில் எழுந்தபொழுது, பாடிய திருப்பதிகத்தின் ஆறாவது பாட்டு இது. கணை அங்கி - ஐகண் அங்கி என மாறுக. வில் அம்புகளிருப்பி னும் சிவபெருமானது நெற்றிக்கண்ணிலிருந்து எழுந்த தீ திரிபுரத்தை எரித்ததனால் 'அங்கிகணை' என்றார். திரிபுரம் எரித்த தன்மையனை - சிவபெருமான் திரிபுரம் எரித்த வரலாறு அடியார்களுடைய ஆணவம் கன்மம் மாயை ஆகிய மும்மலங்களையும் கெடுத்த மையைக் குறிக்கிறது. "அப்பணி செஞ்சடை ஆதிபுராதனன், முப்புரஞ்செற்றனன் என் பர்கள்மூடர்கள், முப்புரமாவது மும்மலகாரியம், அப்புரமெரித்தமையாரறிவாரே" என்று திருமூலர் 343-வது திருமந்திரப்பாட்டிற் கூறியிருத்தல்காண்க. முன்னாகநினையாத மூர்க் கனேன்-முன்னாக என்பதனால் சுந்தரமூர்த்தி அடிகள் தாம் திருவொற்றியூரில் சங்கிலி யாரைமணந்து அவரோடு வாழ்ந்துசென்ற நெடுங்காலத்தைக் குறிப்பிடுகின்றார். சேக் கிழார் அடிகள் பெரிய புராணத்தில் "காலங்கள் பல முறைமையினால் அகல" என்று கூறுகின்றார். ஆக்கை சுமந்து-என்பதனால், இந்த உடலோடு கூடியநான், திருவாரூர்ப் புற்றிடங்கொண்ட பெருமானால் பல இன்பநலங்களை அடைந்திருக்கின்றமையால், அவரை நினைந்து வழிபடாது திருவொற்றியூரிலிருத்தல் சிறிதும் தகாது என்பது குறிப்பிடப்பட்டது. என் ஆகப் பிரிந்திருக்கேன் - இதனால் அடிகள் தமது பிரிவாற் றாமையைக் கூறுகின்றார். பிரிந்திருந்தால் நான் என்ன கதி அடைவேனோ என்று அவர் தமது பிரிவாற்றாமையைக் கூறுகின்றார். பிரிந்திரு+க்+க என் - பிரிந்திருக் கேன் - தன்மை ஒருமை எதிர்காலவினை முற்று - க காலொற்று எதிர்கால இடைநிலை.

தன்னாகத் தேனாகித் தூர்ச்சனவர் சொற்கேட்டுத் தவர்வாய்க்கொண்டு
என்னாகத் திரிதந் தீங்கிருகை யேற்றிடவுண்ட எழைமையேன் நான்
பொன்னாகத் தடியேனைப் புகப்பெய்து பொருட்படுத்த வாரூரரை
என்னாகத் திருத்தாதே ஏதன்போர்க்காதனாய் அகப்பட்டேனே. ௯௫

(உரை) துன்ஆகத்தேன் ஆகி - (மலஇருள்) செறிந்திருக்கின்ற உடலை உடையவனாகி; துர்ச்சனவர் சொற்கேட்டு - தீயவர் ஆகிய சமணர்கள் எனக்குச் சொன்ன சொற்களைக்கேட்டு (அவைகளின்படி ஒழுகி); துவர் வாய்க்கொண்டு - சிவப்பு நிறம் பொருந்திய வாயுடனே; என்னாகத் திரிதந்து - என் இட்டப்படி திரிந்து; ஈங்கு - இவ்வுலகில்; இருகை ஏற்றிட உண்ட ஏழையேன் நான் - இரண்டு கைகளையும் ஏந்திப்பிச்சைச் சோறுவாங்கி உண்ட அறிவில்லாதவனாகிய நான்; அடியேனைப் பொன் ஆகத்துப் புகப்பெய்து - (கேவலத்தில் ஆணவமலத்தினால் கட்டுண்டு அறியாது கிடந்த) அடிமையாகிய என்னை (அறியாமையினின்றும் நீங்கிப் பேரின்பமடையுமாறுசகலத்தில்) பெறுதற்கரியமானிட உடலிற் பொருந்தி வாழும்படி செய்து - பொருள்படுத்த ஆரூரரை - அதனால் ஒரு பொருட்டாக மதித்திருக்கும் திருவாரூரில் எழுந்தருளி யிருக்கின்ற புற்றிடங்கொண்ட பெருமானை; என் ஆகத்து இருத்தாது; என்து மனதில் வைத்து நினையாமல்; ஏதன்போர்க்கு - பஞ்சக் கிலேசங்களுடன் கூடிய பும்சத்துவமலமாகிய குற்றமுடைய புருடன் என்னுடன் (ஆன்மாவுடன்) செய்கின்ற போராட்டத்துக்கு; ஆதனாய் அகப்பட்டேன் - (அதனை எதிர்த்துவெல்லும் வலியில்லாத) அறிவிலியாய் அகப்பட்டுத் திகைத்தேன்.

(விளக்கம்) துன்ஆகத்தேன்ஆகு - துன்=நெருங்கிய, செறிந்திரிக்கின்ற பிரகிருதி மாயை அசுத்த மாயைகளுக்குச் சேர்ந்த தத்துவங்களாலாகிய உடல் மலஇருள் செறிந்திருக்கின்ற உடல் ஆகலின் 'துன்ஆகம்' என்றார். சுத்த மாயா தத்துவங்கள் அவைகளுடன் கலந்திருந்தாலும் சுத்த மாயா தத்துவங்கள் விளங்காது அடங்கியிருப்ப, அவை மேவிட்டு நிற்றலால், உடலில் மல இருள் செறிந்து நிற்கிறது. மல இருள் செறிந்திருக்கின்ற உடல் அதாவது சுத்த மாயா தத்துவ ஒளிவிளங்காத உடல். துவர்வாய்க்கொண்டு - துவர் - சிவப்பு. துவர்வாய் - பாக்குத் தின்றதனால் உண்டாகிய சிவப்பு வாய். சமணர்கள் பாக்குத் தின்பதைத் திருஞானசம்பந்த அடிகள், திருமருகல் - திருச்செங்காட்டங்குடித் தேவாரப்பதிகம் 9-வது பாட்டில் "இலைமருதே யழகாக நாளும் இடுதுவர்க்காயோடு சுக்குத் தின்னும் நிலை அமண்" என்று கூறியருளினார். பொன்ஆகத்து - பொன் - உலோகங்களில் விலையுயர்ந்த உலோகம். அது இங்கே 'பெறுதற்கரிய' என்ற பொருள்பட நின்றது. மானிட உடற்பிறவி பெறுதற்கரியது ஆகலின் 'பொன் ஆகம்' என்றார். என்ஆகத்து இருத்தாது - ஆகம் என்பது இங்கே மனம் என்ற பொருள்பட நின்றது - இருத்தாது - வைத்துத் தியானம் செய்யாது. சிவபெருமானை மனதிலே தியானம், சிவோகம் பாவனை செய்தல் மலத்தைக் கெடுத்து அருள் ஒளி விளங்கச் செய்யும் ஆகலின் 'என் ஆகத்திருத்தாது' என்றார். இருத்தாதே என் பதிலுள்ள ஏ - அசை. ஏதன்போர்க்கு ஆதனாய் அகப்பட்டேன் - ஏதம்=குற்றம். ஏதன்=குற்றத்தை உடையவன். அது இங்கே பஞ்சக் கிலேசம் என்னும் பும்சத்துவமலமாகிய குற்றத்தை உடைய புருடனைக் குறிக்கிறது. பஞ்சக் கிலேசம்பற்றி முன் பாட்டுக்களில் விளக்கம் செய்யப்பட்டது. சகல வர்க்க ஆன்மாக்கள் பும்சத்துவ மலத்தின் சேர்க்கையால் உலக விடயபோகத்தில் உள் முகமாய் நின்று அதனை நுகர்கின்றார்கள். போர்=யுத்தம்; அது இங்கே பும்சத்துவமலம் ஆன்மாவை எதிர்த்துப் போராடுதலை (Struggle)க் குறிக்கிறது. பும்சத்துவமலம் ஆன்மாவை எதிர்த்து உலக விடயபோகத்தில் ஈர்த்துச் செல்லுதலால் 'ஏதன்போர்க்கு அகப்பட்டேன்' என்றார். ஆதன் - அறிவில்லாதவன்; அருள் ஒளி விளங்கப் பெறாதவன். ஒளி முன் இருள் இல்லாததுபோல, அருள்முன் மலம் எதிர்த்து நின்று போராடாது ஆதலின், அடிகள் தாம் சமண சமயத்திலிருந்த காலத்தில் சிவபெருமானை வழிபட்டு அருள்விளக்கம்

பெருகிருந்த காரணத்தால் மலத்தினது போராட்டத்துக்கு ஆதனாய் உட்பட்டு அதனை எதிர்த்து வெல்ல முடியாமலிருந்ததாகக் கூறுகின்றார். மாந்தருக்கு உலக வாழ்க்கைப் போராட்டம் (Life Struggle) பும்சத்வ மலத்தாலுண்டாகிறது. அதனை எதிர்த்து வெல்லுதற்கு வழி அருளைப்பற்றி நிற்றலாகும். இதனால் ஒழுக்கம் நிலைத்து உறுதி பெற்று நிற்றலுக்கு அருளே துணை என்பது பெறப்படுகின்றது.

என்ன தெழிலும் நிறையுங் கவர்வான்
புன்னை மலரும் புறவிற் றிகழும்
தன்னை முன்னம் நினைக்கத் தருவான்
உன்னப் படுவான் ஒற்றி யூரே. ௯௯

(உரை) முன்னம் தன்னை நினைக்க - முன்னே தன்னை நான் நிலையாய் நினைத்துக்கொண்டிருக்க; உன்னப்படுவான் - தன்னையே எப்பொழுதும் நினைப்பும் மறப்பும் அற்ற நிலையில் என்னை நினைக்கச் செய்கிறவனும்; என்னது எழிலும் - என்னுடைய அழகையும்; நிறையும் கவர்வான் - மன அடக்கத்தையும் தன்வசமாகச் செய்கிறவனும்; புறவில் திகழும் - குறிஞ்சி நிலத்தில் விளங்கும்; புன்னை மலர் தருவான் - புன்னை மலரினது பூவை எனக்குத் தருகிறவனும் ஆகிய சிவபெருமான் (வீற்றிருக்குமிடம்); ஒற்றியூர் - திருஒற்றியூர் என்னும் தலம் ஆகும்.

ஆதலின் "அடியார்களே திருஒற்றியூரிலிருக்கிற சிவபெருமானை வணங்கி உய்மின்" என்பது குறிப்பெச்சம்.

(விளக்கம்) இப்பாட்டு அகப்பொருட்டுறையில் தலைவி தலைவனைப்பற்றிக் கூறும் கூற்றாகக் கூறப்பட்டது. முன்னம் தன்னை நினைக்க - நினைந்தல் என்பது நான் என்ற தன் முனைப்புக்கெட்டு சிவபெருமானை நிலையாய் நினைத்துக்கொண் டிருத்தல். சுந்தரமூர்த்தி அடிகள் மேலே 61-வது பாட்டில் "நிலையாய் நின்னடியே நினைந்தேன்" என்று சொன்ன கருத்தை இங்கு "முன்னம் தன்னை நினைக்க" என்று கூறியருளினார். 61-வது பாட்டின்கீழ் அதற்குக் கூறிய விளக்க உரையை இதற்கும் கொள்க. உன்னப்படுவான் - உன்னுதல் - நினைத்தல், சிந்தித்தல். சுந்தரமூர்த்தி அடிகள் மேலே 61-வது பாட்டில் 'நின் நினையப் பணித்தாய்' என்று சொன்ன கருத்தை இங்கே 'உன்னப்படுவான்' என்று கூறியருளினார். அதற்குக் கூறிய விளக்க உரையை இதற்கும் கொள்க. 49-வது பாட்டில் உணரப்படுவோன் என்பதும் இங்கே உன்னப்படுவான் என்பதும் ஒரு பொருளன. "உன்னைத் தொண்டனேன் நினையுமா நினையே" என்று கூறும் திருவிசைப்பா வாசகம் நோக்குக. என்னது எழில் - எழு + இல = எழில் - எழுச்சி - தோற்றப் பொலிவு - அழகு. எழில், உடம்பு நலத்தைக் குறிக்கிறது. நிறையும் கவர்வான் - நிறு + ஐ = நிறை - ஐ தொழிற்பெயர் விகுதி. நிறுத்துதல் - மனத்தைத் தன்வயம் நிறுத்தல்; மன அடக்கம்; கவர்தல்; தன்வயப்படுத்துதல். சீவபோதம் நீக்கிச் சிவபோதம் செய்வித்தல். நிறை - உயிர்நலத்தைக் குறிக்கிறது. புன்னை மலரும் புறவிற்றிகழும் - மூன்றாவது அடியிலுள்ள தருவான் என்ற சொல்லைச் சேர்த்துப் புறவிற்றிகழும் புன்னைமலர் தருவான் என்று உரைநடை செய்க. மலரும் என்பதில் உம் அசை. புறவு - குறிஞ்சி நிலம். புன்னை மலர் குறிஞ்சி நிலத்தின் கருப்பொருள். குறிஞ்சி நிலத்திலுள்ள புன்னை மலரைத் தருவான் என்பதனால், தந்து என்னைச் சேர்ந்து இன்பம் செய்பவன் என்ற கருத்து அகப்பொருட்டுறையில் வைத்துக் கூறப்

பட்டது. புன்னை மலர் நெய்தல் நிலத்தின் கருப்பொருள் என்று பொருளிலக்கணத்தில் பொதுவாகக் கூறப்பட்டாலும் புணர்தலைக் குறிக்கும் குறிஞ்சி நிலத்துக்கும் அதனைக் கருப்பொருளாகக் கொள்ளலாம். இரங்குதலைக் குறிக்கும் நெய்தல் நிலப் புன்னை மலர் இங்கே பொருந்தாது. திருக்குற்றாலம் முதலிய சீர்வளமுடைய குறிஞ்சி நிலங்களிற் புன்னை மரங்கள் மிகுதியாய் உண்டாயிருக்கின்றன. நாகம் என்ற சொல்மலையையும் மலையிலுள்ள புன்னை மரத்தையும் குறித்தலால் புன்னை மரம் குறிஞ்சி நிலத்தின் கருப்பொருளுமாகும் (நாகம்வின் குரங்கு புன்னை கற்றாக மலை பாம்புயானை'' என்பது சூடாமணி நிகண்டு) ''எந்நிலமருங்கிற் பூவும் புள்ளும் அந்நிலம் பொழுதொடு வாராவாயினும் வந்த நிலத்தின் பயத்தவாகும்'' என்று தொல்காப்பியம் அகத்திணையியல் 19-வது சூத்திரம் கூறுதல் காண்க. ஒற்றியூர் - இந்த இடப் பெயர்க்கு முன் அவாய் நிலையால் தொக்கி நிற்கும் ''வீற்றிருக்குமிடம்'' என்பது விரித்துப் பொருள் உரைக்கப்பட்டது. (1) உன்னப்படுவான், (2) கவர்வான், (3) தருவான், தெரிநிலை வினையாலணையும் பெயர்கள்; தோன்றா எழுவாய் இடம்; பயனிலை - ஒற்றியூர் - இப்பாட்டில் (1) உயிர் சிவனை நினைத்தல் (2) உயிர் சிவனால் நினைக்கப்படுதல். (3) உயிரைச் சிவன் தன் வயப்படுத்தல். (4) சிவன் உயிருக்கு இன்பம் தருதல் ஆகிய நான்கு நிலைகள் கூறப்பட்டன. இவ்வ முறையே ஒன்றின் பின் ஒன்றாய் நிகழ்வன.

எம்பிரான்எனக் கமுதமாவானுந் தன்னடைந்தார்
தம்பிரா னாவானுந் தழலேந்து கையானும்
கம்பமாகரி யுரித்த காபாலி கறைக்கண்டன்
வம்புலாம் பொழிற் பிரமபுரத் துறையும் வானவனே. கூஎ

(உரை) தன் அடைந்தார் தம்பிரான் ஆவானும் - (யார் அகப்பற்று புறப்பற்றுக்களை விடுத்து அடிமைகளாகிய தங்களுக்கு உண்மைப்பற்றா யுள்ளவன் சிவபெருமானே என்று) தன்னைப் புகலாக அடைந்தார்களோ (அவர்களைக் காத்தருளும்) ஆண்டவன் ஆகின்றவனும்; எம்பிரான் எனக்கு அமுதம் ஆவானும் - அந்த முறைமையில் எனது அடிமைத்தனத்தை உள்ளபடி அறிந்து அவனை ஆண்டவனாய்க் கொண்ட எனக்கும் பேரின்பம் தரும்பொருளாயிருக்கிறவனும்; தழல் ஏந்து கையானும்-தீயைத் தனது கையில் வைத்துக்கொண்டிருக்கிறவனும்; கம்பம் மாகரி உரித்தகாபாலி (உம்) - மனிதரைத் தோற்றத்தால் நடுங்கச் செய்கின்ற பெரிய ஆனையினது தோலை உரித்து அதனைப் போர்வையாகத் தனது உடலின் மேற் போர்த்திருக்கின்ற காபாலியும்; கறைக் கண்டன் - (உம்) ஆலகால விடத்தை உண்டதனால் உண்டாகிய கறுப்பு நிறத்தைக் கழுத்திலே உடையவனும்; வம்பு உலாம் பொழில் பிரம புரத்து உறையும் வானவன் - மணம் பொருந்தியுள்ள சோலைகளாற் சூழப்பட்ட சீகாழியிலே திருக்கோயில் கொண்டருளி யிருக்கின்ற மேலான பொருளாகிய சிவபெருமான்.

(விளக்கம்) தன்னடைந்தார் தம்பிரான் ஆவானும் - எல்லா ஆன்மாக்களுக்கும் பொதுவாகக் கூறப்பட்ட ஆண்டான் அடிமைத் தொடர்பு உண்மை கூறப்பட்டது; எம்பிரான் எனக்கு அமுதம் ஆவானும் - அப்பொது உண்மையைத் திருஞானசம்பந்த அடிகள் தமக்குப் பொருத்திக் கூறுகின்றார். என் + பிரான் = எம்பிரான் னகரவொற்று பகர இகர உயிர் மெய்முன் அதன் இனவெழுத்தாய்த் திரிந்தது. எனது தலைவன் -

அல்லது ஆண்டவன் அமுதம் ஆவான். அமுதம் உண்கிறதற்கு மிக இனிமையாயும் உண்டவரை இறப்பினின்று நீக்கும் பொருளாயுமிருத்தலின் அது இன்பப் பொருளாயிருக்கிற சிவபெருமானுக்கு உருவகப்படுத்தப்பட்டது. தழலேந்து கையானும - சிவபெருமானது அழித்தற்றொழிலைக் குறிக்கிறதழல் இங்கே சிவபெருமான் அடியார்களது மாயா மலத்தை, அழித்தலைக் குறிக்கிறது. கம்பலாகரியுரித்த காபாலி - தாருகாவனத்து இருடிகள் யாகத்தினின்றும் எழுந்த ஆனையைச் சிவபெருமான் மேல் விட அவர் அதனை உரித்து அதன் தோலைப்போர்த்தருளினார். அது இங்கே சிவபெருமான் அடியார்களது ஆணவமலத்தைக் கெடுத்தலைக் குறிக்கிறது. காபாலி எண் உம்மை தொக்கி நிற்கிறது. காபாலி - பிரமனது தலையைக் கையிலே வைத்திருக்கிறவன் கறைக்கண்டன் - அது அடியார்களது வினைமலத்தைக் கெடுத்து அவர்களுக்கு அருள் செய்தலைக் குறிக்கிறது. எண் உம்மை தொக்கி நிற்கிறது. வானவன் - மேலானவன். பரம்பொருள் ஞானாகாசமாயுள்ளவன் என்றும் பொருள் கொள்ளலாம். தம்பிரான் ஆவான் - அமுதமாவான், கையான், காபாலி, கறைக் கண்டன் ஐந்தும் எழுவாய்கள்; வானவன் - பயனிலை. இந்தப் பாட்டு சிவபெருமானுக்கும் ஆன்மாவுக்குமுள்ள ஆண்டான் அடிமைத் தொடர்பு அத்துவித உண்மையைக் கூறுகிறது. இந்த உண்மையைச் சிறப்பாக அறிந்து ஒழுகுகின்ற அடியார்களுக்கு ஆண்டவனாகிய சிவபெருமான் பேரின்பம் தந்து அருள் செய்கின்றான் என்பது இதிற் கூறப்பட்டது.

ஈசன் ஈசனென் றென்றும் அரற்றுவன்
ஈசன் தானென் மனத்திற் பிரிவிலன்
ஈசன் தன்னையுமென் மனத்துக் கொண்டு
ஈசன் தன்னையும் யான்மறக் கிற்பனே. ௫௮

(உரை) ஈசன் ஈசன் என்று - (என்னை ஆளும்) ஆண்டவனே ஆண்டவனே என்று சொல்லி; என்றும் அரற்றுவன் - (அகங் குழைந்துருகி) எப்பொழுதும் வாய் விட்டு அலறி அழைப்பன்; ஈசன் என் மனத்துப் பிரிவிலன் - (அவ்வாறு நான் செய்தலினால்) சிவபெருமான் என் மனதை விட்டுப் பிரியாமல் எப்பொழுதும் அதனிடத்து அருளொளியாக விளங்கிக்கொண்டிருக்கிறான்; ஈசன் தன்னையும் என் மனத்துக் கொண்டு - அவ்வாறு நான் சிவபெருமானை என் மனதில் வைத்துக்கொண்டு எப்பொழுதும் நிலையாக நினைத்துக்கொண்டிருக்கும்பொழுது; ஈசன் தன்னையும் யான் மறக்கிற்பனே - அப்பேர்ப்பட்ட சிவபெருமானையும் நான் மறக்க முடியுமோ?

(விளக்கம்) ஈசன் ஈசன் என்று என்றும் - ஈசன் வடமொழிச்சொல் ஈசன்: ஆண்டவன்; ஈசன் ஈசன். அடுக்குத் தொடர் என்றும் அரற்றுவன் - அரற்றுதல் வாய் விட்டலறுதல் மனத்தினுள்ளே குழைந்து உருகுதலால் வாய்விட்டலறுதல் "எம் பெருமானெம்பெருமானென் - றையாவென் றன் வாயாலரற்றியழல் சேர்மெழுகொப்ப" என்று திருவாசகம் ஆசைப்பத்து, 8-வது பாட்டிற் கூறியிருத்தல் காண்க. ஈசன்தான் என் மனத்துப் பிரிவிலன் - இது அகங்குழைந்துருகி அரற்றுதலாலுண்டாகிய பயன். தான் - அசை. ஈசன்றன்னையும் யான் மறக்கிற்பனே - உ - ம். உயர்வு சிறப்பு உம்மை. தன் - ஏ - அசைகள். மறக்கிற்பன் என்பதற்கு மேலே 48-வது பாட்டின்கீழ்க் கூறிய விளக்க உரை கொள்க.

ஊனினுளுயிரை வாட்டி யுணர்வினுக் கெளிய ராகி
வானினுள் வானவர்க்கு மறியலா காத வஞ்சர்
நானெனிற் றானே யென்னு ஞானத்தார் பத்தர் நெஞ்சுள்
தேனுமின் னமுது மானார் திருச்செம்பொன் பள்ளி யாரே. கூக

(உரை) திருச்செம்பொன் பள்ளியார் - திருச்செம்பொன்பள்ளி என்ற தலத்தில் திருக்கோயில்கொண் டெழுந்தருளியிருக்கின்ற சிவபெருமான் ; வானினுள் வானவர்க்கும் - தேவலோகத்தில் திருமால் அயன் முதலிய தேவர்களுக்கும் ; அறியலாகாத வஞ்சர் - அறிதற்கு மிக அரியவரா யிருப்பினும் ; ஊனினுள் உயிரை வாட்டி - உடம்பினில் நிலவுகின்ற உயிரைச் சீவபோதம் எழாதபடி அடங்கச் செய்து ; நான் இல் தான் என்னும் - 'நான்' என்ற சீவபோதம் இல்லாத சிவபோதம் என்று கூறப்படுகின்ற ; உணர்வினர் ஞானத்தார் பத்தருக்கு - உணர்வினை உடையவர்களாகிய நினைப்பும் மறப்புமற்ற அயரா அறிவினையும் உயிர்ப்பற்றும் பொருட்பற்றும் அற்ற பேரன்பினையுமுடைய அடியார்களுக்கு ; எளியராகி - அவர்கள் தாமே என்னும்படி பேரருளினால் அவர்களோடு அத்துவிதமாய்க் கலந்திருக்கும் எளிமையை உடையவராகி ; நெஞ்சுள் - அவர்களது நெஞ்சில் ; தேனும் இன் அமுதும் ஆனார் - தேன்போன்றும் இனிய அமுதுபோன்றும் இன்பம் உணரச் செய்கின்ற பேரின்பப் பொருளா யிருக்கிறார் ; ஆதலின், அடியார்களே! திருச்செம்பொன் பள்ளியில் திருக்கோயில்கொண் டெழுந்தருளி யிருக்கின்ற சிவபெருமானை வழிபட்டுப் பேரின்பம் அடைமின் என்பது குறிப்பெச்சம்.

(விளக்கம்) வானினுள் வானவர்க்கும் - உம் சிறப்பு உம்மை. அறியலாகாத வஞ்சர் - வஞ்சர் என்பது அரியவர் என்னும் பொருள்பட வந்தது. அடியார்களுக்கு எளியரா யிருத்தலும் ஏனையோர்களுக்கு அரியரா யிருத்தலும்பற்றி சிவபெருமான் வஞ்சர் என்று கூறப்பட்டார். இது இகழ்தல்போன்று புகழ்தல் ஆகும். ஊனினுள் உயிரை வாட்டி - ஊன் ஆகுபெயராய் உடலைக் குறிக்கிறது. வாட்டுதல் - வாடச்செய்தல் ; மெலியச்செய்தல் ; அதாவது சீவபோதத்தை அடங்கச்செய்தல். கோணலா யிருக்கிற இளமூங்கிற் கொம்பு ஒன்று தீயில் வாட்டி நேராக்கப்படுதல்போல, உலகை நோக்கித் திருகு சிந்தையை உடையதாயிருக்கிற உயிரை மெய்ஞ்ஞானத்தினாலே நேர்மையாக்கி இறைவனை நோக்கிச் செம்மையுடையதா யிருக்கும்படிசெய்தல் என்ற கருத்து வாட்டி என்ற சொல்லில் அடங்கியுள்ளது. நான் என் இல் தானே. ஆகி - என் - அசை. நான் - நான் என்ற (Iness) ; சீவபோதம் ; தானேயிலுள்ள ஏ - அசை. பிரிநிலை எனினும் பொருந்தும். தான் என்ற சொல் சிவனைக் குறிக்கிறது. சிவபெருமான் அடியார் உயிர்கள்மேல் வைத்த பேரருளினால் அவர்கள் வேறு தான் வேறு என்று தோன்றாது தானே எனும்படி அவர்களைத் தனது திருவடி வியாபகத்துள் அடக்கி சீவபோதம் நீங்கிச் சிவபோத முடையவர்களாகச் செய்தல். "நானென வொன்று - இல்லென்று தானே யெனுமவரைத் தன்னடி வைத்து - இல்லென்று தானு மிறை" என்று கூறப்பட்ட ஞான நிலை இங்கே கூறப்பட்டது. உணர்வினர் ஞானத்தார் பத்தர் - ஞானத்தார் பத்தர் என்றதனால் முறையே அடியார்களுடைய அயரா அறிவு நிலையும் பேரன்பு நிலையும் கூறப்பட்டன. பதவுரையில் உரைநடை செய்ததுபோல் உரைநடை செய்க. எளியர் ஆகி - மேலே வஞ்சர் என்று கூறியதற்கு மறுதலைக்குணம் உடையவர் ; எளியவர். எளிமை இன்னது என்பது மேலே கூறப்பட்டது. தேனும் இன் அமுதும் ஆனார் - தேனும் அமுதும் ஏகதேச உவமப்பொருள்களன்றி பேரின்பத்துக்குச் சிறிதும் ஈடாகாதவை. உலக அநுபவத்தில் வைத்துப் பேரின்பம் எத்தன்மையது என்று கூறப்படவேண்டுதலின், தேனும் இன்னமுதும் என்று அடிகள் உவமித்துக் கூறினார். மாணிக்கவாசகப் பெருமானும், "தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்" என்று கூறியருளினார். 'தேனும் இன்னமுது மானார்' என்பதனால் அடியார்களுக்குத்

துரியநிலைக்கண்ணதாகிய அருள் நிலையில் மலம் நீக்கத்தா லுண்டாவதாகிய இன்பத் தோற்றம் கூறப்பட்டது ; இன்புறு நிலையின் கீழ்க் கூறப்படுவதாகிய துரியாதீத நிலைக்கண் சிவத்துவ விளக்கத்தா லுண்டாகும் பேரின்பத்துக்குத் தோற்றுவாய் செய்யப்பட்டதாயிற்று.

யாதே செய்து மியாமலோ நீயெனில்
ஆதே யேயு மளவில் பெருமையன்
மாதே வாகிய வாய்மூர் மருவினார்
போதே யென்று புகுந்ததும் பொய்கொலோ. எo

(உரை) யாது செய்தும் - அடியார்கள் உலகில் எந்தச் செயலைச் செய்தாலும் ; யாம் அலோம் நீ என்னில் - அச்செயலை நீயே செய்வித்து நாங்கள் செய்தோமே அன்றி நாங்களாகச் செய்யவில்லை நீயே செய்தாய் என்று சீவபோதமின்றி அவர்கள் (மனமில்லெண்ணி) வாயினாலே சொன்னால் ; ஆதே எயும் அளவில் பெருமையன் - அந்தச் செயலைப் பொருந்தி அதனை தனது செயலாகக் கொள்ளும் அளவிட்டுக் கூற முடியாத பெருந்தன்மையை உடையவனும் ; மாதேவு ஆகிய வாய்மூர் மருவினார் - தேவர்களுக்கெல்லாம் தேவனாகிய திருவாய்மூரில் எழுந்தருளி யிருக்கின்ற வனுமாகிய சிவபெருமான் ; போது என்று புகுந்ததும் பொய்கொல் - ("வாய்மூரிலிருப்போம் தொடர,)வா" என்று சிவபெருமான் திருமறைக் காட்டில் என் துயிலின்கண் கூறிப் போந்தது பொய்யோ ?

(விளக்கம்) இப்பாட்டு, திருநாவுக்கரசு அடிகள் திருஞானசம்பந்த அடிகளுடன் திருமறைக் காட்டிலிருந்த காலத்தில் அத்தலத் திருக்கோயிற்கதவு தாம் பாடிய கடைசிப் பாட்டு முடிந்தபின் திறந்த அருமையையும் திருஞானசம்பந்த அடிகள் பாடிய முதற் பாட்டிலே திருக்கதவு அடைத்த எளிமையையும் நினைந்து நம்பர் திருவுளம் யாதோ என்க் கவன்று தாயிருந்த திருமடத்தில் துயில் கொள்ளும்பொழுது சிவபெருமான் அவர் துயிலின்கண் தோன்றி "யாம்வாய்மூரிலிருப்போம் தொடரவா". என்று கூறியருளினவுடனே அவ்வாற் பாடப்பட்ட திருப்பதிகத்தின் ஆறாவது பாட்டு. திருவாக்கின் கட்டளைப்படி திருநாவுக்கரசு அடிகள் திருவாய்மூருக்குச் சென்றார். சிவபெருமானும் வந்தவர் முன்செல்ல அவரை நெடுந்தூரம் வரை பின் தொடர்ந்துபோய்க் காணாதிருந்தமையை இப்பாட்டினது நான்காவது அடி குறிப்பிடுகிறது. இந்நிகழ்ச்சிக்குப் பொருந்த நான்காவது அடிக்கு உரை கூறப்பட்டது. யாதே செய்தும் - ஏ - அசை. செய்தும் - இறந்த காலவினை யெச்சம் ; யாம் அலோம் நீ எனில் - யாம் செய்தோம் அல்லோம் நீயே செய்தாய் என்னில் என விரியும் ; அல்லோம், அலோம் எனவும் என்னில், எனில் எனவும் குறுகி வந்தன ; என்னில் - என்று சொன்னால் ; "புன் செயலி னொன்றும் புலன் செயல் போனின் செயலை மன்செயல தாகமதி" என்று திருவருட்பயனிற் கூறப்பட்டபடி அடியார்கள் தங்கள் செயலை இறைவனது கிரியா சத்தி நடத்தும் செயலாகக் கருதுதல் கூறப்பட்டது. "யான் செய்தேன் பிறர் செய்தார் என்னு மிக்கோணை" என்ற சிவஞான சித்தியார் கo-வது சூத்திரப் பாட்டின் கருத்து மிதுவே. "என் செயலாவ தியாதொன்று மில்லை இனித் தெய்வமே உன் செயலே" யென்று உணரப்பெறும் ஞானியினுடைய நிலை இது ; ஆதே எயும் அளவில் பெருமையன் - ஆது என்பது எதுகை நோக்கி ஆதே என நீண்டது. நீட்டல் விகாரம் ஏ - பிரிநிலைப் பொருளில் வந்தது ; எய்தல் - பொருந்தல் - தன் செயலாகக் கொள்ளுதல் அடியார்கள் சீவபோதமின்றிச் செய்யும் செயலைச் சிவபெருமான் தனது செயலாகக் கொண்டு பேரருளினால் அவர்களுக்குத் தன்னையுமளித்து முன்னிற்பன் ஆதலின் அடிகள் "அளவில் பெருமையன்" என்று கூறியருளினர். "நஞ்செயலற்றிந்த நாமற்ற பின்னாதன் - தன் செயலானே யென்றுந் தீபற - தன்னையே தந்தானென்றுந் தீபற"

என்று திருவுந்தியாரிற் கூறப்பட்டிருத்தல் காண்க.; போதே என்று புகுந்ததும் பொய் கொலோ - போதே என்பதில் ஏ அசை; பொது - வா - கொல் - அசை; ஓ - வினாப் பொருளைத் தந்து நின்றது.

நிலனொடு வானுநீரொடுதீ யும்வாயுவுமாகி யோரைந்து
புலனொடுவென்று பொய்ம்மை கள்தீர்ந்த புண்ணியர் வெண்பொடிப்பூசி
நலனொடு தீங்குந் தானலதின்றி நன்கெழு சிந்தையராகி
மலனொடுமாசு மில்லவர் வாழுமல்கு பெருந்துறையாரே. ௭௧

(உரை) நிலனொடுவானும் நீரொடுதீயும் வாயுவும் ஆகி - நிலம் வான் நீர் தீ காற்று ஆகிய ஐம்பெரும் பூதங்கள் (கதிரோன் திங்கள் உயிர்) ஆகிய எட்டுப் பொருள்களின் வடிவுடையவனாகி; ஓர் ஐந்து புலனொடும் வென்று - மெய் வாய் கண் மூக்கு செவி என்ற ஐந்து ஞானேந்திரியங்களையும் (தன்மாத்திரைகள் கன்மேந்திரியங்கள் அந்தக் கரணங்களுடன்) உலக விடயப் பொருள்களிற் செல்லாதபடி அவைகளை அடக்கி வென்று; பொய்மைகள் தீர்ந்த புண்ணியர் - துவந்துவத் தன்மையைப் பொருந்தியிருக்கிற உலகிலுள்ள எல்லாப் பொய்ம்மைகளையும் நீங்கின அறவாளர் (யார் என்னில்) வெண்பொடிப்பூசி - வெண்மையான திருநீற்றைத்தரித்து; தான் அலது நன்கொடு தீங்கும் இன்றி - சிவபெருமானுடைய அருட்டன்மையல்லாமல் உலகிலுள்ள நன்மை தீமைகளாகிய துவந்துவங்களில்லாதவராகி; நன்கு எழுசிந்தையர் ஆகி - நன்மையையே உயிர்களுக்குச் செய்யும் உள்ளத்தினை உடையவராகி; மலனொடுமாசும் இல்லவர் - ஆணவம் வினைமாயை என்ற மும்மலங்களும் அவைகளால் வரும் குற்றங்களும் நீங்கின அடியார்கள்; வாழும் - வசிக்கின்ற; மல்கு பெருந்துறையாரே - (அருள்) நிறைந்துள்ள திருப்பெருந்துறை என்னும் தலத்தில் திருக்கோயில் கொண்டிருக்கிற சிவபெருமான் - ஆதலின், அடியார்களே! அவரை அடைந்து வழிபடுங்கள் என்பது குறிப்பெச்சம்.

(விளக்கம்) நிலனொடுவானும் நீரொடுதீயும் வாயுவும் ஆகி - இனம்பற்றிக் கதிரோன் திங்கள் உயிர் ஆகிய இவைகளும் சேர்த்து உரையிற் கூறப்பட்டன. சிவபெருமானுடைய அட்டமூர்த்தி வடிவங் கூறப்பட்டது. ஒடு - இங்கே எண்ணுப் பொருளில் வந்தது; ஓர் ஐந்து புலனொடுவென்று - ஒடு என்பதனால் தன் மாத்திரைகள் கன்மேந்திரியங்கள் அந்தக் கரணங்களும் குறிப்பிடப்பட்டன. சிவபெருமான் உயிரினது இந்திரியங்கள் அந்தக் கரணங்கள் முதலியவற்றோடு சேர்ந்திருந்தாலும் அவைகளை விட்டு நீங்கின தன் வயமுள்ளவர் என்பது கூறப்பட்டது. பொய்மைகள் தீர்ந்த புண்ணியர் - சிவபெருமான் மாயா தத்துவங்களாலாகிய உலகில் நிறைந்திருந்தாலும், மாயாதத்துவங்களுக்கு உரிய துவந்துவத்தன்மையினின்று நீங்கியவர் என்பது கூறப்பட்டது. துவந்துவத்தன்மை திரோத மலத்தால் உயிர்களுக்கு உண்டாவது. ஆண் பெண், நன்மை, தீமை, வெம்மை தண்மை, இரவு பகல், இருள் ஒளி, முதலியனவாகிய துவந்துவங்கள் (இருகூறாகுத் தன்மைகள்) உலகில் உள்ள பொய்மைகள் ஆகும் (unrealities) புண்ணியர் அருள்மயமாகிய அறவடிவினை யுடையவர். "என்புள்ளுருக்கி இருவினையை ஈடழித்துத்-துன்பங்களைந்து துவந் துவங்கள் தூய்மை செய்து" என்று மாணிக்கவாசக அடிகள் திருவாசகத்திற் கூறியிருத்தல் காண்க. வெண்பொடிப்பூசி-வெண்ணிறநீறு அடியார்களுடைய புறத்தூய்மையுடன் அகத்தூய்மையையுங் குறிக்கிறது. தான் அலது நலனொடு தீங்கும் இன்றி - தான் என்பது இங்கே சிவபெருமானை அதாவது அவரினின்றும் வேறாகாத சிவபெருமானது அருட்டன்மையைக் குறிக்கிறது - தத் என்ற வடமொழிச்சொல் பிரமப் பொருளைக் குறிக்க, வேதங்களில் வழங்கப்பட்டு வந்திருத்தல்போல, தான் என்ற சொல் தமிழ்மறையாகிய தேவார திருவாசகங்களில் சிவப்பொருளைக்குறிக்க வழங்கப்படுகின்றது. "தானெனைமுன்படைத்தான்" என்ற சுந்தரமூர்த்தி அடிகளுடைய

திருநொடித்தான் மலைத்தேவாரத்தில் சிவபெருமானைக் குறிக்க வழங்கப்பட்டிருத்தல் காண்க. நலமும் தீங்கும் உலகிலுள்ள துவந்துவத்தன்மையைக் குறிக்கிறது. பொய்மைகள் தீர்ந்தபுண்ணியர் என்று இரண்டாவது அடியில் சிவபெருமானுக்குக் கூறப்பட்டது, நலனொடு தீங்கும் தானல தின்றி என்பது மூன்றாவது அடியில் அடியார்களுக்குக் கூறப்பட்டது. நன்கு எழு சிந்தையர்-அடியார்கள் உலகத் துவந்துவங்களினின்று நீங்கி அருட்டன்மைநிறைந்திருக்கிறவர்கள் ஆதலின் அவர்களுடைய தூய சிந்தையில் நலம் ஒன்றே எழும். மலனொடு மாசும் இல்லவர் - இரண்டாவது அடியில் புண்ணியர் என்று சிவபெருமானுக்குக்கூறப்பட்டது, நான்காவது அடியில் மலனொடுமாசுமில்லவர் என்பது அடியார்களுக்குக் கூறப்பட்டது. "தானெனக்குத் தன்னடியவர்" என்று திருநாவுக்கரசு அடிகள் திருவெண்காடு தேவாரப் பதிகம் 3-வது பாட்டிற் கூறியருளியது காண்க. இங்கேயும் தான் என்பது சிவபெருமானைக் குறிக்கிறது. புண்ணியர் - எழுவாய். பெருந்துறையார்-பயனிலை. இந்தப் பாட்டில் 'நிலனொடு' என்பது முதல் 'புண்ணியர்' முடிய சிவபெருமானுடைய பெருமையும் "வெண்பொடிப் பூசி" என்பது முதல் இல்லவர் முடிய அடியார்களுடைய பெருமையும் கூறப்பட்டன.

ஒப்பாயிவ் வுலகத்தோ டொட்டி வாழ்வான்
ஒன்றலாத் தவத்தாரோ டுடனே நின்று
துப்பாருங் குறையடிசி றுற்றி நற்றன்
றிறமறந்து திரிவேனைக் காத்து நீவந்
தெப்பாலு நுண்ணுணர்வே யாக்கி யென்னை
யாண்டவனே யெழிலானைக் காவா வானோர்
அப்பாவுன் பொற்பாத மடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியே னென்செய் கேனே. எஉ

(உரை) எழில் ஆனைக்காவா - அழகுபொருந்திய திருவானைக்காவில் திருக்கோயில் கொண்டிருக்கிறவனே; வானோர் அப்பா - தேவர்களுடைய தலைவனே; இவ்வுலகத்தொடு ஒப்பாய் - இந்த உலகத்திலுள்ள மக்களுக்குச் சமானமாய்; ஒட்டி வாழ்வான் - அவர்களோடு இணங்கி வாழும்பொருட்டு; ஒன்றலாத் தவத்தாரோடு உடனே நின்று - நல்ல தவத்தோடு ஒன்றாகவைத் தெண்ணத்தகாத தவம் செய்கின்ற சமணர்களோடு கூட நின்று; துப்பு ஆரும் குறை அடிசில் துற்றி - செய் பொருந்திய பிச்சைச் சோற்றினை உண்டு; நல் தன் திறம் மறந்து திரிவேனை - உயிர்களுக்கு எப்பொழுதும் நன்மையையே செய்கின்ற உனது அருள் வலியை மறந்து உழல்கின்றவனாகிய என்னை; நீ வந்து - நான் உன்னை வேண்டாதிருக்க நீயே என்னிடம் வந்து; எப்பாலும் நுண் உணர்வே ஆக்கி - எந்த இடம் பார்த்தாலும் நான் உன்னையே உணரும்படியான மெய்யுணர்வு உடையனாகச் செய்து; என்னை ஆண்டு காத்தவனே - என்னை உன் அடிமையாக ஆட்கொண்டருளிக் காத்தவனே; உன் பொற்பாதம் அடையப்பெற்றால் - ஆண்டவனாகிய உனது அழகிய இரண்டு திருவடிகளையும் நான் சேரப்பெற்றால்; அல்லகண்டம் கொண்டு - துன்பத்துக்கு இடமாயிருக்கிற உடலினால்; என் செய்கேன் - என்ன பயனை அடைவேன்; (ஒரு பயனுமில்லை என்றபடி).

(விளக்கம்) இவ்வுலகத்தோடு ஒப்பாய் ஒட்டி வாழ்வான் - திருநாவுக்கரசு அடிகள் தாம் சமண சமயத்தை மேற்கொண்டிருந்த காலத்தில் சமணத் துறவிகளைப்போல அவர்களோடு சேர்ந்து ஒழுகினதைக் கூறுகின்றார். ஒன்றலாத் தவத்தார் - தவம் என்று கூறிப் பாயுடுத்துத் தலைபறித்து நின்றுண்ணும் சமணர்கள் அவச்செயல்களைச் செய்கின்றவர்கள் ஆதலின், அவர்களை அடிகள் 'ஒன்றலாத் தவத்தார்' என்றார். ஒன்றலாத் தவம் என்பதற்கு இறைவனோடு சேர்தலைச் 'செய்யாத் தவம்' என்று கூறினும்

பொருந்தும். குறை அடிசில் - பிச்சைச் சோறு ஆதலின், குறை அடிசில் என்றார். குறை - தவறு. நற்றுன் திறம் - நல்+து+உன் - நற்றுன் ; து சாரியை. நன்மை, து உடன் சேரும்பொழுது நல் என நின்றது. திறம் - அருட்டிறம். என்னை ஆண்டு காத்தவனே - என்னைக் காத்து ஆண்டவனே என்பதை என்னை ஆண்டு காத்தவனே என மாறுக. உன் பொற்பாதம் அடையப்பெற்றல் அல்லகண்டங் கொண்டு அடியேன் என் செய்கேன் - இதற்கு, மேலே 31-வது பாட்டின் கீழ் எழுதப்பட்ட விளக்க உரைகளைக் கொள்க.

கார்க்குன்ற மழையாய்ப் பொழிவானை கலைக்கெலாம் பொருளாயுடன் கூடிப்
பார்க்கின்ற வுயிர்க்குப் பரிந்தானைப் பகலுங்கங்குலு மாகிநின்றானை
ஓர்க்கின்ற செவியைச் சுவை தன்னை யுணருநாவினைக் காண்கின்றகண்ணை
ஆர்க்கின்ற கடலைமலை தன்னை யாரூரானை மறக்கலுமாமே. ௭௫

(உரை) கார்க்குன்றம் மழையாய்ப் பொழிவானை - கார்காலத்தில் மலைமேல் மழை பொழிதல் போல் உயிர்களிடத்துத் தன்து அருளைப் பொழிந்து விளங்கச் செய்கிறவனும் ; கலைக்கெலாம் பொருளாய் - தான் வேதாகமங்கள் முதலிய பல கலைகளிலும் கூறப்பட்ட பொருளாயிருந்தும் ; உடன்கூடிப் பார்க்கின்ற உயிர்க்குப் பரிந்தானை-தன்னேடு கூடியிருந்து தன்னை அறியாது பார்க்கின்ற உயிரினுடைய அறியாமை நிலைக்கு இரங்குகின்றவனும் ; பகலும் கங்குலும் ஆகி நின்றானை - பகலும் இரவுமாகிய காலமாகி நிற்கிறவனும் ; ஓர்க்கின்ற செவியை - (பெரியார் கூறுகிற, உண்மைகளைச் செவிகளாற் கூர்ந்து கேட்கின்ற கேள்வி அறிவர் யிருக்கின்றவனும் ; சுவை தன்னை - நாவினுற் சுவைத்து அறிகிற சுவையாயிருக்கிறவனும் ; உணரும் நாவினை - அச்சுவையை உணர்கின்ற நாவாயிருக்கிறவனும் ; காண்கின்ற கண்ணை - புறவிடயப் பொருளைப் பார்க்கின்ற கண்ணு யிருக்கிறவனும், ஆர்க்கின்ற கடலை - ஒலிக்கின்ற கடலாயிருக்கிறவனும் ; மலை தன்னை ஆரூரானை - மலையாயிருக்கிறவனும் திருவாரூரில் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கிறவனும் ஆகிய புற்றிடங் கொண்ட பெருமானை ; மறக்கலுமாமே - மறக்க முடியுமோ (மறக்க முடியாது என்றபடி.)

(விளக்கம்) கார்க்குன்றம் மழையாய்ப் பொழிவானை - ஆய் : உவமப் பொருளில் வந்தது ; கலைக்கெலாம் பொருளாய் உடன் பார்க்கின்ற உயிர்க்குப் பரிந்தானை - கலைகள் கூறப்பட்டிருந்தும் அவைகளை மக்கள் ஓதி இறைவனை அறியாமலிருக்கிற அறியாமை நிலைக்கு இறைவன் இரங்கி வருந்துகின்ற பெருங்கருணைத்திறம் கூறப்பட்டது ; பகலும் கங்குலுமாகி நின்றானை - இறைவன் காலதத்துவத்திற் கலந்து அதனை இயக்குதல் கூறப்பட்டது. செவி சுவை நா கண் என்பவைகளுக்கும் அவ்வாறே கொள்க ; ஓர்க்கின்ற செவியை - ஓர்தல் - கூர்ந்து கேட்டல் ; செவி என்பது இங்கே ஆகு பெயராய்க் கேள்வி அறிவைக் குறிக்கிறது ; செவிச் செல்வம் என்பது திருக்குறளில் கேள்விச் செல்வம் என்று பொருள் படுதல் காண்க. ; மறக்கலுமாமே - ஏ - வினவாய் எதிர்மறைப் பொருள் தந்து நின்றது ; மறக்கமுடியாது என்பது பொருள். "தன்னை அறிவித்துத் தான்தானுச் செய்தானைப் : பின்னை மறத்தல் பிழை" ஆகும் என்பது கருத்து. மறக்கலுமாமே என்பதனுல் இறைவன் சிவபோத மிறந்து நின்ற ஆன்மாவைத் தனது திருவடி வியாபகத்துள் அடக்கித் தன்னை மறவா வண்ணம் அதனைத் தானுகச் செய்தல் கூறப்பட்டது.

ஆக்குமழிவுமமைவு நீயென்பன்நான் சொல்லுவார்
சொற்பொரு ளவைநீ யென்பன்நான்
நாக்குஞ் செவியுங்கண் ணும் நீயென்பன்நான்
நலனே யினிநாணுனை நன்குணர்ந்தேன்

நோக்கு நிதியம்பல வெத்தனையுங்
கலத்திற் புகப்பெய்து கொண்டேற நுந்தி
ஆர்க்குங் கடலங்கரை மேல்மகோதை
அணியார் பொழிலஞ்சைக் களத்தப்பனே. ௭௪

(உரை) நோக்கும் நிதியம் பல எத்தனையும் - (வணிகர்கள் பல இடங்களிற்) காண்கின்ற மிக்க பல பண்டங்களையும்; கலத்திற் புகப்பெய்து கொண்டு - கப்பல்களிற் பொருந்தும்படி கொணர்ந்து போட்டு; ஆர்க்கும் அம் கடல் கரை எற நுந்தி - அக்கப்பல்களை அழகிய கடற்கரைக்குக் கொண்டு போய்ப் (பண்டங்களை இறக்குதலால் மிக்க பொருள் வளமுடைய); மேல் மகோதை - அக்கரை மேலுள்ள மகோதை நகருக்கு அருகிலிருக்கும்; அணியார் பொழில் அஞ்சைக்களத்து அப்பனே - அழகு பொருந்திய சோலைகள் சூழ்ந்த திருவஞ்சைக் களத்தில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் எனது தந்தையாகிய சிவபெருமானே; நான் நீ ஆக்கும் அழிவும் அமைவும் என்பன் - நான் உன்னை நீ படைக்கும் கடவுள் என்றும் (காக்கும் கடவுள் என்றும்) அழிக்கும் கடவுள் என்றும் பரிபூரணப் பொருள் என்றும் சொல்லித் துதிப்பேன்; நான் நீ சொல்லுவார் சொற்பொருளவை என்பன் - நான் உன்னை நீ, சொல்லுகிறவர்களுடைய சொற்களிலடங்கிய பொருள்களாயிருக்கிறாய் என்று சொல்லித் துதிப்பேன். நான் நீ நாக்கும் செவியும் கண்ணும் என்பன் - நான் உன்னை நீ உயிர்கள் சுவை அறிகிற நாக்காயும் கேட்கிற செவிகளாயும் பார்க்கிற கண்களாயுமிருக்கிறாய் என்று சொல்லித் துதிப்பேன். நலனே - எல்லா உயிர்களுக்கும் நன்மையையே கருதிச் செய்கிறவனே; இனி நான் உனை நன்கு உணர்ந்தேன் - உன்னால் ஆட்கொள்ளப் பெற்றபின் நான் உன்னை எல்லா உயிர்களுக்கும் பேரின்பம் அளிக்கிற பொருளாயிருக்கிறவன் என்று எனது உள்ளத்தில் தெளிவாக உணர்ந்தேன். ஆதலின் அடியார்களே! நீங்கள் திருவஞ்சைக்களத்துச் சிவபெருமானை வழிபட்டுப் பேரின்பம் அடைமின் என்பது குறிப்பெச்சம்.

இப்பாட்டின் பின் இரண்டு அடிகளும் மகோதை நகரினது கப்பற் பொருள் வளத்தைக் கூறுகிறது. நான் நீ ஆக்கும் அழிவும் அமைவும் என்பன் - ஆக்கு-முதல் நிலைத் தொழிற்பெயர். ஆக்குதல் படைத்தல்; அது இங்கே ஆகுபெயராய்ப் படைக்கும் கடவுளைக் குறிக்கிறது. அவ்வாறே அழிவு அழிக்குங் கடவுளைக் குறிக்கிறது. இனம்பற்றிக் காக்கும் கடவுளும் சேர்த்து உரையிற் கூறப்பட்டது: அமைவு - நிறைவு, பரிபூரணம் (Fulness) அது இங்கே பரிபூரணப் பொருளைக் குறிக்கிறது. சொற்பொருள் அவை - அவை பகுதிப்பொருள் விகுதி; பொருள் அவை ஒருமைப் பன்மை மயக்கம்; நான் நீ நாக்கும் செவியும் கண்ணும் என்பன் - நாக்குச் செவிகள் கண்களில் இறைவன் இல்லாவிடின் அவைகளியங்கா ஆதலின் அவ்வாறு கூறினார். நலனே - நலன் என்ற சொல் நலம் என்பதன் போலி; இறைவன் எல்லா உயிர்களுக்கும் நன்மை செய்கிறவன் ஆதலின் அவனை அடிகள் நலனே என்றார். "நன்றுடையான் தீயதில்லான்" என்று இறைவனைத் திருஞானசம்பந்த அடிகள் கூறி அருளினர். நன்கு உணர்ந்தேன் - உணர்தல் - அழுந்தி அறிதல், உள்ளத்தில் சுவாநுபூதியில் உணர்தல். நன்கு உணர்ந்தேன் - உயிர் மலத்தினின்றும் நீங்கி அருள் ஒளி விளக்கம் அடைந்து இன்புறுதலை சுந்தரமூர்த்தி அடிகள் தமது சுவாநுபூதியில் வைத்து இப்பாட்டிற் கூறினார்.

௭. இன்புறு நிலை

அளைவாயி லரவசைத்த வழகன் றன்னை
ஆதரிக்கு மடியவர்கட் கன்பே யென்றும்
விளைவானை மெய்ஞ்ஞானப் பொருளா னானை
வித்தகனை யெத்தனையும் பத்தர் பத்திக்
குளைவானை யல்லாதார்க் குளையா தானை
உலப்பிலியை யுள்புக்கென் மனத்து மாசு
கிளைவானைக் கீழ்வேளூ ராளுங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடி லாரே. ௭௫

(உரை) அளைவாயில் அரவு அசைத்த அழகன் தன்னை - புற்றினிடத்து உள தாகிய பாம்பைத் (தனது உடல்மேல் வைத்து) அசைக்கின்ற அழகனும்; ஆதரிக்கும் அடியவர்கட்கு - தன்னை அன்பினால் வழிபடும் அடியார்களுடைய; என்றும் அன்பே விளைவானை - (உள்ளத்தில்) எப்பொழுதும் அன்பாகத் தோன்றி அவ்வன்பாக மேலும் மேலும் முதிர்ந்து விளங்குகின்றவனும்; மெஞ்ஞானப் பொருளானை - அடியார்களுடைய மெய்யறிவில் விளங்கும் உண்மைப்பொருளா யிருப்பவனும்; வித்தகனை - அறிவுவடிவா யிருக்கிறவனும்; பத்தர் பத்திக்கு எத்தனையும் உளவானை - அடியார்களுடைய அன்புக்கு எவ்வளவாயினும் ஈடுபட்டு (அவர்களுக்கு வேண்டுவன செய்கிறவனும்); அல்லாதார்க்கு உளையாதானை - அடியாரல்லாதவர்களுக்கு அவ்வாறு ஈடுபடாமலிருக்கிறவனும்; உலப்பிலியை - அழிவின்றி நித்தியமா யிருக்கிறவனும்; என் மனத்து உள்புக்கு மாசு கிளைவானை - எனது உள்ளத்தினுள்ளே புகுந்து அதிலுள்ள குற்றங்களை நீக்குகிறவனும்; கீழ்வேளூர் ஆளும் கோவை - திருக்கீழ்வேளூர்த் தலத்தில் திருக்கோயில்கொண் டெழுந்தருளி அங்கேயுள்ள உயிர்களை ஆண்டருள் செய்கின்ற தலைவனும் ஆகிய சிவபெருமானை; நாடுமவர் கேடு இலார் - தங்கள் மெய்யறிவினால் நாடித் தேடிக் கண்டவர்கள் அவனோடு அத்துவிதமாய்க் கலந்து பிறப்பிறப்பு இல்லாதவர்களாய் நிலையான பேரின்பம் நுகர்ந்துகொண் டிருப்பர்.

(விளக்கம்) வாயில் - வாய் இல் என்ற இரண்டும் ஏழாம் வேற்றுமை உருபுகள். அது ஒரு சொல்லாகக் கொள்ளப்பட்டால் துவாரம் என்று பொருள்படும். அழகன் தன்னை - இந்தச் சொல்லிலடங்கிய பொருளை விரிவாய் அறிதற்கு செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 8 பரல் 12 பக்கம் 725 முதல் 730 வரை பார்க்க. தன் - அசை. அன்பே விளைவானை - விளைதல் என்பது பயிர் விளைந்து முதிருதல்போல மேலும் மேலும் முதிர்ந்து முறுகுதல் - அன்பே விளைவானை. அன்பாகவே விளைவானை, ஏ தேற்றப் பொருளில் வந்தது - சிவமே அன்பாதலின் அடிகள் அன்பே விளைவானை என்றார்; மெய்ஞ்ஞானப் பொருளானை - சிவமானது பசு ஞானம் பாச ஞானங்களால் அறியப்படாத பொருளாய் பதிஞானம் ஆகிய மெய்யறிவினாலே மாத்திரம் அறியப்படுகின்ற பொருளாயிருத்தலின் மெய்ஞ்ஞானப் பொருளானை என்றார்; பத்தர் பத்திக்கு எத்தனையும் உளைவானை - உளைதல் ஈடுபடுதல் (Responding) ஈடுபடுதலுக்கு அளவில்லை யாதலின் எத்தனையும் உளைவானை என்றார் "நின்மெய்யடியார் மனக்கருத்தை முடித்திடுங் குன்றமே" என்று சேந்தனார் திருவாவடுதுறை திருவிசைப்பாவிற் கூறியருளினமை காண்க.; என் மனத்து உள்புக்கு மாசு கிளைவானை.

கிளைதல் - என்பது கிளறி வெளிப்படுத்துதல்; மனக்குற்றங்கள் முற்றிலும் நீங்காத அடியார்கள் சிவனது திருவடிகளைச் சேர முடியாது ஆதலின் அவன் அவர்களுடைய மனக்குற்றங்களை நினைந்து நீக்கி ஆட்கொள்ளுவான் என்பார் மனத்து மாசு கிளைவானை என்றார்; நாடுமவர் கேடிலார் - நாடுதல் இனம்பற்றி மேலே 60-வது பாட்டிற் கூறப்பட்ட தேடுதலும் காணுதலும் கூறப்பட்டன. நாடுதலுக்கு அப்பாட்டின்கீழ் எழுதப்பட்ட விளக்க உரை கொள்க. இறைவனது திருவடிகளை அடைந்த அடியார்கள் "கேடுந் திருவுங் கெட்ட திருவினார்" என்று சேக்கிழார் பெரிய புராணத்திற் கூறியிருத்தல் காண்க. பிறப்பு இறப்புகள் ஆகிய கேடில்லாமல் நித்தியமாயுள்ள சிவபெருமானை அடைந்த அடியார்கள் பிறப்பு இறப்பு இல்லாமல் நித்தியமாயுள்ள பேரின்பம் நுகர்ந்து வாழ்வர் என்பது இத்தேவாரத்திற் கூறப்பட்டது.

உருகு மனத்தடிய வர்கட் கூறுந்தேனை
    உம்பர்மணி முடிக்கணியை உண்மைநின்ற
பெருகு நிலைக்குறி யாள ரறிவு தன்னைப்பேணிய
    அந்தணர்க்கு மறைப்பொருளைப் பின்னும்
முருகுவிரி நறுமலர்மே லயற்கும்மாற்கு முழுமுதலை
    மெய்த்த வத்தோர் துணையை வாய்த்த
திருகுகுழ லுமைநங்கை பங்கன் தன்னைச்
    செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே. ௭௬

(உரை) உருகு மனத்து அடியவர்கட்கு ஊறும் தேனை - (தங்களுடன் சிவபெருமான் அத்துவிதமாய்க் கலந்து நின்று உலக விடயப் பொருளை அறிவித்தும் விடயப் பொருளுடனும் கலந்து நின்று அதனை அநுபவிக்கும்படி அறிந்தும் வருகிற பேருபகாரங்களை) நினைந்து உருகுகின்ற உள்ளத்தையுடைய அடியார்களுக்கு அவர்கள் நினைக்க நினைக்க மேலும் மேலும் தேன் போன்று தித்திக்கும் இன்பப் பொருளாயிருக்கிறவனும்; உம்பர்மணி முடிக்கு அணியை - தேவர்களுடைய நவமணிகளாலாகிய முடிக்கு அலங்காரமாயிருக்கிறவனும்; உண்மை நின்ற - உண்மையைப் பின்பற்றுதலில் சிறிது தளராது நிலைத்து நிற்கிற; பெருகு நிலைக்குறியாளர் அறிவு தன்னை - மேலும் மேலும் வளர்ந்து வரும் மன நிலையைக் குறியாகக் கொண்டொழுகுகின்ற அடியார்களுடைய உள்ளத்தில் அறிவாக விளங்குகிறவனும்; பேணிய அந்தணர்க்கு மறைப் பொருளை - வேதாகமங்களை உண்மை அன்புடன் ஓதி அறிகின்ற அந்தணர்களுக்கு அம்மறைகளின் கண் விளங்கித் தோன்றுகிற பொருளாயிருக்கிறவனும்; பின்னும் - அதுவன்றி; முருகு விரி நறுமலர்மேல் அயற்கும் மாற்கும் - மணத்துடன் கூடி விரிந்திருக்கிற தாமரை மலர்மேலுள்ள பிரமதேவனுக்கும் திருமாலுக்கும்; முழு முதலை - முழு முதற் கடவுளாயிருக்கிறவனும்; மெய்த்தவத்தோர் துணையை - உண்மைத்தவம் செய்கின்ற அடியார்களுக்குத் துணையாயிருக்கிறவனும்; திருகுவாய்த்த குழல் உமை நங்கை பங்கன் தன்னை - முறுக்குப் பொருந்தியுள்ள கூந்தலையுடைய உமாதேவியாரை இடது பாகத்தில் வைத்திருக்கிறவனும் ஆகிய சிவபெருமானை; செங்காட்டங் குடியதனில் - திருச்செங்காட்டங்குடி என்னும் தலத்தில் (திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருத்தலை); நான் கண்டேன் - நான் (அகக்கண்ணாலும்) கண்டு பேரின்பமுற்றேன்.

(விளக்கம்) ஊறும் தேனை - "தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்" என்று மாணிக்கவாசக அடிகள் திருவாசகம் திருவேசறவு 10-வது பாட்டிற் கூறியிருத்தல் காண்க. ; உம்பர் மணி முடிக்கு அணியை - சிவபெருமான் திருவடிகளில் தேவர்கள் தங்கள் நவமணி முடிகளை வைத்து வணங்குதலால் உம்பர் மணி முடிக்கு அணியை என்றார் ; உண்மை நின்ற பெருகு நிலைக்குறியாளர் - "உற்கைதரும் பொற்கையுடையவர் போலுண்மைப்பின் - நிற்க அருளார் நிலை" என்று திருவருட்பயன் உயிர் விளக்கம் 8-வது பாட்டிற் கூறப்பட்டபடி தூலம் சூக்குமம் சூக்குமதாம் சூக்குமம் அதி சூக்குமம் என்ற பலவகைத் தத்துவப்படிகளோடு அமைந்திருக்கிற உலகிலும் சிறிய உலகு ஆகிய உடலிலும் அந்த அந்தத் தத்துவப்படி அறியும் அறிவு நிலையிலும் விளங்குகின்ற உண்மையை அந்த அந்தத் தத்துவப்படியிற் குறியாகக்கொண்டு அருள் நிலையில் மேற்சென்று ஒழுகுகிறவனே தத்துவப்படிகளி லேறியேறிச் சென்று முடிவில் தத்துவங்கடந்த பொருளையும் அறிவான் என்பார் உண்மை நின்ற பெருகுநிலைக் குறியாள ரறிவுதன்னை என்றார். யாதாம் ஒரு தத்துவப்படியிற் காணப்படுகிற உண்மையையே முடிந்த உண்மையாகக் கடைப்பிடித்து ஒழுகுகிற குறுகிய மனநிலையாளன் அந்தத் தத்துவப்படியை விட்டு மேற்செல்லுகின்ற விரிவான மனநிலையை அடையமாட்டான் என்பது கருத்து. பெருகும் நிலை என்பது மேலும் மேலும் அறிவு வளர்ந்து செல்லும் மனநிலை ; குறியாளர் என்பது குறியின்படி ஒழுகிப் பயன் பெறுகிறவர்கள்; நின்ற-இயல்பு பற்றி நிற்கின்ற என்பது நின்ற என இறந்தகாலத்தாற் கூறப்பட்டது. முழுமுதலை - சிவபெருமானுக்கு மேல் அவனை ஆளும் ஒரு தலைவன் இல்லை என்பார், முழுமுதல் என்றார். உலகிற்கு முழுமுதற் கடவுள் சிவபெருமான் ஒருவனே என்பது கருத்து - மெய்த்தவத்தோர் துணை - உண்மையாக சிவபெருமானைக் காணுதற்குத் தவம் செய்கிற அடியார்களுக்கு அவர்கள் தன்னை அறிதற்கு வேறாய் நின்று அறிவித்தும் தன்னைப் பற்றும்படி அவர்களோ டுடனாய் நின்று அறிந்தும் துணைபுரிந்தும் வருகின்றார் என்பார் மெய்த்தவத்தோர் துணையை என்றார். உமை மங்கை பங்கன்தன்னை - மேலே கூறியவாறு அடியார்களுக்கு அருள் செய்தற்குச் சிவபெருமான் தனது அருட்சத்தியோடு கூடியிருக்கின்றார் என்று குறிப்பிப்பார் உமை நங்கை பங்கன் என்றார். தன் - அசை. நான் கண்டேன் - காணுதல் என்பது இங்கே அகக்கண்ணாலும் சேர்ந்து காணுதல். உள்ளும் புறமும் ஒரு தன்மைக் காட்சியர் நம் போன்று புறக்கண்ணால் மாத்திரம் காணமாட்டார்கள் ; அவ்வாறு காணுங்கால் அவர்களுக்குப் பாட்டிற் கூறப்பட்ட சிவபெருமானுடைய அளப்பரும் பெருங்குணங்கள் விளங்கித் தோன்றும். நம்போல்வாரும் திருக்கோயிலிலுள்ள சிவலிங்கப் பெருமானை வணங்கும்பொழுது சிவலிங்கவடிவி லடங்கியுள்ள உண்மைகளை நினைந்து உள்ளுருகிக் கசிந்து வழிபடுவார்களானால் அவர்களுக்கு அக்கண் தோன்றுதற்கு இடமுண்டாகும். திருக்கோயில் வழிபாட்டை இகழ்கிறவர்கள் சொல் உருவாலும் பொருள் உருவாலும் அமைந்துள்ள உலகில் ஒருவரையொருவர் உடல் உருவிற் கண்டு சொல்லுருவிற் பேசி இன்புறுதலை அடைகிற மக்கள் இறைவனை எவ்வாறு உருவிலன்றி வழிபட முடியும் என்பதை அறியார்கள். இப்பாட்டில் உண்மை நின்ற பெருகுநிலைக் குறியாளரறிவு தன்னை என்பதனால் அயராத பேரறிவும், உருகும்மனத் தடியார்கட் கூறும் தேனை என்பதனால் பொருட்பற்று உயிர்ப்பற்றுக்கள் நீங்கிய பேரன்பும், மெய்த்தவத்தோர் துணையை என்பதனால் இறைவனிடத்து இன்புறுஞ் செயலும் கூறப்பட்டன. அடியார்கடமை நான் கண்டு இன்புற்றதுபோல நீங்களும் திருச்செங்காட்டங்குடிப் பெருமானை வணங்கி இன்புறுமின் என்பது குறிப்பெச்சம்.

உறுகயி றூசல்போல வொன்றுவிட் டொன்றுபற்றி
மறுகயி றூசல்போல வந்துவந் துலவுநெஞ்சம்

பெறுகயி றூசல்போலப் பிறைபுல்கு சடையாய்பாதத்
தறுகயி றூசலானேன் அதிகைவீரட் டானரே. ௭௭

(உரை) அதிகைவீரட்டானரே - திருஅதிகை வீரட்டானம் என்ற தலத்தில் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கிறவரே ; நெஞ்சம் - எனது மனமானது ; கயிறு உறு ஊசல்போல - கயிற்றிலே தொங்கவிட்டுக் கட்டப்பட்ட ஊஞ்சற் பலகை அங்குமிங்கும் அசைந்து ஆடுதல்போல ; ஒன்றைவிட்டு ஒன்றை பற்றி (உம்) ஓர் உலக விடயப்பொருளைப்பற்றிப்பின் அதனைவிட்டு வேறொரு பொருளைப்பற்றியும்; மறு கயிறு ஊசல்போல - (பொருட்பற்று அவ்வாறிருக்க) மற்றொரு கயிற்று ஊஞ்சற் பலகைபோல ; வந்து (உம்) - வந்து (உம்) - மனைவிமக்கள் உறவினர் முதலிய ஒவ்வொரு உயிரிடத்திலும் பொருந்தி நின்று பற்றுவைத்தும் ; உலவும் - (இப்பொருள்களிலும் உயிர்களிலும் பற்றுவைத்தலினால் அமைதி பெறாமல்) உழன்று சஞ்சலப் பட்டுக்கொண்டிருக்கும் ; கயிறுபெறு ஊசல்போல - (அவ்வாறு உழன்றுகொண்டிருந்த மனதை உடையநான்) கயிற்றுடன் சேர்ந்து தொங்குகிற ஊஞ்சற் பலகையைப் போல ; பிறைபுல்கு சடையாய் - மூன்றாம் பிறைத்திங்கள் சேர்ந்திருக்கிற சடையை உடைய சிவபெருமானே ; பாதத்து அறுகயிறு ஊசல் ஆனேன் - நின் திருவடிகளைப் பற்றியதனால் கயிறு அறுந்த ஊஞ்சற்பலகை தரையைச் சேர்தல்போல பொருட்பற்றும் உயிர்ப்பற்றும் அற்றுப்போய் உன்னையே தாரமாகக் கொண்டு உன்னோடு அத்துவிதமாய்ச் சேர்ந்து பேரின்பமுடையவனானேன்.

(விளக்கம்) உறுகயிறு ஊசல்போல ஒன்றைவிட்டு ஒன்றுபற்றி - ஒவ்வொரு விடயப்பொருளையும் மாறிமாறிப்பற்றி ஒன்றிலும் அமைதி பெறாமலுழன்று சஞ்சலப் பட்டுக்கொண்டிருக்கிற மனம் அசைந்துகொண்டே யிருக்கிற ஊஞ்சற் பலகைக்கு உவமிக்கப்பட்டது. ஊசல் ஆடுகிறவரைத் தாங்குகிற ஊஞ்சற் பலகையைக் குறிக்கிறது. பற்றி என்ற சொல்லுக்குப் பின் உம் தொக்கி நின்றது. ஒன்றைவிட்டு ஒன்று பற்றுதலாவது ஒவ்வொரு விடயப்பொருளையும் நுகர்ந்து அதில் அமைதி பெறாமல் அதனைவிட்டு வேறு பொருளை விரும்பித் தேடி நுகர்ந்து அதிலும் அவ்வாறே அமைதிபெறாமலிருத்தல். உலகவிடய போகப் பொருள்களின் தன்மை இவ்வாறிருத்தலினாலே தான், மக்கள் தங்கள் உலக அநுபவத்தின் பயனாக அவைகளை உவர்த்து பேரின்பம் நாடுதலுக்கு இடமுண்டாகிறது. மறுகயிறு ஊசல்போல வந்து வந்து - மக்களைப் பற்றிக் கொண்டிருக்கிற பொருட்பற்று உயிர்ப்பற்று என்ற இருவகைப் பற்றுக்களில் பொருட்பற்று முன்னே கூறப்பட்டதனால் எஞ்சி நிற்கிற உயிர்ப்பற்றுக்கு உவமையாக மறுகயிறு ஊசல் என்று அடிகள் கூறியருளினார். வந்து வந்து என்பது அடுக்குத் தொடர். வந்து என்ற சொற்குப்பின் உம் தொக்கி நின்றது. வந்து - பொருந்தி அல்லது சேர்ந்து என்ற பொருளில் வந்தது. வந்து வந்து என்பது இவர் நண்பர் இவர் பகைவர் என ஒவ்வொரு உயிரையும் சேர்ந்து அமைதி பெறாதிருத்தல். உலவும் - உலவுதல் - அசைதல் ஒரு பொருளிலாவது ஓர் உயிரிலாவது அமைதி பெறாமல் உழன்று சுழலுதல். பிறைபுல்கு சடையாய் - என்பதனால் உயிர்கள் பொருட்பற்று உயிர்ப் பற்றுக்களை அறுத்துத் தனது திருவடிகளிற் பற்று வைக்கும்படி செய்யும் சிவபெருமானுடைய பேராற்றல் குறிப்பிடப்பட்டது. பாதத்து கயிறு அறு ஊசலானேன் - பாதத்து - திருவடிகளிற் பற்றுவைத்தலினால். ஊஞ்சலானேன் - ஊஞ்சல் பலகைபோல் ஆனேன்; மலப்பற்றினால் ஆன்மாக்களுக்கு உண்டாகும் பொருட்பற்று உயிர்ப்பற்றுக்கள் செயற்கை; சிவபெருமானுடைய திருவடிகளைச் சேர்தல் இயற்கை. ஊஞ்சற்கயிறு அற்றுப் போனபொழுது ஊஞ்சற் பலகையானது தரையை இயல்பாய்ச் சேர்தல் போல, பொருட்பற்று உயிர்ப்பற்றுக்களாகிய. செயற்கையானது அருளினாலே நீங்கின பொழுது சிவபெருமானுடைய திருவடிகளைச் சேர்தல் இயல்பாக நிகழுகின்றது என்

பது கருத்து. "சார்புணர்ந்து சார்புகெட வொழுகின் மற்றழித்துச் - சார்தரா சார்தரு நோய்" என்ற திருக்குறட் கருத்தும் இதுவேயாகும். முதலிரண்டு அடிகளுக்கு நெஞ்சம் - எழுவாய்; உலவும் - பயனிலை; பின் இரண்டு அடிகளுக்கு நான் - தோன்றாஎழுவாய்; ஆனேன் - பயனிலை. திருநாவுக்கரசு அடிகள் தாம் சமண சமயத்திலிருந்த பொழுது தங்கியிருந்த பாடலிபுரத்திலிருந்து வந்து திலகவதியாரால் திருவாளன் திருநீறணியப்பெற்றுச் சிவபெருமானால் சூலைநோய் தீர்ந்து ஆட்கொள்ளப்பெற்ற தலம் திருவதிகை வீரட்டானம் ஆதலின், அத்தலத் தேவாரப்பதிகத்தில் பெத்த நிலையிலும் முத்தி நிலையிலுமிருந்த தமது இரண்டு அநுபவங்களையும் கூறுதல் மிக்க பொருத்தமுடையது. அடியார்களே! எனது அநுபவமிவ்வா றிருத்தலின், நீங்கள் திருவதிகை வீரட்டானேசுவரரை வழிபட்டு உய்மின் என்பது குறிப்பெச்சம்.

மாவை யுரித்த தள்கொண் டங்க மணிந்தவனை
வஞ்சர் மனத்திறையும் நெஞ்சணு காதவனை
மூவ ருருத்தன தாம் மூல முதற்கருவை
மூசிடு மால்விடையின் பாகனை யாகமுறப்
பாவக மின்றிமெய்யே பற்று மவர்க்கமுதைப்
பானறு நெய்தயிரைந் தாடு பரம்பரனைக்
காவ லெனக்கிறையென் றெய்துவ தென்றுகொலோ
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே. எஅ

(உரை) மாவை உரித்து அதள் கொண்டு அங்கம் அணிந்தவனை - தாருகாவனத்து இருடிகள் ஏவித் தன்மேல்விட்ட யானையைத்தோலுரித்து அத்தோலைத்தனது உடலின் மேல் தரித்துக்கொண்டவனும்; வஞ்சர்மனத்து இறையும் அணுகாதநெஞ்சவனை - வஞ்சகமுடையவர்களது மனத்தின்கண் சிறிதும்சேராத மனமுடையவனும்; மூவர்உருத்தன தாம் மூலமுதற்கருவை - அயன்மால்உருத்திரன்என்னும் மும்மூர்த்திகளுடைய வடிவங்களுக்கும் காரணமாயிருக்கின்ற முழுமுதற்பொருளும்; மூசிடும்மால்விடை யின்பாகனை - மூசுமூசுஎன்று மூச்சுவிடுகின்ற பெரியஎருதின் மேலேறிச் செல்கின்றவனும்; பாவகம் இன்றிமெய்யே ஆகமுறப்பற்றுமவர்க்கு அமுதை - பாவனையில்லாமல் உண்மையான அன்பினால் தமது மனதிலேபொருந்தும்படி தன்னுடைய திருவடிகளைப்பற்றுகிற அடியார்களுக்கு அமுதுபோன்று இன்பப்பொருளாயிருக்கிறவனும்; பால்நறும் நெய் தயிர் ஐந்து ஆடும்பரம்பரனை - பசுவினுடைய பால்மணமுள்ள நெய் தயிர் சாணம் நீர்ஆகியபஞ்சகவ்வியங்கொண்டு முழுக்குச்செய்கின்ற மேலானபரம் பொருளாயிருக்கிறவனும்; கார் வயல்சூழ்கானப்பேருறை காளையை - மேகம் மழை பொழிகின்ற வயல்களாற் சூழப்பட்ட திருக்கானப்பேரூரிலே திருக்கோயில் கொண்டெழுந்தருளி இருக்கின்றவனுமாகிய சிவபெருமானை; எனக்கு காவல்இறைஎன்று எய்துவதுஎன்றுகொல் - எனக்குப்பேரின்பம் அளித்துக்காக்கும் இறைவன்என்று அவனுக்கு என்னிடத்திலுள்ள தொடர்பை உள்ள படி அறிந்து அவனுடைய திருவடிகளைச்சேர்ந்து பேரின்பமடைவது எக்காலம்?

(விளக்கம்) வஞ்சர்மனத்து இறையும்அணுகாத நெஞ்சவன் - வஞ்சம்என்பது நேர்மையின்மை; உள்ஒன்றெண்ணிப் புறமொன்றுகூறுதலும் இனியதாகஒன்றுகூறி கொடியதாக மற்றொன்று செய்தலும் ஆகும் வஞ்சகக்குணமானது சிவபெருமானது திருவருளைப்பெறுதற்கு முற்றும்தடையாயுள்ளது. சுந்தரமூர்த்திஅடிகள் தமதுதேவாரங்களில் பலஇடங்களில் சிவபெருமானைக் கரவாடும்வன்னெஞ்சில் கில்லாதான்என்று கூறுகின்றார். மூவர்உருத்தனது ஆம்மூலமுதற்கருவை - "ஒருருவாயினை மானாங்காரத்தீரியல் பாயொருவின்முதல் பூதலம். படைத்தழித்தழிப்பமும் மூர்த்திகளாயினை' என்றுதிரு ஞானசம்பந்தஅடிகள் கூறியாங்கு படைப்பு காப்பு அழிப்புத்தொழில்கள் செய்யும்மும்

மூர்த்திகளும் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானிடமிருந்து தோன்றி அவனிடம் ஒடுங்குதலால் அடிகள் மூவருருத்தனதா மூலமுதற்கருவை என்றார். பாவகம்இன்றி மெய்யே ஆகமுறப்பற்று மவர்க்கமுதை-பாவகம் - தோற்றம் - பாவனை (Hypocrisy) ஆகம் - நெஞ்சு; மனம். அமுது - அமுதுபோன்று இன்பம்செய்கின்றவன் - எனக்குக் காவல்இறைஎன்று எய்துவது என்றுசொல் - காவல்என்பது இங்கே அநுக்கிரகத்தை (அருளலை) க்குறிக்கிறது. சொல். ஓ - அசைநிலைகள் - . கானப்பேர்உறைகாளையை - சுந்தரமூர்த்தி அடிகள் சேரமான் பெருமாள் நாயனருடன் பாண்டிநாட்டிலுள்ள தலங்களை வணங்கிக்கொண்டு திருச்சுழியலில் அமர்ந்திருந்த பொழுது இரவு கனவில் அவரிடத்தில் சிவபெருமான் கையிற்பொற்செண்டும் திருமுடியிற் சுழியலுமுடைய காளையார் வடிவிற்றோன்றி "யாமிருப்பது திருக்கானப்பேர்" என்றுகூறிமறையவும், அடிகள் பாடிய பதிகத்தின் 7-வது பாட்டு - அவர்கனவிற் கண்டகாளைவடிவத்தை நினைந்து திருக்கானப்பேருறைகாளையை என்று பாடியருளினர்.

அறிவிலாத வன்சமணர் சாக்கியர் தவம்புரிந் தவஞ்செய்வார்
நெறியலாதன கூறுவர் மற்றவை தேறன்மின் மாறுநீர்
மறியுலாந் திரைக் காவிரிவலஞ் சுழிமருவிய பெருமானைப்
பிறிவிலாதவர் பெறுகதி பேசிடி லளவறுக் கொண்ணாதே ௭௬

(உரை) அறிவிலாத வன்சமணர் சாக்கியர் - கடவுளைப்பற்றிய அறிவில்லாத சமணரும் சாக்கியரும்; தவம்புரிந்து அவம்செய்வார் - தவம் செய்கிறதாகச் சொல்லிப் பயனில்லாத வீண்செயல்களைச் செய்கிறவர்களாகி; நெறி அலாதன கூறுவர் - நல்ல நெறிக்கு உரியன அல்லாத் தீய செயல்களைச் செய்யும்படி சொல்லுவார்; மற்று அவை தேறன்மின் - அவ்வாறு அவர்கள் கூறுகிற அந்தச் சொற்களை நீங்கள் உண்மை எனத் தெளியாதேயுங்கள்; மாறுநீர் - வற்றாத நீரையும்; மறிஉலாம் திரைக் காவிரி - மடங்கி வருகின்ற அலைகளை உடைய காவிரி ஆற்றின்; வலஞ்சுழி மருவிய பெருமானை - அருகிலிருக்கின்ற திருவலஞ்சுழி என்ற தலத்தில் திருக்கோயில்கொண் டெழுந்தருளியிருக்கின்ற பெருமானை; பிறிவிலாதவர் - தங்கள் மனத்தினில் நினைப்பும் மறப்பும் அற்ற நிலையில் எப்பொழுதும் நினைந்து அவனோடு அத்துவிதமாய்க் கலந்துகொண்டிருக்கிற அடியார்கள்; பெறுகதி பேசிடில் - அடைகின்ற பயன் இன்னது எனக் கூறப்புகின்; அளவு அறுக்கொண்ணாது - அதனை இவ்வளவுதான் என்று வரையறுத்துக் கூறமுடியாது. ஆகலின் நீங்கள் திருவலஞ் சுழியில் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானை எப்பொழுதும் உங்கள் மனதில் நினைந்து வழிபடுமின் என்பது குறிப்பெச்சம்.

(விளக்கம்) தவம்புரிந்து அவம்செய்வார் - சேக்கிழார் அடிகள் பெரியபுராணத்தில் "தவமென்று பாயிடுக்கித் தலைபறித்து நின்றுண்ணும் - அவமொன்றும் நெறி" என்று சமண சமய நெறியைக் கூறியிருத்தல் காண்க. சமணரும் சாக்கியரும் தோற்றத்தில் தவம்செய் வேடத்தை உடையவராயினும், உண்மையில் இறைவனிடத்திலும் உயிர்களிடத்திலும் அன்பில்லாதவர்கள் என்பது கூறப்பட்டது. செய்வார் என்ற வினைமுற்று வினையெச்சப் பொருளில் வந்தது. மற்று அவை தேறல்மின்-மற்று-அசை. தேறல்மின் - எவற்பன்மை வினைமுற்று. மின் - விகுதி. பிறிவிலாதவர் - மேலே 53-வது பாட்டில் "நெஞ்சிடை நின்றகலான் பலகாலமும் நின்றனனே" என்றும் 54-வது பாட்டில் "என்ம(ன)த் தகத்தே யிரவும் பகலும் பிரிவரியான்" என்றும் இறைவனுக்குக் கூறப்பட்ட கருத்துக்கள் இங்கு அடியார்களுக்குக் கூறப்பட்டன. அளவு அறுக்கு ஒண்ணாது - அடியார்கள் இறைவனுடன் பிரிவறியாது அத்துவிதமாய்க் கலந்து பெறும் சிவபெரும்போகம் புதிது புதிதாய் வளர்ந்துகொண்டு போகின்றது (Infinite Bliss) என்பார் அளவறுக்கொண்ணாது என்றார். நீங்கள் - தோன்றா எழுவாய். தேறன்மின. பயனிலை. கதி எழுவாய். அளவறுக்கொண்ணாது - பயனிலை.

௮. அஞ்செழுத்தருணிலை

விண்ணினார் மதிசூடிய வேந்தனை
எண்ணி நாமங்களோதி எழுத்தஞ்சுங்
கண்ணினாற் கழல் காண்பிட மேதெனிற்
புண்ணியன் புகலூருமென் நெஞ்சுமே. ௮௦

(உரை) விண்ணினார்மதி சூடிய வேந்தனை - வானத்தில் நிலவுகின்ற திங்களைத் தரித்த மன்னனாகிய சிவபெருமானுடைய; நாமங்கள் எழுத்தஞ்சும் எண்ணி ஓதி - நாமமாகிய அஞ்செழுத்தையும் அதன் கருத்தை மனதில் சிந்தித்து ஓதி; கழல் கண்ணினாற் காண்பு இடம்-அவனது திருவடிகளைப் புறக்கண்களாலும் அகக்கண்களாலும் காணுதற்கு உரிய இடமானது; ஏது என்னில்-யாது என்று வினவின்; புண்ணியன் புகலூரும் என் நெஞ்சும் - அறமுறையே அறவாளனாகிய சிவபெருமான் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கிற திருப்புகலூர் என்ற தலமும் எனது உள்ளமும். அடியார்களே! சிவபெருமானை அஞ்செழுத்து ஓதிப் புறத்திலும் அகத்திலும் கண்டு வழி படுமின் என்பது குறிப்பெச்சம்.

(விளக்கம்) வேந்தன் "ஆட்சி உலகை உடையாய் போற்றி" என்று அடிகள் போற்றித் திருத்தாண்டகத் தேவாரத்திற் கூறியபடி சிவபெருமான் உலகிற்கு முழு முதற் கடவுளாய் அதனை ஆளுகிறவன் ஆதலின், வேந்தன் என்று கூறினார். வேந்தனை ஆறும் வேற்றுமைப் பொருளில் வந்தது. உருபு மயக்கம்; நாமங்கள் - எழுத்தஞ்சும் எண்ணி ஓதி - நாமங்கள் என்பதில் கள் அசை; அஞ்செழுத்தும் சிவபெருமான் திருநாமம் ஆதலின் நாமம் எழுத்தஞ்சும் என்றார். எந்தையார் திருநாமம் நமச்சிவாய என் றெழுவார்க்கு இருவிசும்பிலிருக்கலாமே" என்று அடிகள் பலவகைத் திருத்தாண்டகம் 10-வது பாட்டிற் கூறியருளினமை காண்க. சிவபெருமானுடைய எண்ணில் திருநாமங் களும் அஞ்செழுத்திலடங்கும். எண்ணி ஓதுதலாவது ஓதுகிறவன் ஒவ்வொரு எழுத்தும் இன்ன இன்ன பொருளைக் குறிக்கிறது என்றும் சிகாரமாகிய சிவமும் யகாரமாகிய உயிரும் ஆண்டான் அடிமைத் தொடர்பில் நிற்கும் முறைமையையும், உயிர் மகாரமா கிய மலத்தையும் நகாரமாகிய திரோதான சத்தியையுங் கடந்து நின்று வகாரமாகிய அருட்சத்தி வழியாய்ச் சிவத்தை அடையும் முறைமையும் மனதின்கண் கசிந்துருகி நினைத்து சிவத்தில் அடங்கி உறைத்து நின்று கணித்தலாகும். அஞ்செழுத்தாலுள்ள மாணுடைமை கண்ட "ஏனை அஞ்செழுத்தாலருச்சித் திதயத்தில, அஞ்செழுத்தாற் குண்டலியிற்செய் தோமங் கோதண்டஞ் சானிக்கில் அண்டனாஞ் சேடனுமங்கு" என்று சிவஞானபோதம் 9-வது சூத்திர வெண்பாவிற் கூறப்பட்டிருத்தல் காண்க. இங்கே அஞ்செழுத்தோதல் ஆன்மா மலமாசகன்று இறைவனை ஞானக் கண்ணிற் சிந் தையில் நாடி அவனுடைய சிறப்பியலை அறிந்தபின், பழைய மலவாசனை நீங்கும் பொருட்டு ஓதுதல். திருஞானசம்பந்த அடிகள் "துஞ்சலும் துஞ்சலிலாத போழ்தி லும் நெஞ்சகம் நைந்து நினையின் நாடொறும்" என்று பஞ்சாக்கரப் பதிகத்தில் கூறி யருளினார்; கண்ணினால் கழல் காண்பு இடம் - கண்ணினால் காண்பு என்பது அகக்கண் ணினாலும் புறக்கண்ணினாலும் ஒருதன்மைக் காட்சியாகக் காணுதல்; அகக்கண்ணினால் சிவபெருமானை 4-வது அடியிற் கூறப்படுகிற நெஞ்சில் விளங்குகிற சிவலிங்கத்தைக் காணுதல், புறக்கண்ணினால் திருப்புகலூரில் எழுந்தருளியிருக்கிற சிவலிங்கப் பெருமா னைக் காணுதல். திருமூலர் "உள்ளம் சிவலிங்கம் ஊனுடம்பு ஆலயம்" என்றார். அகக் காட்சி உண்டாதற்குப் புறக்காட்சியும் அஞ்செழுத் தோதுதலும் சாதனங்கள். காண்பு- தொழிற் பெயர். பு தொழிற் பெயர் விகுதி. காட்சி - காணுதல். ஏதெனில் - என்னில்- எனில் எனக் குறுகியது. இடம் - எழுவாய்; நெஞ்சு, புகலூர், பயனிலைகள்.

கருவாய்க் கிடந்துன் கழலேநினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம்பயின்றே னுனதருளால்
திருவாய்ப் பொலியச் சிவாயநம வென்றுநீ றணிந்தேன்
தருவாய் சிவகதிநீ பாதிரிப்புலியூர் அரனே. ௨௧

(உரை) திருப்பாதிரிப்புலியூர் அரனே-திருப்பாதிரிப்புலியூரில்திருக்கோயில்கொண்டு எழுந்தருளி யிருக்கின்றவனே ; கருவாய்க் கிடந்து - (உலகிற் பிறத்தற்கு முன்னே எனது தாயாருடைய) கருப்பையிற் கிடந்து உன்னுடைய திருவடிகளையே சிந்தித்துக்கொண்டிருந்தவனாகிய நான்; உருவாய்த் தெரிந்து - மானுட வடிவில் பிறந்து அறிகிற பருவம் வந்தபொழுது; உனது திரு அருளால்-உனது பேரருட்டிறத்தினால்; உனது நாமம் பயின்றேன் - உனது திருநாமமாகிய அஞ்செழுத்தை ஓதிப் பழகினேன் ; (உனது திருவருளால்) - உனது பேரருட்டிறத்தால் ; திருவாய்ப்பொலிய - மலத்துவம் நீங்கிச் சிவத்துவ விளக்கம் அடைகிறதற்காக ; சிவாயநம என்று நீறு அணிந்தேன் - சிவாயநம என்ற சூக்கும அஞ்செழுத்தை நினைந்து ஓதி திருநீறணிந்து உன்னுடைய திருவடிகளை வணங்கினேன் ; நீ சிவகதி தருவாய் - இவ்வாறு நான் செய்ததனாலுண்டான பயனாக நீ எனக்குச் சிவஞானத்தைத் தந்தருளினாய்.

(விளக்கம்) திருநாவுக்கரசு அடிகள் இந்தப் பாட்டில் தனது அநுபவத்தைப் பிறர் அறிந்து உய்யும்படி கூறுகின்றார். கருவாய்க் கிடந்து உருவாய்த் தெரிந்து - மேலே 16-வது பாட்டில் அடிகள் கருவாகிக் குழம்பிருந்து......உருவாகிப் புறப்பட்டு என்று கூறியிருத்தல் காண்க. கருவாகிக் கிடந்து என்பதனால் தன் முனைப்பின்றி இறைவன் வயப்பட்டிருந்தது என்பது குறிப்பிடப்பட்டது. உருவாய்த் தெரிந்து - தெரிய(=தெரிந்ததனால்) என்பது தெரிந்து என நின்றது. தெரிந்து பயின்றேன் என்பது காரணப் பொருட்டாய் இறந்தகாலப் பொருளில் வந்தது. உனதருளால் உன்றன் நாமம் பயின்றேன் - பயிலுதல் அடிக்கடி ஓதிப் பழகுதல். அடிகள் திருநனிபள்ளித் தேவாரத்தில் 5-வது பாட்டில் துஞ்சிருள் காலை மாலை தொடர்ச்சியை மறந்திராதே - அஞ்செழுத்தோதி நாளுமரனடிக் கன்பதாகும'' என்று தாம் அஞ்செழுத்தோதிப் பயின்றதைக் கூறுகின்றார். உனதருளால் என்ற சொற்றொடரைப் பயின்றேன் என்பதனோடும் திருவாய்ப்பொலிய என்பதனோடும் சேர்க்க, திருவருளின் துணையின்றிப் பயிலுதலும் திருவாய்ப் பொலிதலும் முடியா ஆதலின். திருவாய்ப் பொலியச் சிவாயநம என்று நீறு அணிந்தேன் - திருவாய்ப். பொலிய என்பது காரியப் பொருட்டாய் எதிர்காலப் பொருளில் வந்தது. நெல்விளைய மழை பெய்தது என்றாற்போல. சிவாயநம என்று நீறணிதலினால் திருவாய்ப் பொலிதல் நிகழ்ந்தது. என்று என்பது நினைந்து ஓதி என்னும் பொருள்பட வந்தது. நீறணிந்தேன் - மேலே பாதிரிப்புலியூர்அரனே என்றதனால் நீறணிந்தேன் என்பது நீறணிந்து வணங்கினேன் என்னும் பொருள்பட வந்தது. சொல்லெச்சம். சிவாய நமஎன்று என்பதில் மனதின் செயலும் வாக்கின் செயலும் அணிந்தேன் என்பதில் காயத்தின் செயலும் அடங்கியுள்ளன. சூக்கும அஞ்செழுத்து நினைந்து ஓதலும் திருநீறணிந்து வணங்குதலும் சிவதத்துவ விளக்கத்துக்குச் சாதனமாயுள்ளன என்பது கூறப்பட்டது. பசுவாகிய தூல விலங்கினது கருநிறச் சாணத்தைத் தீயாற் சுட்டுத் தூயவெண்ணீறாக்குதல் சூக்குமமாகிய இருள்நிற மலத்தாற் பற்றப்பட்ட மக்கள் ஆன்மா, மெய்ஞ்ஞானத்தால் மலத்தன்மை நீங்கி வெள்ளிய அருளொளி நிறைந்த சிவத்தன்மை அடைதல் மிக்க பொருத்தமான குறியீடாகும். குறியீடு (Symbolism) மயமாயுள்ள உலகில் மக்கள் எத்துறை வாழ்விலும் குறியீடுகளை வழங்கி வருதலைக் கண்டும் திருநீறு அணிதலாகிய குறியீட்டைப் பழிக்கிறவர்கள் உண்மையை ஆராய்ந்தறியுந் திறனில்லாதவர்கள். ஒரு தீக்குச்சிக் கரித்துண்டு ஒன்றின்மேல் வைத்து ஒருவன் ஊத அக்கரிய துண்டு கரிய

திறமாறித் தீயுருவாய் விளங்குதல்போல ஒருவன் அஞ்செழுத்தை ஓத அஞ்செழுத்தில் விளங்குகிற அருட்சத்தியால் மலத்தன்மையினின்றும் நீங்கிச் சிவத்தன்மையை அடைகிறான். நீ சிவகதி தருவாய் - சிவகதி என்பது முத்திக்குச் சாதனமாகிய மெய்ஞ்ஞானத்தைக் குறிக்கிறது. முத்தி என்று பொருள் கூறினும் பொருந்தும். இயல்பு அல்லது தெளிவுபற்றி தந்தாய் என இறந்தகாலத்தாற் கூறற்பாலது தருவாய் என எதிர்காலத்தாற் கூறப்பட்டது. (நன்னூல் பொது இயல் 33-வது சூத்திரம்) சிவகதி அடைதல் திருவாய்ப் பொலிதலின் காரியமாகக் கூறப்பட்டது. ஆகவே சிவகதி அடைதலுக்குத் திருவாய்ப் பொலிதலும் திருவாய்ப் பொலிதலுக்குச் சிவாயநம என்று நீறணிந்து வணங்குதலும் காரணமாயின.

வைச்சபொருள் நமக் காகுமென்றுசொல்லி மனத்தடைத்துச்
சித்தமொருக்கிச் சிவாயநமவென் றிருக்கினல்லான்
மொய்த்தகதிர்மதிபோல் வாரவர்பாதிரிப்புலியூர்
அத்த னருள்பெறலாமோ அறிவிலாப்பேதை நெஞ்சே. ௮௨

(உரை) அறிவிலாப்பேதைநெஞ்சே - சிறிதும் மெய்யறிவு விளங்கப்பெறாது உலகப்பற்றில் மயங்குகின்ற மனமே ; வைச்சபொருள்நமக்கு ஆகும்என்றுசொல்லி - நாம் இப்பொழுது அரிதின்முயன்று கிடைக்கப்பெறுகிற மெய்அறிவு ஆகிய நிலையானபொருளானதுபின் சிவகதிஅடைதற்குப்பயன் படும்என்றுநினைத்து ; மனத்துஅடைத்து - மனதிலேஉறுதியாகக்கொண்டு ; சித்தம்ஒருக்கி - மனத்தைஉலகவிடயத்திற்போகாதவண்ணம் ஆன்மாவில்ஒடுங்கச்செய்து ; சிவாயநமஎன்று - சிவாயநமஎன்றருக்கும் அஞ்செழுத்தைஅதன்கருத்தைநினைந்து ஓதி ; இருக்கின் அல்லால் - சிந்தைசெய்து இருந்தால் அல்லாமல் ; மொய்க்கதிர்மதிபோல் வார்அவர் - கதிர்கள் (கிரணங்கள்) நெருங்கியுள்ளதாகிய திங்களைப்போன்றிருக்கிறவராகிய ; பாதிரிப்புலியூர்அத்தன் - திருப்பாதிரிப்புலியூரில் எழுந்தருளியிருக்கிறதந்தையாகிய சிவபெருமானுடைய ; அருள்பெறலாமோ - திருவருளைப்பெற்றுநாம் முத்திஅடைந்து உய்யமுடியுமோ ? (அருள்பெறமுடியாது என்றபடி)

(விளக்கம்) இந்தப்பாட்டில் திருநாவுக்கரசுஅடிகள் உலகிற்பற்றுவைத்து உழன்றுகொண்டிருக்கும் மனமுடையமக்களுக்கு அறிவுரைகூறவேண்டித் தமதுமனத்தைப் பார்த்துக் கூறுவதாகக்கூறுகின்றார். அறிவிலாப்பேதைநெஞ்சே - அறிவுஎன்பது இங்கேமெய்யறிவு, (சிவஞானம்) பேதைநெஞ்சு - சிவன்திருவடிகளைமறந்து உலகிற்பற்றுவைத்து மயங்குகிறநெஞ்சு ; இப்பாட்டில்வழங்கப்படுகிற நெஞ்சு, மனது, சித்தம் மூன்றும் ஒருபொருட்சொற்கள். மனம் சிந்திக்கும்பொழுது அதற்குச் சித்தம் என்று பெயர். வைச்சபொருள் - வைச்சஎன்றசொல்வைத்த என்றசொல்லினது போலிச்சொல். நமக்குஆகும்-அடிகள் மனத்தைப்பார்த்து அதனைத்தம்மோடு உளப்படுத்திக்கூறுதலால் நமக்கு என்றார். ஆன்மாவினது நலமும், அதற்குக்கருவியாயுள்ள மனதினது நலமும் ஒன்றுஎன்பது குறிப்பிடப்பட்டது. ஆகும்என்பது நிலையில்லாத உலகப்பொருள் போல் அல்லாமல் நிலையுள்ளதாய்ப் பயன்படுவதாயுள்ளது என்றபொருள்படநின்றது. என்றுசொல்லி - மனதினதுசெயல் நினைத்தல்ஆதலின் சொல்லிஎன்பதற்கு நினைத்து என்றுபொருள்கூறப்பட்டது. மனத்துஅடைத்து - அடைத்தல் - வெளியேபோகவிடாதிருத்தல், அதாவது மறந்துபோகாமல் மனத்தினுள்ளே உறுதியாகக்கொள்ளல். சிவாயநமஎன்றுஇருக்கினல்லால் - மனமானது ஆன்மாவிலொடுங்கி ஆன்மாதற்போதமின்றி சிவத்திலொடுங்கினலொழிய சிவனுடைய அருட்சத்தி ஆன்மாவினிடத்துப் பதியாது ஆதலின், சித்தமொருக்கிச் சிவாயநம என்றிருக்கின்லல்லால் என்றார். தூல அஞ்செழுத்தன்றி சூக்கும அஞ்செழுத்து ஆன்மாவைச்சிவனிடத்தி லொடுங்கச்செய்தலால் சிவாயநம என்றுஎன்றார்; இருக்கினல்லால் சிந்தித்திருக்கினல்லால் என்னும் பொருள்படநின்

றது. ஔவைப்பிராட்டியாரும் "சிவாயநமவென்று சிந்தித்திருப்பார்" என்றருளினர். சித்தம் ஒருக்கிச் சொல்லும் அஞ்செழுத்தை அதன் கருத்து அறிந்து கசிந்து உருகி ஓதல், ஆன்மா சிவத்தில் ஒடுங்கிச் சிவனது அருள் பெறுதற்குக் காரணமாயுள்ளது. மொய்க்கதிர்மதி போல்வார் அவர்-மொய்த்தகதிர் = கிரணங்களோடு நெருக்கமாய்க் கூடியிருக்கிற திங்கள்; கதிர் என்பது கிரணம்; அது இங்கே ஆகுபெயர் கதிரையுடைய திங்களைக் குறிக்கிறது. திங்கள் இரவில் உலகிலுள்ள புறஇருளை ஓட்டுதல்போல, இறைவனுடைய அருள்ஒளியானது ஆன்மாக்களுடைய அகஇருளை ஓட்டுதலாலும் திங்களும் அவனுடை ஒளியும் எவ்வாறு அபின்னமாயிருக்கிறதோ, அவ்வாறே இறைவனும் அவனது அருட்சத்தியுடன் அபின்னமாயுள்ளவனாயிருத்தலாலும் மொய்த்தகதிர்மதி போல்வாரென்றார். அத்தன் அருள் பெறலாமே - ஓ - வினாப்பொருளில் அருள்பெறமுடியாது என்னும்பொருளைத் தருகின்றது. இப்பாட்டில் ஆன்மாவானவன், மனதைச் சிவனிடத்தில் ஒடுங்கச் செய்து சிவாயநம என்று உருகி கசிந்து ஓதிச் சிந்தித்திருத்தல் மலத்தன்மையினின்றும் நீங்கி சிவத்தன்மையை அடைகிற திருவருளைப் பெறுதற்குச் சாதனமாயுள்ளது என்பது கூறப்பட்டது.

ஏதுமொன் றுமறி விலரா யினும்
ஓதியஞ் செழுத்து முணர்வார் கட்கும்
பேதமின் றியவர வருள்ளத் தே
மாதுந் தாமும் மகிழ்வர் மாற்பேறரே. ௮௧

(உரை) மாற்பேறர் - திருமாற்பேறு என்ற தலத்தில் திருக்கோயில்கொண்டெழுந்தருளி யிருக்கின்ற சிவபெருமான்; அஞ்செழுத்தும் ஓதி உணர்வார்கட்கும் - அஞ்செழுத்தை ஓதித் தம்முடைய பொது இயல்மட்டும் அறிந்து அன்புடன் வழிபடுகிறவர்களுக்கும்; ஏதும் ஒன்றும் அறிவிலராயினும் - அவர்கள் தமது சிறப்பியலை அறிந்து தம்மோடு அத்துவிதமாய்க் கலந்து சேரும் மெய்அறிவு சிறிதுமில்லாதவர்களாயிருப்பினும்; அவர் அவர் உள்ளத்து பேதமின்றி - எவர் எவர் தமது பொது இயலை உரையளவையாலும் கருதலளவையாலும் அறிந்து தம்மை அன்போடு வழிபடுகிறார்களோ அவரவருடைய உள்ளத்திலும் யாதொரு வேற்றுமை யில்லாமல்; மாதும் தாமும் மகிழ்வர் - உமாதேவியாரும் தாமுமாக அவர் அன்புக்கு உவந்து வீற்றிருந்தருளுவர்.

(விளக்கம்) மேலே 80-வது பாட்டில் சிவபெருமானுடைய சிறப்பியலை அறிந்து அவரோடு இரண்டறக் கலந்து ஞானத்தால் வழிபடும் தமது உள்ளத்திலும், திருப்புகலூர் திருக்கோயிலிலும் வீற்றிருக்கின்றார் என்று கூறிய திருநாவுக்கரசு அடிகள், இப்பாட்டில் சிவபெருமான் தமது பொது இயலை அறிந்து யோகநெறியில் நின்று உண்மையாக வழிபடுகிறவர்களுடைய உள்ளத்திலும் உமாதேவியாரோடு உவந்து வீற்றிருந்தருளுகின்றார் என்று கூறுகின்றார். 81,82-வது பாட்டுகளிலும் சிறப்பியலை உணரும் உயர்நிலையுள்ளவர்கள் பெறும்பயன் கூறப்பட்டிருக்கின்றது. தம்முடைய சிறப்பியலை அநுபவ ஞானத்தினாலறிந்து தம்மோடு அத்துவிதமாய்க் கலந்து தம்மை மெய்ஞ்ஞானத்தால் வழிபடுகிறவர்களுடைய உள்ளத்தில் அவர்கள் அறிய சிவபெருமான் வீற்றிருந்தருளுவர்; ஆனால் தமது பொது இயலை மாத்திரம் அறிந்து தம்மை வழிபடுகிறவர்களுடைய உள்ளத்தில் அவர்கள் அறியாது வீற்றிருந்து அவர்களது அறிவு நிலைக்குத் தக்கவாறு அருள்செய்கின்றார் என்பது கருத்து. இந்தக் கருத்தை அடிகள் திருஐயாற்றுத் தேவாரம் 4-வது பாட்டில், 'இருள்தரு துன்பப்படல மறைப்ப மெய்ஞ்ஞானமென்னும்-பொருள்தரு கண்ணிழந்துண் பொருள்நாடிப் புகலிழந்த-குருடருந் தம்மைப் பரவக் கொடுநரகக் குழியின் - றருள்தருகை கொடுத்தேற்றும் ஐயாறன் அடித்தலமே" என்று கூறியருளினமை காண்க. "மந்தரமன்ன பாவங்கள் மேவிய - பந்தனையவர் தாமும் பகர்வரேல் - சிந்தும் வல்வினை செல்வமு மல்குமால் - நந்திநாமநமச்சி வாயவே" என்று திருஞானசம்பந்த அடிகள் கூறியவாற்றாலும் அறிக.

சிறப்பு இயலை உணராதவர்கள் அஞ்செழுத்தோதினாற் பயனுளதாகுமோ என்ற ஐயம் மக்களுக்கு நிகழாதிருத்தற்பொருட்டு இந்தப் பாட்டு, கடைசியில் வைக்கப்பட்டதாக நாம் நினைக்கவேண்டியதிருக்கிறது. அஞ்செழுத்தும் ஓதி உணர்வார் - அஞ்செழுத்தும் - உம் முற்று உம்மை; ஒவ்வொரு எழுத்தினது பொருளும் தெரிந்து ஓதல்வேண்டுமென்பதாயிற்று. உணர்வார்கட்கும் என்பதில் உம் - இறந்தது தழீஇய எச்ச உம்மை; சிறப்பியலை உணர்வார்க்கும் அன்றி என்னும் பொருள்பட நின்றது. ஏதும் ஒன்றும் அறிவு இலராயினும் - ஏதும் = சிறிதும். ஒன்றும் அறிவு - இறைவனோடு அத்துவிதமாய்க் கலந்து உணரும் சிறப்பியல் அறிவு; பதிஞானம்; மெய்யுணர்வு. அவர் அவர் உள்ளத்தே பேதம் இன்றி - உள்ளத்தே என்பதில் ஏ = அசை. சிறப்பியலை அறிந்து ஓதுவாருடைய உள்ளத்தில் இறைவன் மகிழ்ந்து வீற்றிருத்தல்போல, பொது இயலை அறிந்து ஓதுவாருடைய உள்ளத்திலும் அங்ஙனம் வீற்றிருப்பார் என்பார் பேதமின்றி என்றார். மாதும் தாமும் மகிழ்வர் - மகிழ்வர் என்பதனால் பொது இயலை அறியாதவர்களுடைய உள்ளத்திலும் பொது இயலை அறிகிறவர்களுக்குள்ளும் தம்மைத், தாம் அறிந்த நிலையில் வஞ்சனையின்றி உண்மை நிலையில் வழிபடாதவர்களுடைய உள்ளத்திலும் மகிழாது வீற்றிருப்பர் என்பது பெறப்பட்டது.

௯. அணைந்தோர் தன்மை

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
    நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
    பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
    சங்கரா சயபோற்றி போற்றி என்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் மாதீ யென்று
    மாரூரா யென்றென்றே யலறா நில்லே. ௮௪

(உரை) நெஞ்சே - உள்ளமே; நிலைபெறுமாறு - அயரா அன்பினாலே அரன் அடிகளை அடைந்த அத்துவித நிலையினின்றும் வழுவாமல் நிலையாய் நிற்கும் வண்ணம்; எண்ணுதியேல்-விரும்புவாயானால்; நீவா-நீ என்னுடன் வா; அதாவது நீ என்னுடன் சேர்ந்து நின்று நான் சொல்லுகிறபடி கேள். நித்தலும்-நாள்தோறும்; புலர்வதன்முன் - இராப்பொழுது முடிந்து விடியுங்காலத்துக்குமுன்; எம்பிரானுடைய கோயில்புக்கு-எமது தலைவனாகிய திருவாரூர்ப் புற்றிடங்கொண்ட பெருமானுடைய திருக்கோயிலுக்குப் போய்; அலகு இட்டு (உம்) - அக்கோயிலைப் பெருக்கியும், மெழுக்கு இட்டும் - மெழுகியும்; பூமாலை புனைந்து (உம்) - பூக்களால் மாலைகள்கட்டி அம்மாலைகளைப் புற்றிடங்கொண்ட பெருமானுக்குச் சாத்தியும்; தலையாரக் கும்பிட்டு (உம்) - தலையினாலே நன்கு வணங்கியும்; கூத்து ஆடியும் - உள்ளத்திலெழும் உவகையினால் கூத்து ஆடியும்; சங்கராசய போற்றிபோற்றி என்றும் - சங்கரனே, உனது திருவருள் உலகில் வெற்றி பெறுக, உனக்கு வணக்கம் வணக்கம் என்று சொல்லியும்; அலைபுனல் சேர்செஞ்சடை எம் ஆதி என்றும் - அலைகளை வீசும்கங்கை யாறு சேர்ந்த சிவந்த சடையுடைய எமது முதல்வனே என்று சொல்லியும்; புகழ்ந்து (உம்) - புகழ்ந்தும்; பாடி (உம்) - (தோத்திரங்கள்) பாடியும்; ஆரூரா என்று என்று அலறு (உம்) - திருவாரூரா என்று பலகாற் சொல்லி அன்பினால் மனம் கசிந்து உருகியும்; ஏத்தி - இவ்வாறு துதித்து; நில் - அத்துவித நிலையினின்று வழுவாமல் நிற்கக் கடவாய்.

(விளக்கம்) எம்பிரானுடைய கோயில்புக்கு அலகிட்டும் மெழுக்கிட்டும் பூமாலை புனைந்தும் தலையாரக் கும்பிட்டும் கூத்தாடியும் சங்கரா சயபோற்றிபோற்றி யென்றும் அலைபுனல்சேர் செஞ்சடை யெம்மாதீ யென்றும் புகழ்ந்தும் பாடியும் ஆரூரா வென்றென்றே அலறியும் (அலறூஉம்) எத்தி நில்லேல் என்று என் உம்மைகளைப் பெய்ய வேண்டிய இடங்களிற் பெய்தும் தொக்கி நிற்கிற இடங்களில் விரித்தும் சொல்முடிபு செய்க. இவ்வாறு செய்யாக்கால் பொருள் நன்கு விளங்காது. சிவஞானபோதம் 12-வது சூத்திரத்திற் கூறப்பட்டபடி அயரா அன்பின் அரன் கழலடைந்த சீவன் முத்தர்கள் தாங்கள் நிட்டையினின்று நீங்கிப் புறத்தே செல்லுங்கால் எடுத்த உடல் நீங்கும்வரை உடலூழாய்க் கழிய இருக்கிற பிராரத்த வினை தங்களை மெல்லிதாய்த் தாக்கி அத்துவித நிலையினின்று வழுவாதிருக்கச் செய்தற்குத் தங்கள் அறிவு வேட்கை செயல்களை திருக்கோயிலின்கண் முறையே மனதினாலே நினைத்தலினும் வாயினாலே புகழ்தலினும் உடலினாலே அலகிடுதல் முதலிய பணிகள் செய்தலிலும் நிகழ்த்த வேண்டுமென்று கூறுகின்றது. நிலைபெறுமாறு எண்ணுதியேல் - என்றதனால் அரன் பணிகள் செய்யப்படாவிட்டால் முன் அடையப்பெற்ற அத்துவித நிலை நழுவும் என்பது கூறப்பட்டது. எண்ணுதி - முன்னிலை ஏவல் ஒருமை வினை முற்று. இ - விகுதி. தகரம் - எழுத்துப் பேறு. எல் - எனில் என்பதன் மரூஉ. எல் சேர்ந்ததனால் எண்ணுதி என்ற வினைமுற்று வினையெச்சப் பொருள் தருகின்றது. நித்தலும் - பிராரத்தவினை, சோர்வுபறித் தாக்குமாதலின் நித்தலும் என்றார். சங்கரா சய போற்றிபோற்றி என்றும் அலைபுனல் சேர்செஞ்சடை எம்ஆதீ என்றும் புகழ்ந்தும் - சங்கரன் என்றதனால் நீ ஆன்மாக்களுக்குப் பேரின்பம் அளிக்கிறவன் என்பதும் செஞ்சடை எம் ஆதீ என்றதனால் பேரின்பமளிக்கிறதற்கு நீ ஆற்றலுடைய முதல்வன் என்பதும் ஆதீ என்றதனால் முதன்மைபற்றிப் பேரின்பமளித்தல் உனது கடன் என்பதும் குறிப்பிடப்பட்டன. சய - வடமொழிச் சொல். ஜய என்பதன் திரிபு. இறைவனுடைய அருள் மக்களுடைய தீவினையினால் தாமதப்படாதபடி உலகில் விளங்கி வெற்றி பெறுக என்பார் சய போற்றி என்றார் - மாணிக்கவாசகப்பெருமான் "சயசய போற்றி என்னுங் கைதான் நெகிழவிடேன்" என்றருளினர். புனல் - நீர். அது இங்கே ஆகுபெயராய்க் கங்கையைக் குறிக்கிறது. போற்றி - போற்று + இ - தொழிற் பெயர்; இ - தொழிற்பெயர் விகுதி, வெகுள் + இ வெகுளி என வருதல்போல. போற்றுதல் அதாவது வணக்கம். போற்றிபோற்றி அடுக்குத் தொடர். ஆதீ - ஆதி என்ற சொல்லினது ஈற்று இகரம் நீண்டு விளிப்பெயராயிற்று. அடிகள் நெஞ்சை விளித்துக் கூறுதலால் அதனைத் தம்மோடு உளப்படுத்திப் பன்மையில் எம் ஆதீ என்றார். எம்பிரான் கோயில் என்றலும் அதுபற்றி. ஆரூரா என்று என்று அலறு-ஆரூரா என்று என்று அலறு-ஆரூரா என்ற சொல்லை மந்திரமாகப்பல்காற் சொல்லி அவ்வாறு சொல்லுதலினால் மனங்கசிந்து உருகி அழுது. அலறு - செய்யா என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம். அலறி - அலறுதலும் மேலே 58-வது பாட்டில் வந்துள்ள அரற்றுதலும் ஒரு பொருளன. எத்தினில் எத்துதல் என்பது (1) அலகிட்டும் (2) மெழுக்கிட்டும் (3) பூமாலை புனைந்தும் (4) கும்பிட்டும் (5) கூத்தாடியும் (6) புகழ்ந்தும் (7) பாடியும் (8) அலறியும் பலவாறாகத் துதித்தல். அலகிடுதல் மெழுக்கிடுதல் பூமாலை புனைதல். கும்பிடல் கூத்தாடல் ஐந்தும் உடலினாற் செய்யப்படும் சரியைப்பணிகள்; புகழ்தலும் பாடுதலும் வாக்கினாற் செய்யப்படும் சரியைப் பணிகள்; அலறுதல் மனதினாற் செய்யப்படும் சரியைப்பணி. ஞானிகள் சரியைமுதல் நான்கு பாதப்பணிகளுக்கு முரியர் ஆதலாலும் ஞானிகள் செய்கிறபணிகள் ஏனையோர்கள் செய்கிறபணிகளைப் பார்க்கிலும் சிறந்து விளங்கித் திருக்கோயிலில் அருள் விளக்கம் பெருகுதற்குக் காரணமா யிருத்தலாலும் இப்பாட்டில் ஞானிகளுக்குச் சரியைப்பணிகள் கூறப்பட்டன. நில்-முன்னிலை ஏவல் ஒருமை வினைமுற்று; ஆய் விகுதி புணர்ந்து கெட்டது. மேலே துவக்கத்தில் நிலைபெறுமாறு என்று சொன்னதற்கு ஏற்ப முடிவிலும் நில் என்

ளர். ஏத்திநில் என்பது காரணகாரியப்பொருளில் வந்தது. ஏத்தியதன் பயனாக அத்துவித நிலையில் வழுவாது நிற்கக்கடவாய் என்று நெஞ்சைப் பார்த்துக் கூறியவாறாயிற்று.

அடையலார் புரஞ்சீறியந் தணரேத்த மாமட மாதொடும்
பெடையெலாங் கடற்கானல்புல்கும் பிரமாபுரத் துறைகோயிலான்
றொடையலார் நறுங்கொன்றையான் றொழிலேபரவி நின்றேத்தினால்
இடையிலார் சிவலோக மெய்துதற் கிதுகாரணங் காண்மினே. ௮௫

(உரை) அடையலர் புரம்சீறி - தம்மை அடையாத அசுரர்களுடைய திரிபுரத்தைத் தீயெழச் சினந்து எரித்தும்; அந்தணர் ஏத்த - உயிர்களிடம் செந்தண்மை பூண்டொழுகும் சிறந்த பண்புடையாளர்கள் வழிபடவும்; பெடையெலாம் கடற்கானல் புல்கும் - பெண் அன்றில்களெல்லாம் தமது ஆண் அன்றில்களோடும் சேர்ந்துகொண்டிருக்கும் கடற்கரைச் சோலைகளை உடைய; பிரமபுரத்துமா மடமாதொடும் உறை கோயிலான் - சீகாழியில் பெருமையும் மடப்பமும் பொருந்திய உமாதேவியாரோடும் வீற்றிருக்கும் திருக்கோயிலை உடையவனும்; நறுமை ஆர்கொன்றைத் தொடையலான் - மணம் பொருந்திய கொன்றைமாலையை அணிந்தவனும் ஆகிய உருத்திரமூர்த்தி ஆகிய சிவபெருமான் (வீற்றிருக்கின்ற); தொழிலே நின்று பரவி ஏத்தினால் - (திருக்கோயிலில் சரியையாளர்) திருஅலகிடுதல்; திருமெழுக்கிடுதல்; பூமாலை கட்டிச்சாத்தல் முதலிய திருப்பணிகளை நிலையாகச் செய்து புகழ்ந்து துதித்தால்; சிவலோகம் எய்துதற்கு இடை இலார் - அவர்கள் (உருத்திரனது அருளைப்பெற்று) சிவலோகம் சேர்தலாகிய பதமுத்தியை அடைதற்கு யாதொரு தடையுமில்லாதவர்கள் (அதாவது அவர்கள் எளிதில் சிவலோகம் அடைவார்கள்); ஈது - உருத்திர மூர்த்தியாகிய சிவபெருமானுடைய திருக்கோயிற் பணிகளைச் செய்தல்; (சிவலோகம் எய்துதற்கு) காரணம் - அடியார்களாகிய நீங்கள் சிவலோகம் அடைதற்குக் காரணம் என்று; காண்மின் - அறிந்துகொண்டு அவ்வாறு செய்யுங்கள்.

(விளக்கம்) அடையலார் - அடை + அல் + ஆர் அடையாதவர்கள் - பகைவர்கள். அல் - எதிர்மறை விகுதி. ஆர் - உயர்திணைப் பலர் பாற்படர்க்கை விகுதி. சீறி ஏத்த - ஈரிடங்களிலும் உம் தொக்கி நிற்கிறது - சீறியும் ஏத்தவும் உறைகோயிலான் என வினைமுடிபு செய்க. பெடை எலாம் புல்கும் - பெடை - பெண்பறவை. இங்கே நெய்தல் நிலக் கருப்பொருளாகிய பெண் அன்றிலைக் குறிக்கிறது. புல்கும் என்ற சொல் அதற்குமுன் ஆண் அன்றில் என்ற சொற்களை அவாய் நிற்றலால் அவைகளை வருவித்துப் பொருள் உரைக்கப்பட்டது. கானல் - கடல் அருகிலிருக்கிற மாச்சோலை. அடிகள் தேவாரம் பாடின காலத்தில் சீகாழிக்கு அருகில் கடலும் கடற்கரைச் சோலைகளும் இருந்ததால் அவ்வாறு கூறப்பட்டது. தொழிலே நின்று பரவி ஏத்தினால் - தொழில் என்ற சொல் இங்கே திருக்கோயிலில் சரியையாளர் செய்கிற திருவலகிடுதல் முதலிய பணிகளைக் குறிக்கிறது. ஏ - பிரிநிலைப் பொருளில் வந்தது. ஏத்தினால் என்ற சொல்லுக்கு முன் சரியையாளர் என்ற சொல் தொக்கி நிற்பதை வருவித்துப் பொருளுரைக்கப்பட்டது. இது சொல்லெச்சம். நான்காவது அடியிற் கூறப்படுகிற சிவலோகம் எய்துதற்கு உரியவர் சரியையாளர் ஆதலின் தொக்கி நிற்கும் சொல் சரியையாளர் எனக் கூறப்பட்டது. நின்று பரவி - நிலையாக எப்பொழுதும் புகழ்ந்து. சிவலோகம் எய்துதற்கு இது சிங்கநோக்காய் முன்னும் பின்னும் இடையிலார் என்பதையும் ஈது காரணம் என்பதையும் தழுவுகின்றது. காண்மின் - மின் - முன்னிலை ஏவற்பன்மை விகுதி. காணுதலின் பயன் அவ்வாறு செய்தல் ஆதலின் காணுதல் என்பது அறிந்து அறிந்தவாறே செய்யுங்கள் என்ற பொருள் தந்து நின்றது. சரியையாளர் - தோன்றா எழுவாய். இடையிலார்-பயனிலை. நீங்கள் - தோன்றா எழுவாய். காண்மின் - பயனிலை - இந்தத் தேவாரப்பாட்டிலே சரியையாளர்களாகிய அடியார்கள் திருப்பணி

கள் செய்து வழிபட்டு அருள் விளங்கப் பெற்றிருக்கும் திருக்கோயிலைச் சிவன்முத்தர்கள் தாங்கள் அடையப்பெற்ற அத்துவித நிலையினின்று வழுவாதிருத்தற்குத் தொழல் வேண்டும் என்பது குறிப்பாகக் கூறப்பட்டது.

நறைமலிதரு மளறொடுமுகை நகுமலர்புகை மிகுவளரொளி
நிறைபுனல்கொடு தனைநினைவொடு நியதமும் வழிபடு மடியவர்
குறைவில பதமணை தரவருள் குணமுடையி றையுறை வனபதி
சிறைபுனலமர் சிவபுரநினைபவர் செயமகடலைவரே. ௮௬

(உரை) நறைமலிதரும் அளறு - (உம்) மணம் நிறைந்த சந்தனக்குழம்பும்; முகை நகுமலர் - (உம்) அரும்புகளாய் விளங்குகின்ற பூக்களும்; மிகுபுகை (உம்) - மணம்மிக்க தூபமும்; வளர்ஒளி - நன்கு எரிகின்ற தீபமும்; நிறை புனல்கொடு - நிறைவாயுள்ள நீரும் ஆகிய இவைகளைத் துணைகளாகக் கையிற்கொண்டு (அருச்சித்தும் தூபதீபங்கள் காட்டியும்) தனைநியதமும் நினைவொடும் வழிபடும் அடியவர் - தன்னை எந்நாளும் தவறாது தான் ஆண்டான் தாங்கள் அடிமைகள் என்னும் முறைமையில் தங்களுக்குத் தான் சலிப் பின்றிச் செய்துவரும் பேருதவிகளை மனதினால் நினைந்தும் வாக்கினால் மந்திரங்கள் சொல்லி வழுத்தியும் வணங்குகின்ற கிரியையாளர்களாகிய அடியார்கள்; குறைவில் பதம் அணைதர - தங்கள் அறிவுநிலைக்குத் தக்க அளவில் குறையாத சிவசாமிப்பிய பத முத்தியை அடையும்படி; அருள் குணம் உடை இறை - அருள் செய்கின்ற பேரிரக்கக் குணமுடைய மகேச மூர்த்தியாகிய சிவபெருமான்; உறைவனபதி - உறையுமிடமாகக் கொண்டு வீற்றிருக்கின்ற அழகிய தலம் ஆகிய; சிறைபுனல் அமர் சிவபுரமது - அணைகளாலே தடுக்கப்பட்ட நீரையுடைய திருச்சிவபுரம் என்ற தலத்திலுள்ளகோயிலை; நினைபவர் - நினைந்து உருகிவழிபாடு செய்கின்ற சீவன் முத்தர்களாகிய அடியார்கள்; செயமகள் தலைவர் - வெற்றி இலக்குமித் தலைவர் ஆவார், அதாவது தாங்கள் நினைக்கிறபடி தாங்கள் அடையப் பெற்ற அத்துவித நிலையில் உறைந்து நிற்பர்.

(விளக்கம்) முகைநகுமலர் - "மொட்டறுமலர் பறித்து இறைஞ்சி" என்றார் மாணிக்கவாசகப் பெருமானும். மிகுபுகை வளர்ஒளி - புகை, என்றசொல் புகையை உடைய தூபத்தையும், ஒளிஎன்ற சொல் ஒளியையுடைய தீபத்தையும் ஆகுபெயர்களாய்க் குறிக்கின்றன. நியதம் - இன்றி அமையாமை அதாவது எந்நாளும்தவறாது. நினைவொடு வழிபடும் அடியவர் - வழிபாடு செய்தலின்பயன் வழிபடுகிற மக்கள் இறைவனை மேலும் மேலும் நெருங்கி அணைதல் ஆதலின் அப்பயன் ஆண்டான் அடிமைத் தொடர்பை நினையாமல் உண்டாகாது ஆதலின் நினைவொடும் வழிபடும் அடியவர் என்றார். மனம் வாக்குக்காயம் மூன்றினாலும் உருக்கமுடன் செய்யப்படுகிற வழிபாடே பயனைத்தரும். "மனமது நினையவாக்குவழுத்த மந்திரங்கள் சொல்ல - இனமலர் கையிற் கொண்டங் கிச்சித்த தெய்வம் போற்றி" என்றார் சிவஞான சித்தியார் நூலுடையாரும். குறைவில்பதம் அணைதர - பதம் என்ற சொல்இங்கே பதமுத்தியைக் குறிக்கிறது; அதாவது கிரியையாளர்கள் அடையப் பெறும் சிவசாமிப்பியபதமுத்தி. வனபதி - வனம் சோலை என்ற பொருளினும்வரும். சோலைகளாற் சூழப்பட்ட தலம் எனினும் பொருந்தும். சிவபுரமது - அது பகுதிப் பொருள் விகுதி. செயமகள் தலைவர் - வெற்றிஇலக்குமி என்பது சிவத்தினது கிரியாசத்தி. நினைந்த கருமத்தை நினைந்தவாறே முடிக்க ஆற்றலுடையவர்ஆவர். சீவன் முத்தர்களுக்குக் கூறுமிடத்து அவர்கள் தாங்கள் நினைக்கிறபடி தாங்கள் அடையப்பெற்ற அத்துவித நிலையினின்று சிறிதும் வழுவாது உறைந்து நிற்பர் என்று பொருள்படும். இந்தப் பாட்டில் முன் இரண்டு அடிகளும் கிரியையாளர்களாகிய அடியார்கள் மகேசுர மூர்த்தியாகிய சிவபெருமானுக்குச் செய்யும் வழிப்பாட்டின் சிறப்பைக் கூறுகின்றன. இறைஎன்ற சொல்வரை மூன்றுவதுஅடி அந்த அடியார்களுக்கு மகேசுரமூர்த்தி சாமிப்பியபத முத்தியை அளிப்பார்

என்று கூறுகிறது. எஞ்சியபாகம் சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற திருச்சிவபுரம் கோயிலை வழிபடுகிற சீவன் முத்தர்கள் தாங்கள் அடையப்பெற்ற அத்துவித நிலையில் உறைத்து நிற்பர் என்றுகூறுகின்றது. நினைபவர் - எழுவாய் தலைவர் - பயனிலை.

சினமலியறுபகை மிகுபொறி சிதைதருவகை வளிநிறுவிய
மனனுணர்வொடுமலர் மிசையெழுதரு பொருணியதமு முணர்பவர்
தனதெழி லுருவது கொடுவடைதகு பரனுறைவது நகர்மதில்
கனமருவிய சிவபுரநினை பவர்கலைமகடா நிகழ்வரே. ௮௭

(உரை) சினம்மலி அறுபகை-வெகுளிக்குணம் நிறைந்திருக்கிற காமம் குரோதம் மோகம் லோபம் மதம் மாற்சரியம் என்னும் ஆறுபகைகளும்; மிகுபொறி சிதை தருவகை - மிகுந்து விளங்குகின்ற மெய் வாய் கண் மூக்குச் செவி என்ற ஐந்து ஞானேந்திரியங்கள் அந்தக் கரணங்கள் கர்மேந்திரியங்கள் பூதங்கள் தன்மாத்திரைகளுடன் புறவிடயப் பொருள்களிற் செல்லாது அடங்கும் வண்ணம்; வளிநிறுவியமனன் உணர்வொடு - மூச்சு அடக்கி (பிராணயாமம்) உள்ளே கும்பகம் செய்து அதனால் தம் வயப் படுத்திய உள்ளத்தில் எழுகின்ற உணர்வுடன்; மலர்மிசை எழுதரு பொருள் - உள்ளமாகிய தாமரை மலரில் விளங்கி எழுந்தருளி யிருக்கின்ற சதாசிவமூர்த்தியாகிய சிவபெருமானை; நியதமும் உணர்பவர் - எந்நாளிலும் தப்பாது நினைந்து உணர்கின்ற அடியார்கள்; அடைதகு தனது எழில் உருவது கொடுபரன் - அடையத்தகுந்த தனது அழகான உருவத்தைக் கொடுக்கின்ற சதாசிவமூர்த்தியாகிய சிவபெருமான்; உறைவது நகர்மதில் கனம் மருவிய - வீற்றிருக்கின்ற நகரமாகிய மதிலாலே சூழப்பட்ட பெருமை பொருந்திய; சிவபுரம் நினைபவர் - திருச்சிவபுரத்திலுள்ள கோயிலை மனதினாலே நினைந்து வாக்கினாலே துதித்து வழிபடுகிற சீவன் முத்தர்களாகிய அடியார்கள்; கலைமகள் தரநிகழ்வரே - வாணி (சரசுவதி) மெய் அறிவு கொடுக்கப்பெற்று அவ்வறிவோடு உலகில் திகழ்வர். அதாவது தாங்கள் அடையப்பெற்ற அத்துவித நிலையில் உறைத்து நிற்பர்.

(விளக்கம்) சினம்மலி அறுபகை மிகுபொறி சிதைதருவகை - இதற்கு மேலே 56-வது பாட்டில் பகை அறும்வகை நினையா என்பதற்கும் 51-வது பாட்டில் புலன்களைப் போக நீக்கிப் புந்தியை ஒடுங்கவைத்து என்பதற்கும் நான் எழுதிய விளக்க உரைகளைக் கொள்க. சிதைதருதல் - அதாவது சிதைதல். தரு-பகுதிப்பொருள்விகுதி. சிதைதல் - கெடுதல். இங்கே அடங்குதல் என்ற பொருளில் வந்தது. சிதைதரும் வகை - அடங்கும் வண்ணம்; ஆறுபகைகளில் குரோதம் மாற்சரியம் என்ற இரண்டு குணங்களில் சினம் மலிந்திருத்தல் வெளிப்படை. ஏனைய நான்கு பகைக் குணங்களிலும் பிறர் சம்பந்தப்படும் பொழுது அவர்கள்மேல் ஒருவனுக்குச் சினம் உண்டாதலை அநுபவத்தில் அறியலாம். ஆறுபகைகளிலும் எதிர்ப்பு (Reaction) இருக்கின்றது. ஒருவன் புறத்தே செல்லுகின்ற சினத்தையும் தன்னுள்ளே எழுகின்ற எதிர்ப்பையும் இல்லாமற் செய்து அமைதி அடைந்தாலன்றி மெய் அறிவு அடையமாட்டான் ஆதலின் சினமலி அறுபகை மிகுபொறி சிதைதருவகை என்றார். வளிநிறுவியமனன் உணர்வொடு - மூச்சு அடக்கம் (பிராணயாமம்) மனம் அடங்குதற்கு வழியாயிருத்தலின் வளிநிறுவிய மனனுணர்வொடு என்றார். "மன்மனமெங்குண்டு வாயுவுமங்குண்டு மனமெங்கில்லைவாயு மங்கில்லை" என்றார் திருமூலர் (திருமந்திரம் - 620 - வது பாட்டு) வளிநிறுவிய = மூச்சை உள்ளே நிறுத்திக் கும்பகம் செய்த; மனன் உணர்வொடு - சஞ்சலப்பட்டு அங்குமிங்கும் பலவாறு யோடாது நிறுத்தப்பட்ட மனதில் காற்றால் அசைக்கப்படாத குளம் நீரில் அடியிலுள்ள பொருள் தெரிதல்போல இறைவனது திருவருள் விளக்கம் உண்டாகும் ஆதலின் மனன் உணர்வொடும் என்றார். அத்தகைய மனம்

சேராத வழிபாடு பயன்தராது என்பது கருத்து. மலர்மிசை எழுதரு பொருள் - மேலே கூறப்பட்டபடி பொறி முதலியன ஆன்மாவி லொடுங்கி நிற்ப, ஆன்மா சிவத்தில் ஒடுங்கி நிற்ப, அந்த ஆன்மாவில் வயப்பட்டு அடங்கிச் சிவகரணமாய்த் திகழ்கின்ற மன்மனம் இங்கே தாமரைமலர் எனப்பட்டது. மேலே 56-வது பாட்டில் ஐம்புலனுமடக்கி ஞானம் புகலுடையோர் தம்முள்ளப் புண்டரிகத்துள்ளிருக்கும் புராணர் என்று மனமாகிய தாமரைமலர் இறைவனுடைய உறைவிடமாகக் கூறியிருத்தல் காண்க. திருவள்ளுவநாயனார் "மலர்மிசையேகினான்" என்றார். எழுதருபொருள் - எப்பொழுதுமிருக்கின்ற பொருள். மனதையடக்கி நிறுத்தலினால் அருளொளியாய் விளங்குகின்ற பொருள். நியதமும் உணர்பவர் - இடைவிடாது நாடோறும் இந்தப்பழக்கம் செய்து வருவதலினாலேதான் அடங்கிய மனதின்கண் விடயம்தாக்காது மேலும் மேலும் அருள் உணர்வு உண்டாகும் என்பார், நியதமும் உணர்பவர் என்றார். இந்த உணர்வு வெளியே கூறப்படும் தன்மையாதலின்றி உள்ளே உணரப்படுவது ஆதலின், உணர்வார் என்றார். மேலே 86-வது பாட்டில் அகமும்புறமும் வழிபடும் கிரியையாளரை வழிபடும் அடியவர் என்றும், இப்பாட்டில் அகவழிபாடு செய்யும் யோகிகளை உணர்பவர் என்றும் கூறியிருத்தல் நோக்கத்தக்கது. தனது எழில் உருவது கொடுபரன் - இவ்வாறு உரைநடை செய்து பொருள்கொள்க. உரு + அது = உருவது. அதுபகுதிப் பொருள் விகுதி. உருவது கொடு என்றதனால் சிவசாரூபமாகிய பதமுத்தி குறிக்கப்பட்டது. பரன் = மேலானவன் அருளல் ஆகிய தொழிலைச் செய்யும் மேலான சதாசிவ மூர்த்தியாதலின் 'பரன்' என்றார். உறைநகர் - உறைவது - உறைதல், அது தொழிற் பெயர் விகுதி. உறைதல் செய்யும் அதாவது உறைகின்ற நகர். சிவபுரம் நினைபவர் - சிவபுரம் என்பது திருச்சிவபுரத்திலுள்ள கோயிலைக்குறிக்கிறது. கோயிலிலுள்ள மூர்த்திபோலக் கோயிலும் வழிபடுமிடமாம். 'ஆயம்தானு மரனெனத் தொழுமே' என்றாராகலின். கலைமகள் தர நிகழ்வர் - தர என்ற சொல்லுக்கு முன் அவாய் நிலையால் தொக்கிநிற்கிற மெய் அறிவு என்ற சொற்றொடர் வருவித்துப் பொருளுரைக்கப்பட்டது. நிகழ்வர் இறைவனை அறியும் நல்லறிவோடு கூடி விளங்குவர். கலைமகள் ஆன்மாக்களுக்கு மெய் அறிவை விளங்கச் செய்யும் சிவத்தினது ஞானசத்தி யாதலின், 'கலைமகள் தர' என்றார். இந்தப் பாட்டின் முதல் இரண்டு அடிகளும் யோகிகள் செய்கிற வழிபாடு கூறுகின்றன. மூன்றாவது அடி பரன் என்ற சொல்வரை, அத்தகைய வழிபாடு செய்யும் யோகிகளுக்குச் சாரூப பத முத்தியைக் கொடுக்கிற பரன் என்று சதாசிவ மூர்த்தியினுடைய சிறப்புக் கூறுகின்றது. எஞ்சிய பாகம் அத்தகைய சதாசிவமூர்த்தி திருக்கோயில்கொண் டெழுந்தருளி யிருக்கிற சிவபுரம் என்ற தலத்தில் நினைந்து வழிபடுகிற சிவன் முத்தர்களாகிய அடியார்கள் அவனை அறியும் மெய் அறிவு நிலைக்கப் பெற்றுத் தாங்கள் அடையப்பெற்ற அத்துவித நிலையில் உறைத்து நிற்பார் என்று அந்த வழிபாட்டின் பயன் கூறுகின்றது. நினைபவர் - எழுவாய். நிகழ்பவர் - பயனிலை.

சுருதிகள் பலநல முதல்கலை துகளறுவகை பயில்வொடுமிகு
உருவிய லுலகவை புகழ்தர வழியொழுகுமெ யுறுபொறியொழி
யருதவ முயல்பவர் தனதடி யடைவகை நினையர னுறைபதி
திருவளர் சிவபுர நினைபவர் திகழ்குல நிலனிடை நிகழுமே. ௮௮

(உரை) சுருதிகள் முதல்பல நலகலை - வேதாகமங்கள் முதலிய பல அருட் கலைகளை; துகளறுவகைமிகு பயில்வொடு - ஐயம் திரிபுகளாகிய குற்றங்களில்லாமல் ஓதிக் கேட்டுச் சிந்தித்து தெளிந்து தேர்ச்சிமிக்க அறிவுப் பழக்கத்தால்; உரு இயல் உலகு அவைபுகழ்தர - ஆண் பெண் அலி என்னும் உருவங்கள் பொருந்திய உலகிலுள்ள அறிஞர் கூட்டம் புகழும்படியாக; மெய்உறு பொறிஒழி (உம்) - உடலின்கண்ணுள்ள ஞானேந்திரியங்கள் கன்மேந்திரியங்கள் அந்தக்கரணங்கள் முதலானவைகளை உலக

விடயங்களிலே செல்லாதவண்ணம் நீக்கியும்; வழியொழுகு (உம்) - இறைவனையே நோக்கி அவனது அருளின் வழி அல்லது ஒன்றினையும் செய்யாது ஒழுகியும்; அருதவம் முயல்பவர் - செய்தற்கு அரிய பெருந் தவமாகிய ஞானநிட்டையைச் செய்கிற ஞானிகள்; தனதுஅடி அடைவகை நினைஅரன் - தனது திருவடிகளை அணைந்து சாயுச்சியமாகிய பேரின்பம் பெறும்படி தமது திருவுள்ளத்தில் நினைக்கின்ற சிவபெருமான்; உறைபதி - உறையுமிடமாகக் கொண்டு வீற்றிருக்கிற தலமாகிய; திருவளர் சிவபுரம் நினைபவர் திகழ்புலன் - அருள் பெருகுகின்ற திருச்சிவபுரத்திலுள்ள திருக்கோயிலை மனதினாலே நினைந்தும் வாயினாலே துதித்தும் உடலினாலே வணங்கியும் வழிபடுகிற அருள் விளங்கப்பெற்ற சீவன் முத்தர்களாகிய அடியார்கள் கூட்டம்; நிலனிடை நிகழும் - நிலஉலகில் தாங்கள் அடையப்பெற்ற அத்துவித நிலையில் உறைந்து நின்று சிறப்போடு விளங்கி வாழ்வார்கள்.

(விளக்கம்) இந்தப் பாட்டில் முதல் மூன்று அடிகளும் ஞானிகள் இறைவனை வழிபாடு செய்கிறவாறும், அவ்வழிபாட்டினாற் பெறப்படுவதாகிய சாயுச்சிய முத்தியும் கூறுகின்றன; நான்காவது அடி திருச்சிவபுரத் திருக்கோயிலை வழிபடுகிற சீவன் முத்தர்களாகிய அடியார்களுடைய சிறப்புக் கூறுகின்றது. சுருதிகள் முதல் பல நலகலை - சுருதிகள் என்ற சொல் கேட்கப்படுகிற அறிவு நூல்களாகிய வேதாகமங்களைக் குறிக்கின்றது. வேதாகமங்களின் வழித்தாயுள்ள அருள்நூல்களையுங் குறிக்கின்றது. அருள் இலங்குகலை என்பார் நலகலை என்றார். நலகலை - பேரின்ப நலனைத்தரும் கலை. துகள் அறுவகை மிகுபயில் வொடு-துகள்-குற்றம்; ஐயம் திரிபுகளாகிய குற்றம்; பயில்வு என்பது நூல்களை ஓதியும் ஓதின பொருளை உணர்ந்தார் பாற்கேட்டும் கேட்ட பொருளைச் சிந்தித்தும் சிந்தித்த பொருளை நிட்டைகூடித் தெளிந்தும் பலகாற் பழகுதல்; பலகாற் பழகித் தேர்ச்சி மிகுதலால் மிகுபயில்வொடு என்றார். வேதம் பலதர அறிவு நிலைமாந்தருக்கு ஏற்றவாறு பலபடக் கூறும் பொருள்களினாலும் ஆகமங்கள் சரியை முதலிய நான்கு பாதங்களின் வேற்றுமைபற்றிக் கூறும் வழிபாட்டு வேற்றுமைகளினாலும் மலையாது வேதாகமங்களின் ஒருமைப்பொருள் உணர்வார் என்பார் துகளறுவகை மிகுபயில்வொடு என்றார். மிகுஉரு இயல் உலகு அவை புகழ்தர - உரு என்பது ஆண் பெண் அலி உருவங்களைக் குறிக்கின்றன—"ஒருவனோ டொருத்தி ஒன்றென் றுணர்த் திடும் உலகம்" என்று சிவஞானசித்தியார் முதலாவது சூத்திரம் முதலாவது பாட்டுக் கூறுதல் காண்க. அவை - கூட்டம். அறிஞர் கூட்டம்; உலகு அவை - உலகிலுள்ள கற்றறிந்தார் கூட்டம்; புகழ்தர=புகழ; கற்றறிந்தார் அல்லாதார்களுடைய புகழ்ச்சியும் இகழ்ச்சியும் நற்பயன்தரா ஆதலின் உலகவை புகழ்தர என்றார். உலகமென்பது உயர்ந்தோர் மாட்டே என்பது தமிழ் நூல்களின் கருத்து, வழி ஒழுகு (உம்) ஒழுகு என்னும் முதனிலை வினை ஒழுகி என்னும் வினையெச்சப் பொருளில் வந்தது. மெய்உறு பொறி ஒழி (உம்) - மெய் உறுபொறி என்றதனால் ஞானேந்திரியங்கள் மாத்திரமன்றிக் கன்மேந்திரியங்கள் தன்மாத்திரைகள் ஐயபூதங்கள் அந்தக் கரணங்கள் உள்ளந்தக் கரணங்கள் எல்லாம் கொள்ளப்படும் - அவைகள் ஆன்மாவை உலகபோக விடயங்களிற் செலுத்தி அவிச்சையைப் பயப்பித்து இறைவனது திருவடிகளை மறக்கச் செய்யும் ஆதலின் பொறி ஒழி என்றார் - ஒழித்தல் பொறிகளை கருவில் அல்லாமல் கெடுத்தல் அன்று; கருவி கரணங்களை விடயங்களிடம் செல்லாது தடுத்து சிவகரணங்களாகும்படி செய்தல். ஒழி என்ற முதனிலை வினை ஒழித்து என்னும் வினையெச்சப் பொருளில் வந்தது. அருதவம் முயல்பவர் - இந்தத் தவம் ஞானத்தில் ஞானிகள் செய்யும் தவம் ஆதலின் அருந்தவம் என்றார். அருமை என்ற அடைமொழி ஏனையோர்க்கு அது கூடாமையைக் குறிக்கிறது. தனது அடி அடைவகை நினை அரன் 'நினை' என்றது இங்கே இறைவன் கரணத்தானன்றி சங்கற்பத்தான் மாத்திரம் செய்கின்ற அருளல் ஆகிய தொழிலைக் குறிக்கிறது. வளர் திருசிவபுரம் நிகழ்குலன் - சிவ

புரம் என்றது திருச்சிவபுரம் என்ற தலத்திலுள்ள சிவன் திருக்கோயிலைக் குறிக்கிறது. திருக்கோயில் இறைவனது அருள் விளங்கும் இடம் ஆதலின் (Centre of Spiritual forces) திருக்கோயிலில் செய்யப்படுகிற வழிபாட்டினால் அருள் மேலும் மேலும் பெருகும் என்பார் திருவளர் என்றார். குலன் என்பது குலம் என்பதன் போலிச் சொல். கூட்டம் - திகழ். குலன் - அருள் ஒளி விளக்கத்தோடு கூடிய அடியார் கூட்டம் ஆதலின் திகழ்குலன் என்றார். நிலனிடை நிகழும் - நிகழ்தல் - அருள் ஒளி விளங்குதல்- அடியார் கூட்டத்தால் இறைவனது அருள் விளக்கம் உலகில் நிலவி நற்பயன் செய்யும் என்பார் நிலனிடை நிகழும் என, "தேசினாலெத்திசையும் விளக்கினார்" என்று அடியார் கூட்டத்தைச் சேக்கிழார் அடிகள் பெரியபுராணத்திற் சிறப்பித்துக் கூறியருளினர். இந்தப் பாட்டில் துகளறுவகை என்பதை மிகுபயில்வொடு என்பதுடன் இயைத்தும் உலகவை புகழ்தர வழியொழுகியும் மெய்யுறு பொறிஒழித்தும் அருந்தவ முயல்பவர் என இயைத்தும் அடைவகை நினை அரன் என இயைத்தும் முடிபுசெய்து பொருள் சொல்க. ஒழுகு - ஒழி என்ற முதனிலை வினைகள் ஒழுகியும் ஒழித்தும் என வினையெச்சப் பொருள்பட வந்தன, வரிப்புனை பந்து என்பது வரிந்து புனைபந்து என்ற பொருளில் வருதல்போல.

தெள்ளத் தேறித் தெளிந்து தித்திப்பதோர்
உள்ளத் தேறலமுத வொளிவெளி
கள்ளத்தேன் கடியேன் கவலைக் கடல்
வெள்ளத் தேனுக் கெவ்வாறு விளைந்ததே. ௮௯

(உரை) தெள்ள - ஞானாசிரியன்பால் மலபரிபாகமடைந்த ஒருவர் கேட்டறிந்த அருள் அறிவில் ஒரோ வழி அந்தக்கரணங்களோடு கூடுதலினாலுண்டாவதாகிய கருவி அறிவுக் கலப்பை முதற்கண்பிரித்து நீக்கியதனாலும், தேறி - கேட்ட ஞானப்பொருளை அவர் சிந்தித்தபொழுது அடைந்த அருள் அறிவிலும் ஒரோவழி அந்தக் கரணங்களோடு கூடின கருவி அறிவு கலப்பு சிறிது இருந்ததனை நீக்கியதனாலும் - தெளிந்து - அவ்வாறு கேட்டல் அறிவினாலும் சிந்தித்தல் அறிவினாலும் கருவி அறிவுக் கலப்பை முற்றிலும் நீக்கிக் கிடைக்கப்பெற்ற தூயஅருள் அறிவாகிய தெளிவு அறிவினாலும் (இறைவனுடன் அவர் அத்துவிதமாய்க் கலந்து அவனது வியாபக அறிவில் தாம் அடங்கியிருத்தலையும் தமது வியாபக அறிவில் உலகம் அடங்கியிருத்தலையும் தெளிவாய் உணர்ந்து) உள்ளம் தித்திப்பது ஓர்தேறல் அமுதம் - சிவகரணமாய் விளங்கிய அவரது தூயஉள்ளத்தில் தேனும் அமுதமும்போலத் தித்திக்கப்பெறும் ஒப்பற்ற பேரின்ப உணர்வு ஆகிய ; வெளி ஒளி - சிதாகாசத்தில் விளங்குகின்ற பேரறிவு விளக்கமானது ; கள்ளத்தேன் - (சமண சமயத்திலிருந்த காலத்தில்) வஞ்சக மனமுடையனாயும் ; கடியேன் - இறைவனைப்பற்றி ஐயமுடையவனாயும் ; கவலைக்கடல் வெள்ளத்தேன் - கடல் வெள்ளம்போல மனக்கவலை உடையவனாயும் விளங்கின எனக்கு ; எவ்வாறு விளைந்தது - எப்படி உண்டாயிற்று (இறைவனது திருவருளால் உண்டாயிற்று என்றபடி).

(விளக்கம்) இந்தத் தேவாரப்பாட்டில் திருநாவுக்கரசு அடிகள் உலக முய்யும் [illegible]டுத் தமது சுவாநுபூதி நிலையிலுணர்ந்த பேரின்ப உணர்வைப்பற்றிக் கூறுகின்றார். இத்தகைய நிறை மறைமொழிகளால் அடிகளுடைய சுவாநுபூதிப் பேரின்ப வாழ்வு இன்னது என ஒரு சிறிது நம் போன்றவர்களா லறியப்படுகிறது. மேலே கூறப்பட்ட, 'அறியும் நெறி' 'உயிர் விளக்கம்' தேவாரப் பாட்டுகளில் வீட்டு நெறியிலுள்ள மூன்று அறிவு நிலைகள் கூறப்பட்டன. அணைந்தோர் தன்மைக்குச் சேர்ந்த இந்தப் பாட்டில் நான்கு நிலைகள் கூறப்படுகின்றன. தெள்ள என்பதனால் ஞானத்தில் சரியையாகிய கேட்டல் அறிவு நிலையும், தேறி என்பதனால் ஞானத்தில் கிரியையாகிய சிந்தித்தல் அறிவு நிலையும், தெளிந்து என்பதனால் ஞானத்தில் யோகம் ஆகிய தெளிவு அறிவு நிலையும், தித்திப்பதோர் உள்ளத்தேறலமுத வெளிஒளி என்பதனால் பேரின்ப முணரப்பெறும் ஞானத்தில் ஞானமாகிய நிட்டை அறிவு நிலையும் கூறப்படுகின்றன,

ஞானாசிரியன்பாற் கேட்ட அறிவினால் சிவஞானபோதம் 8-வது சூத்திரத்திற்கூறப்பட்ட சிவரூப விளக்கமும் அதனோடு உடனிகழும் ஆன்ம தரிசனமும் சிந்தித்தல் அறிவினால் 9-வது சூத்திரத்திற் கூறப்பட்ட சிவதரிசனமும் அதனோடு உடனிகழும் ஆன்மசுத்தியும் தெளிதல் அறிவினால் 10-வது சூத்திரத்திற் கூறப்பட்ட சிவயோகமும், நிட்டை அறிவினால் 11-வது சூத்திரத்திற் கூறப்பட்ட சிவபோகமும் உண்டாகின்றன. இந்த நான்கு அறிவு நிலைகளும் முறையே ஒன்றன்பின்னொன்று எதுவும் பயனுமாயுள்ளன. ஒவ்வொரு நிலையிலும் அருட்சத்தி பதிதல் மிகுந்து மிகுந்து நான்காவது நிலையில் நிறைவு அடைகின்றது. இந்த நான்காவது நிலையில் ஆன்மாவினுடைய உள்ளம் சிவகரணமாய் மாறி சிவம் எனப்படுகின்றது. "சிந்தைய தென்னச் சிவமென வேறில்லை" என்றார் திருமூலர். (2853-வது திருமந்திரம்). இந்த நிலையில் ஆன்மாவானவன் இறைவனுடைய வியாபக அறிவுடன் இரண்டறக் கலந்து அவனுடைய எண்குணங்களும் பதியப்பெற்று யாதொரு குறையு மில்லாதவனாயும் பேரின்பப் பெருவாழ்வுடையவனாயுமுள்ள சீவன் முத்தனாய்த் திகழ்வன். சீவன் முத்தனுக்கு எடுத்த உடல் நீங்கும் காலம்வரை உடலூழாய்க் கழிய இருக்கிற பிராரத்தவினை மாத்திரம் உண்டு. உடல் நீங்கவும் அவன் நித்தியமான பரமுத்தி அடைவன். தெள்ள - முறத்தில் வைத்துத் தூலப்பொருள்களைத் தெள்ளி வேண்டாத பொருள்களிலிருந்து வேண்டிய பொருள்களைப் பிரித்து நீக்குதல்போல் உள்ளத்தில் வைத்து அதில் விளங்கும் கருவி அறிவை அருள் அறிவிலிருந்து பிரித்து நீக்குதல் (Sifting). அதாவது ஆன்மா கருவி கரணங்களோடு சேர்ந்து அறிதலை முயன்று நீக்கி அருள் அறிவுடன் சேர்ந்திருத்தல். உலகநெறியில் முற்றிலும் கருவி கரணங்கள் வழியில் அறிந்து வந்த ஆன்மா வீட்டுநெறியில் அவைகளைவிட்டு அருளைச் சேர்ந்து அறியும்பொழுது பழைய வாசனையினால் கேட்டல் அறிவில் வந்து சேர்கிற கருவி கரணங்களை நீக்கல்வேண்டும் என்பது கூறப்பட்டது. தேறி - தேற என்பது தேறி எனத் திரிந்து நின்றது. சிந்தித்தலினால் - இன்னும் ஆன்மா கருவி கரணங்களுடன் சேர்ந்து அறிதலை நீக்குதலால். (Re - Sifting). தெளிந்து - தெளிய என்பது தெளிந்து எனத் திரிந்து நின்றது. தெளிவு அறிவில் ஆன்மா சிறிதும் கருவி கரணங்களுடன் சேர்ந்து அறிதலின்றியிருத்தலினாலே உள்ளம் பசுகரணம் நீங்கிச் சிவகரணமாய்விடுகின்றது. "அறியாமை அறிவகற்றி யறிவினுள்ளே அறிவுதனை யருளினா லறியாதே யறிந்து குறியாதே குறித்தந்தக் கரணங்களோடும் கூடாதே வாடாதே குழைந்திருப்பை யாயில்" என்று தெளிவு அறிவைப் பற்றிச் சிவஞான சித்தியார் கூறுதல் காண்க. தித்திப்பதோர் உள்ளம் தேறல் அமுதம் வெளி ஒளி - தெள்ள, தேற, தெளிய என்ற மூன்று சொற்களும் காரணப் பொருளில் வந்தன. தெள்ளுதலினாலும் தேறுதலினாலும் தெளிதலினாலும் தித்திப்பது ஓர் உள்ளத் தேறலமுதம் எனப் பொருள் செய்க. தித்திப்பது-தொழிற்பெயர். உள்ளத் தேறல் அமுதம் - பசுகரணம் நீங்கிச் சிவமாய்த் திகழ்கின்ற உள்ளத்தில் உணரப்படும் பேரின்பம். தேறல் அமுதம் - தேறலும் அமுதமும். உம்மைத் தொகை. உள்ளம்+தேறல் என்பன மகரங் கெடுதலாலும் நிலைமொழி வன்மைக் கினமாகத் தகரவொற்றுத் தோன்றுவதாலும் உள்ளத் தேறல் ஆயின. பேரின்பத்தை உலக அநுபவத்தில் மக்களுக்குத் தெரிவிக்கும் பொருட்டு தேறலும் அமுதமும் என உருவகஞ் செய்தார். நோய் நீக்க மருந்தாயுதவுகின்ற தேன் மலநோய் நீக்கத்தா லுண்டாகும் அறிவு விளக்கத்தையும் சாவை நீக்குகின்ற அமுதம் நித்தியமான இன்ப விளக்கத்தையும் குறிக்கின்றன என்று நாம் கூறலாம். பேரின்பமானது இறைவனுடைய திருவடிகளை அடைந்தன்றிப் பெறப்படாததால் 'ஓர் உள்ளத் தேறல் அமுதம்' என்றார். வெளி - முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து நிற்கிற ஞான ஆகாசம். இது பரவெளி பெருவெளி தூவெளி, சிற்பரவியோமம், திருச்சிற்றம்பலம், சிதாகாசம், சிதம்பரம் என்ற பெயர்களாலும் கூறப்படுகின்றது. அந்த வெளியில் விளங்குகிற பரா

சத்தி ஒளியை வெளி ஒளி என்றார். இந்த ஒளியே பேரறிவாய் விளங்குவது. இந்த ஒளியே தத்துவங்களில் ஏகதேசப்பட்டு உலக அறிவாய் விளங்குவது. எங்கும் வியாபகமா யிருக்கிற இந்தப் பேரொளியானது ஆன்மாவுக்கு மலத் தொடக்கினால் முன் விளங்காதிருந்தது. படலம் நீங்கிய கண்ணுக்குக் கதிரவனொளி விளங்குதல் போல மலம்நீங்கின ஆன்மாவுக்கு அப்பேரொளி வியாபகம்விளங்கி அப்பேரொளியில் ஆன்மா வியாப்பியமாய் நிற்கிறது. வெளி ஒளி - வெளியின்கண் விளங்கும் ஒளி. ஏழாம் வேற்றுமைத் தொகை. மேலான அத்துவித நிலையானது பேரறிவும் பேரின்பமும் கூடுமிடமாதலால் தேறலமுதம் ஆகிய வெளி ஒளி என்று பொருள்படும். தேறலமுத வெளி ஒளி என்றார்: தேறலமுதமும் வெளி ஒளியும் என உம்மைத் தொகையாகாது என்பது விளைந்ததே என்ற ஒருமை வினை முற்றால் விளங்கும். "அண்டங்க ளேழுங் கடந்தகன் றப்பாலும் உண்டென்ற பேரொளிக் குள்ளா மொளி, பண்டுறு நின்ற பராசத்தி யென்னவே கொண்டவ னன்றி நின்றான் எங்கள் கோவே" என்று திருமூலர் பேரொளியாகிய பெரு வெளியையும் அதனில் உள்ளொளியாய் விளங்குகின்ற பராசத்தியையும் கூறியருளினமை காண்க. கள்ளத்தேன் கடியேன் கவலைக்கடல் உள்ளத்தேன் - கள்ளத்தேன், கடியேன், உள்ளத்தேன் மூன்றும் குறிப்புவினையா லணையும் பெயர்கள். ஏன் - தன்மை ஒருமை விகுதி. கள்ளம் என்பது பொய், வஞ்சனை; இறைவனை நோக்காது உலகை நோக்கி ஒழுகும் வாழ்விலுள்ள வஞ்சனை. கடி என்பது இங்கே ஐயம் என்ற பொருளில் வந்தது. உலக வாழ்வில் இறைவனை ஒருவன் உண்டோ இல்லையோ என்று உள்ளத்தில் ஐயங்கொள்ளுதல். இப்பேர்ப்பட்ட வஞ்சகமும் ஐயமுமுள்ள ஒருவனது உள்ளத்தில் கவலைகள் நிரம்பியிருக்கு மாதலின் 'கவலைக் கடல் உள்ளத்தேன்' என்றார். இத்தகைய கவலைகள் நிரம்பிய உள்ளத்தில் சிவம் விளங்கிப் பேரின்ப உணர்வு உண்டாகாது ஆதலின் உள்ளத் தேறலமுதம் ஆகிய வெளி ஒளி எவ்வாறு விளைந்தது என்றார். அடிகள் இறைவனால் ஆட்கொள்ளப் பெற்றபின் குற்றங்கள் முழுதும் நீங்கப்பெற்ற அவரது தூய உள்ளத்தில் பேரறிவு விளக்கமும் அதனோடு உடனிகழ்கின்ற பேரின்ப உணர்வும் உண்டாயின என்பது இந்தப் பாட்டினால் நாம் அறியக்கிடக்கும் உண்மையாகும்.

உன்னுருவிற் சுவையொளியூ றோசை நாற்றத்
  துறுப்பினது குறிப்பாகு மைவீர் நுங்கண்
மன்னுருவத் தியற்கைகளால் வைப்பீர்க் கையோ
  வையகமே போதாதே யானேல் வானோர்
பொன்னுருவைத் தென்னாரூர் மன்னு குன்றைப்
  புலிக்கெழிலாஞ் சிவக்கொழுந்தைப் புகுந்தென் சிந்தை
தன்னுருவைத் தந்தவனை எந்தை தன்னைத்
  தலைப்படுவேன் றுலைப்படுப்பான் றருக்கேன் மின்னே. ௩௦

(உரை) நாற்றம் சுவை ஒளி ஊறு ஓசை உறுப்பினது குறிப்பாகும் உன் உருவில் ஐவீர் - நாற்றம் சுவை ஒளி ஊறு ஓசை என்ற விடய குணங்களாகிய உறுப்புக்களைக் குறிகளாகக் கொண்டு ஒழுகுகின்ற மனதினால் எண்ணப்படும் சூக்கும உருவங்களையுடைய தன்மாத்திரைகளாகிய ஐவர்களே; நுங்கள் மன் உருவத்தியற்கைகளால் வைப்பீர் - நீங்கள் இந்த உலகத்தில் திரோத மலம் வயப்பட்ட உயிர்களை எல்லாம் உங்கள் நிலையில்லாத உருவங்களினது இயற்கைவழி ஒழுகும்படி செய்வீர்; வையகமே போதாதே ஐயோ - அவ்வாறு நீங்கள் ஆட்சி செய்தற்கு இந்தப் பெரிய உலகமும் இடம் போதாதிருக்கின்றது. ஐயோ!; யானேல் - (நீங்கள் அவ்வாறு என்னையும்

ஆட்சி செய்தற்கு) யான் உடன்படுவேனோ என்றால் யான்; வானோர் பொன் உருவை - தேவர்கள் வணங்குகிற பொன் போலும் சிவந்த மேனியை உடையவனும்; தென் ஆரூர் மன்னு குன்றை - தென் நாட்டின்கண் திருவாரூரில் நிலையாகத் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கின்ற மலைபோன்று அளப்பரிய அளக்கில் பெருந்தன்மையை உடையவனும்; புவிக்கு எழிலாம் சிவக்கொழுந்தை - நில உலகத்தை அழகாக விளங்கும்படி சிறந்த நலம் செய்கின்றவனும்; என் சிந்தை புகுந்து தன் உருவைத் தந்தவனை - எனது உள்ளத்தில் இரண்டறக் கலந்து நின்று தனது அருள் உருவத்தின் குணங்களைப் பதியச் செய்தவனும்; எந்தை தன்னை - எனது தந்தையுமா யிருக்கிற சிவபெருமானை; தலைப்படுவேன் - அவனுடைய திருவடிகளில் அத்துவிதமாய்க் கலந்திருக்கின்றேன்; துலைப்படுப்பான் - என்னை அத்திருவடிகளை விட்டு நீக்கிச் சேய்மைப் படுத்தும் பொருட்டு; தருக்கேல்மின் - (முயல்வதாக நினைத்து) செருக்கு அடையாதே யுங்கள். (உங்கள் வலி என்னிடம் சிறிதும் செல்லாது என்னை விட்டு அகலப் போங்கள் என்றபடி.)

(விளக்கம்) இந்த நான்காவது பாட்டு அடங்கிய தேவாரப் பதிகம் திருநாவுக்கரசு அடிகளால் அவர் திருப்புகலூரிலிருந்து உழவாரப் பணிவிடை செய்து வந்த காலத்தில் சிவபெருமான் அவரது உலகத் தொடக்கு அற்ற மேலான நன்னிலைமையை உலகத்தாருக்குத் தெரிவிக்கும் பொருட்டுப் புற்களோடும் பருக்கைக்கற்களோடும் பொன்னும் நவமணியும் பொலிந்திலங்கவும் விண் அரம்பையர்கள் அவர் முன்னே நின்று அழகிய கோலத்துடன் ஆடவும் பாடவும் அருள் செய்தபொழுது பாடப்பெற்றது. அப்பொழுது மெய்த்தன்மை உணர்வுடைய அடிகள் தமது சித்த நன்னிலை சிறிதும் வேறுபடாது சிவபெருமான் திருவடிக்கீழ் நினைவகலாமல் உலக மாயப் பவத்தொடக்காம் இருவினைகளையும் அவைகளுக்குத் துணை செய்யும் ஐம்பூதங்கள் அஞ்சு தன் மாத்திரைகள் முதலானவைகளையும் முன்னிலையாக்கித் "திருவாரூர் அம்மானுக் காளாயினேன் உம் மாற்றொடக்குண்ணேன்" என்று பாடியருளினார். இப்பாட்டு அஞ்சு சூக்கும தன்மாத்திரைகளையும் முன்னிலையாக்கி பாடப்பட்ட பாட்டு. நாற்றம் சுவை ஒளி ஊறு ஓசை உறுப்பினது குறிப்பாகும் உன் உருவில் ஐவீர் - அஞ்சு தன்மாத்திரைகளும் கண்ணாற் காணப்படாது மனதினால் நினைத்தற்குரிய சூக்கும உருவங்களுடையனவாதலின் உன் உருவில் ஐவீர் என்றார். தேவாரப் பதிகத்தின் இரண்டாவது பாட்டில் திருநாவுக்கரசு அடிகள் ஐம்பெரும் பூதங்காள் என்னும் தூல பூதங்களை விளித்துச் சொல்லி இந்தப் பாட்டில் அவைகளுக்குக் காரணமா யிருக்கிற சூக்கும பூதங்களாகிய தன்மாத்திரைகளை விளித்துக் கூறுகின்றார். நாற்றம் சுவை ஒளி ஊறு ஓசை என்று இங்கே கூறப்பட்டன, புறவிடயங்களைக் குறிக்கின்றன, அப்பெயர்களை உடைய தன்மாத்திரைகளை அன்று. விடயங்கள் குணமயமா யிருத்தலினாலும் சூக்கும பூதங்களாகிய தன்மாத்திரைகள் குணங்களின் கூட்டமன்றி வேறல்லனவாதலாலும் விடயங்களை சுவை ஒளி ஊறு ஓசை நாற்றத்தினது உறுப்பு என்று கூறாது சுவை ஒளி ஊறு ஓசை நாற்றத்து உறுப்பு என்றார். உடலிலுள்ள சூக்கும பூதங்கள் தங்கள் காரியமாகிய தூல பூதங்களுடன் ஞானேந்திரியங்கள் வாயிலாகப் புறவிடயங்களை ஆன்மா சென்று பற்றுதற்குத் துணையா யிருந்து ஊக்குதல் செய்தலின் அச்சூக்கும பூதங்களைக் குறிப்பாக ஐவீர் என்றார். திரோத மலம் வயப்பட்ட ஆன்மாக்கள் பூதங்களைச் சடப்பொருள்கள் என்றெண்ணாமல், அவைகளுடன் அதுவதுவாய் ஒற்றித்து நின்று பரிணமித்து அவைகளின் வயப்பட்டு ஒழுகுதலால் உயிரில்லாத சூக்கும பூதங்களை ஐவீர் வைப்பீர் என உயர் திணையில் வைத்துக் கூறினார். இது இழிவு சிறப்பு. உலக போகங்களெல்லாம் நாற்றம் சுவை ஒளி ஊறு ஓசை என்னும் அஞ்சு தன்மாத்திரைகளாலும் அவற்றுக்குத் துணைகளாயுள்ள ஐம்பூதங்கள் ஞானேந்திரியங்கள் முதலியவைகளாலும் அமைந்திருத்தல் "சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின் - வகைதெரி வான்கட்டே

யுலகு" என்ற திருக்குறளிற் கூறப்பட்டிருத்தல் காண்க. வையகம் நுங்கள்மன் உருவத் தியற்கைகளால் வைப்பீர் - மன் உருவம் என்றது இங்கே வஞ்சப்புகழ்ச்சி (Irony) உலகிலுள்ள விடயங்களாகிய போகங்களை மாந்தர் நிலையானவைகளாக எண்ணி ஒழுகுதலின் அழிதற்றன்மையை யுடைய உருவத்தை மன் உருவம் என்றார். மாந்தர் உலக விடய போகங்களையே தாங்கள் இயல்பாக நுகரக்கூடிய இன்பங்களாக நினைத்து அவைகளில் அழுந்துதலின் மன் உருவத்தியற்கைகளால் வைப்பீர் என்றார். வையகம் என்ற சொல்லை வைப்பீர் என்ற சொல்லுடனும் போதாதே என்ற சொல்லுடனும் கூட்டிப் பொருள் உரைக்க. அவ்வாறு மாந்தரைப் போகத்தில் அமிழ்த்துதல் அவர்கள் பக்குவம் அடைதற்கு வேண்டப்படுதலின் அதனைத் தன்மாத்தி[illegible]ரின் இயற்கை என்றார். வைப்பீர்க்கு என்பதில் கு - சாரியை. வைப்பீர்களாகிய உங்களுக்கு என்று பொருள் கொள்ளினும் பொருந்தும். வையகமே போதாதே ஐயோ - முன்னைய ஏ - அசை; பின்னைய ஏ - தேற்றம். இந்த வையகத்துக்குப் புறம்பாயுள்ள இடங்களிருந்தால் அவைகளையும் நீங்கள் ஆட்சி செய்து உங்கள் வயப்படுத்த வல்லீர் என்பார் வையகமே போதாதே என்றார். உயிர்களை உங்கள் ஆட்சியால் என்ன பாடுபடுத்துகிறீர் என்று உயிர்கள் மேலுள்ள தமது இரக்கம் குறிப்பிப்பார் 'ஐயோ' என்றார். யானேல் ஏல் என்பது எனில் என்பதன் மரூஉ. யான் ஏல் என்பது யான் உடன்படுவனே எனில் என விரியும். உடன்படுவனே சொல் எச்சம். அதாவது உங்கள் ஆட்சிக்கு யான் உடன்படுவனே என்னில் உடன்பட மாட்டேன், ஏனென்றால் கேண்மின். வானோர் பொன் உருவை - வானோர் என்ற சொல்லுக்குப் பின் வணங்குகின்ற என்ற சொல்லை வருவித்து உரைக்க. இது சொல்லெச்சம். புவிக்கு எழிலாம் சிவக்கொழுந்து - உலகிற் காணப்படுகிற அழகு உருவங்களெல்லாம் இறைவன் அருள் விளக்கம் ஆதலின் புவிக்கு எழிலாம் என்றார். சிவம் = மங்களம், நலம். சிவக்கொழுந்து = சிறந்த நலம். என் சிந்தை புகுந்து தன் உருவைத் தந்தவனை - எனது உள்ளத்திலே அத்துவித இயைபானே இறைவன் விளங்கி வீற்றிருத்தலால் அவன் தீ இரும்பைச் செய்வது போல் எனது. மலம் முற்றிலும் நீங்கிச் சிவம் ஆம்படி செய்து தனக்குரிய எண்குணங்களும் எனது குணங்களாகும்படி என்னிடத்தில் பதிய வைத்தான் என்பார், என் சிந்தை புகுந்து தன் உருவைத் தந்தவனை என்றார். புகுதல் - விளங்கி வீற்றிருத்தல்; உரு என்பது அருள் உரு. அருள் உருவைத் தருதலாவது அருட் குணங்களாகிய எண் குணங்களும் உள்ளத்திற் பதியச் செய்தலாகும். "சிவனுளத்தே தோன்றி - தீயிரும்பைச் செய்வதுபோற் சிவன் றன்னை - பந்தனையை யறுத்துத் தாளுக்கித் தன்னுருவப் - பாப்பெல்லாங் கொடுபோந்து பதிப்ப னிவன்பாலே" என்று சிவஞானசித்தியார் 9-வது சூத்திரம் 12-ம் செய்யுள் கூறுதல் காண்க. எந்தை தன்னை - தன் - அசை. இறைவன் எனது உயிர்த் தந்தையாய் என்னைக் காத்தல் கடனாதலின் இவ்வாறு செய்தான் என்று குறிப்பிப்பார், எந்தை தன்னை என்றார். தலைப் படுப்பான் - தலைப்படுதல் - தலை (இறைவனுடைய திருவடிகளிற்) பொருந்துதல். அதாவது இறைவனோடு அத்துவிதமாய்க் கலந்திருத்தல். இச்சொல் இறைவனுக்கும் உயிருக்குமுள்ள ஆண்டான் அடிமைத் தொடர்பைக் குறிக்கிறது. தலைப்பட்டிருக்கின்றேன் என்ற முக்காலத்துக்கும் பொதுவான நிகழ்காலம் தெளிவு பற்றி எதிர்காலத்தாற் கூறப்பட்டது. துலைப் படுப்பான் - துலை = சேய்மை. துலைப்படுத்தல் = சேய்மைப் படுத்தல். பான் - எதிர்கால வினையெச்ச விகுதி. தருக்கேல் மின் - ஏல் - எதிர்மறை விகுதி. மின் - ஏவற் பன்மை விகுதி. இறைவனுடைய திருவடிகளில் அன்பு வைத்து ஒழுகுகிறவர்களுக்கு உலக விடய போகப்பற்று நீக்கமும் அவ்வுலக விடய போகத்துக்குக் கருவியாயுள்ள செல்வப் பொருட் பற்று நீக்கமும் உண்டாகும் என்பது இந்தப் பாட்டினாற் பெறப்படுகின்ற கருத்தாகும்.

நாமார்க்குங் குடியல்லோம் நமனையஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்
இன்பமே எந்நாளுந் துன்பமில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான
சங்கரனற் சங்கவெண் குழையோர்காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளாவாளாய்க்
கொய்மலர்சே வடியிணையே குறுகினோமே. ௯௧

(உரை) நாம் ஆர்க்கும் குடியல்லோம் (1) - உலகிலுள்ள எந்த அரசருக்குங் கீழ் நாம் அவரால் ஆளப்படும் குடிகளாயில்லோம்; நமனை அஞ்சோம் (2) - உலக அரசர்கள் அஞ்சுகின்ற நமனுக்கும் அஞ்சமாட்டோம்; நரகத்தில் இடர்ப்படோம் (3) - மறுமை வாழ்வில் அடையக் கடவதாகிய நரகத்துன்பமும் நமக்கு இல்லை; நடலை இல்லோம் (4) - உலகில் திரோதமலம் வயப்பட்ட பொய்வாழ்வு நம்மிடத்தில் இல்லை; ஏமாப்போம் (5) எம்மை எவரும் ஒன்றும் செய்யமுடியாது என்று இறுமாந்திருப்போம்; பிணியறி யோம் (6) - நாம் மலப்பிணிப்புச் சிறிதும் அறியமாட்டோம்; பணிவோம் அல்லோம் (7) - எவருக்கும் அடங்கி அவரைப் பணிந்து நாம் நடக்கமாட்டோம்; எந்நாளும் இன் பமே துன்பமில்லை (8) - நாம் நுகர்வது நிலையாயுள்ள பேரின்பமன்றி உலகில் நுகரப் படும் நிலையில்லாத இன்பதுன்பங்களில்லை (ஆதலால் நும்மை ஏவின அரசன் எம்மை உலகில் செய்யக்கடவது என்ன இருக்கிறது. நாம் எவருக்கும் எதற்கும் அஞ்சாமலிருத் தற்குக் காரணம் சொல்லுகிறோம் கேள்மின்); யார்க்கும் தாம் குடியல்லாத் தன்மை யான சங்கரன் - எனெனில் தன்னை ஒருவரும் ஆளுந் தன்மையில்லாதவனாய்; நற்சங்க வெண்குழை ஓர் காதிற் கோமான் சங்கரற்கே - நல்ல சங்கினாலாகிய வெள்ளிய குண்ட லத்தை வலதுகாதில்அணிந்திருக்கிற முழுமுதற்றலைவனாய் எல்லா உயிர்களுக்கும் இன்ப மளிக்கின்ற சிவபெருமான் ஒருவனுக்கே; மீளா ஆளாய்க் கொய்ம்மலர்ச்சேவடி யிணையே குறுகினோம் - எப்பொழுதும் மீட்கப்படாத அடிமையாக மலர் நிறைந்திருக் கிற அவனுடைய செவ்விய இரண்டு திருவடிகளைச் சேர்ந்து பேரின்பப் பெருவாழ்வு பெற்றோம்.

(விளக்கம்) திருநாவுக்கரசு அடிகள் தமக்கு வந்த சூலைநோயுடன் மலநோயும் இறைவனால் தீர்ந்து ஆண்டருளப்பெற்று திருவதிகை வீரட்டானத்திலிருந்த காலத் தில் பல்லவ அரசனால் ஏவப்பட்ட அமைச்சர்கள் சேனைகளோடும் தம்மிடம் வந்து "உம்மை அரசன் அழைக்கின்றான் வாரும்" எனக் கூறின சமயத்தில் அவர்களுக்கு விடைமொழியாக பாடிய தேவாரப்பதிகத்தின் முதலாவது பாட்டு இது. அப்பொழுது அடிகளுடைய உள்ளத்திருந்த கம்பீர உணர்வு இந்தப் பாட்டினால் ஒருவாறு நமக்குத் தெரிய வருகின்றது. இந்தக் கம்பீர உணர்வு அடிகளுக்கு இந்தப் பாட்டிற் கூறுகிற படி இறைவனுடைய திருவடிகளிற் சேரப்பெற்ற பெருவாழ்வினா லுண்டாகிறது. நாம் ஆர்க்கும் குடி அல்லோம் (1) - நாம் என்ற தன்மைப்பன்மைச் சொல் நாம் உங்கள் அரசனுக்கு எளியோமல்லோம் என்ற அடிகளுடைய கம்பீர உணர்வைக் குறிக்கிறது. குடி - அரசன் ஒருவனால் ஆளப்படும் நாட்டு மக்கள். நாம் உங்கள் அரசனால் ஆளப்படும் குடிகளில் ஒருவன் அல்லன் ஆதலின் அவன் எம்மை அழைக்கவும் பொருத்தமில்லை என்பார், குடிஅல்லோம் என்றார். அல்லோம் - தன்மைப் பன்மைக் குறிப்புவினைமுற்று. துறவிக்கு வேந்தன் துரும்பு என்ற பழமொழிக் கருத்துக் கூறப்பட்டது. நமனை அஞ் சோம் (2) நமனையும் என்ற உயர்வு சிறப்பு உம்மை தொக்கி நிற்கிறது. நாம் உங்கள்

அரனுக்கு அஞ்சாதிருத்தலன்றி, அவன் அஞ்சுகின்ற நமனுக்கும் அஞ்சோம் என்று குறிப்பிப்பார், நமனை அஞ்சோம் என்றார். நரகத்தில் இடர்ப்படோம் (3) - இம்மை வாழ்வில் நாம் அஞ்சாதிருத்தலன்றி மறுமை வாழ்வில் அஞ்சப்படுகிற துன்பமுமில்லை என்பார் நரகத்தில் இடர்ப்படோம் என்றார். நடலை இல்லோம் (4) - நடலை என்பது பொய். அது இங்கே உலகில் வாழும் இருகூற்றுத் தன்மையான (துவந்துவமுள்ள) பொய்வாழ்வைக் குறிக்கிறது. ஏமாப்போம் (5) - ஏமாப்பு என்பது இறுமாப்பு இது உலகில் நிலையில்லாத செல்வம் அதிகார முதலியவற்றா லுண்டாகும் அறியாமை இறுமாப்பு அன்று. இறைவனுடைய அருட்டன்மையை அடையப்பெற்றதனா லுண்டாகும் மெய்யறிவு இறுமாப்பு. இறுமாந்திருப்பன் கொலோ என்று அடிகள் திருவங்கமாலையிற் கூறியருளினமை காண்க. பிணி அறியோம் (6) பிணி என்பது கட்டு. மலப்பிணிப்பு சிறிதும் தமக்கு இல்லை என்பார், பிணி அறியோம் என்றார்; பணிவோம் அல்லோம் (7) - நமக்கு எதிராவார் ஒருவருமில்லை என்பார், பணிவோம் அல்லோம் என்றார். இன்பமே எந்நாளுந் துன்பமில்லை (8) நம்அரசன் எமக்குச் செய்யக்கடவதொரு துன்பமுமில்லை என்று குறிப்பிப்பார், இன்பமே எந்நாளும் துன்பமில்லை என்றார். மேலே கூறப்பட்ட 1 முதல் 8 வரை உள்ள அடிகளுடைய கூற்றுக்கள் முறையே (1) தன்வயத்தனாதல் (2) தூய உடம்பினனாதல் (3) இயற்கை உணர்வினனாதல் (4) இயல்பாகவே பாசங்களினீங்குதல் (5) பேரருளுடைமை (6) முற்றுமுணர்தல் (7) முடிவிலாற்றலுடைமை (8) வரம்பிலின்பமுடைமை என்னும் இறைவனுடைய எண் குணங்களும் அடிகளிடத்தில் பதிந்ததன் பயனாக வெளிப்பட்டன என்று நாம் கூறலாம். அடிகள் தாம் இறைவனோடு அத்துவிதமாய்க் கலந்ததனால் தம்மிடத்தில் இறைவனுடைய எண் குணங்களும் பதியப்பெற்றதை "எண்குணத் துளோமே" என்று அவர் இத் தேவாரப் பதிகத்தின் இறுதிப் பாட்டின் இறுதியிற் கூறிய உரையால் நாம் அறியலாம். எட்டுக் கூற்றுக்களும் எண் குணங்களின் வெளிப்பாடுகளாய் பொருந்தியிருப்பன என்பதை உய்த்துணர்ந்துகொள்க. தாம் ஆர்க்கும் குடி அல்லாத் தன்மையான நற்சங்க வெண் குழையோன் காதிற் கோமான் சங்கரற்கே - இவ்வாறு பதவுரையிற்கூறியபடி உரைநடை செய்து பொருள் சொல்க. குடியல்லாத் தன்மையான என்பது கோமான் என்ற சொல்லைக் கொண்டு முடிகிறது. கோமான் - அரசன். முழுமுதற்றலைவன். அவன் எப்பேர்ப்பட்ட தலைவன் என்றால் ஆர்க்கும் குடியல்லாத் தன்மையான தலைவன்; தனக்கு ஒப்பாரும் மிக்காருமில்லாத தலைவன் - அவன் அத்தகைய தலைவனாயிருத்தலுடன் எல்லா உயிர்களுக்கும் இன்ப நலம் செய்கிறவன் என்பது, சங்கரன் என்ற வடமொழிச் சொல்லாற் கூறப்பட்டது. சம் = இன்பம். கரன் = செய்கிறவன். ஒப்பற்ற தலைவனாயிருந்து எல்லா உயிர்களுக்கும் இன்ப நலம் செய்கிறவன் என்றதனால் அவ்வாறு நலம் செய்தற்கு இன்றியமையாது வேண்டப்படுவனவாகிய எண் குணங்களும் குறிப்பால் உடன் கூறப்படலாயின. ஓர் காதிற் குழை - இறைவன் உமைமாதிருக்கும் பாதியன் ஆதலின் வலது காது குறிப்பிக்கப்பட்டது; இடது காது உமாதேவியார் காது ஆகலின் தோடு அணிதற்கு உரியது. ஏ - பிரிநிலைப் பொருளில் வந்தது. மீளா ஆளாய்க் கொய்ம்மலர் சேவடி யிணைக்கே குறுகினோம் - ஆண்டானாகிய இறைவனுக்கு உயிர்கள் எப்பொழுதும் அடிமைகள் ஆதலின், மீளா ஆளா என்றார். "மீளா அடிமை உமக்கே யாளாய்" என்றார் சுந்தரமூர்த்தி அடிகளும். குறுகுதல் - அடங்கி நிற்றல்; சீவத்தன்மை குறுகி சிவத்தன்மை அடைதல். சேவடியிணை குறுகுதல் என்பது அடிகளுடைய வேட்கை அறிவு செயல்கள், இறைவனுடைய வியாபக வேட்கை அறிவு செயல்களுக்குள் அடங்கி நின்று அவனோடு இரண்டறக் கலந்து அவனுடைய எண் குணங்களும் நிறையப்பெற்று சிவமாம் பேரின்பப் பெருவாழ்வு அடைதல்.

வெம்பவரு கிற்பதன்று கூற்ற நம்மேல்
        வெய்ய வினைப்பகையும் பையநையு
மெம்பரிவு தீர்ந்தோ மிடுக்கணில்லோ
        மெங்கெழிலென் ஞாயி றெளியோமல்லோ
மம்பவளச் செஞ்சடைமே லாறுசூடி
        யனலாடி யானஞ்சு மாட்டுகந்த
செம்பவள வண்ணர்செங் குன்றவண்ணர்
        செவ்வான வண்ணரென் சிந்தையாரே. ௯௨

(உரை) அம்பவளம் செஞ்சடைமேல் ஆறு சூடி - அழகுள்ள பவள நிறம்போன்ற சிவந்த சடையின்மேலே கங்கையாற்றினை அணிந்தும்; அனல் ஆடி - இடது கையில் அக்கினி ஏந்தி நட்டமாடியும்; ஆனைந்தும் ஆட்டு உகந்த - பசுவினுடைய பால் நெய் தயிர் சாணம் சிறுநீர் ஆகிய ஐந்தினாலும் கூடிய பஞ்சகவ்விய முழுக்கு விரும்பிய; செங்குன்ற வண்ணர் - சிவந்த மலைபோலும் நிறமுடையவரும்; செம்பவள வண்ணர் - சிவந்த பவளம்போலும் நிறமுடையவரும்; செவ்வான வண்ணர் - சிவந்த வானம் போலும் நிறமுடையவரும் ஆகிய சிவபெருமான்; என் சிந்தையார்-எனது சிந்தையை உறைவிடமாகக் கொண்டு அதனிடம் வீற்றிருக்கின்றார்; (ஆதலால்) கூற்றம் நம்மேல் வெம்பவருகிற்பது அன்று - தூல உடலினின்று உயிரைக் கூறுசெய்து பிரிக்கும் நமன் அடியார்களாகிய நாம் வாடி வருந்தும்படி நம்மிடத்து வருதிறதற்கு ஆற்றலுடையவன் அல்லன்; வெய்ய வினைப்பகையும் பையநையும் - அதுவன்றி நாம் முன் செய்த கொடிய நல்வினை தீவினைப் பகைமைகளும் நம்மை அணுகுதற்கு வலி இன்றி மெல்ல மெல்லக் குறைந்து நசித்துவிடும்; எம்பரிவு தீர்ந்தோம் - காமம் வெகுளி மயக்கம் என்னும் மூன்று குற்றங்களினின்று முற்றிலும் நீங்கினோம்; இடுக்கண் இல்லோம் - மூக்குற்றங்களும் நீங்கினதனால் உலகில் வரக்கடவதாகிய யாதொரு இன்பதுன்பங்களும் எங்களுக்கு இல்லை; ஞாயிறு எங்கு எழில் என் - ஞாயிறு உலகில் வழக்கம்போல் கிழக்குத் தோன்றாது வேறு எந்தத் திக்குகளிலே தோன்றினாலும் எங்களுக்கு அதனால் வரக்கடவது ஒன்றுமில்லை; எளியோம் அல்லோம் - உலகில் அரசன் முதலிய எத்தகையோருக்கும் நாங்கள் எளிமையுடையவர்கள் அன்று.

(விளக்கம்) அனல் ஆடி - அழித்தல் தொழிலைக் குறிக்கிறது "அனலங்கை யேந்திக் கூத்தாடவல்ல குழகன்" என்று அடிகள் திருப்பாசூர்த்திருத்தாண்டகம் 3-வது பாட்டிற் கூறியிருத்தல் காண்க. செங்குன்ற வண்ணர் - சிவப்பு நிறம் குன்றின் முழுவதும் கலவாதிருத்தலால் இது இறைவன் பொருட்டன்மையால் உலகத்தினின்று பேதமாய்த் தோன்றுகிற அத்துவித நிலையைக் குறிக்கிறது. செம்பவள வண்ணர் - சிவப்பு நிறம் பவளத்தின் உள்ளும் புறமும் கலந்திருத்தலால் இது இறைவன் உலகம் அனைத்திலும் கலப்புப்பற்றி அபேதமாய்த் தோன்றும் அத்துவித நிலையினைக் குறிக்கிறது. செவ்வான வண்ணர் - செஞ்ஞாயிற்றினொளி அந்திநேரத்தில் வானத்தில் பட்டு அதிற் சிவந்த நிறமுண்டாதலால் இது இறைவன் எவற்றிலும் ஒற்றித்து நின்றும் ஒன்றிலும் பற்றிலனாயிருக்கிற பேதாபேத அத்துவித நிலையைக் குறிக்கிறது. என் சிந்தையார் - மெய்ஞ்ஞானிகள் சிந்தையில் இறைவன் பேதம் அபேதம் பேதா பேதம் என்னும் மூன்று நிலைகளும் தனித்தனியே உடையவன் அல்லனாய் அம்மூன்றற்கும் பொதுமையான அத்துவித நிலையை உடையனாயிருத்தலான் அடிகள் அம்மூன்று அத்துவித நிலைக்குறிகளைச் சொன்ன பின் என் சிந்தையார் என்றார். மேலே 90-வது பாட்டில் அடிகள் என் சிந்தை தன்னுருவைத் தந்தவனை எனக் கூறிய வாற்றாலும் திருமறு மாற்றத் திருத்தாண்டகம் 10-வது பாட்டில் "எண்குணத்துளோமே" என்று கூறியவாற்றாலும் இறைவனுடைய உருவமாகிய அருளின் குணங்கள் அடிகளுடைய சிந்தையில் பதியப்பெற்றன என்பது கூறப்பட்டது. கூற்றம்நம்

மேல் வெம்ப வருகிற்பது அன்று - கூற்றம், பண்புப்பெயர் அம் பண்புப் பெயர் விகுதி அது இங்கே ஆகுபெயராய் உயிரை உடலினின்று கூறுசெய்கிற (பிரிக்கிற) நமனைக் குறிக்கிறது. வருகிற்பது - கில் ஆற்றல் உணர்த்தும், இடைநிலை - ப - எதிர்கால இடைநிலை. து - தொழிற்பெயர் விகுதி. உலகிலுள்ளபொழுது சிவன் திருவடிப் பேற்றைத் தலைக்கூடிப் பேரின்பப் பெருவாழ்வை அடைந்த சிவன் முத்தர்களிடம் யமன் வரக் கடவதோர் செயலொன்றுமில்லை யாதலின் அடிகள் "கூற்றம் நம்மேல் வெம்ப வருகிற்பதன்று" என்றார். என் சிந்தையார் என்று சொன்ன அடிகள் பின் நம்மேல் என்று பன்மையாகக் கூறியது அவர்புறம் நோக்கில் ஒருமையாகக் கூறிப் பின் உள் நோக்கில் தம்மைப்போன்ற அடியார்கள் நிலையையும் உணர்ந்ததைக் குறிக்கிறது. வெய்ய வினைப்பகையும் பையுளையும் - அத்தகைய சிவன் முத்தர்களுக்கும் உடல் நீங்குமளவும் உடல் ஊழாய்க் கழிய இருக்கிற பிராரத்தவினை மெல்லியதாய் வந்து தாக்கக்கூடியதாயுள்ளது ஆதலின் வெய்யவினை இல்லை என்று கூறாது பையுளையும் என்றார். எம்பரிவு தீர்ந்தோம் - பரிவு என்ற சொல் இங்கே பஞ்சக் கிலேசங்கள் ஆகிய குற்றங்களைக் குறிக்கிறது. அஞ்சு குற்றங்களும் காமம் வெகுளி மயக்கம் மூன்றனுளடங்கும். பஞ்சக் கிலேசங்கள்பற்றி மேலே சில பாட்டுகளின்கீழ் எழுதப்பட்ட விளக்க உரையைக் கொள்க. பரிவு - சிலப்பதிகாரம் 7-வது காதை ௧-வது கட்டுரையில், "பண்வகையிற் பரிவு தீர்ந்து" என்ற வரியில் வருகிற பரிவு என்ற சொல்லுக்கு அடியார்க்கு நல்லார் குற்றம் என்று பொருள் செய்திருத்தல் காணக. தீர்தல் - முற்றிலும் ஒழிதல் - கடன் தீர்ந்தது என்று பேச்சு வழக்கிலும் வருதல் காண்க. ஞாயிறு எங்கு எழின்என - உலகப்பற்றை முற்றிலும்விட்டுத் திருவருள் வழி நிற்கிற அடியார்களுக்கு இறைவன் ஆணைவழி உலகில் இயங்கும் ஞாயிற்றின் இயக்கம் சிறிதும் விகாரத்தை உண்டுபண்ண வல்லதன்று. ஆதலின் ஞாயிறு எங்கு எழில் என் என்றார். மேலே 91-வது பாட்டில் இறைவனுடைய எண் குணங்களின் வெளிப்பாடுகள் கூறப்பட்டன. இப்பாட்டில் அந்த எண்குணங்களி லடங்குவனவாகிய ஆறு குணங்களின் வெளிப்பாடுகள் கூறப்பட்டன. கூற்றம் நம்மேல் வருகிற்பதன்று என்பதனால் பேரருளுடைமையும், வெய்ய வினையையும் என்பதனால் இயல்பாகவே பாசங்களி னீங்குதலும், எம்பரிவு தீர்ந்தோம் என்பதனால் முற்று முணர்தலும், இடுக்கணில்லோம் என்பதனால் வரம்பிலின்பமுடைமையும் ஞாயிறு எங்கெழிலென் என்பதனால் தன் வயத்தனாலும், எளியோமல்லோம் என்பதனால் முடிவிலாற்றலுடைமையும், தமது சிந்தையில் பதியப்பெற்றமையை அடிகள் குறிப்பிட்டவாறாயிற்று. இயற்கை உணர்வினனாதல் இயல்பாகவே பாசங்களினீங்குதலிலும் தூய வுடம்பினனாதல் பேரருளுடைமையிலும் அடங்கும். இப்பாட்டில் இறைவன் திருவடிப்பேற்றினை அடையப்பெற்ற அடியார்களுடைய பெருமை கூறப்பட்டது. அடியார்களுடைய திருவேடத்தைக் கண்டு சிவன் முத்தர்கள் அவர்களை வழிபடுதற்குக் காரணம் கூறப்பட்டதாயிற்று.

எடுத்த வெல்கொடி யேறுடை யான்றமர்
உடுப்பர் கோவண முண்பது பிச்சையே
கெடுப்ப தாவது கீழ்நின்ற வல்வினை
விடுத்துப் போவது வீழி மிழலைக்கே. ௯௩

(உரை) ஏறு எடுத்த வெல்கொடி உடையான் தமர்-ஏற்றினைத் தன்னால் எடுத்துக் கொள்ளப்பட்ட வெற்றிக் கொடியாக உடையவனாகிய சிவபெருமானுடைய அடியார்கள் ; கோவணம் உடுப்பர் - கோவணமும் (கீளுமே) ஆடையாகத் தரித்துக்கொள்வர் ; உண்பது பிச்சையே - தாம் உணவுஆக உண்பது வீடுகளிலிரந்து பெறும் பிச்சைச் சோறே ; கெடுப்பதாவது கீழ்நின்ற வல்வினை - முற்றிலுமில்லாமல் ஒழிப்பது தங்களை மேற்கொண்டு செல்ல வலியில்லாத நல்வினை தீவினைகளே ; விடுத்து போவது வீழிமிழலைக்கே - பொருட்பற்று உயிர்ப்பற்றுக் களாலாகிய உலகப்பற்றுக்களை அறவேஒழித்து விட்டு வழிபடுவதற்குப் போவதாயுள்ள இடமானது சிவபெருமான் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கின்ற திருவீழிமிழலை என்னும் தலமே,

(விளக்கம்) ஏறு எடுத்த வெல்கொடியான் தமர் - எடுத்த என்பது எடுக்கப்பட்ட என்னும் செயப்பாட்டு வினைப் பொருளில் வந்தது, ஏற்றுக் கொடியானது ஆன்மாக்களைப் பசுபாசங்களினின்று நீக்கும் செயலுக்குக் குறியீடாய் விளங்குகிறது, அரசனொருவனுடைய கொடியானது அவன் கீழ் வாழுங் குடிகளைக் காத்தலுக்குக் குறியீடாயிருத்தல் போல. சிவபெருமானுடைய ஐந்தொழிற் செயலுக்கு என்றும் தோல்வியில்லை யாதலின் வெல்கொடி என்றார். வெல்கொடி முக்காலத்துக்கும் பொதுவான வினைத்தொகை. தம் + அர் = தமர் - தம்மவர் அதாவது உறவோர் - யாவராயினும் சிவபெருமானுடைய திருவடிகளில் அத்துவிதமாய்க் கலந்துள்ள அடியார்களெல்லாம் அவனுக்குத் தமராவர். உடுப்பர் கோவணம் உண்பது பிச்சையே - ஓடும் பொன்னும் ஒக்க நோக்கும் அடியார்கள் உலகிலுள்ள காலத்தில் அவர்களால் விரும்பத்தக்கது பிறிது ஒன்றுமில்லை யாதலின், உடுப்பர் கோவணம் உண்பது பிச்சையே என்றார். அவர்கள் விரும்புவது மெய்ஞ்ஞானச் செல்வம் ஒன்றுமே ; பிச்சை - பிச்சைச் சோறு ; ஆகுபெயர். கெடுப்பதாவது கீழ்நின்ற வல்வினை - பழைய வாசனைபற்றி ஓரோ வழி பிராரத்துவ வினை உடம்புள்ளவரை வந்து அடியார்களைத் தாக்குதலும் கூடுமாதலின் வல்வினை என்றார் - வல்வினையாயினும் அடியார்களை மேற்சென்றெழுக வலியிலது ஆதலின் கீழ்நின்ற வல்வினை என்றார். அவ்வாறு தங்கள்மேல் எழும் வல்வினையையும் நசிக்கச் செய்வார் என்பார், கெடுப்பதாவது கீழ்நின்ற வல்வினை என்றார். "தன்னையறிந்திடுந் தத்துவ ஞானிகள் முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பர்கள்" என்றார் திருமூலர். விடுத்துப்போவது வீழிமிழலைக்கே - இது உலகப் பற்றுக்கள் என்ற சொற்களை அவாவி நிற்பதால் அவைகளை வருவித்துப் பொருள் உரைக்கப்பட்டது. ஏ - பிரிநிலைப் பொருள் குறிக்கிறது.

விடையான்விரும்பி என்னுள்ளத் திருந்தான்இனி நமக்கிங்
கடையா அவலமரு வினைசாரா நமனையஞ்சோம்
புடையார் கமலத்தயன் போல்பவர் பாதிரிப்புலியூர்
உடையானடி யாரடியடி யோங்கட் கரியதுண்டே. கூச

(உரை) எனது உள்ளத்து-என்னுடைய உள்ளத்தில் ; விடையான் விரும்பியிருந்தான் - எருதினை ஊர்தியாக உடைய சிவபெருமான், உவந்து வீற்றிருக்கின்றான் (அவ்வாறே அவன் பிற அடியார்களுடைய உள்ளங்களிலும் வீற்றிருக்கின்றான் என்று நான் அறிகின்றேன்); நமக்கு இங்கு இனி - அதனால் அடியார்களாகிய நமக்கு இந்த உலகத்தில் இனிமேல் ; அருவினை சாரா - முன் நம்மைவிட்டு நீங்குவதற்கு அரியனவாயிருந்த நல்வினை தீவினைகள் நம்மைச் சாராமல் நீங்கிவிடும் ; அவலம் அடையா - வினையின்மையால் எவ்வகைத் துன்பங்களும் நம்மை அணுகா ; நமனை அஞ்சோம் - நமனுக்கும் பயப்படமாட்டோம் ; புடையார் கமலத்து அயன்போல்பவர் - (தண்டில்) துளையுடைய தாமரை மலர்மேலிருக்கின்ற அயனுக்கு ஒப்பான அந்தணர்கள் வாழ்கிற; பாதிரிப்புலியூர் உடையான் - திருப்பாதிரிப்புலியூரில் திருக்கோயில் கொண்டு வீற்றிருக்கின்ற ஆண்டவனுடைய ; அடியார் அடி அடியோங்கட்கு - அடியார்களுடைய திருவடிகளுக்கு ஆட்பட்டொழுகுகின்ற அடியார்களாகிய எங்களுக்கு; அரியதுண்டே - கிடைத்தற்கு அரியபொருள் ஒன்றுமில்லை.

(விளக்கம்) இப்பாட்டில் திருநாவுக்கரசு அடிகள் சிவபெருமானுடைய திருவடிகளைச் சேரப்பெற்ற அடியார்களுடைய அளப்பருந்தன்மையைக் கூறுகின்றார். விடையான் விரும்பி என் உள்ளத்திருந்தான் - விரும்பியென் னுள்ளத்திருந்தான் என்றதனல் அடிகள் மும்மலங்களினின்றும் நீங்கி அயரா அன்பின் அத்துவிதமாய் அரன்

கழல் அடைந்தார் என்பது பெறப்பட்டது. பசுகரணம் முற்றிலும் நீங்கிச் சிவகரணமாய் மாறிய தூய உள்ளத்திலேதான் சிவபெருமான் விரும்பி வீற்றிருப்பார் என்பது பெறப்பட்டது. நமக்கு இங்கு இனி அருவினை சாரா - மேலே அடிகள் என்னுள்ளத் திருந்தான் என்று தம்மை மாத்திரம் ஒருமையிற் கூறிப் பின் அதனால் நமக்கு அருவினைசாரா என்று பிறஅடியார்களையும் சேர்த்துப் பன்மையிற் கூறியது, அடிகள் தமது உள்ளத்தில் இறைவனுடைய வியாபகத்தன்மையை அத்துவிதமாய்க் காணுங்கால் அவ் வியாபகத்தன்மையில் விளங்குகின்ற பிறஅடியார்களையும் தமது வியாபக உள்ளத்தில் காணுதல்பற்றியாகும். "தூயஞான நாட்டம்பெற்ற பின் யானும் நின்பெருந்தன்மையுங் கண்டேன்; காண்டலும் என்னையுங் கண்டேன் பிறரையுங் கண்டேன்" என்று பட்டினத்துப் பிள்ளையார் திருவிடைமருதூர் மும்மணிக்கோவையிற் கூறியிருக்கின்றமை காண்க. தூயமெய்ஞ்ஞானம் பெற்றபின் வினை சார்தற்கு இடமில்லை யாதலின், அருவினை சாரா என்றார். வினை சாதியொருமையாய் நல்வினை - தீவினைகளைக் குறிக்கின்றது ஆதலின் சாரா என்ற பன்மைவினை கொண்டது. அவலம் அடையா - நல்வினை தீவினைகளே உலகிலுள்ள இன்பதுன்பங்களுக்குக் காரணமாகலின் வினை நீங்கின காரணத்தால் துன்பங்களு மில்வாயின. பேரின்பத்தை நோக்க நல்வினையால் வரும் சிறிய இன்பமும் துன்பத்தோடு வைத்து எண்ணப்படுகின்றது. அவலம் - சாதியொருமைப் பெயராய் உலகிலுள்ள பல துன்பங்களையும் குறிக்கின்றது ஆகலின் அடையா என்ற பன்மை வினைகொண்டு முடிந்தது. நமனை (உம்) அஞ்சோம் - சிறப்பு உம்மை தொக்கி நின்றது. சிவன் திருவடிகளை உலகிலுள்ளபொழுது சேர்ந்த அடியார்களிடத்தில் நமனால் செய்யக் கடவதொன்றுமில்லை யாதலால் நமனை அஞ்சோம் என்றார். நமனை - நமனுக்கு - வேற்றுமை உருபு மயக்கம். அடியார் அடி அடியோங்கட்கு - அடி + ஓம் + கள் + கு - அடியோங்கட்கு ஓம் - தன்மையன்மை விகுதி. கள் - விகுதிமேல் விகுதி. கு - நான்காம் வேற்றுமை உருபு "தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்" எம்மையும் உடையார் ஆதலின் அடிகள் அடியார் அடி அடியோங்கட்கு என்றார். "திங்கள் முடியா ரடியா ரடியோமென்று திரிந்திடுவர் சிவஞானச் செய்தியுடையோரே" என்று சிவஞானசித்தியார் 12-ம் சூத்திரம் க-வது பாட்டுக் கூறுதல் காண்க. அரியது உண்டே - இங்கே ஏ எதிர்மறைப் பொருளில் வந்தது. குறைவிலா நிறைவாகிய சிவபெருமான் திருவடியைச் சேரப்பெற்ற அடியார்கள் யாதொரு குறைவுமிலர் ஆதலின் அரியதுண்டே என்றார். அடிகள் திருமறுமாற்றத் திருத்தாண்டகம் 5-வது பாட்டில் "சிவபெருமான் திருவடியே சேரப்பெற்றோம் - ஒன்றினாற் குறையுடையோமல்லோம்" என்று கூறி அருளினர். இந்தப் பாட்டில் அடிகள் நமனை அஞ்சோம் என்றதனால் சிவபெருமானுடைய சத்துத்தன்மையையும், அருவினைசாரா என்றதனால் அவனுடையசித்துத்தன்மையையும், அவலம் அடையாஎன்றதனால் அவனுடைய ஆநந்தத் தன்மையையும் தம்மிடத்தில் விளங்கப்பெற்றார் என்பது கூறப்பட்டது. மேலே 90-வது பாட்டிற் கூறப்பட்ட எண்குணங்களின் வெளிப்பாடுகளும், 91-வது பாட்டிற் கூறப்பட்ட ஆறுகுணங்களின் வெளிப்பாடுகளும் இப்பாட்டிற் கூறப்பட்ட இறைவனுடைய சத்து சித்து ஆநந்தம் (உண்மை அறிவு இன்பம்) என்னும் மூன்று குணங்களின் வெளிப்பாடுகளாயடங்கும்.

எவரேனுந் தாமாக விலாடத்திட்ட
திருநீறுஞ் சாதனமுங் கண்டாலுள்கி
உவராதே அவரவரைக் கண்டபோது
உகந்தடிமைத் திறம்நினைந்தங் குவந்துநோக்கி

இவர்தேவர் அவர்தேவர் என்றுசொல்லி
இரண்டாட்டா தொழிந்தீசன் திறமேபேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே. கூரு

(உரை) விலாடத்து திருநீறும் சாதனமும் இட்ட எவரேனும் - நெற்றியில் திருநீறும் (கழுத்தில்) கண்டியும் தரித்த அடியார்கள் எவராயிருந்தாலும்; கண்டால் - அவர்களைக் கண்டால்; அவர் அவரைக் கண்டபோதே - அந்த அந்த அடியார்களைக் கண்ட அந்நேரத்திலேயே; உவராதே தாமாக உள்கி உகந்து - அவர்கள் உடலிற் காணப்படும் எதாயினும் ஒரு குற்றத்தைப் பார்த்து அருவருக்காமல் திருநீறும் கண்டியும் தரித்த அவர்களது திருவேடத்தை மாத்திரம் சிவபெருமானுடைய திருவேடம் என்று தமக்குள்ளே தாமாக நினைந்து அகமகிழ்ந்து; அடிமைத்திறம் நினைந்து அங்கு உவந்து நோக்கி - புறவேடம் குறிக்கிறபடி அவர்கள் சிவபெருமானுக்கு மீளா அடிமைகளாய் ஆட்பட்டிருக்கும் தன்மையை உள்ளத்திலே நினைந்து, அந்நினைப்பினாலே உள்ளத்திலே மகிழ்ந்து அவர்களைப் புறத்திலே பார்த்து; இவர் தேவர் அவர் தேவர் என்று சொல்லி இரண்டு ஆட்டாது ஒழிந்து - சிலரைக் குறிப்பாகச் சுட்டி இவர் சிறந்த அடியார் அவர் சிறந்த அடியார் என்று வேற்றுமை பாராட்டி இரண்டு தன்மைப்படப் பேசாது, அவ்வாறு பேசுதலைத் தவிர்ந்து; ஈசன் திறமே பேணி - அவர்கள் எல்லாரையும் ஒரு தன்மையாகச் சிவபெருமானுடைய அடியார்கள் என்று மாத்திரம் நினைந்து அவர்களிடம் அன்பு செய்து; கவராதே தொழும் அடியார் நெஞ்சினுள் - ஒருப்பட்ட கருத்தை உடையவராய் வணங்குகின்ற சீவன் முத்தர்களாகிய அடியார்களுடைய உள்ளத்தினுள்; கன்றாப்பூர் நடுதறியைக் காணலாம் - திருக்கன்றாப்பூரில் திருக்கோயில் கொண்டருளியிருக்கின்ற சிவலிங்கப்பெருமான் வீற்றிருந்தருளுதலை நாம் காணலாம்.

(விளக்கம்) சிவஞானபோதம் 12-வது சூத்திரம் கூறுகிறபடி இந்தத் தேவாரப் பாட்டு சீவன்முத்தர்கள் தாங்கள் அடையப்பெற்ற அத்துவித நிலையினின்று, மெல்லிதாகிய எஞ்சிநிற்கிற பிராரத்த வினையாற்றாக்கப்பட்டு வழுவாதிருக்கும் வண்ணம், அடியார்கள் திருவேடத்தைக்கண்டு அவர்களை அரன் எனத் தொழல்வெண்டும் என்று கூறுகின்றது. மேலே 85 முதல் 88 வரையுள்ள நான்கு தேவாரப்பாட்டுகளில் முறையே சரியையாளர், கிரியையாளர், யோகிகள், ஞானிகள் வழிபட்டு அருள் விளக்கம் பெற்ற திருக்கோயிலை அரனெனச் சீவன்முத்தர்கள் தொழல்வேண்டும் என்பது கூறப்பட்டது. இறைவன், எல்லா உயிரில் பொருள்களிலும் உயிர்ப்பொருள்களிலும் நிறைந்திருப்பினும், மந்திர நியாசம் பெற்றும், அருச்சகர்களாலும் அடியார்களாலும் வழிபடப் பெற்றும் அருள்விளக்கம் பெற்றிருக்கிற உயிரில் பொருளாகிய சிவலிங்கவடிவிலும், சிவோகம்பாவனை செய்தும், அஞ்செழுத்தோதியும், உள்ளமாகிய குறியில் வைத்து இறைவனை வழிபட்டும் மலத்தொடக்கு நீங்கி அருள் விளக்கப்பெற்றிருக்கிற உயிர்ப்பொருளாகிய அடியார் வடிவிலும் இறைவன் சிறப்பாய் வீற்றிருக்கின்றான் என்பதுபற்றித் திருக்கோயிலும் திருவேடமும் சீவன்முத்தர்களுக்குச் சிறந்தவழிபாட்டிடங்களாய்க் கூறப்பட்டன. ஏனையோர்கள் சிவனை மறவாதிருத்தற்கு அவ்விடங்களில் வழிபடல்வேண்டும் என்பது சொல்லாமலே அமையும். எவரேனும் என்றதனால் சாதி குலம் பால் நிறம் முதலிய எவ்வகைய உலகவேற்றுமைகளும் பாராட்டக்கூடாது என்பது பெறப்படுகின்றது. சாதனம் - அடையாளம்; உருத்திராக்கமாலை கருணைக்கு அடையாளமாயிருத்தலின் அது இங்கே கண்டியைக்குறிக்கிறது. அவர் அவரைக் கண்டபோதே திருவேடத்தைக் காண்டலும், அத்திருவேடத்தோடு தொடர்புடைய சிவபெருமானுடைய நினைவு சமாதியை விட்டுப் பிரிந்த காலத்தில் ஒரோவழி மறந்திருக்கும் சீவன் முத்தர்களுடைய உள்ளத்தில் உடனே எழல்

வேண்டும் என்பார் கண்டபோதே என்றார். உவராதே தாமாக உள்கி - உகந்து - உவர்த்தல் - அருவருத்தல். திருவேடத்தை ஒழிந்து உறுப்புக்குறை, அழுக்கு உடல் முதலிய குற்றங்களை மனதிலே நினைத்தல்கூடாது என்பார், உவராதே உள்கி உகந்து என்றார். தாமாகஎன்ற அடைமொழியை 'விலாடத் திட்' என்பதனோடாவது 'கண்டால்' என்பதனோடாவது சேர்த்துப் பொருள் கொள்ளுதல் பொருத்தமில்லையாதலின், 'உகந்து' என்பதனோடு சேர்த்துப் பொருள் உரைக்கப்பட்டது. பிறர் நினைப்பூட்டாமல் தாமாக இயல்பில் நினைந்து அகமகிழல் வேண்டும் என்பார் தாமாக உள்கி உகந்து என்றார். சிவபெருமான் திருவேடத்தைத் தாங்கியிருக்கிற அடியாரைக் கண்டவுடன் அவரைச் சிவபெருமான் தமர் என்று நினைந்து மகிழல் வேண்டும் என்பது கூறப்பட்டது. அடிமைத்திறம் நினைந்து அங்கு உவந்து நோக்கி - திருமே[illegible]த்தைக்கண்டு நினைந்து மகிழ்ந்தபின் அத்திருவேடம் குறிக்கிற ஆண்டான் அடிமைத் தொடர்புக் கருத்தைச் சீவன்முத்தர்கள் நினைந்துதாம் சிவபெருமானுக்கு ஆட்பட்டு நிற்கும் அத்துவித நிலையை அத்திருவேடக் கருத்திற் கண்டு நினைந்தும் சிவபெருமானுக்கு ஆட்பட்டிருக்கும் அத்திருவேடமுடைய அடியார்களுக்கு "தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார் - எம்மை உடையார்" என்னும் முறைமைபற்றித் தாங்களும் ஆட்பட்ட அடியார்கள் என்று நினைந்து மகிழ்தல் வேண்டும் என்பார் அடிமைத்திறம் நினைந்து அங்கு உவந்து நோக்கி என்றார். இவர் தேவர் அவர் தேவர் என்று சொல்லி இரண்டு ஆட்டாது - தேவர் - இறைவனது அருள்விளக்கமுடையவர். ஆட்டாது உரையாடாது; ஆட்டாது—ஆடு + ஆ + த் + உ (வினையெச்சவிகுதி) டகரவொற்றிரட்டித்து ஆட்டாது என்றாயிற்று. இருதன்மைப்படப் பேசுதல் சீவன்முத்தர்கள் சிவபெருமானுடைய திருவடிகளிற் பற்றியிருக்கும் கருத்தொருமைப்பாட்டுக்குத் தடையாயிருக்குமாதலின், இரண்டு ஆட்டாது என்றார். ஈசன் திறமேபேணி - ஈசன் திறம் பேணுதல் - அடியார்களை ஆன்மாக்களாகக் கருதாது அவர்கள் வேடத்தாலும் சிவோகம் பாவனை செய்தலினாலும் தங்கள் இருதயத்தானத்தில் ஒரு குறியின்கண் வைத்து சிவனைக் கூடும் செயலாலும் சிவனே யாவர் என உவந்து நினைத்தல். ஏ-தேற்றம். ஈசன் திறம் இறைவனுடைய மாறுதலில்லாத தன்மை. கவராதே தொழும் அடியார் - கவர்தல் - பிரிதல். அவர் தேவர் இவர் தேவர் என்று இரண்டுபடப் பேசுதலினாலுண்டாகும் மனவேற்றுமை; இந்த மனவேற்றுமை மன ஒருமைப்பாட்டுக்கு மாறாய் சிவன்முத்தர்களுடைய அத்துவித நிலையை வழுவச்செய்யுமாதலின் கவராது தொழும் அடியார் என்றார். கவராது தொழுதல் என்பது யாதொரு வேற்றுமையும் மனதில் நினையாமல் அடியார்களைச் சிவனே என்றும் சிவனுக்கு ஆட்பட்டிருக்கிற அடியார்களுக்குத் தாங்களும் அடிமைகள் என்றும் ஒருமைக்கருத்துடன் நினைத்து வணங்குதல். நெஞ்சினுள்ளே கன்றாப்பூர் நடுதறியைக் காணலாம்-இப்போர்ப்பட்ட சீவன்முத்தர்களாகிய அடியார்களுடைய உள்ளத்தில் சிவபெருமான் மகிழ்ந்து அவர்களைத் தானாக்கி அத்துவித நிலையிற் கலந்து விளங்கி யிருப்பன் ஆதலின் அவ்வுள்ளத்தில் திருக்கன்றாப்பூர் சிவலிங்கப்பெருமானைக் காணலாம் என்றார். படமாடும் திருக்கன்றாப்பூ[illegible]ர்க்கோயிலில் தாவரவடிவில் வீற்றிருக்கும் சிவபெருமான், நடமாடும் கோ[illegible]ாகிய அடியாருடைய தூய உள்ளத்திலும் வீற்றிருப்பன் என்பது கூறப்பட்டது. இக்கருத்து, மேலே 80 வது பாட்டிலும் கூறப்பட்டிருத்தல் காண்க. நடுதறி - வினைத்தொகை. ஒரு அன்பர் வழிபாட்டிற்காக நடப்பட்ட கட்டை அவ்வன்பர் அன்பினால் சிவலிங்கமாக மாறியதாகத் திருக்கன்றாப்பூர்த்தல புராணம் கூறும் என்பர். ஆகவே நடுதறி என்பது சிவலிங்கப்பெருமான் என்ற பொருள்பட வந்தது.

கருவனே கருவாய்த் தெளிவார்க் கெலா
மொருவனே யுயிர்ப்பா யுணர்வாய் நின்ற

திருவனே திருவீழி மிழலையுட்
குருவனே யடியேனைக் குறிக்கொளே. ௧௧

(உரை) கருவனே - உலகம் தோன்றுதற்கு நிமித்தகாரணனா யிருக்கிறவனே; கருவாய்த் தெளிவார்க்கு எலாம் - உன்னை முழுமுதற் கடவுளாகத் தெளிவாய் அறிந்தவர்கள் எல்லாருக்கும்; ஒருவனே - ஒப்பற்ற தனிப்பொருளாயிருக்கிறவனே; உயிர்ப்பாய் - (உம்) இயங்குகின்றஉடலில் மூச்சாயும்; உணர்வாய் (உம்) - உயிரில் இயங்குகின்ற உணர்வாயும்; நின்ற திருவனே - என்னுள்ளே நிலையாய் நிற்கின்ற அருட்சத்தியை உடையவனே; திருவீழிமிழலையுள் குருவனே - திருவீழி மிழலையில் திருக்கோயில் கொண்டெழுந்தருளி எல்லா உயிர்களுக்கும் அறியாமைக் காலத்தில் அறிவாயுள் நின்றுணர்த்தியும், பருவம் வந்த காலத்தில் புறத்திலே மானுட வடிவில் வந்து அறிவுணர்த்தும் குருவாயுள்ளவனே; அடியேனை (உம்) குறிக்கொள் - ஆண்டானாகிய உன்னால் ஆட்கொண்டருளப்பெற்ற அடிமையாகிய என்னையும் ஒருவனாகக் குறி வைத்து அடியார் கூட்டத்திற் சேர்த்துக் காத்தருள்வாய்.

(விளக்கம்) கருவன் - கரு+அன் - கரு - நிமித்தகாரணம் (Efficient cause) இறைவன், உலகம் தோன்றல் வேண்டுமென்று சங்கற்பித்த பொழுது முதற்காரணமாகிய மாயையிலிருந்து உலகம் தோன்றலால் கருவனே, என்றார். ஏகான்மவாதிகள் உலகம் தோன்றுதற்கு முதற் காரணனாயிருக்கிறவனும் இறைவனே என்று பிழைபடக் கூறுவர். கருவாய்த் தெளிவார்க்கு எல்லாம் ஒருவனே - எல்லாம் என்பது எலாம் எனக் குறுகியது. தெளிதல் என்பது உறுதியானபடி உள்ளத்திற் றெளிந்து அறிதல். இந்தத் தெளிவு அறிவு இறைவனுடைய சிறப்பு இயலை அவனோடு இரண்டறக் கலந்து உணர்கிறவர்களுக்கு மாத்திரம் உண்டாகும். அவர்களே, முழுமுதற் கடவுளாகிய இறைவனே ஐந்தொழில்களையும் செய்கிறவன் என்று அறிவார்கள். இறைவனுடைய பொது இயலைமட்டும் அறிகின்ற ஏனையோர் படைத்தல் முதலிய ஐந்தொழில்களில் ஒவ்வொரு தொழிலைச் செய்யும் மூர்த்தியையே கடவுள் என்று கொள்வர், அத்தொழிலைச் செய்யும் மூர்த்திகளுக்கு மேல் அவர்களுக்கு அறிவு செல்லாது ஆகலின்; அவர்கள் உலகிற்கு முழுமுதற் கடவுள் ஒருவனே என்ற உண்மையையும் அவன் இலக்கணத்தையும் அறியாது அம்மூர்த்தி பெரியர் இம்மூர்த்தி பெரியர் என்று கூறிப் பிணங்குவர் ஆதலின், அடிகள் கருவாய்த் தெளிவார்க்கெலாம் ஒருவனே என்றார். தெளிவார்க்கு எலாம் - தெளிந்த எல்லாருக்கும். இந்தச் சொற்றொடரால் பெறப்படும் கருத்தால் இப்பாட்டு அணைந்தோர் தன்மையின்கீழ் வைக்கப்பட்டது. உயிர்ப்பாய் உணர்வாய் நின்ற திருவன் - நிற்கின்ற என்பது தெளிவுபற்றி நின்ற என வந்தது. திரு+அன் - திருவன் - அருளாகிய சத்தியை உடையவன். உயிர்ப்பு - சுவாசம்; மூச்சு. அருட்சத்தி இயக்காமல் உடலில் உயிருக்கு ஆதாரமா யிருக்கிற மூச்சு நிகழவும், உயிரில் இறைவனை உணரச் செய்தற்குக் காரணமாயுள்ள உணர்வு நிகழவும் கூடா ஆதலின் உயிர்ப்பாயுணர்வாய் நின்ற திருவனே என்றார். அருட்சத்தி எப்பொழுதும் நீங்காமல் நிற்றலின் நின்ற திருவனே என்றார். குருவனே - இறைவனே எல்லா உயிர்களுக்கும் அறியாமைக் காலத்தில் உள்நின்று உணர்த்தியும் பருவம் வந்த காலத்தில் புறத்தே மானுட வடிவில் வந்து அறிவுரை உணர்த்தியும் நலமருளிச் செய்கின்ற ஆசாரியனாய் வருதலின் குருவனே என்றார். அடியேனை என்பதில் உம் தொக்கு நின்றது, இழிவு சிறப்பு உம்மை.

இங்ஙனம்வந் திடர்ப்பிறவிப் பிறந்தயர்வே னயாமே
அங்ஙனம்வந் தெனையாண்ட அருமருந்தென் னாரமுதை

வெங்கனல்மா மேனியனை மான்மருவுங்கையானை
எங்ஙனம்நான் பிரிந்திருக்கே னென்னாரு ரிறைவனையே. ௬௭

(உரை) இங்ஙனம் வந்து இடர்ப்பிறவி பிறந்து அயர்வேன் - நான் கைலாயமலையில் கமலினி அனிந்திதை என்னும் உமாதேவியாருடைய இரண்டு சேடியப் பெண்களையும் மனதில் நினைத்ததால் நிலவுலகில் வந்து துன்பம் நிறைந்திருக்கிற மானுடப் பிறவியில் பிறந்த காரணத்தை மறந்து திகைத்துக்கொண்டிருந்தவனாகிய என்னை; அயராமே - அம்மறதியினின்று நீங்கி (நான் அடையப்போகும் உலக வாழ்வு இன்னது என்று அறியும்படி); அங்ஙனம் வந்து என்னை யாண்ட என் அருமருந்து ஆர்அமுதை - திருவெண்ணெய்நல்லூரில் ஆதி சைவ அந்தணன் கோலங்கொண்டு வந்து ஆவண ஓலை காட்டி நான் செய்யப் புகுந்த மணத்தைத் தடுத்து என்னை அடிமையாக அருள்செய்து ஆண்டுகொண்ட எனக்கு அருமையான மருந்துபோல்வானும் இனிமை நிறைந்த அமுதுபோல்வானும்; வெங்கனல் மா மேனியனை - வெம்மையான அனலுருவான பெருமை பொருந்திய திருமேனியை உடையவனும்; மான்மருவும் கையானை - தனது வலது கையில் தாருகாவனத்து இருடிகளால் ஏவிவிடப்பட்ட மான் ஒன்றை உடையவனும்; என் ஆரூர் இறைவனை - எனக்கு இவ்வுலகில் பல இன்ப நலங்களைச் செய்து திருவாரூரில் எழுந்தருளி இருக்கிற புற்றிடங் கொண்ட பெருமானுமாகிய சிவபெருமானை; நான் எங்ஙனம் பிரிந்திருக்கேன் - நான் எவ்வாறு பிரிந்திருக்க முடியும்? (பிரிந்திருக்க முடியாதபடி).

(விளக்கம்) இந்தப் பாட்டு அடங்கிய தேவாரப் பதிகம் சுந்தரமூர்த்தி அடிகளால் எந்தச் சமயத்தில் பாடப்பட்டது என்பதற்கு மேலே 64-வது பாட்டிற்குக் கூறப்பட்ட நிகழ்ச்சிக் குறிப்பைக் கொள்க. இங்ஙனம் அங்ஙனம் - இந்த இரண்டு சுட்டுப் பெயர்ச் சொற்களும் அறிசுட்டுக்களாய்பதவுரையிற் கூறப்பட்டபடி சுந்தரமூர்த்திஅடிகளுடைய வரலாறு நிகழ்ச்சிகளைக் குறிக்கின்றன. அடிகள் தமது மனது உணர்வுகளிலுள்ளனவற்றை வெளியே இங்ஙனம் அங்ஙனம் என்று கூறுகின்றார். அணிமையைக் குறிக்கிற இங்ஙனம் நிலவுலகிற் பிறந்ததையும், சேய்மையைக் குறிக்கிற அங்ஙனம் இறைவன் உலகிற்கு வந்து ஆண்டருளினதையும் குறிக்கின்றன. அடிகளுடைய வரலாறு தெரிந்தவர்களுக்கு அவை இன்ன என நன்கு விளங்குமாதலின், அந்நிகழ்ச்சிகள் சுருங்கிய பாட்டிற் கூறப்படவேண்டாவாயின. அயர்வேன் - அயர்தல் - மறத்தல், என்ன காரணத்தினால் இந்தத் துன்பமுள்ள மானிடப் பிறவி வந்தது என்பதை யறியாது மறந்திருத்தல்; கைலாய மலையிலிருந்தபொழுது அறிந்திருந்தும், மானுடப் பிறவிக்கு வந்தபின் அறியாதிருந்ததனால் அயர்வேன் என்றார். அயராமே - மறவாமல் - அதாவது மறதியினின்று நீங்கி அறியும்படி. என் அருமருந்து ஆர் அமுது - இறைவன் பிறவி நோயைத் தீர்க்கிறவன் ஆதலின் அருமருந்து என்றும், பிறவி நோயைத் தீர்ப்பதுடன் பேரின்பமும் அளிக்கின்றவன் ஆதலின் ஆர் அமுது என்றும் அடிகள் உவமைகள் கூறினார். இறைவனாலன்றி வேறுவழியில் நீங்காத பிறவிநோய் என்பார் அருமருந்து என்றும், தெவிட்டாதிருக்கிற நிலையான பேரின்பம் அளிக்கிறவர் என்பார் ஆர் அமுது என்றும் அவர் அடைமொழிகள் கொடுத்துக் கூறினார். அருமருந்து மலநீக்கத்துக்கும் (Negative aspect) ஆர்அமுது இன்பவிளக்கத்துக்கும் (Positive aspect) உவமைகளாய் வந்தன. என் ஆரூர் இறைவனை நான் எங்ஙனம் பிரிந்திருக்கேன் - அகமும் புறமும் ஒரு தன்மைக் காட்சியுள்ள அடிகள் அகத்தில் எப்பொழுதும் சிவபெருமானை அவனோடு அத்துவிதமாய்க் கலந்து நினைந்துகொண்டிருத்தல்போல் புறத்திலும் தமக்கு நீண்டகாலம் பழக்கமுள்ள திருவாரூர்க் கோயிலில் வீற்றிருக்கின்ற புற்றிடங்கொண்ட பெருமானைப் பிரிந்திருத்தல் தம் மனதுக்கு முடியாதிருக்குந் தன்மை

யைக் கூறுவார் எத்தனைநாள் பிரிந்திருக்கேன் என்றார். பிரிந்திருக்கேன் என்பதற்கு மேலே 64-வது பாட்டின்கீழ் எழுதப்பட்ட விளக்க உரையைக் கொள்க.

மறிசேர் கையினனே மதமாவுரி போர்த்தவனே
குறியே என்னுடைய குருவேயுன் குற்றேவல் செய்வேன்
நெறியே நின்றடியார் நினைக்குந் திருக்காளத்தியுள்
அறிவே யுன்னையல்லா லறிந் தேத்த மாட்டேனே. ௬௮

(உரை) மறிசேர் கையினனே - மானை ஏந்திய வலதுகையை உடையவனே; மத மா உரி போர்த்தவனே - தாருகாவனத்து இருடிகள் ஏவிவிட்ட மதம் பொருந்திய யானையினது தோலை உரித்து உடல்மேல் போர்த்துக்கொண்டவனே; குறியே - நான் அடையப்பெறும் பேரின்பப் பேற்றிற்குக் குறியாக இருக்கிறவனே; நெறியே - அக் குறியை அடைய வழியாயு மிருக்கிறவனே; என்னுடைய குருவே - நான் பேரின்பம் அடைதற்கு எனக்கு அறிவுரை உணர்த்தி வழிகாட்டுகின்ற குருவாய் இருக்கிறவனே; உன் குறு ஏவல் செய்வேன் - ஆண்டானாகிய நீ எனக்குப் பணித்த சிறிய ஏவல் வினைகளை அடிமையாகிய நான் உவந்து செய்வேன்; நின் அடியார் நெறியே நின்று நினைக்கும் - நினது மெய் அடியார்கள் அருள் அறிவு வழியில் நிலைபெற்று நின்று நின்னை மனதினால் நினைந்து வாக்கினால் வழுத்திக் கைகளினால் வணங்குகின்ற; திருக்காளத்தியுள் அறிவே - திருக்காளத்தியில் திருக்கோயில்கொண் டெழுந்தருளி யிருக்கின்ற மெய் அறிவுப் பொருளே; உன்னையல்லால் அறிந்து - உன்னையன்றி வேறொருவரையும் முழுமுதற் கடவுளாக நினைந்து; ஏத்தமாட்டேன் - நான் வழிபடமாட்டேன்.

(விளக்கம்) குறி - மக்கள் பேரின்பமடைதற்கு இறைவனுடைய திருவடிப்பேறு குறியாயிருத்தலின் குறியே என்றார். நெறி - அக்குறியை அடைதற்கு இறைவனால் வேதாகமங்கள் முதலிய கலைகளில் சமயங்கள் கூறப்பட்டிருத்தலின் நெறியே என்றார். அதுவன்றி இறைவனுடைய பொது இயலில் அமைக்கப்பட்ட திருவடிவங்களும் அவனை அடைதற்கு நெறியாயிருக்கின்றன. "நெறியே யென்னும் நெறிநின்றவர்கள் நினைக்கின்ற நீதி வேதாந்த நிலைக் குறியே யென்னுங் குணக்குன்றே யென்னுங் குலாத் தில்லை யம்பலக் கூத்தனையே" என்று திருமாளிகைத்தேவர் திருவிசைப்பாவிற் கூறப்பட்டிருத்தல் காண்க. அடியார் நெறி நின்று நினைக்கும் - நெறியானது இங்கே அருள் நெறி. அடியார்கள் திருவருளின் வழி அல்லது ஒன்றனையும் செய்வாரல்லர், ஆதலின் நெறிநின்று நினைக்கும் என்றார். அறிவு - அறிவுப்பொருளா யிருக்கிறவன், உயிர்களிடம் அறிவு விளங்கிப் பேரின்பமடைதற்கு இறைவனுடைய பேர் அறிவே காரணமாதலின் அறிவே என்றார். உன்னை அல்லால் அறிந்து - அறிந்துவேறொருவரையும் முழுமுதற் கடவுள் என அறிந்து. சுந்தரமூர்த்தி அடிகள், திருஞான சம்பந்த அடிகளை 'வம்பறு வரிவண்டு மணநாற மலரும் மதுமலர்க் கொன்றையா னடியலாற் பேணு எம்பிரான் சம்பந்தன்' என்றருளிச் செய்தனர்.

கடலி னஞ்சமு துண்டிமை யோர்தொழு தேத்த நடமாடி
அடலி லங்கை யரையன் வலிசெற் றருளம்மானமர் கோயில்
மடலிலங்கு கமுகின் பலவின் மதுவிம்மும் வலிதாயம்
உடலி லங்கு முயிருள் ளளவுந் தொழவுள்ளத் துயர்போமே. ௬௯

(உரை) நடம் ஆடி (உம்) - திருச்சிற்றம்பலத்துள் நின்று நடனம் செய்தும்; இமையோர் தொழுது ஏத்த - தேவர்களெல்லாரும் "ஆலால நஞ்சம் எங்களை வருத்தா வண்ணம் காவாய்" என்று தன்னை வணங்கித் துதித்தபொழுது; கடலின் நஞ்சம் உண்டு (உம்) - கடலினின்றெழுந்த நஞ்சை அமுதை உண்டதுபோல உண்டு (தேவர்களைக் காத்தும்); அடல் இலங்கை அரையன் வலி செற்று (உம்) - இலங்கைக்கு அரசனாகிய வலிமையுள்ள இராவணனுடைய வலியைக் கெடுத்தும்; அருள் அம்மான் அமர் கோயில் - உயிர்களுக்கு அருள் செய்கின்ற தந்தையாகிய சிவபெருமான் திருக்கோயில் கொண்டிருக்கின்ற இடமாயிருக்கிற; மடல் இலங்கு கமுகின் பலவின் - பூ முடிகளோடு கூடிய கமுக மரங்களிலும், பலா மரங்களிலும்; மது விம்மும் வலிதாயம் - தேன் பொழிகின்ற திருவலிதாயம் என்னும் தலத்திலுள்ள திருக்கோயிலை; உடல் இலங்கு உயிர் உள்ளளவும் தொழ - (சீவன் முத்தர்கள் தாங்கள் எடுத்த) உடலில் உயி

ரிருக்கும் காலமுழுவதும் அரன் எனத் தொழுதலினாலே; உள்ளத் துயர் போம் - தங்களுக்கு உடலூழாய்க் கழிய இருக்கின்ற பிராரத்த வினையால் வரக்கடவதாகிய மனத்துன்பம் சிறிதும் அணுகாது.

(விளக்கம்) நடம் ஆடி - நடனம் ஆடுதல். உயிர்களெல்லாம் மும்மலங்களினின்று நீங்கிப் பேரின்பம் அடைதற்காக இறைவன் அவைகள்மேல் வைத்த பேரருளால் இடைவிடாது செய்துவரும் படைத்தல் முதலிய ஐந்தொழில்களையும் குறிக்கிறது. ஆடி, என்ற சொல்லின் பின் (உம்) - தொக்கி நின்றது. அவ்வாறு பின் வருகிற உண்டு - செற்று என்ற சொற்களுக்குப் பின் உம் தொக்கி நின்றது; அவைகளை விரித்துப் பொருள் உரைக்கப்பட்டது. கடலில் நஞ்சம் உண்டு-நஞ்சம் உண்ணல் உயிர்களைக் காத்தல் செய்யும் அநுக்கிரகத் தொழிலைக் குறிக்கிறது. அடல் இலங்கை அரையன் வலிசெற்று - இராவணனுடைய வலி செற்றல் நிக்கிரகம் மூலமாய் அநுக்கிரகம் செய்தலைக் குறிக்கிறது. நல்லோர்களைக் காத்தற்கும் தீயோரை நல்வழிப்படச் செய்தற்கும் தீயோரைச் செறுதல் வேண்டப்படுவது. இந்தப் பாட்டில் திருஞானசம்பந்த அடிகள் முதலாவது நடனம் ஆடுதல் ஆகிய இறைவனுடைய அருளைப் பொதுமையிற் கூறிப் பின் அதற்குத் துணைகளாயுள்ள தேவர்களைக் காத்தல் அசுரர்களைச் செறுத்தல் ஆகிய இரண்டு சிறப்புத் தொழில்களையும் உடன் கூறினார். மடல் இலங்கு கமுகின் பலவின் மது விம்மும் வலிதாயம் - திருவலிதாயம் என்ற தலத்தின் சிறப்பு. மடல் கமுகின் பூவை மூடி அதனைப் பொதிந்துகொண்டிருப்பது. மடலிலங்கு என்ற அடைமொழி கமுகு என்ற சொல்லை மாத்திரம் தழுவுகிறது. விம்முதல்-கமுகம் பூவிலிருந்தும் பலவின் சுளையிலிருந்தும் தேன் வெளிப்படுதல். உடல் இலங்கு உயிர் உள்ளளவும் தொழ என்னத்துயர்போம் - உடல் என்பது இங்கே தூல உடலை. தூல உடம்பின்றி உயிர்தூல உலகில் விளங்காது ஆதலின் உடலிலங்கு உயிர் என்றார். உள்ள அளவும் என்பது உள்ளளவும் என அகரம் - தொக்கது - தொகுத்தல் விகாரம். திருவடிப்பேற்றினை அடைந்த சீவன்முத்தர்கள் தங்கள் சமாதி நிலையை விட்டுப் பிரிந்தகாலத்து ஒரோவழி பிராரத்துவ வினைவயத்தால் புறப்பொருட்களின் மேல் விருப்பு வெறுப்புகள் நிகழ்ந்து, அந்நிகழ்ச்சி காரணமாக மாயை மலமும் ஆணவ மலமும் தங்களை உடல் நீங்கும்வரை கூடாதிருத்தற்குத் தங்கள் அறிவு வேட்கை செயல்களை ஆலயத்தை அரனெனத் தொழுதற்கண் நிகழ்த்தல்வேண்டும் என்பார் உடலிலங் குயிருள்ளளவுந்தொழ என்றார். தொழ என்பது காரணப்பொருளில் தொழுதலினால் என்னும் பொருள்பட வந்தது. உள்ளத்துயர் - உள்ளம்+துயர். மகரவீறு கெட்டு வன்மைக்கிமையாத தகரவொற்றுத் தோன்றி உள்ளத்துயர் என்றாயது பசுகரணம் நீங்கிச் சிவகரணமாய் மாறின சீவன்முத்தர்களுடைய தூய உள்ளத்தில் பிராரத்த வினைபற்றி வரும் மலத்தொடர்பினால் ஒரோவழி அத்துவித நிலையினின்று வழுவுதலினால் உண்டாகும் துன்பம். திருவலிதாயம் ஆலயத்தைத் தொழுதலினால் அத்துவித நிலையில் நின்று வழுவுதல் உண்டாகாது. ஆதலினால் உள்ளத்துயரும் உண்டாகாது என்பது கருத்து. சீவன்முத்தர்களல்லாத உலகர்க்கும் இந்தப் பாட்டின் கருத்துப் பொருந்தும். உலகர்க்குக் கூறும் பொழுது உள்ளத்துயர் என்பதற்கு முற்செய்த தீவினையின் பயனாக உள்ளத்தில் உண்டாகக்கடவதாகிய துன்பம் என்று பொருள் கொள்ளல்வேண்டும். சீவன்முத்தருக்காயினும் உலகருக்காயினும் துன்பமுண்டாதலுள்ளத்திலே ஆதலின் உள்ளத்துயர் என்றார். ஆலயத்துக்குப்போய் இறைவனை அன்போடு வழிபடுகிறவர்கள் தத்தமக்கு வாக்கடவதாகிய உள்ளத்துன்பத்தினின்று நீங்கி நலம்பெறுவர் என்பது இந்தப் பாட்டிற் கூறப்பட்ட பொதுக்கருத்தாகும்.

திருச்சிற்றம்பலம்

உமாபதி சிவனார் அருள்முறைத் திரட்டு
மூலமும் உரையும் முற்றிற்று.

இறைவன் இன்னருள் எங்கும் விளங்குக.